
www.padippakam.com




# வள்ளுவம்

தி. ஆ. 2030 புரட்டாசி – ஐப்பசி

படிப்பகம்

www.padippakam.com



என்றாலும்
ஞானியர்கள் நாடாள
நாவலித்த பிளேட்டோவும்
ஈன அரசியலே
இசைத்த மாக்கியவல்லியும்

நால்வருணக் கதைவிரித்த
நமது சா ணக்கியனும்
கால்மேலே கால் பதித்து
கம்பீரமாய் நிமிர்ந்து
விந்தை அரசியலில்
மேதையென வீற்றிருக்க
எந்தை திருவள்ளுவனை
ஏனோ மறந்தார்கள்

பன்னாட் டரசியலைப்
பதம்பார்த்த பண்டிதர்கள்
என்நாட்டு வள்ளுவனை
ஏறெடுத்தும் பார்க்கவில்லை

வள்ளுவனோ
சித்திரித்த திருக்குறளில்
செம்பாதி அரசியலாம்
இத்தரையில் வேந்தர்
ஏற்றமே பாடிய நாள்

கோனாட்சிக்குள்ளே
குடியாட்சி விதை விதைத்தான்
நானாட்சி செய்வதெல்லாம்
மக்கள்நல ஆட்சியென
முடிசுமந்த மன்னவனை
மொழிவித்தான் ‘பிழை செய்தால்
கெடுவாய் கெடுவாய் நீ
கெடுவாயென் றெச்சரித்தான்

ஆறங்க மாக
அரசியலை வகைப்படுத்தி
ஓரங்க மாக
அமைச்சை உருவகித்தான்.

சிந்தனைக்கு நூறுகுறள்
செப்பினான் - இந்நாளில்
மந்திரிமார் எல்லாம்
மனப்பாடம் செயல் நன்று!

நூலறிவும் இயற்கை
நுண்ணறிவும் உலகியலின்
கால நிலையறிவும்
கருவித் துணையறிவும்
காவல் துணிவோடு
கலந்து குழைத்தெடுத்து
நாவலனாய் நல்ல
கலைஞனாய் அறிஞனுமாய்

மோதுகின்ற சிக்கல்
முடிச்சவிழ்த்து வல்லமையாய்ச்
சாதிக்கும் மதியமைச்சர்
திறமுரைத்தார் வள்ளுவனார்

காலக் கருக்கலிலே
கருவெடுத்த வள்ளுவர் நூல்
மூலக் கனலின்னும்
முகத்தில் கொழுந்துவிட
இன்றைச் சமுதாய
இருள்கீறி ஒளியேறிப்
பொன்றாத் தனிச் சுடராய்ப்
பொலிந்து திகழ்கிறது

சிலையாகிப் போன
திருமகனின் சிந்தனைகள்
கலையான அரசியலில்
கலந் துறவு
கொண்டுவிட்டால்

வள்ளுவனார் கண்ட
வல்லவனாம் நல்லமைச்சை
உள்ளபடி நாம் காண
உருவாக்கி உவந்திடலாம்

தமிழகத்து மண்ணில்
தலையெடுத்த நீருற்று
சமயத்தில் அரசியலில்
சமுதாயக் கூட்டுறவில்
அலைமோதிப் பெருகட்டும்
அமுதூறும் வள்ளுவத்தால்
கலை செறிந்த வாழ்க்கைக்
காவியங்கள் செழிக்கட்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# வள்ளுவம்

இருதிங்கள் இதழ்
பண்பாடுடையார்ப் பட்டுண்டு உலகு

*சிறப்பாசிரியர்:*
ச.மெய்யப்பன்

*ஆசிரியர்:*
பல்லடம் மாணிக்கம்
இ.சுந்தரமூர்த்தி

*நெறியாளர் குழு:*
தமிழண்ணல்
ச.வே.சுப்பிரமணியன்
இரா.இளங்குமரன்
தி.முருகரத்தனம்
மருதமுத்து

*ஆசிரியர் குழு:*
க.ப.அறவாணன்
ஈரோடு தமிழன்பன்
இரா.இளவரசு
பா.வளனரசு
சு.சண்முகசுந்தரம்
இன்குலாப்
கி.நாச்சிமுத்து

*வடிவமைப்பு:*
இராம.கண்ணப்பன்
வே.கருணாநிதி

*ஓவியர்கள்:*
ட்ராட்ஸ்கி மருது
மாரிமுத்து
புகழேந்தி

*இதழ் வடிவாக்கம்:*
வசந்தகுமார்

விலை: 25 உருபாய்

பல்லடம் மாணிக்கம்
திருக்குறள்
பண்பாட்டு ஆய்வு மையம்
கவிதா நிலையம்
31, பணிபூண்டார் வீதி
(திருமுதுகுன்றம்)
விருத்தாசலம் - 605 001
தொ.பேசி: 04143 - 60411

*ஒளி அச்சுக்கோவை:*
ஃபைன்லைன்
சென்னை - 14



இதழ் எண் 5
தி.ஆ. 2030 ● புரட்டாசி - ஐப்பசி
செப்டம்பர் - அக்டோபர் ●1999
விலை ரூ. 25

வள்ளுவரும் வைதிகநெறியும் – 5
*மாண்புமிகு கல்வி அமைச்சர் பேரா. க.அன்பழகன்*

திருவள்ளுவரின் பெண்ணுரிமை – 9
*மேலாண்மை பொன்னுச்சாமி*

வ.உ.சி.யின் திருக்குறள் பதிப்பு – 17
*அ.சங்கரவள்ளி நாயகம்*

திருவள்ளுவமாலை – 21
*மு.அருணாசலம்*

தீனுல் இசுலாமும் திருக்குறளும் – 31
*கா.நயினார் முகமது*

பாரதிதாசனின் வள்ளுவர் உள்ளம் – 35
*ச.சு.இளங்கோ*

திருக்குறளும் தேம்பாவணியும் – 43
*அரம்போலா மாஃச்சரேனசு*

திருக்குறள் பாயிரவிருத்தி – 50
*அரசஞ்சண்முகனார்*

திருக்குறள் – 57
*பி.டி.சீனிவாச ஐயங்கார்*

திருக்குறளும் கீதையும் – 64
*ந.மணிமொழியன்*

இன்றைய தமிழ்மரபு ஆக்கத்தில் திருக்குறள் – 68
*தொ.பரமசிவன்*

வள்ளுவரின் உலகப் பொதுமை – 72
*பா.வீரமணி*

தமிழ் மக்களின் பண்பாட்டு விளக்கம் – 83
*ஆ.வேலுப்பிள்ளை*

இலங்கை அறிஞர் கா.பொ.இரத்தினம் 90
*ச.மெய்யப்பன்*

பதிவுகள் – 92

இனிய தமிழ் மக்களே – 95

படிப்பகம்

www.padippakam.com

வள்ளுவம் வள்ளுவம் வள்ளுவம் வள்ளுவம் வள்ளுவம்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி; வள்ளுவத்தைக் கற்றனைத்து ஊறும் அறிவு.

21-ஆம் நூற்றாண்டின் கிழக்கு வெளுத்துக்கொண்டிருக்கும் வேளை இது. உலகம் வேக வேகமாகவும் - அவசரமாகவும் தன்னை உருமாற்றிக்கொண்டிருக்கிறது. இயந்திர நாகரிகத்திலிருந்து அறிவியல் நாகரிகம் - அறிவியல் நாகரிகத்திலிருந்து மின்னணு, கணினி நாகரிகம் என்று பயணப்பட்டுப் போய்க்கொண்டேயிருக்கிறது உலகம்.

காலூன்றும் தளங்களைத் தாண்டிக்கொண்டும் - கண் பார்க்கும் பாதைகளை மாற்றிக் கொண்டும், விரைந்து செல்லும் உலகத்தின் விரல் பற்றிக்கொண்டு வாழ்க்கையும், வாழ்க்கையின் முகம் பார்த்தபடி இலக்கியங்களும் போயாக வேண்டும்! தேங்கியோ, திகைத்தோ நிற்க முடியாது! நின்றால் ஒன்றுக்கொன்று முரண்பட்டுத் தொடர்பறுந்து போய்விடும்.

21-ஆம் நூற்றாண்டின் தலைவாசலில் அறிவியலோடு வாழ்க்கையும் இலக்கியமும் கைகோர்த்துக்கொண்டு நிற்கும்போது, புதிய வெளிச்சத்தில், புதிய தளத்தில் 'திருக்குறளை' நிலை பெறச் செய்ய வேண்டியது, தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ் உணர்வாளர்கள் ஆகியோரின் தலையாய கடமையாகும்.

திருக்குறளை முன்னெடுத்துச் செல்வதற்கு முயற்சிதான் மூலதனம் ஆகவேண்டும். நமது முயற்சி உலக நாடுகளின் எல்லைக் கோடுகளைத் தொட்டுத் தாண்டிச் செல்வதாக, உலகளாவியதாக, இருக்கவேண்டும். நாம் முன்னிறுத்தினால், முன்னின்று முதன்மை பெறும் தகுதி திருக்குறளுக்கு நிறையவே இருக்கிறது. இதில் நாம் சிறிதளவுகூட ஐயப்படத் தேவையில்லை.

அண்மையில் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் (ரூ. 375 விலையுள்ள நூல்) வெளிவந்த பதினைந்து நாட்களில் 2500 படிகளும் அடுத்த ஆறு மாதங்களில் இரண்டாம் பதிப்பாக 2500 படிகளும் விற்றுத் தீர்ந்திருக்கிறது. இப்போது மூன்றாம் பதிப்புக் கொண்டுவரும் பணிகளைத் தொடங்கி இருக்கிறார்கள்.

கொடுக்கத் தகுதி படைத்ததைக் கொடுக்கின்ற முறையில் கொடுத்தால் பெறுவதற்கு மக்கள் காத்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து உறுதிப்படுகிறது. திருக்குறளுக்கு அரும்பணி ஆற்றிவரும் இன்றைய தமிழக அரசும் இந்த மொழிபெயர்ப்பு முயற்சிக்குத் தோள் கொடுத்துத் துணை நிற்பதுபோல, நிதி வழங்கி இருப்பதும் பாராட்டுக்குரியது.

உலக அரங்கில் நம்மை அறிமுகப்படுத்தி அங்கீகாரம் பெற்றுக் கொள்ள - நமக்கு முகவரி தேடிக் கொள்ள, இரண்டு சாதனங்கள் நம் கைவசம் இருக்கின்றன. ஒன்று தமிழ் மொழி! இன்னொன்று திருக்குறள்! திருக்குறளால்தான் நாடு, மொழி, இனம், மதம் ஆகிய எல்லைகளைக் கடந்து எங்கும் நிலைபேறு கொள்ள முடியும்.

திருக்குறளைப் பிறர்க்கு முறையாகவும், அந்தந்த மண்ணிற்கு ஏற்ற வகையிலும், வழங்கும் முயற்சியைத் தமிழ் உணர்வாளர்கள் தலையாய கடமைகளில், தலை சிறந்த கடமையாக மேற்கொள்ள வேண்டும். முயற்சி செய்தால் முடியாதது ஏதுமில்லை! எண்ணிய எதையும் எண்ணியாங்கு எய்த முடியும்.

முயற்சி திருவினையாக்கும் என்பதை மெய்ப்பிக்க வேண்டாமா?


படிப்பகம்

www.padippakam.com



மாண்புமிகு கல்வியமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்

# வள்ளுவமும் வைதிக நெறியும்



பிறவி வழிப்பட்ட சாதியை ஏற்காதவர் திருவள்ளுவர்.

*'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்'*

என்றார். எல்லா மானிடரும் பிறப்பால் ஒத்தவரே; அவர் உலகில் பெறக்கூடிய சிறப்புகள் (பெருமைகள்) அவரவர் செய்யும் தொழிலுக்கு ஏற்ப வேறுபடும் என்றார். ஒரே தொழில் செய்வாருள்ளும் அவரவர் அறிவுத் திறனுக்கும் பயனுக்கும் ஏற்ப மதிக்கப்படுவது உலக நியதியாகும்.

வைதிகம் வளர்த்த யாக முறை - வள்ளுவர்க்கு உடன்பாடு இல்லாதது என்பதை,

**'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று'**

என்னும் குறளால் தெளியலாம்.

தீயினில் சொரியும் அவிகளாகப் பல உயிரைக் கொன்று, ஆயிரம் யாகங்கள் செய்வதைவிட - எந்த ஓர் உயிரையும் கொன்று உண்ணாமை பெரும் நன்மையாம். யாகம் - வேள்வி உயிர்க் கொலையைப் பெருக்குவது என்பதால், அவற்றைச் செய்வதால் இழைக்கும் கொடுமை தோன்ற, வாழும் ஒன்றனது உயிரை நீக்கி உண்ணாமை, அந்த யாகங்களால் எய்தும் பயனைவிட நற்பயன் நல்கும் உயர்ந்த அறமாகும் என்றார். இதனால் வைதிகர் செய்யும் யாகம் கண்டிக்கப்பட்டது.

**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்'**



என்னும் குறள் உழவுத் தொழிலில் ஈடுபட்டு உணவு தானியங்களைப் பெருக்கிப் பிறருக்கும் வழங்கி, அவரையும் வாழச் செய்வோரே உண்மையில் பிறர் மதிக்க வாழ்பவர். மற்றவர்கள் அனைவரும் உழவர் உழைப்பில் கிடைத்த உணவைத் தேடிச் செல்பவராதலின், அவரைத்



படிப்பகம்

www.padippakam.com

தொழுது வணங்கி நிற்பவர் என்றார். இது உழவையும் உழைப்பையும் உலகிற்குப் பயன்படும் திறம்காட்டிப் பாராட்டும் நோக்குடையது.

ஆனால் வைதிகச் சாத்திரக் கொள்கையின்படி, உழவு பாவமான தொழில், மேல் வருணமான பிராமணர் உழவுத் தொழிலில் ஈடுபட லாகாது என்பர். உழைக்கும் மக்களை யே இழிவுபடுத்தும் அக் கொள்கையை வள்ளுவர் மறுத் துள்ளார்.

**தீயினில் சொரியும் அவிகளாகப் பல உயிரைக் கொன்று, ஆயிரம் யாகங்கள் செய்வதைவிட - எந்த ஓர் உயிரையும் கொன்று உண்ணாமை பெரும் நன்மையாம். யாகம் - வேள்வி உயிர்க்கொலையைப் பெருக்குவது என்பதால், அவற்றைச் செய்வதால் இழைக்கும் கொடுமை தோன்ற, வாழும் ஒன்றனது உயிரை நீக்கி உண்ணாமை, அந்த யாகங்களால் எய்தும் பயனைவிட நற்பயன் நல்கும் உயர்ந்த அறமாகும் என்றார். இதனால் வைதிகர் செய்யும் யாகம் கண்டிக்கப்பட்டது.**

'தெய்வத்தால் ஆகாது
எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்'

- என்னும் குறளில் எல்லாம் தெய்வச் செயல், அவரவர் தலைவிதியின்படித்தான் எதுவும் நடைபெறும் என்னும் வைதிகக் கொள்கை மறுக்கப்பட்டது. ஒருவேளை தெய்வத்தின் துணையாலே கூட ஆக முடியாதது என்று கூறப்பட்டாலும், அவரவர் முயற்சியில் ஈடுபட்டு உழைப்பதற்கேற்ற பயனைப் பெறலாம் என்பது வலியுறுத்தப் பட்டது.

'அந்தணர் என்போர் அறவோர்மற்
றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்'

என்னும் குறள் துறவியரான அறவோரை அந்தணர் என்று வழங்குகின்றது. அது பிராமணர் களைக் குறிக்கவில்லை. அறம் வளர்க்கும் நெஞ்சி னராகிய துறவோர் - எவ்வுயிரிடத்தும் குளிர்ந்த அருளுடையராதலால் அந்தணர் எனப்படுவர் என்றதால், கொலை வேள்வி செய்வதுடன், பிற மாந்தரையே வேறுபடுத்தியும் இழித்தும் கருதும் பிராமணரை அந்தணர் ஆக ஏற்கமறுத்தார் என்பது இதனால் விளங்கும்.

'மறப்பினும் ஓத்துக் கொளலாகும்
பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்'

என்னும் குறள். ஒழுக்கத்தை வலியுறுத்தும் நோக்கில் கூறப்பட்டது. ஓத்து என்றது ஓதப்படும் அறங்கூறும் நூல் களை. பார்ப்பான் என்றது ஏடு படித்துப் பிறருக்குப் படிப் பிக்கும் தொழிலுடையவனை. ஓத்து என்பது வடமொழி வேதம் மட்டுமே என்று கொண்டு, அதை ஓதுவோர் பிராமணர் ஆதலின், அவர் களே, 'பார்ப்பான்' எனப் பட்டனர் என்றும், அவர்தம் பிறப்பொழுக்கம், சாதி ஒழுக்கம் என்றும், அது குன்றினால் பிராமணன் குடி (சாதி) கெடும் என்றும் பொருள் காண்பது திரிபுற்ற வழக்காகும்.

எந்த மறையும் (நூலும்) மறக்கப்பட்டாலும், படிப்பவ னாகிய பார்ப்பான் திரும்ப அறியலாம், அது குற்றமாகாது. மனிதப் பிறவி உடையார் ஒழுக்கங் கெடுவார்களானால், குடிப்பெருமை அழியும் என்பதே, ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும் என்னும் பொது நெறி கூறிய வள்ளுவரின் உள்ளமாகும். பிற குறட்பாக்களும், சாதிக்கு ஒரு ஒழுக்கம் என்பதை எவ்விடத்தும் குறிக்கவில்லை. பார்ப்பான் - என்றது பிராமணனையே என்றும், அவன் குடிப்பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும் என்றும் கொள்ளினும், பிராமணன் சாதி தருமம் காவாது எந்த இழிதொழில், ஒழுக்கக் கேடு புரிந்தானாயினும் - பிராமணன் பிராமணனே! என்னும் வைதிகச் சாத்திர விதியை நேர்முகமாக மறுத்ததாகும்.

பல்லாற்றானும் மகளிர் நம்பத்தக்கவர் அல்லர், கட்டுக்காவலில் இருக்க வேண்டியவர், உடைமைக்கு உரிமை கொள்ளலாகாதவர், கல்விக்கு உரியரல்லர், என்றெல்லாம் வைதிகச் சாத்திரங்கள் இழிவு படுத்தியதற்கு மாறாக, ஒருவனது மனைவியை வாழ்க்கைத் துணை என்று தகுதியுடையவராகக் குறிப்ப தோடு, அவளது கற்பு (கற்பிக்கப்பட்ட வாறு ஒழுகு தல்) சிறைகாப்பதால் காக்கப் படுவதன்று. அவர்தம் மன உறுதியால் காக்கப்படுவது என்றும்; அப்படிப்பட்ட வள் மனைத்தக்க மாண்புடையாள்; அப்படிப்பட்ட பெண்ணிற் பெருந்தக்க





படிப்பகம்

www.padippakam.com


யாவுள; அவர்கள், புத்தேளிர் வாழும் உலகும் பெறுவர் என்றெல்லாம் உணர்த்தியது வைதிகக் கொள்கைகளை மறுப் பதையே புலப்படுத் தும்.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா
- உலகம்
பழித்தது ஒழித்து விடின்'

முதலான குறட்பாக்கள். வைதிக நெறியில் சந்நியாசி களானோர் சடாமுடி வளர்த்து - புறக்கோலத்தில் துறவிகளாக உலவுவதை உளங்கொண்டு இயற்றப்பட்டவை எனலாம். எனவே திருவள்ளுவர் வகுத்த உலகப் பொதுமறை - வைதிக வருண சாதி தருமத்தையும் அவர்தம் கொள்கைகளையும், வள்ளுவர் காலத்தில் அவை வேரூன்றவில்லை எனினும், மறுத்து நிற்பது தெளிவு. எல்லோர்க்கும் கல்வியே 'கண்'ணென அதன் இன்றி யமையாமையை விளக்கி, அறிவுடையோர் எல்லாம் உடையர் என்று சிறப்பித்துக் கூறியதே சாதி தருமத்தை மறுத்ததாம்.

**பல்லாற்றானும் மகளிர் நம்பத்தக்கவர் அல்லர், கட்டுக்காவலில் இருக்க வேண்டியவர், உடைமைக்கு உரிமை கொள்ளலாகாதவர், கல்விக்கு உரியரல்லர், என்றெல்லாம் வைதிகச் சாத்திரங்கள் இழிவுபடுத்தியதற்கு மாறாக, ஒருவனது மனைவியை வாழ்க்கைத் துணை என்று தகுதியுடையவராகக் குறிப்பதோடு, அவளது கற்பு (கற்பிக்கப்பட்டவாறு ஒழுகுதல்) சிறைகாப்பதால் காக்கப்படுவதன்று. அவர்தம் மன உறுதியால் காக்கப்படுவது என்றும்; அப்படிப்பட்டவள் மனைத்தக்க மாண்புடையாள்; அப்படிப்பட்ட பெண்ணிற் பெருந்தக்கயாவுள; அவர்கள், புத்தேளிர் வாழும் உலகும் பெறுவர் என்றெல்லாம் உணர்த்தியது வைதிகக் கொள்கைகளை மறுப்பதையே புலப்படுத்தும்.**

திருவள்ளுவரே யன்றிச் சமயநெறி நின்ற பலருங்கூட வருணவேற்றுமைக் கொள்கை யை ஏற்கவில்லை. சித்தர்களின் மூலவராகக் கருதப்படும் திரு மூலர் இயற்றிய திருமந்திரத்தில், இறையருள் பெற ஏற்றமொழி வட மொழியே என்பதை மறுக்கும் வண்ணம் 'தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு, என்னை நன்றாக இறைவன் படைத் தான்' என்பது காணப் படும். அர்ச்சனைக்குத் தேவ பாடை தான் வேண்டும் என்பது இறைவன் கருத்தாகாமை கூறப் பட்டது.

'ஒன்றே குலமும் ஒருவனே
தேவனும்
நன்றே நினைமின்
நமனில்லை, நாணாமே
சென்றே புகுங்கதி யில்லை,
நுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்
துய்மினே'

என்னும் திருமந்திரச் செய்யுள் உணர்த்துவது இது:

மனிதகுலம் ஒன்றே; முழு முதல் இறை எனக் கொள்ளப் படும் மெய்ப்பொருள் ஒன்றே; இதனை ஆழ்ந்து உணர்வீராயின் இறப்பென்னும் அச்சமில்லை! இதனை நுமது உள்ளத்திலே உறுதியாகக் கொண்டு பேராஇயற்கை நிலை காண்பீர் என்று அறிவுறுத்துகின்றது.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்று தெளியுமாறு கூறியதே வேதத்தை ஆராயக் கூடாதெனவும், வேதியர் வார்த்தையை ஐயுற லாகாதெனவும் கட்டளை யிடும் வைதிகத்தைக் கண்டனம் செய்ததாகும்.

உலக மக்களெல்லாம் ஒன்றே; கருதும் பல தெய்வங்களும் ஒன்றே; மெய்ப் பொருள் தெளிவில் உறுதிகாணின் இறப்பில்லை என்று கூறப்படும் இது - சாதிகள் நான்கு - மூல மூர்த்திகள் மூவர், தேவர்களான தெய்வங் களைத் தனித்தனியாக வழிபட்டு வேள்வி செய்ய வேண்டும் என்பதுடன் மாறு படுவது தெளிவு.

நந்தமிழ் மக்கள் திருவள்ளுவர் நெறியை ஏற்றுப்போற்றி ஒழுகும் மனநிலை கொண்டாலன்றி, வைதிக வழியில் சாதிக் குழியில் விழுந்து இடருற்றுத் தடுமாறும் நிலையினின்று நீங்கி மனிதத் தன்மை எய்தலும் அரிதே என்பேன்.



திருமூலர் தரும் தெளிவு:

'அன்புசிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே
சிவமாவது ஆரும் அறிகிலார்'


படிப்பகம்

www.padippakam.com


என்னும் வரிகளில் மனித அன்புணர்வே சிவமாக உணர்த்தியதுடன்,

**'படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா;**
**நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயின்**
**படமாடக் கோயில் பகவற்கு அதாமே'**

என்னும் பாடல் மூலம், 'கோயிலில் சிவனுக்குப் படைக்கும் உணவு, நடமாடும் உயிருடையார் பசிமாற்றுவதாயில்லை; மாந்தர் பசி தீர்க்க வழங்கும் உணவு, படமாக நிற்கும் இறைவற்கே படைத்ததாகும்' என்றும், மனித நேய உணர்வுடன் செய்யப்படும் செயல்களே இறைபோற்றல் என்று விளக்கியும் கூறப்பட்டவை வைதிகக் கொள்கை மறுப்பாவது தெளிவு.

**'பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்**
**போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்'**

என்பதன் மூலம், அன்பெனும் பண்பினால் அந்தணராகாதவரான பிறவியினால் பார்ப்பனர் என்னும் பெயருடையார், அருச்சனை செய்வது - உண்மையில் வழிபாடு ஆகாமையின், நாடாளும் மன்னர்க்கு அழிவைத்தரும் எனப்பட்டது. பிராமணரே அருச்சனை நடத்த வேண்டும் என்னும் வைதிகக் கொள்கையை மறுத்தது இது. திருமந்திரத்தில் சமய நோக்கில் எழும் வேறுபல பாடல்களிலும் வைதிக வருணதருமம் மறுக்கப் பட்டுள்ளது காணலாம்.

●●

## வள்ளுவம் அறிமுக விழா மதுரை

கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றம் சார்பில் வள்ளுவம் அறிமுகவிழா மதுரையில் 10.4.1999 அன்று நிகழ்ந்தது. மதுரை திருவள்ளுவர் கழகத் தலைவர் திரு. பி.டி.ஆர். கமலம் தியாகராஜன் இதழை அறிமுகம் செய்து சிறப்புரையாற்றினார். டாக்டர் தமிழண்ணல், திரு.ந.மணிமொழியன், டாக்டர் ச.மெய்யப்பன், டாக்டர் இரா.மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவிற்குத் திரு.ஆர்.சொக்கலிங்கம் தலைமை ஏற்றார். வள்ளுவம் இதழாசிரியர் திரு.பல்லடம் மாணிக்கம் ஏற்புரை நிகழ்த்தினார். கவிஞா மு.முருகேசன், திரு.பி.சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாகப் போற்றிப்போற்றி வருகின்ற ஈடு இணையற்ற பேராசான். வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும் பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென்ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது. 'அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கும் எல்லாக் காலத்திற்குரியவன்.'

- ப.ஜீவானந்தம்

'திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல். நல் வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக்காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால் இவ்வுலகு இன்பத்தின் நிலைக்களனாய் இனிது விளங்கும். ஆனால் திருக்குறள் என்றால் இன்னது என்று அறியாதவர் கள் பலர்; அறிந்தோர் சிலருள் 'திருக்குறள் ஒரு நீதிநூல். இக்காலத் திற்கு ஏலாது' என்று நினைப்போரும் 'தமிழ்ப் புலவர்கள் கற்பதற்குரியது' என்று கருதுவோரும், 'வாழ்க்கைக்கும் அதற்கும் தொடர்பு இராது' என்று மதிப்போரும் உளர். திருக்குறள் எப்பொருளை யார்க்கு அறிவிக் கின்றது என்பதை அதன் பெயரைக் கொண்டு அறிய முடியாது.'

- பேராசிரியர் சி.இலக்குவனார்


படிப்பகம்

www.padippakam.com



மேலாண்மை பொன்னுச்சாமி

# திருவள்ளுவரின் பெண்ணுரிமை

தமிழ் எழுத்தாளர்களில் மிகவும் குறிப்பிடத் தக்க எழுத்தாளர் திருமதி ராஜம்கிருஷ்ணன் அவர்கள். புதிய சிந்தனைப்படைப்பாளி. குறிப்பிடத்தக்க சாதனைகள் செய்திருப்பவர். வியர்வைச்சாதி மக்களின் விழிப்புணர்ச்சிக் காகவும், பெண்ணுரிமைக்காகவும் சமரசமற்ற முற்போக்கு மனோபாவத்துடன் இலக்கியம் படைப்பவர்.

திருவள்ளுவர்மீது வெளிப்படையான குற்றச் சாட்டை முன்வைத்தார், ராஜம் கிருஷ்ணன்.

'திருவள்ளுவர் பெண்ணடிமைச் சிந்தனை நிறைந்த திருக்குறள் நூலைப் படைத்துள்ளார். பெருமைமிகு உயர்தன்மைகள் ஏராளமாக உள்ள திருக்குறளில் பெண்ணினத்தை இழிவுபடுத்துகிற மாதிரியான பல குறள்கள் உள்ளன. அது ஒரு மாசுதான். இந்த மாசைப் பல தமிழ் ஆர்வலர்கள் கண்டுகொள்வதுமில்லை; சுட்டிக்காட்டுவதும் மில்லை'



என்ற தொனியில் அவருடைய நியாயமான மனக்கொதிப்பைப் பதிவு செய்திருந்தார். அதை யொட்டிக் குறுகலான இலக்கிய வட்டாரத்தில் காத்திரமான சர்ச்சை நிகழ்ந்தது.

ஓரிரு வருஷத்திற்கு முன்பு, சிவகாசி நகரில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சார்பில் மிகப் பிரம்மாண்டமான 'கலை இலக்கிய இரவு' நிகழ்ந்தது. பல்லாயிரம் பேர் கூடியிருந்து விடிய விடிய நிகழ்கிற கலை இலக்கியப் புதுமைத் திருவிழா.

அந்த நிகழ்வில் எழுத்தாளர் திலகவதி அவர்கள் கலந்து கொண்டார். 'பத்தினிப் பெண்' போன்ற மிகச் சிறந்த பெண்ணுரிமை நாவல் களைப் படைத்துள்ள மனிதநேயச் சிந்தனை மிக்க திலகவதி அவர்கள், அன்றைக்குத் திருக்குறள்மீது ஏறக்குறைய இதே குற்றச்சாட்டை முன்வைத்தார்.



'பெண்வழிச்சேரல்' அதிகாரத்தையும் 'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரத்தையும்


படிப்பகம்

www.padippakam.com

சொல்லி... ஒரு பிடிபிடித்தார். ஐ.பி.எஸ். பிடி.

> **காலத்தால் மிகமிகமிக முந்தைய வள்ளுவரிடம் இதை எதிர்பார்க்க முடியுமா? பெண்ணினத்தை இழிவு செய்கிறார் என்ற குற்றச்சாட்டை வள்ளுவர்மீது நீட்ட முடியுமா? பெண்ணுரிமையை வலியுறுத்துவது வள்ளுவர் காலத்துக்குச் சாத்தியப்படுமா?**

'கல்யாண வீட்டில் மொய் செய்கிறவர்கள்தான் நூற்றியொன்று, ஆயிரத்து ஒன்று என்று ஒரு தொடுக்கு வைத்துச் செய்வார்கள். புலவர்கள் செய்யுள் எழுதுகிற போது அப்படி ஒரு தொடுக்கு வைப்பதில்லை. வடிவாக... வரையறுப்பான... எண்ணிக் கையில் எழுதுவார்கள். அக நானூறு, புறநானூறு. நாலாயிர திவ்ய பிரபந்தம் என்று தான் வரையறுத்து எழுதுவார்கள். நானூற்றி மூன்று, நாலாயிரத்து மூன்று என்று எழுதுவதில்லை. ஆனால் திருக்குறள் மட்டும் ஆயிரத்து முந்நூற்று முப்பது எண்ணிக்கை. அது என்ன முப்பது செய்யுள்? அதென்ன கொசுறு? திருவள்ளுவர் ஆயிரத்து முந்நூறு மட்டும் எழுதியிருக்க.. அதற்குப் பின் வந்த ஆணாதிக்கச் சிந்தனையுள்ள புலவர்கள் முப்பது செய்யுளை எழுதி இடைச்செருகலாகச் சேர்த்துவிட்டார்களா?'

என்ற தொனியில்... மிக அழுத்தமாகவே கேள்வியைக் கிளப்பியிருந்தார். திருவள்ளுவரைக் காயப்படுத்தாமல்... திருக்குறளையும்கூடக் காயப்படுத்தாமல்... ஆனால் சமரசமற்ற போர்க்குணத்தோடு விமர்சனத்தை முன்வைத்து இருந்தார்.

வெவ்வேறு காலத்தில் நிகழ்ந்த இந்த விமர்சனக் குரலை இப்போது ஏன் நினைவுபடுத்துகிறேன். டாக்டர் கலைஞர் வெளியிட்டு வாழ்த்திய நூல் 'இரு நூற்றாண்டு சமூக சீர்திருத்த வரலாறு' என்ற நூல். பேராசிரியர் அருணன் எழுதிய மிகச் சிறந்த நூல்.

அதில் ஓரிடத்தில் இப்படி வருகிறது:

'எத்தனையோ நல்ல கருத்துகளைச் சொன்ன வள்ளுவர்கூட 'பெண் வழிச் சேரல்' என்றொரு அத்தியாயம் பாடி, 'பெண் பேச்சைக் கேட்காதீர்' என்ற சொல்லிப்போய்விட்டார். இன்று வரை அதன் மிச்ச சொச்சமாய் 'பெண்புத்தி பின்புத்தி' என்கிறார்கள்.'



இதைப் படித்தவுடன்தான்... எழுத்தாளர் ராஜம்கிருஷ்ணன் அவர்களின் கனல் கருத்தும், எழுத்தாளர் திலகவதி அவர்களின் விமர்சனக் கருத்தும் நினைவு மேல்தளத்தில் வந்தன. ரொம்பவும் யோசிக்க வைத்தன. நிஜம்தானா? நிஜம்தானா? அலைபாய்கிற மனசோடு வள்ளுவத்திற்குள் புகுந்தேன். தேடல் மனசோடு பிரவேசம். மீண்டும் குறளா? மீண்டும் மீண்டும் நுழைய குறளில் என்ன இருக்கிறது. எத்தனை தடவைதான் வாசிப்பது?

ஏன்? குறளை எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் படிக்கலாம். நல்ல சினிமாவை நாலைந்து தடவை பார்ப்பதில்லையா? அழகான பூவை ஆயிரம் தடவைகள் ரசிப்பதில்லையா? நயத்தகு குறளை வியத்தகு மனசோடு எத்தனை தடவை வேண்டுமானாலும் வாசித்து மூழ்கலாம், நல்ல நதியில் நாள்தோறும் முங்கிக் குளிப்பதில்லையா?

காலத்தை மீறியும் காலத்தைக் கடந்தும் கல்வெட்டுக் காவியமாகக் கவிதைகள் உயிர் வாழலாம். வாழ முடியும். உள்ளடக்க ஆழமும், விரிவும், நுட்பமும், வடிவ அழகின் தீராச் செழிப்பும் அதைச் சாத்தியமாக்க முடியும். காலத்தை வென்று திருக்குறளும் கல்வெட்டாக நிற்கிறது.

காலத்தை வென்று நிற்கும் கவிதையிலும் கூட... தோன்றிய காலத்தின் சாயல் இருந்தே தீரும். காலத்தின் சுவடுகளைச் சுமக்காமல் எந்தக் கவிதையும் இருக்காது. வாழும் காலச் சூழலின் சாராம்சம் படிந்திருக்கிற உண்மையின் அடர்த்தியில்தான் கவிதையின் நீடித்த வாழ்வே இயங்குகிறது. கவிஞன் காலத்தின் குரல்.

கம்ப்யூட்டர் பற்றி வள்ளுவர் எழுதியிருக்க முடியுமா? தேரின் அச்சாணியை உவமையாகச் சொல்ல முடிந்த வள்ளுவரால், புகை வண்டிச் சக்கரங்களை உவமை சொல்லியிருக்க முடியுமா?

'ஃபேக்ஸில் வந்த பெண் கவிதையே' என்ற கவிதை இக்காலத்து விஞ்ஞானச் சாதனைச் சிறகுகளோடு பறக்கிறது. வைரமுத்து காலத்தில் மட்டுமே இது சாத்தியம்.

'டிஜிட்டல் செதுக்கிய பெண் குரலா' என்று கம்பனும் கற்பனை செய்திருக்க முடியாது.

'கண்ணிலே கண்ணிலே சன் டி.வி.
காதலியின் பார்வை ஸ்டார் டி.வி.'

இந்தக் கற்பனைக்கும் வர்ணிப்புக்கும் வள்ளுவர் எங்கே போவார்? 'அதிகாரி மாமியார்களின் ஆக்கிரமிப்பு பற்றிய



படிப்பகம்

www.padippakam.com


அலுவலகப் பெண்ணின் குமைச்சல்' கவிதையாவது இக் காலத்தில்தானே சாத்தியப் படும்?

**வள்ளுவர் காலப் பெண்ணின் நிலை என்ன என்று வள்ளுவரிடமே தேடிப் பார்த்தால்... காமத்துப் பால் 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரம். ஊடல் நுட்பத்தைச் சொல்ல வந்த அதிகாரம். உற்று நோக்கினால் - நுணுகி ஆய்ந்தால் - இன்னொரு பேருண்மை பிடிபடுகிறது.**

'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற உலக மானுடக் குரலோடு பதினெட்டாம் நூற்றாண்டு உதயமாகிற பிரெஞ்சுப் புரட்சியும், அதற்குப் பிந்தைய ஆலை முதலாளித்துவம் என்ற புதிய சக்தியின் முகதரிசனமும் நிகழ்ந்த பிறகுதான், பெண்ணுரிமை குறித்த சிந்தனையே பூவுலகில் அரும்புகிறது. சமுதாய உழைப்பில் - கல்வியில் - அலுவலில் பெண்ணையும் பயன்படுத்துவது என்கிற பான்மையே உருவாகிறது.

மகாகவி பாரதிக்கே நிவேதிதா அம்மையார் மூலம் ஞானம் பிறந்து... பெண்ணுரிமை குறித்த சிந்தனை அரும்புகிறது. பெண்ணுரிமைக்காகவும், பெண் சமத்துவத்துக்காகவும் குரல் கொடுத்த முதல் கவிஞர் மகாகவி பாரதிதான் என்ற வரையறுப்பை நினைவுக்குள் சொருகி வைத்திருக்கிறோம்.

காலத்தால் மிகமிகமிக முந்தைய வள்ளுவரிடம் இதை எதிர்பார்க்க முடியுமா? பெண்ணினத்தை இழிவு செய்கிறார் என்ற குற்றச்சாட்டை வள்ளுவர் மீது நீட்டமுடியுமா? பெண்ணுரிமையை வலியுறுத்துவது வள்ளுவர் காலத்துக்குச் சாத்தியப் படுமா?

இந்தக் கோணத்தில் ஆற அமர யோசிக்கலாம். நுட்பமாகப் பரிசீலிக்கலாம்.

வள்ளுவர் காலத்துச் சமுதாயத்தில் பெண் என்னவாக இருந்தாள்?

போரில் தோற்ற மன்னனிடம் பசுக்களையும், குதிரைகளையும் கொள்ளையடிப்பதைப் போலப் பெண்களையும் கொள்ளை யடித்தனர்.

அரசனின் அந்தஸ்தின் குறியீடாக அந்தப்புரம் இருந்தது. அந்தப்புரத்தில் எத்தனை அழகிகள் அடைபட்டிருக்கிறார் கள் என்ற எண்ணிக்கையே அரச அந்தஸ் தின் அளவை நிர்ணயிக்கும். ஒருவனுக்குப் பல தாரங்கள். பல வைப்பாட்டிகள். அதுவே சமூக தர்மமாக இருந்தது.

தொழுவத்தில் அடைபட்டிருக்கும் பசுக்களின் எண்ணிக்கையே வீட்டுக்காரனின் செல்வ அளவைக் குறிக்கும் அடையாளமாக இருந்த அந்தக்காலம். பசுவும் பெண்ணும் வேறு வேறல்ல. புனிதமாக நினைத்துப் பூஜை செய்வதிலும், தோலை உரித்துப் பறை செய்வதிலும் தான். விபச்சாரம் முழுமையாக அங்கீகரிக்கப் பட்டிருந்த காலம். கணிகையர் குலம், கணிகையர் வீதி இருந்த காலம். தேவதாசி என்ற புனிதப் பெயர் வேறு.

பெண்களுக்கும், பஞ்சமனுக்கும் வேதம் கற்கும் உரிமையில்லை. கேட்கும் விபத்துகூட நிகழ்ந்துவிடக்கூடாது. கற்பிக்கும் வேதம் கேட்கப்பட்ட பெண், பஞ்சமன் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவார்கள். மறைந்திருந்து வில்வித்தை கற்றுக்கொண்ட வேடர் குல ஏகலைவனின் கட்டை விரல் வெட்டப்பட்ட காலம். கற்ற வித்தையையும் பறித்துக் கொண்ட குரூரம்.

பெண் வெறும் அலங்காரப் பதுமை. அழகுப் பதுமை. சந்ததி பெற்றுத்தரும் ஜந்து. அவ்வளவுதான்.

சன்யாசம் போகும் தகுதியோ... துறவியாகும் உரிமையோ... ஞானியாகும் பேறோ பெண்ணுக்கு இல்லை. இப்படி பெண் வெறும் உயிர்ப் பிராணியாகக் கருதப்பட்ட காலம் அது.

அக்காலத்தில் பெண் என்பவள் ஒரு மனுசி அல்ல; அழகும், கருப்பையும், இரைப்பையும் மட்டுமே கொண்ட ஒரு பொருள். உயிர்ப் பொருள். அவ்வளவுதான்.

விலை மகளிர் வீடு சென்று திரும்புவது ஆண்மகனுக்கும், வணிக குல ஆணுக்கும் பெருமை என்று கருதப்பட்ட காலம். மனுசியாகவே கருதப்படாத மனைவிக்கு அன்பு செலுத்துவது ஒன்றும் கணவனின் கடமையல்ல. ஆனால் கணவனாக வந்தவனைக் கடவுளாக நினைத்து, மனசாலும் மாற்று நினையாமலிருப்பது மனைவியின் கடமை.



வள்ளுவர் காலப் பெண் ணின் நிலை என்ன என்று வள்ளுவரிடமே தேடிப் பார்த்தால்... காமத்துப் பால் 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரம். ஊடல் நுட்பத்தைச் சொல்ல வந்த அதிகாரம். உற்று நோக்கினால் - நுணுகி ஆய்ந்தால் - இன்னொரு பேருண்மை பிடிபடுகிறது.


படிப்பகம்

www.padippakam.com


பரத்தமை தோளினன். இன்னொரு பெண்ணைக் காதலிக்க உரிமையுள்ள ஆண். பல பெண்களை மனசுக்குள் வைத்துக் கொண்டு இவளிடமும் வந்து தும்மலாம். யாரை நினைத்தும் தும்மலாம். பல பெண்களுடன் தொடர்பு கொள்கிற உரிமை உள்ள ஆண் இயல்பு. சமூக சம்மத மான சகஜம்.

**ஆணுக்கு அறத்தைச் சொல்லிவிட்டு, பெண்ணுக்குக் கற்பைச் சொல்கிறார். ஆணுக்கு லகான் போடாமல், பெண்ணுக்கு மட்டும் போட்டால்... அது அந்தக் காலத்துச் சமூக நடப்பு. வள்ளுவர் இருவருக்கும் லகான் போடுகிறார். இதில் வள்ளுவர் சமகாலச் சமூகச் சூழலை மீறுகிறார். புதிய நீதி கூறுகிறார்.**

மற்ற பெண்ணோடு தன் காதலன் கொண்டிருப்பதாக நினைக்கிற உறவு, ஒரு சண்டைக்கான காரணமல்ல; ஒரு விவாகரத்துக்கான சட்டரீதியான காரணமல்ல; ஓர் உறவு முறிவுக்கான விஷயமல்ல;

மாறாக, கூடலுக்கு முந்தைய ஊடலுக்குரிய ஒரு சாதாரணக் காரியமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். பெண் ஒரு கேலியாக - ஒரு நையாண்டியாக - உணவுக்கான உப்பாக - மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

பலதார மண உரிமையோடு ஆண் ஆதிக்கம் பெற்றிருந்த சமூகச் சூழலை இந்த அதிகாரம், கண்ணாடிபோல நமக்குக் காட்டுகிறது.

காலத்தில் காலூன்றி நிற்கிற குறள்கள், காலத்தின் உள்குணம் காட்டும் கலைக் கண்ணாடியாகவும் திகழ்கிறது.

ஆம், வள்ளுவர் காலப் பெண்ணின் நிலைமை, இதுதான்.

இப்படியான பேதமும், பாரபட்சமுமே சமூக நிலவரம் என்று ஓர் அறம் நிலவி வந்த காலம்தான், வள்ளுவர் காலம்.

இப்படியான காலச் சமூகச் சூழலில் நின்று கவிதை பாடுகிற வள்ளுவர், காலச் சமூகச் சூழலின் சாயல் படியப்பட்டிருந்தார். ஆனால், காலச் சமூகச் சூழலின் கைதியாக ஒடுங்கிக் கிடந்தாரா? மீறினாரா? மீறல் என்றால் என்ன அளவு மீறல்? மரபின் தொடர்ச்சியான வளர்ச்சியின் மீறலா? மரபை அறுத்துக் கொண்டு அந்தரத்தில் மிதக்கும் மீறலா?



காலச் சமூகச் சூழல் எனும் உண்மையில் காலூன்றி, இரை பொறுக்கி, கூடுகட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொறித்து... முடிவற்ற ஆகாயம் முழுக்கச் சிறகுகளை விரிக்கும் பறவையைப் போல... வள்ளுவரும் சமூகச் சூழலின் சாயலோடு ஆகாயத்தில் அகலப் பறக்கிறார்.

காலத்தில் காலூன்றி, காலத்தை மீறி... காலத்தையே மாற்றுகிறார். எப்படி?

இல்லறத்தில் அன்பும் அறனும் வேண்டும் என்கிறார்:

**'அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது'**

இல்லறத்திறன் பண்பும் பயன்பாடும், அன்போடும், அறத்தோடும் இயங்குவதில்தான் உள்ளது என்கிறார்.

அன்பை மட்டுமே சொல்லியிருந்தால் அதுவே ஒரு புதுமை.

ஊருக்கு ஒரு வைப்பாட்டி வைத்துக் கொண்டு, வில்வண்டி கட்டி, தினம் ஒரு ஊருக்குப் போய் வருவதே பண்ணையார்த்தன ஆண் மகனின் இயல்பு என்று இந்த நூற்றாண்டின் மத்தியில்கூடக் கருதப்பட்டு வந்தது. 'மனைவிக்கு அன்பு காட்டு' என்று இச்சூழலில் இவரிடம் சொல்வதே ஒரு புதுமைதானே?

அன்பு மட்டுமல்ல.. அறனும்! மனைவிக்கும் கணவனுக்குமானது அன்பும், அறனும். பரஸ்பர மானது. ஒருவருக்கு மட்டுமல்ல.. இருவருக்குமே. அன்பும் அறனும் என்றால்... உள்ளுக்குள் ஆத்மார்த்த பிணைப்பு; புறத்தில் இருவருக்கும் ஒரு சுயகட்டுப்பாடு. நெறியோடு அறன் காத்தல்.

அன்பும் அறனும் உள்ள இல்லறத்தானுக்கு விலைமகளிர் தேவையில்லை அல்லவா?

விபச்சாரத்துக்கு எதிரான முதற்குரலாக வள்ளுவரின் குறள் எழுகிறது, தமிழில். கணிகையர் வீதி சென்று வருவதை ஆண் வீரம் என்று கருதப்பட்ட சமூகச் சூழலில், 'வரைவு இல் மகளிர்' அதிகாரம் எழுதுகிறார், வள்ளுவர்.

**'அன்பின் வழியது உயிர்நிலை அஃது இலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு'**

என்பவர்தானே வள்ளுவர்?

அன்பே உடம்பு, அன்பே உயிர். அன்பு இல்லாத உடம்பு வெறும் எலும்புக்கூடு என்கிறார். அப்பேற்பட்ட வள்ளு வர், அன்பே இல்லாத பண உறவை வெறுப்பது நியாயம்


படிப்பகம்

> **அவர் காலத்து அரசர்களின் அந்தப்புரத்தை இதைவிட எவரும் விமர்சித்துவிடவும் முடியாது; பரிகசித்துவிடவும் முடியாது. மனைவியை அடைத்து வைக்கிற கணவரைப் 'பேர் சொல்லி' வைகிறார் வள்ளுவர். சுயகாவலும் தன்மானமுமே முழுநிறை என்கிறார்.**

தானே? பிரேத உறவு என்று சரியாகத்தான் சொல்கிறார். அன்பு இல்லாத மனநிலையில் பொருளுக்காக வந்து வழுவு கிற ஒரு பெண்ணுடன் முயங்கு வதைப் பிரேதத்துடன் முயங்கு வதைப் போன்றது என்கிறார் வள்ளுவர்.

விபச்சாரம் என்பதே ஆணாதிக்கக் குறியீடு. உலகப் பயணம் சென்று வந்த மணியன் போன்ற எழுத்தாளர் கள் 'விபச்சார விடுதிகள் இருப்பது நல்லது' என்றனர். 'நிராசைகளின் வடிகாலாக இருக்கும்' என்றனர். 'ஆகவே குடும்ப உறவு சிக்கலற்று இயங்கும்' என்றனர்.

ஆண்களின் நிராசைக்கு வடிகால் விபச்சார விடுதிகள். சரி. மனைவிகளின் நிரர்சைக்கு வடிகால்? என்ன விடுதிகள்?

இந்தக் கேள்விக்கு ஆணாதிக்கத்திடம் பதில் இல்லை.

ஆனால்... வள்ளுவர் சொல்கிறார். 'விடுதிகளே வேண்டாம். கணவன் மனைவியிடையே அன்பும், அறனும் முறையோடு இயங்கினால்... நிராசைக்கும் இடமில்லை; சிக்கல்களுக்கும் இடமில்லை.'

ஆக... விபச்சார எதிர்ப்பு என்பதே ஆணாதிக்க எதிர்ப்பு. மனைவியாக இருக்கும் பெண்களின் உரிமையை உணர்த்துகிற கோடு. கணவனாக இருக்கும் ஆண்மகனின் அறத்தை - நெறியை - சுயகட்டுப்பாட்டை வலியுறுத்துகிற லகான்.

விபச்சார எதிர்ப்பு என்பது ஆணுக்கான லகான்; பெண்ணுக்கான உரிமை உணர்த்தல்.

விபச்சாரம் என்பது வள்ளுவர் காலத்து நடப்பு. விபச்சார எதிர்ப்பு என்பது காலத்தை மீறுவதன் அடையாளம்.

'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரம் மனைவிக் கான நெறியைச் சொல்கிறது. மனைவிக் கான லகான் போலத் தோன்றுகிறது. உண்மைதான். பொய்யில்லை.

ஆணுக்கு அறத்தைச் சொல்லிவிட்டு, பெண்ணுக்குக் கற்பைச் சொல்கிறார். ஆணுக்கு லகான் போடாமல், பெண்ணுக்கு மட்டும் போட்டால்... அது அந்தக் காலத்துச் சமூக நடப்பு. வள்ளுவர் இரு வருக்கும் லகான் போடுகிறார். இதில் வள்ளுவர் சமகாலச் சமூகச் சூழலை மீறுகிறார். புதிய நீதி கூறுகிறார்.

பெண்ணுக்கு லகான் போட வந்த 'வாழ்க்கைத் துணை நலம்' அதிகாரத்தில்.. ஒரு குறள்:

*'தற்காத்துத் தற்கொண்டாற்*
*பேணித்தகை சான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள்*
*பெண்'*

'தன்னையும் காத்துக் கொண்டு, தன் கண வனையும் காத்துக் கொண்டு புகழோடு வாழத்தக்க சக்தி கொண்டவள் பெண்' என்கிறார். லகான் போட வந்தவர், பெண்ணின் சக்தியைப் பாடு கிறார்.


இரண்டு பிள்ளைகளைவிட்டு அம்மா சாகி றாள். கணவன் கைபிசைவான். மறுமணம் செய்வான். செய்யாமலும் கூட இருப்பான். ஆனால், பிள்ளைகள் நாதியற்று... கஞ்சிக்கு வழியற்று... திசைக்கொன்றாய்ப் பிரிந்து... சீரழிந்தே போகும்.

மனைவிபோன பிறகு ஒரு குடும்பத்தைக் குடும்பமாகத் தக்கவைக்கும் சக்தி ஆணுக்கு இல்லை.

ஆனால், பெண்?

கணவன் சாகிறான். ரெண்டு பிள்ளைகள். குடும்பம் சிதறிப் போகவிட மாட்டாள். உடம்பைக் கடம்பாக்கி, உழைத்து, பிள்ளைகளை வளர்த்து, ஆளாக்கி, கரை சேர்த்து... தனது மானத் தையும் காப்பாற்றி... 'இன்னார் பிள்ளைகள்' என்று கணவனின் பெயரை ஊர் பேசும்படி வைத்துவிடுவாள், பெண். பெண்ணுக்கு அந்தச் சக்தி உண்டு.

தகப்பனற்ற பிள்ளை களைப் பார்த்தால்கூட, கிராமத்தாட்கள் அவ்வளவாக மனம் கசிய மாட்டார்கள். தாயற்ற பிள்ளைகள் என்றா லோ... அப்படியே மனம் உடைந்து விடுவார்கள். 'ஐயோ, மாதாவே' என்று இரக்கத்தால் கனிந்து குழைந்த ஈரச் சொற்களில் இதயமே கசியும்.



ஆம்... பெண்ணின் சக்தியை வள்ளுவர் மிக அழகாகச் சொல்கிறார்.

www.padippakam.com


நெறி சொல்ல வந்த இடத்தில்... இந்தப் புகழ்மாலை.

*'சிறைகாக்கும் காப்பு எவன்*
*செய்யும் மகளிர்*
*நிறை காக்கும் காப்பே தலை'*

அவர் காலத்து அரசர்களின் அந்தப்புரத்தை இதைவிட எவரும் விமர்சித்துவிடவும் முடியாது; பரிகசித்துவிடவும் முடியாது.

மனைவியை அடைத்து வைக்கிற கணவரைப் 'பேர் சொல்லி' வைகிறார் வள்ளுவர். சுயகாவலும் தன்மானமுமே முழுநிறை என்கிறார்.

அடேயப்பா...! இப்போது மாட்டுவதற்காக கொண்டு வந்திருந்த லகானையே கீழே போட்டு விட்டார், திருவள்ளுவர்.

சுய வலிமை மிக்கவள் பெண். தன்மானம் மிக்கவள். அவளுக்கு எதற்கு லகான் என்று நாம் புரிந்து கொள்கிற மாதிரியாக அந்த அதிகாரத்தில் உணர்த்திவிடுகிறார், திருவள்ளுவர்.

'பெண்வழிச் சேரல்' என்ற அதிகாரம். அதுதான் பெண்ணினத்தை வள்ளுவர் இழிவு செய்வதாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுக்கு ஆதாரமான அதிகாரம்.

'பெண் பேச்சைக் கேட்காதே என்கிறது. பெண் பேச்சைக் கேட்டு, கேவலப்பட்டு நிற்காதே என்கிறது' என்றெல்லாம் விமர்சிக்கப்படுகிற குறள்கள்.

ஆணாதிக்கத்தை எதிர்க்கிற எந்தச் சனநாயகவாதியும், அதற்கு மாற்றாகப் பெண்ணாதிக்கத்தை முன்வைக்க மாட்டான். அப்படி முன்வைத் தால், அவன் சனநாயகவாதி யுமல்ல; சமத்துவ சிந்தனையாளனுமல்ல.

மகாகவி பாரதிகூட 'ஆணுக்குப் பெண் சரி நிகர் சமானம்' என்று சமத்துவம் தான் கோருகிறான்.

'மனைவியை நேசி. சம மாகப்பாவி. பெண்களைத் தோழிகளாக நடத்து.. பெண்ணின் ஆற்றலை உணர். அவளை மனுசியாக மதி.''

என்பதுதான் சனநாயகச் சிந்தனையா

**இன்பத்துப்பாலையும், இல்லறத்தையும், அன்பையும், அறனையும் வலியுறுத்துகிற வள்ளுவர், பெண்ணை விரும்புவதை - விழைவதை - விமர்சிப்பாரா, என்ன?**

**அப்புறம் உள்ள குறள்கள் யாவும், அன்பற்ற மோகவயப்பட்ட கணவனின் அச்சத்தையும், தாழ்மையையும், பேடிமையையும் சொல்லிக் கேலி செய்கின்றன.**

ளர்களின் சமத்துவக் கோரிக்கையில் உட்கிடையாக உள்ளது.

'மனைவிக்குப் பயப்படு.. தாழ்ந்து நட... பெண்களை மோகப் பொருளாக எண்ணி சொக்கிக் கிட.... நெற்றியில் மயங்கிக்கிட' என்பதல்ல அவர்களது கோரிக்கை.

இன்றைக்கும் பெண்ணுரிமைக்காகப் போரிடுகிற எந்தச் சனநாயகச் சிந்தனையாளரும் இப்படிச் சொல்லமாட்டார்கள்.

இம்மாதிரியான அன்பற்ற மோகத்தை - அறமற்ற கூழைக் குழைவை எந்தப் பெண்ணும் கூட நேசிக்க மாட்டாள். அதையேதான் திருவள்ளுவர் 'பெண்வழிச் சேரல்' அதிகாரம் முழுக்கச் சொல்கிறார்.

மாமியார்களையும் நாத்தனார்களையும் வஞ்சிக்கிற 'தலையணை மந்திரத்தை' எல்லா சனநாயகவாதிகளும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். வள்ளுவரும் ஒப்புக் கொள்ளவில்லை.

*'மனைவிழைவார் மாண்பயன் எய்தார்*
*வினைவிழைவார்*
*வேண்டாப் பொருளும் அது'*

பற்று என்பது ஆக்கபூர்வமானது; அதுவே சற்று மிகையாகிவிட்டால், வெறி என்றாகிவிடும். நாசகாரத் தன்மையாகி விடும்.

காதல் என்பது படைப்பாக்கமிக்கது; அதுவே மிகையாகி, மோகமானால், அவனைச் செயலற்ற முடவனாக்கிவிடும். வாசல்படி தாண்டாமல், மனைவி மடியே கதியென்றாகிவிடும்.

இங்கும் அதுதான். பெருமைமிகு, பயன்மிகு செயல்களை விரும்ப முடியாத அளவுக்கு, மனைவி மோகம் கொண்டு முடங்கிப் போகிற விபத்தைத்தான் வள்ளுவர் விமர்சிக்கிறார்.



*'பேணாது பெண்விழைவான் ஆக்கம்*
*பெரியதோர்*
*நாணாக நாணுத் தரும்'*

மனைவி கேட்டதற்காக, தாய் இதயத்தையே வெட்டிக் கொண்டு வந்த மகனின் மோகத்தையும், அதன் வெட்கக் கேடான கீழ்மையையும்தான் இந்தக் குறள் விமர்சிக்கிறது. நியாயமான விமர்சனம்.


படிப்பகம்

www.padippakam.com


இன்பத்துப்பாலையும், இல்லறத்தையும், அன்பையும், அறனையும் வலியுறுத்துகிற வள்ளுவர், பெண்ணை விரும்புவதை - விழைவதை - விமர்சிப்பாரா, என்ன?

அப்புறம் உள்ள குறள்கள் யாவும், அன்பற்ற மோகவயப்பட்ட கணவனின் அச்சத்தையும், தாழ்மையையும், பேடிமையையும் சொல்லிக் கேலி செய்கின்றன.

**பெண் வழிச் சேரல் அதிகாரமும், வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரமும் இந்தக் கோணத்தில் ஆய்ந்து நோக்குகிற போது, வேறொரு தோற்றம் காட்டுகின்றன. புதிய புரிதலுக்குள் நம்மை வெளிச்சப்படுத்துகின்றன.**


'இல்லாள்கண் தாழ்ந்த...' 'மனையாளை அஞ்சும்...' 'இல்லாளை அஞ்சுவான்' 'அமையார் தோள் அஞ்சுபவர்' 'பெண் ஏவல்' 'பேதமை'.

'தாழ்ந்த...' 'அஞ்சும்...' 'ஏவல்...' 'பேதமை...' என்ற பண்பெல்லாம் மானுட சமத்துவத்துக்கு அந்நியமானவை. ஆணோ பெண்ணோ - யாருக்கும் யாரும் தாழ்ந்தவர்களல்ல; பேதமையல்ல; அஞ்சுவது கூடாது.

காதல் என்பது துணிச்சல் தரத்தக்கது. மோகம் என்பது கோழைத்தனமே தரும். காதல் என்பது தியாகக் குணத்தை உருவாக்கும்; மோகம் என்பது குரோதத்தையே உருவாக்கும். காதல் என்பது தோழமையையும் சமத்துவத்தையும், புதிய பண்பாட்டையும் படைக்கும்; அன்பற்ற வெறும் தேகமோகம் என்பது அடிமைத் தனத்தையும், முட்டாள் தனத்தையும் இவற்றையே அடிப்படையாகக் கொண்ட பழைய காலத்துத் தாம்பத்தியப் பண்பாட்டையும் மட்டுமே உண்டாக்கும்.

திருக்குறளின் 'பெண்வழிச் சேரல்' அதிகாரம் முழுமையும் அன்பற்ற மோகத்தையும், அறமற்ற தாழ்மையையும் நெறியற்ற கடமை தவறலையும் நியாயமான முறையிலேயே விமர்சிக்கின்றன.

காதல் பெண்ணை மனுசியாக உணர வைக்கும்; தேகமோகம் என்பது பெண்ணை வெறும் போகப் பொருளாக நினைக்க வைக்கும்.



மனைவியை மனுசியாக உணராமல், வெறும் போகப் பொருளாக மட்டும் எண்ணிச் சொக்கிக் கிடப்பதுவும், சுரணையற்றுப் புரள்வதும், அறக்கடன் மறந்து முடங்கிக் கிடப்பதுவும் ஆணாதிக்கச் சமூகம் அனுமதிக்கிற ஆண்கௌரவம். ஆணாதிக்கச் சமூகம் மெச்சுகிற ஆண் சுபாவம்.

விபச்சார எதிர்ப்பு எப்படி ஆணாதிக்கச் சமூகப் பண்பாட்டுக்கு எதிரான போர்க்குரலோ... அதேபோல், மனைவியைத் திரேகமாக மட்டும் எண்ணி மயங்கி மோகித்துக் கிடப்பதற்கு எதிரான விமர்சனமும், ஆணாதிக்கச் சமூகப் பண்பாட்டுக்கு எதிரான போர்க்குரல்தான்.

இந்த நூற்றாண்டில் நம்முடன் உலவித் திரிந்த மகாகவி பாரதி... ஒட்டுமொத்தச் சமூகச் சூழலையே - பண்பாட்டுச் சூழலையே - இலக்கியச் சூழலையே அதிர வைக்கிற மாதிரி ஒரு புதிய குரல் கொடுத்தான்.

**'கற்பென்று சொல்லவந்தால் அஃதை - இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்'**

ஏழு வயதுப் பெண்ணுக்குக் கல்யாணம், ஒன்பது வயது விதவை, தேவதாசி முறைமை, ஒருத்தருக்குப் பலதாரம், கட்டை வேகிற வரைக்கும் விதவையாகவே உழன்று தீர்கிற எட்டு வயது விதவை என்று நிலவிவந்த ஒரு சமூகப் பண்பாட்டுத் தளத்தில் இந்தக் குரல், ஒரு மகாப் பிரளயமாகச் சுழன்றடித்தது; சுழற்றி அடித்தது.

இது பாரதியின் குரல்தான். பாரதி மூலமாகக் காலம் தந்த குரல்தான். இந்தக் காலத்திலேயே மிகப் பெரிய அதிர்வுகளையும் பூகம்பத்தையும் நிகழ்த்துகிற இந்தக் குரலின் உக்கிரம்.

ஏறக்குறைய... காலத்தால் - சமுதாய அமைப்பால் - மிக மிக மிக முந்தைய வள்ளுவரிடமும் இதே குரல் ஒலித்தது.

திருவள்ளுவரிடமும் குறளாக இந்தக் குரல் வெளிப்பட்டிருக்கிறது என்பதைக் கற்றுணர்ந்த கணத்தில் பேராச்சரியத்தில் பிரமித்துப் போனேன்.

அந்தக் காலத்தில் இந்தக் குரலா? வள்ளுவர் காலத்திலா? ஆணுக்கும் கற்பு வேண்டும் என்ற குரலா? குறளா?

ஆம்.. நிஜம்தான்.

www.padippakam.com


சம்பந்தமேயில்லாத 'பெருமை' என்ற அதிகாரத்தில் இப்படியொரு குரலுடன் குறள்.

**'ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டு ஒழுகின்உண்டு'**

ஒரே கணவனைக் கைப்பற்றிக் காதலோடு வாழ்கிற குலமகள். அவள் பெருமை மிக்கவள். அவளைப் போலே ஒரே மனைவியுடன் காதலும் கற்புமாகக் கட்டுப்பாடுடன் தன்னைக் காத்து வாழ்ந்தால்.... அந்தக் கணவனுக்கும் பெருமை யுண்டு.

காலத்தில் காலூன்றி, காலத்தை மீறி, காலத்தின் முகத்தையே மாற்றியமைப்பது என்பது இதுதான். இப்படித்தான்.

இருபதாம் நூற்றாண்டு மகாகவி குரல் தருகிற போதே.. அதிர்வூட்டும் புதுமையாகத் தோற்றம் தருகிற ஒரு குரலை, திருவள்ளுவர் தமது குறளி லேயே கூறியிருக்கிறார் என்பது எத்தனை அதிசய மான உண்மை!

இதையெல்லாம் ஆய்கிறபோது, ஆற அமர ஆழ்ந்து யோசித்து, நுணுகி ஆராய்ந்தால்... திருவள்ளுவர் மீதான குற்றச்சாட்டு வலுவிழந்து போவதை உணர முடிகிறது.

பெண் வழிச் சேரல் அதிகாரமும், வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரமும் இந்தக் கோணத் தில் ஆய்ந்து நோக்குகிறபோது, வேறொரு தோற்றம் காட்டுகின்றன. புதிய புரிதலுக்குள் நம்மை வெளிச்சப்படுத்துகின்றன.

இந்த இடத்தில் ஒரு சிறிய தன்னிலை விளக்கம்.

காலத்தால் முந்தைய வள்ளுவரை இழுத்துப் பிடித்துப் பெண்ணுரிமைச் சாயம் பூசியிருக்கி றேனா? இட்டுக்கட்டி, வாதப் பிரதிவாத சாமர்த்தி யத்தால் பெண்ணுரிமைக் குரல் மிக்கதாக திருக்குற ளுக்கு ஒரு பொய்த் தோற்றம் ஏற்படுத்துகிறேனா?

இல்லை... இல்லை... இல்லவே இல்லை.

வேதம் கேட்கும் உரிமைகூட இல்லாமல் இருந்தாள் பெண். இந்தியப் புராணங்களில் பெண் துறவி குறித்த - பெண் முனிவர்கள் - பெண் தவசிகள் குறித்த தகவல்களே கிடைக்காது. ஏனெனில், பெண்ணுக்கு அந்தத் தகுதி வழங்கிய தில்லை, அக்காலம்; புராணங்கள்; மனுதர்மம்.



ஆனால், தேவதாசி குலத்தில் பிறந்த மணிமேகலை, அரசர் குலத்தளை களை மீறிப் போராடி... துறவியாகி, உலகப் பசி போக்கும் புனித லட்சியத்தில் வென்றதாக மணிமேகலைக் காப்பியம் வந்தது.

அரசன் இறைவனுக்கு நிகரானவன். அரசின் தீர்ப்பை ஆண்டவனின் விதியாக மக்கள் ஒப்புக் கொண்ட காலம். அப்பீலோ மறுபரிசீலனையோ எதுவும் கிடையாது.

ஆனால் ஒரு குலப் பெண் அரசசபையேறி... அரசனிடம் அஞ்சாமல் எதிர் நின்று, வாதாடி 'தேரா மன்னா' என்று நெஞ்சைப் பிடித்து உலுக்குகிற உலுக்கலில்... மாரடைப்பில் மன்னனே மடிகிறான், 'யானே கள்வனெ'ன்ற கதறலோடு.

அரச தீர்ப்பை எதிர்த்து அரசனிடமே ஒரு பெண் போராடி வெல்கிறாள் என்கிற சிலப்பதி காரம் எனும் காப்பியமும் வந்தது.

மிக நீண்ட நெடிய தயக்கத்திற்குப்பிறகு, பெண்பிட்சுகளைச் சங்கத்தில் அனுமதித்தார், புத்தர்.

மணிமேகலைக் காப்பியம், சிலப்பதிகாரக் காப்பியம் போன்ற தமிழ்க் காப்பியங்களில், பெண் குறித்த மிகப் புதிய குரல் - காலச் சமூகச் சூழல்களை மீறிய குரல் - ஒலித்திருப்பதையும் நினைவுபடுத்திக் கொண்டால்... திருக்குறளிலும் அதற்கான கால... வரலாற்றுச் சாத்தியக்கூறு உண்டு என்பதை ஒப்புக்கொள்ளலாம்.

●●


## வள்ளுவம் வாசகர் வட்டம் சூலூர், கோவை

வள்ளுவம் வாசகர் வட்டம் சார்பில் கோவை மாவட்டம் சூலூரில் 30.6.99 அன்று கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. செயல் விளக்கச் சிந்தனையுரைகளும் குறள் குறித்த கருத்தாடல்களும் நிகழ்ந்தன. முதுபெரும் புலவர் நா. சுந்தரராசனார் தலைமையில் குறளன்பர்கள் புலவர் இராசியண்ணன், திருவாளர்கள் சூ. ர. தங்கவேல், சூ. ம. வெள்ளிங்கிரி, செந்தலை ந.கவுதமன், சூ.நா. வரதராசு மற்றும் பலர் கலந்து கொண்டனர். வள்ளுவம் இதழாசிரியர் பல்லடம் மாணிக்கம் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.


படிப்பகம்

அ.சங்கரவள்ளி நாயகம்

# வ.உ.சியின் திருக்குறள் பதிப்பு



திருக்குறள் அறத்துப்பாலிற்கு மணக்குடவர் உரையினையும் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றிற்கு இளம்பூரணர் உரையினையும் வ.உ.சி. பதிப்பித்துள்ளார்.

### திருக்குறள் பதிப்புகள்

*1811* முதல் *1975* வரை திருக்குறள் பதிப்புக்கள் நூற்றிற்குமேல் தமிழகத்தில் வெளிவந்துள்ளன. பரிமேலழகர் உரைப்பதிப்பு, உரை விளக்கப் பதிப்பு, உரை வேறுபாட்டுப் பதிப்பு, உரைக் கொத்துப் பதிப்பு, ஆராய்ச்சிப் பதிப்பு, தெளிவுரைப்பதிப்பு, மலிவுப் பதிப்பு, கையடக்கப் பதிப்பு, உரையுடன் கூடிய கையடக்கப் பதிப்பு, பரிசுப்பதிப்பு எனத் திருக்குறள் பதிப்புக்கள் பல வெளிவந்துள்ளன. இவற்றுள் பரிமேலழகர் உரைப்பதிப்பே மிகுதியாகும். மணக்குடவர் உரைப்பதிப்பு மூன்றே இதுகாறும் வெளிவந்துள்ளன. இம்மூன்றிலும் *1917*-இல் வெளிவந்த வ.உ.சி.யின் பதிப்பு காலத்தால் முந்தியதாகும். பொன்னுச்சாமி நாட்டார் *1925*-இல் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்துள்ளார். *1955*-இல் மணக்குடவர் உரையினை மலர் நிலையம் பதிப்பித்து வெளியிட்டது.

### .1.2. வ.உ.சி. பதிப்பு

இலக்கியத் துறையில் வ.உ.சி பதிப்பித்த நூல் திருக்குறள் ஒன்றே ஆகும். இவரது திருக்குறள் அறத்துப்பால் மணக்குடவர் உரைப்பதிப்பு *1917*-ஆம் ஆண்டில் வெளியாகியுள்ளது.

### பதிப்பு எழுந்த சூழல்



ஒன்பதின்மர் உரைகளைத்தேடும் முயற்சியில் ஈடுபட்ட அவருக்கு மணக்குடவர் உரைப்பிரதி கிடைத்தது. அது வள்ளுவர் கருத்துக்களைத் தெள்ளென விளக்குவதாகவும் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டதாகவும் அவருக்குத் தோன்றியது. எனவே மணக்குடவர் உரையைப் பதிப்பிக்

www.padippakam.com


கும் எண்ணம் அவருக்கு எழுந்தது. தமக்குக் கிடைத்த பிரதியைச் சென்னை அரசிற்குட்பட்ட கையெழுத்துப் புத்தக சாலையிலுள்ள மணக் குடவர் உரைப்பிரதியோடு அவர் ஒத்துப்பார்த்தார். அரசாட்சிப் புத்தகசாலைப் பிரதியில் உள்ள அதிகாரப் பெயரும் முறையும் பரிமேலழகர் முறையைப் பின் பற்றியிருந்தன வென்றும் அதில் சில குறள்களின் மூலமும் உரையும் சிதைந்த நிலையிலும் குறைந்த நிலையிலும் இருந்தன என்றும் வ.உ.சி. தமது பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.

திருக்குறள் பதிப்பில் ஈடுபட்ட வ.உ.சி, உ.வே.சாமிநாதையரவர்களிடத்திலிருந்த மணக்குடவர் உரைப்பிரதியைத் தருவித்துப் பார்த்துள்ளார். அது, மேற்கூறிய அரசாட்சிப் புத்தகப் பிரதியினின்று பிரதியெடுக்கப்பட்டதாகும் என வ.உ.சி. அறிந்தார். ஆயினும் அதனையும் சகசாநந்தசாமி அவர்களையும் துணையாகக் கொண்டு தமக்குக் கிடைத்த பிரதியைப் படைத்தல், இருப்பவற்றை ஒழுங்குபடுத்தல், பிழைபட்டனவற்றை நீக்குதல் என்னும் மூன்றையும் புரிந்து மணக்குடவர் உரையை ஒருவாறு முழுமையாக்கிப் பதிப்பித்துள்ளார். மணக்குடவர் உரையைப் பதிப்பித்து வருங்கால் தி.செல்வக்கேசவராய முதலியாரும் த.கனகசுந்தரம்பிள்ளையும் அதனைப் பலமுறை பார்த்துச் சீர்படுத்தித் தந்துள்ளதாக வ.உ.சி. கூறுகின்றார்.

'மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகார முறையிற் சிறிதும் குறட்பாக்களின் முறையில் பெரிதும் வேறுபட்டிருப்பதோடு பல குறள்களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டும் பலப்பல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்கள் உரைத்துள்ளனர். இவ்வேற்றுமைகளைக் காண்பார் திருக்குறளின் பெருமையையும் அதன் மூலபாடங்கள் வேறுபட்டுள்ள தன்மையையும் நன்கு அறிவதோடு, குறள்களுக்கு இருவரும் உரைத்துள்ள பொருள்களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் புதிய பொருள்கள் உரைக்கவும் முயலுவர். அவர் அவ்வாறு செய்ய வேண்டுமென்னும் விருப்பம், யான் இவ்வுரையை அச்சிடத் துணிந்ததற்கு முக்கிய காரணம்' என மணக்குடவர் உரையினைப் பதிப்பித்த சூழலை வ.உ.சி. விளக்குகின்றார்.



**ஒன்பதின்மர் உரைகளைத்தேடும் முயற்சியில் ஈடுபட்ட அவருக்கு மணக்குடவர் உரைப்பிரதி கிடைத்தது. அது வள்ளுவர் கருத்துக்களைத் தெள்ளென விளக்குவதாகவும் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டதாகவும் அவருக்குத் தோன்றியது. எனவே மணக்குடவர் உரையைப் பதிப்பிக்கும் எண்ணம் அவருக்கு எழுந்தது.**

பதிப்பின் சிறப்புக்கூறுகள்

வ.உ.சி.யின் திருக்குறள் பதிப்பின் சிறப்புக் கூறுகளை,

1. அருஞ்சொல் விளக்கம் தருதல் 2. சொல் வருவித்து விளக்கம் தருதல் 3. விடுபட்ட பகுதிக்கு விளக்கம் தருதல், 4. விளக்கம் இல்லா இடங்கட்கு விளக்கம் தருதல் 5. உரை ஒப்பீடு 6. இலக்கணக் குறிப்பு சுட்டுதல் 7. அதிகார வைப்பு முறை என ஏழு வகையாகப் பிரித்துக் காணலாம்.

அருஞ்சொல் விளக்கம் தருதல்

மணக்குடவர் உரையிடைக் காணப்படும் அரிய சொற்களுக்கு வ.உ.சி. பொருள் விளக்கம் செய்துள்ளார்.

அறத்துப்பால் முதலதிகாரத்தின் நான்காவது குறளிற்கு, 'வீடு பெறலாவது, அவலக் கவலைக் கையாற்றின் நீங்கிப் புண்ணிய பாவமென்னும் இரண்டினையும் சாராமல், சாதலும் பிறத்தலுமில்லாததொரு தன்மை யெய்துதல்' என மணக்குடவர் உரை விளக்கம் தந்துள்ளார். இவ்விளக்கத்திடைக் காணப்படும் 'அவலம்', 'கையாறு' என்னும் அரிய சொற்களுக்கு.

'அவலம் - கிலேசம்; கையாறு - துன்பம்' என வ.உ.சி. பொருள் உரைத்துள்ளார்.

அறத்துப்பால் அன்புடைமையென்னும் அதிகாரத்தின் எட்டாவது குறளுக்கு 'அன்பு ஆர்வமுடைமையைத் தரும்; அவ்வார்வ முடைமை நட்பென்று சொல்லப்பட்ட ஆராய்தலில்லாத சிறப்பைத் தரும்' என மணக்குடவர் பொருள் உரைக்கின்றார். இவ்வுரையிடைக் காணப்படும் 'ஆர்வம்', 'நட்பு' என்னும் சொற்களுக்கும் 'ஆராய்தலில்லாத' என்னும் சொற் றொடர்க்கும் 'ஆர்வம் - தொடர்பிலார் மாட்டும் செல்லும் காதல்; நட்பு - நட்பினர், ஆராய்தல் இல்லாத - ஆராய்தல் வேண்டாத' என வ.உ.சி. பொருள் விளக்கம் செய்துள்ளார். நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தின் முதல் குறளின் தொடக்கமான 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்' என்னும் சொற்றொடர்க்கு, 'சமன்வரை பண்ணி சீரொத்தால்' தூக்கிப் பார்க்கும் நிறைகோல்' என மணக்குடவர் பொருள் உரைத்துள்ளார். 'சமன்வரை' என்னும் சொற்றொடரை வ.உ.சி. 'சமன்வரை - நிறுக்கும் கருவி


படிப்பகம்

www.padippakam.com


யாகிய வெள்ளிக் கோலின் இரண்டு தலைகளும் சமனை (ஒக்க) நிற்குமாறு செய்தற்குத் தூக்கும் கயிறு இடப்படும் வரை' என விளக்கிக் காட்டு கின்றார்.

## சொல் வருவித்துப் பொருள் விளக்கம் தருதல்

மணக்குடவர் உரை தெளிவாகுமாறு தேவைப்படும் சொற்களை அடைப்புக் குறிக்குள் உரையிடை வ.உ.சி. பயன்படுத்தியுள்ளார்:

'கற்றதனால் ஆய பயன் என் - (மேற்கூறிய எழுத்தினானாகிய சொற்களையெல்லாம்) கற்றத னாகிய பயன் (வேறு)யாது, வால் அறிவன் நல்தாள் தொழார் எனின் - விளங்கிய அறிவினையுடையவன் திருவடியைத் தொழாராயின்?' 'இல்லவள் மாண்பானால் (ஒருவனுக்கு) மனையாள் மாட்சிமையுடையாளானால், இல்லது என் - இல்லாதது யாது? (எல்லாம் உளவாம்). இல்லவள் மாணாக்கடை (ஒருவனுக்கு) மனையாள் மாட்சிமையில்லாளானால், உள்ளது என் உள்ளது யாது? (ஒன்றும் இல்லை)' எனத் தேவைப்படும் சொற்களை வ.உ.சி. வருவித்துப் பொருள் விளக்கம் செய்கின்றார்.

## விடுபட்ட பகுதிக்கு விளக்கம் தருதல்

மணக்குடவர் விளக்கம் செய்யாத இயலிற்கு வ.உ.சி விளக்கம் தருகின்றார். அங்ஙனம் விடுபட்ட இயலாகிய துறவற இயலினை, 'துறவறமாவது, இல்லின்கண்ணின்று நீங்கித் தவம் முதலாயின செய்தல், அது கூறிய அதிகாரம் பதின்மூன்றிலும் அருளுடைமை முதலாகத் தவமுடைமை ஈறாக இல்லின் கண்ணின்று நீங்கியாரால் செய்யப்படுவன நான்கும், கூடாவொழுக்கம் முதலாகப் பயனில சொல்லாமை ஈறாக அவரால் தவிரப்படுவன ஐந்துமாக ஒன்பது அதிகாரத்தால் கூறி; அதன் பின் துறவிற்கு இன்றியமையாது அறிதற் பாலதாகிய நிலையாமை ஓர் அதிகாரத்தால் கூறி; அதன்பின் துறவிலட்சணம் ஓர் அதிகாரத்தால் கூறி; துறவினால் எய்தற்பால தாகிய மெய்யுணர் தல் ஓர் அதிகாரத்தால் கூறி; பிறப்பிற்கு ஏதுவாகிய அவாவினை அறுத்தல் ஓர் அதிகாரத் தால் கூறினாராகக் கொள்ளப்படும்' என வ.உ.சி. விளக்கி யுள்ளார்.



**அறத்துப்பால் முதலதிகாரத்தின் நான்காவது குறளிற்கு, 'வீடு பெறலாவது, அவலக் கவலைக்கையாற்றின் நீங்கிப் புண்ணியப் பாவமென்னும் இரண்டினையும் சாராமல், சாதலும் பிறத்தலுமில்லாததொரு தன்மை யெய்துதல்' என மணக்குடவர் உரை விளக்கம் தந்துள்ளார்.**

## விளக்கமில்லா இடங்கட்கு விளக்கம் தருதல்

உரையாசிரியர் விளக்கம் தராத குறளுக்கு வ.உ.சி. உரை விளக்கம் தந்துள்ளார். அறத்துப் பாலை முழுமையாகப் பார்ப்பின் உரை விளக்கம் பெறாத குறள் ஒன்றேயாகும். அழுக்காறாமை என்னும் அதிகாரத்தில் ஐந்தாவது குறளுக்கு உரை ஆசிரியர் வேறாகப் பொருள் கூறாது முன்பு சொன்னதே பொருளெனக் கூறிச் சென்றதால் வ.உ.சி. அக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்:

*'அழுக்கற் றகன்றாரும் இல்லை; அஃதில்லார்*
*பெருக்கத்திற் றீர்ந்தாரும் இல்'*

என்னும் குறளுக்கு, 'அழுக்கற்று அகன்றாரும் இல்லை - அழுக்காற்றினான் செல்வமுடையரானாரும் இல்லை; அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் - அழுக்காறில்லாதராய்ச் செல்வத்தினின்று நீங்கினாரும் இல்லை' என்று வ.உ.சி. விளக்கிக் காட்டியுள்ளார்.

## உரை ஒப்பீடு

சில குறள்களுக்கு மணக்குடவர் உரையினைப் பரிமேலழகர் உரையுடன் பொருந்தக்காட்டி, இரு உரைகளின் வேற்றுமைகளையும் வ.உ.சி. விளக்குகின்றார்:

அழுக்காறாமை என்னும் அதிகாரத்தில் ஏழாம் குறளாகிய

*'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்*
*உண்பதூஉம் இன்றிக் கெடும்'*

என்பதில் அழுக்கறுப்பான் என்ற தொடருக்கு மணக்குடவர் தரும் பொருளினைப் பரிமேலழகர் தரும் பொருளோடு பொருந்தக்காட்டி அவற்றின் பொருள் வேற்றுமையினை 'அழுக்கறுப்பான் என்பதனை அழுக்கு எனவும், அறுப்பான் எனவும் பிரித்து, அழுக்கு என்பதற்கு அழுக்காற்றினால் எனவும் அறுப்பான் என்பதற்கு விலக்குவான் எனவும் இவ்வுரையாசிரியர் உரைத்திருப்பது கவனித்தற் பாலது. அழுக்கறுத்தல் என்பதனை ஒரு சொல் நீர்மைத்தாகக் கொண்டு உரைத் துள்ளார் பரிமேலழகர்' என வ.உ.சி. எடுத்துக்காட்டு கின்றார்.


படிப்பகம்

இலக்கணக்குறிப்புச் சுட்டுதல்

இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளையும் வ.உ.சி. தருகின்றார்.

'வாய்மையுடைமை' என்னும் அதிகாரத்தில் இரண்டாவது குறளிடைக் காணப்படும் 'எனைத் தொன்றும்' என்னும் சொற்றொடர்க்கு

'ஒருமை சுட்டிய பெயர் நிலைக் கிளவி - பன்மைக்காகு மிடனுமாருண்டே' என்னும் தொல் காப்பியச் சூத்திரப்படி எனைத்தொன்றும் என்னும் ஒருமைப் பெயர் எவையும் என்னும் பன்மைப் பெயர்க்கு ஆயிற்று' என வ.உ.சி. இலக்கணக் குறிப்பினை வழங்கியுள்ளார்.

> **மணக்குடவர் உரையினைப் பதிப்பித்த முதற் பெருமை வ.உ.சி.யைச் சாரும்.**
>
> **எளிதில் பொருள் கொள்ளும் நிலையில் சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளார்.**
>
> **பதவுரை தரப்படாத காலச்சூழலில் வ.உ.சி. பதவுரை தந்து பதிப்பித்துள்ளார்.**

'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தின் நான்காவது குறளில் இடம் பெற்றுள்ள 'படுபாக்கு' என்னும் சொற்றொடர்க்கு, 'படுபாக்கு என்பது தொழிற்பெயர் - பாக்கு - விகுதி' என வ.உ.சி. இலக்கண குறிப்புத் தருகின்றார்.

அதிகார வைப்புமுறை

அதிகார வைப்புமுறையில் மணக்குடவர் விடுத்த அதிகாரங்களின் வைப்பு முறையினை வ.உ.சி. சுட்டியுள்ளார். அவ்வாறு விடுபட்ட அதிகாரங்கள் இருபதிற்கும் வ.உ.சி. அதிகார வைப்புமுறையினைச் சுட்டியுள்ளார்.

'இது விருந்தோம்பலின் கண்ணே இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது' என்று வாய்மையுடைமை என்னும் அதிகாரத்திற்கு வ.உ.சி. வைப்புமுறை காட்டியுள்ளார்.

'இஃது இல்வாழ்வாரும் அவரால் ஓம்பப் பெற்ற விருந்தினரும் கைக்கொள்ள வேண்டுவ தொன்றாதலின், வாய்மை யுடைமையின் பின் கூறப்பட்டுள்ளது' என்ற செய்ந்நன்றி அறிதல் என்னும் அதிகாரத்தின் வைப்புமுறை பற்றி வ.உ.சி. குறிப்பிடுகின்றார்.

வ.உ.சி. பதிப்பும் பிற பதிப்பும்

மலர் நிலையச் சார்பில் இரா.சிவ.சாம்ப சிவ சர்மா என்பவர் மணக்குடவர் உரையினை 1955-இல் பதிப்பித்துள்ளார். அதிகாரங்களின் வரிசை முறையில் பரிமேலழகரை இவர் பின்பற்றியுள்ளார். வ.உ.சி. பதவுரையாகப் பொருள் வழங்கியிருக்க, சர்மா பதவுரைப் பொருள் தராது குறள்களுக்குப் பொழிப்புரையே தந்துள்ளார். வ.உ.சி. தந்திருப்பது போன்று சொந்தக் கருத்துக்களையோ, அரிய சொற்களுக்குப் பொருள் விளக்கத் தினையோ, இலக்கணக்குறிப்பினையோ சர்மா சுட்டிக்காட்டவில்லை. வ.உ.சி. தமது பதிப்பில் பாடவேறுபாடு காட்டாதிருக்க, சர்மா பாடவேறு பாட்டினைக் காட்டியுள்ளார். மணக்குடவர் உரையினைப் பல புதுமைகளுடன் வ.உ.சி. பதிப்பித்திருக்க, சர்மா மாற்றமின்றிப் பதிப்பித் துள்ளார்.

முடிவுரை

மணக்குடவர் உரையினைப் பதிப்பித்த முதற் பெருமை வ.உ.சி.யைச் சாரும்.

குறள்களையும் உரையினையும் வ.உ.சி. எளிதில் பொருள் கொள்ளும் நிலையில் சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளார்.

பதவுரை தரப்படாத காலச்சூழலில் வ.உ.சி. பதவுரை தந்து பதிப்பித்துள்ளார்.

சொற்களை உரையிடையே வருவித்துப் பொருளை வ.உ.சி. விளக்கமுறச் செய்துள்ளார்.

தேவைப்படுமிடங்களில் இலக்கணக் குறிப்பினை அவர் சுட்டியுள்ளார்.

உரையாசிரியர் விளக்கம் தராத துறவற இயலினைப் பொருத்தமான முறையில் வ.உ.சி. விளக்கிக் காட்டியுள்ளார்.

உரையாசிரியர் உரை காட்டாக குறளிற்கு வ.உ.சி. தமது உரையினை வழங்கியுள்ளார்.

உரையாசிரியர் விடுத்துள்ள அதிகாரங்களுக்கு வைப்பு முறையினை வ.உ.சி. சுட்டிக் காட்டி யுள்ளார்.




வ.உ.சியின் பதிப்பு மணக்குடவர் உரையினைப் பதிப்பித்துள்ள பிறர் காட்டாத பல புதுமைக்கூறுகளுடன் அமைந்துள்ளது.

www.padippakam.com


மு. அருணாசலம்

# திருவள்ளுவ மாலை

ஐம்பத்து மூன்று வெண்பாக்களும், ஒரு குறள் வெண்பாவும் கொண்ட ஒரு பாடல் தொகுப்பு, திருவள்ளுவமாலை என்ற பெயரோடு நெடுங்காலமாக வழங்கி வருகின்றது. இப்பாடல் கள் திருக்குறளின் பெருமையையும், திருவள்ளுவ ரின் சிறப்பையும் எடுத்துக் கூறுவனவாய் அமைந்து, திருக்குறளைச் சார்ந்த சாற்றுக் கவிகள் போல, குறள் நூலின் இறுதியில் பலராலும் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றைப் பார்க்கும் போது இவை திருக்குறளோடு சமகாலத்தன என்றே யாருக்கும் சொல்லத்தோன்றும். பழமை யாக நூலைக் கற்றுவருகின்ற புலவர் குழாம், திருவள்ளுவமாலையானது திருக் குறளுக்குச் சிறப்புப்பாயிரம் போல் அமைந்த சிறப்புப் பகுதி என்றே சொல்லி வருகின்றது. ஆனால் சில ஆராய்ச்சியாளர் இது பழமையான பாடல் தொகுதியன்று, பிற்காலத்தில் புதிதாக ஒருவர் கவி புனைந்து பழைய ஆசிரியர்களின் பெயரைச் சூட்டி வைத்தார் என்று கருதுகின்றார் கள். இவ்விரு கருத்துக்களையும் நூலையும் ஆராய்ந்து, நூலின் காலம், அதாவது பாடல்கள் பெரும்பகுதி பாடப்பட்ட காலம், யாது என்று முடிவு செய்வதே இங்கு நாம் மேற்கொள்ளும் முயற்சி யாகும்.



வரலாறு

'திருக்குறள் செய்த திருவள்ளுவர் தம் நூலுக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத்தாருடைய அங்கீகாரத்தைப் பெற விரும்பி, மதுரை சென்று அவர்களைக் கண்டபோது, அவர்கள் இவரை மதிக்கவில்லை. ஆனால் இவர் தம்நூலைப் பொற்றாமரை வாவியில் மிதந்து கொண்டிருந்த சங்கப் புலவர் இருக்கையாகிய சங்கப் பலகையின் மீது வைத்த மாத்திரத்தில், அத்தெய்வப் பலகை சுருங்கி, குறள் ஒன்றை மட்டும் ஏந்தி, புலவர்களனை வரையும் பொற்றாமரை வாவியில் வீழ்த் திற்று' என்று ஒரு வரலாறு சொல்லப் படுகிறது. (வீழ்ந்த புலவர்கள் நீருள் மூழ்கி இறந்தனர். இவ்வாறு திருவள்ளுவர் சங்கத்தை அழித்தார் என்றும் சிலர் சொல் வார்கள். புலவர்கள் நீந்திக் கரையேற அறியார்கள் போலும்!) நீரில் வீழ்ந்த




படிப்பகம்

www.padippakam.com


புலவர்கள் வெட்கமடைந்து, எழுந்து கரை சேர்ந்து, வள்ளுவர் நூலைப் புகழ்ந்து ஒவ்வொருவரும் ஒரு பாடல் சிறப்புப் பாயிரமாகப் பாடினார்கள். இவ்வாறு பாடிய பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலையாகும். இதன்படி, பாடல்கள் யாவும் ஒரே சமயத்தில் பாடப்பட்டன. யாவரும் சங்கப் புலவர்களே, யாவரும் திருவள்ளுவர் காலத்தில் இருந்து அவரை நேரில் பார்த்துப் பாடினார்கள் என்றாகிறது. இக்கருத்துக்கு ஆதாரமாக ஒரு பாடலையும் இவர்கள் காட்டுகிறார்கள்:

**அறன் அறிந்தேம்; ஆன்ற**
**பொருள் அறிந்தேம்; இன்பின்**
**திறன்தெரிந்தேம்; வீடு**
**தெளிந்தேம்; – மறன் எறிந்த**
**வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம் வாயால்**
**கேளாதன எல்லாம் கேட்டு.**

இங்கு 'வள்ளுவனார் தம் வாயால் கேளாதன எல்லாம் கேட்டு' என்று கூறியிருப்பதால், அவர் நேரேவந்து திருக்குறளை அரங்கேற்றினர் என்றும், 'வாளார் நெடுமாற' என்றமையால், நேரே அங்கு வந்திருந்த பாண்டியனை முன்னிலைப்படுத்தி இப்பாடல் சொல்லப்பட்டது என்றும் காட்டுகிறார்கள்.

தடைகள்

ஆனால் ஆராய்ச்சி முறையில் பார்க்கும்போது பல தடைகள் எழுகின்றன. மதுரைச் சங்கத்தில் வள்ளுவர் நேரில் சென்று நூலை அரங்கேற்றினார் என்றால், இக்கருத்துக்களில் ஒன்றுக்கேனும் சமாதானம் காணமுடியாது. முதலாவது 'வள்ளுவனார் தம் வாயால்' என்பது, 'வள்ளுவர் நூலாகிய திருக்குறளைக் கற்று' என்று பொருள்படுமேயன்றி, வள்ளுவர் பூத உடலோடு எதிரே தோன்றிச் சொல்லிக் காட்டினார் என்று பொருள்படாது.

திருவள்ளுவமாலைப் பாடல்களைப் பின்னர் ஆராய்வோம். பொதுவான சில கருத்துகளை மட்டும் இங்குக் காண்போம்.

**ஒரே ஆசிரியர் செய்திருந்தால்தான் இவை இந்தப் பூரண அமைப்பைப் பெறும். ஆதலால் இவற்றை ஒரே ஆசிரியர் செய்தார் என்பது தெளிவு. இவ்வாறு செய்த திருவள்ளுவமாலையாசிரியரே இப்பாடல்களுக்குச் சங்கப் புலவர் என்று தாம் கருதிய புலவர் பெயர்களைச் சூட்டிவைத்தார் என்பதும் தெளிவு. இவை போன்றனவே எல்லாப் பாடல்களும். ஆதலால் ஓராசிரியரே, இப்பாடல்கள் எல்லாவற்றையும் பாடி, புலவர் பெயர்களைப் பெய்து அமைத்தார் என்று கருதுவது பிழையாகாது.**

இங்குப் பெயர் காணப்படும் புலவர்களில் பலர் சங்கப் புலவர் பெயர் வரிசையில் காணப்படாதவர். இவர்கள் திருவள்ளுவமாலை எழுதிய ஒரு தனிஆசிரியருடைய கற்பனையில் எழுந்தவர்கள். கவிசாகரப் பெருந்தேவனார் முதலியோர் யாரோ, அறியோம்.

இரண்டாவது, தெரிந்த பெயருள்ள புலவர்களுள் பலர் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர். சங்க காலம் என்பது சில நூற்றாண்டுக்காலம். ஆகவே சங்கப் புலவர் இந் நீண்ட காலப் பகுதியில் முன் பின்னாக வாழ்ந்தார்களேயன்றி, ஒரே சமயத்தில் ஒரே தலைமுறைக்குள்ளேயே வாழ்ந்தார்கள் என்று கருத முடியாது. ஆதலினால், நக்கீரர், அவ்வை, சாத்தனார், பெருந்தேவனார் போன்றோர் பல தலைமுறைகளில் வெவ்வேறு காலங்களில், வாழ்ந்திருத்தல் கூடும். இப்பெருந்தேவனார், பாரதம் பாடிய பெருந்தேவனார். இவர் தொகை நூல்களைத் தொகுத்து அவற்றிற்குக் கடவுள் வணக்கப் பாடல் எழுதினார் என்பது வரலாறு. கடைச் சங்ககாலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் முடிந்துபோகிறது. இப்பெருந்தேவனார் 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பர். ஆதலால், திருவள்ளுவர் இவர்கள் அனைவரையும் ஒரே காலத்தில் பார்த்து ஒரே காலத்தில் இவர்கள் அனைவரிடமும் பாடல் பெற்றார் என்பது இயற்கையில் நிகழ்ந்திருக்கக் கூடியதன்று.

சங்கப்புலவர் 49 பேர் என்றால், ஏன் அதிகமான பாடல்கள் காணப்படுகின்றன என்பதும் ஒரு கேள்வி. முதற் பாடல் அசரீரி என்று சொல்லியிருப்பினும், அசரீரி கூற்றாக இல்லை; பாடல் அசரீரியைப் படர்க்கையில் குறிப்பிடுகின்றது. இரண்டாவது நாமகள் பாட்டு. இவ்விரண்டு பாடல்களும் ஆராய்ச்சிக்குப் பொருந்துவன அல்ல. மேலும் கடைசியில் ஒரு குறள் வெண்பா இடைக்காடர் பாட, அதிலுள்ள 'கடுகைத் துளைத்து' என்ற தொடரை அவ்வையார் 'அணுவைத் துளைத்து' என்று மாற்றிப் பின்னும்




படிப்பகம்

சிறப்புச் செய்தார் என்று கூறப் பட்டுள்ளது. நீரில் விழுந்த புலவர்கள் எல்லோருமே தங்களுடைய அவலநிலையை மறந்து, திருவள்ளுவரிடம் கோபம் கொள்ளாது சாற்றுக் கவி கூறினார்கள் என்பது பெரிதும் வியப்பாகத்தான் இருக்க முடியும். மேலும், இவ்வாறு தனித்தனியாக வெவ் வேறு புலவர்கள் பாடிய தனிப் பாடல்கள் வெவ்வேறு தனிக் கருத்துக்களைக் கொண்டிருக் குமே அன்றி, தொடர்ந்து ஒரே கருத்தைப் பலர் தொடர்பாகச் சொல்லும் நிலைமை இருக்க முடியாது. இதை விளக்கிக் கூறுவோம். சில பாடல்கள் அதிகாரப் பாகுபாட்டைக் கூறு கின்றன. ஆனால் 16, 20, 25, 26, 27, 37 ஆகிய பாடல்களைப் பார்க்கும்போது, அவை தொடர்பாகத் திருக்குறளின் பாடல்தொகை, பாலின் அதிகார அடைவு, இயல்பாகுபாடு, இயலின் அதிகார அடைவு என்பவற்றைத் தெளிவாக உணர்த்துதல் தெரிகின்றது. அதாவது, திருக்குறள் பாயிரமுள்பட 1330 பாடல்; இது வீடு கூடிய பாயிரம் 4 அதிகாரம், அறத்துப்பால் 33, ஊழ் 1, பொருட்பால் 70, காமத்துப்பால் 25; இவற்றுள் மீண்டும் அறத்துப்பாலில் இயல் 4, பொருளில் 7, காமத்துப்பாலில் 2; இனி அதிகாரங்கள் பாயிரத்தில் 4, இல்லறம் 20, துறவறம் 13, ஊழ் 1, ஆக அறத்தின் இயல் 4, பொருட்பாலில், அரசியல் 25 அதிகாரம், அமைச்சியல் 10, அரண் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 ஆக 7 இயல்; காமத்துப்பாலில் ஆண்பால் 7 அதிகாரம், பெண்பால் 12, இருபால் 6 அதிகாரம் ஆக 3 இயல்; ஆக அறம் 38 அதிகாரம், பொருள் 70, காமத்துப் பால் 25 அதிகாரம் - என விளக்கமாக இப் பாடல்கள் ஒன்றுக்கொன்று தொடர் பாக உரைக் கின்றன. இவை பூரணமாகத் திருக்குறளின் பால், இயல், அதிகாரம், பாடல் அடைவைக் கூறு கின்றன. இவ்வாறு கூறுவது, தனித் தனி ஆசிரியர் பாடிய பாடல்களை ஒன்று சேர்க்கும் போது, பூரண அமைப்பைப் பெறாது. ஒரே ஆசிரியர் செய்திருந்தால்தான் இவை இந்தப் பூரண அமைப்பைப் பெறும். ஆதலால் இவற்றை ஒரே ஆசிரியர் செய்தார் என்பது தெளிவு. இவ்வாறு செய்த திருவள்ளுவமாலை யாசிரியரே இப்பாடல்களுக்குச் சங்கப்புலவர் என்று தாம் கருதிய புலவர் பெயர்களைச் சூட்டிவைத்தார் என்பதும் தெளிவு. இவை போன்றனவே எல்லாப் பாடல்களும். ஆதலால் ஓராசிரியரே, இப் பாடல்கள் எல்லாவற்றையும் பாடி, புலவர் பெயர்களைப் பெய்து அமைத்தார் என்று கருதுவது பிழையாகாது.



திருவள்ளுவமாலை 10 ஆம் பாடலைப் பாடியவர் சீத்தலைச் சாத்தனார் என்பது குறிப்பு. இவர் மணிமேகலை பாடினார் என்பது வரலாறு. குறளைப் பலமுறை போற்றித் தம் காப்பியத்தில் கூறிய இவர், குறளுக்குச் சில காலமேனும் பிறபட்டே காவியம் பாடியிருப்பார். இவர் கோவலன் கண்ணகி வரலாற்றைச் செங்குட்டு வனுக்குக் கூறினார் என்பது வரலாறு. அச்செய்தி யை இவர் நேரில் அறிந்திருந்தார். அக்காலத்து, கோவலன் கொலைக்குக் காரணமாயிருந்து, உண்மையறிந்து உயிர் நீத்துப் புகழ்பெற்ற பாண்டியன் நெடுஞ் செழியன்; ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எனப்படுவான். குறள் அரங்கேற்றம் இவன் காலத்தேயாக வேண்டும். ஆனால் இவன் பாடியதாகத் திருவள்ளுவமாலை யில் பாடல் இல்லை; உக்கிரப் பெருவழுதி பாடியதாகவே உள்ளது. இதுவும் ஒரு முரணா கும்.

திருவள்ளுவமாலை, எல்லாப் பதிப்புக்களிலும் நூலின் இறுதியிலேயே சேர்க்கப்பெற்று வருகிறது. இது சம்பிரதாயமான சிறப்புப் பாயிரமாகக் கொள்ளப்படுமானால், நூலின் தொடக் கத்தில் அமைதல் வேண்டும். மேலும், இந்நூல் பாடினார் பெயர் வரிசையில், சிறப்புப் பாயிரம் பாடத்தக்க இலக்கண முடையார் ஒருவருமிலர். ஆகவே இது சிறப்புப்பாயிரமாகாது. மேலும், சிறப்புப் பாயிரம், பண்டைய நூல்களில் முக்கிய மானதோர் அங்கம். இது அத்தகையதன்று.

**திருவள்ளுவமாலை, எல்லாப் பதிப்புக்களிலும் நூலின் இறுதியிலேயே சேர்க்கப் பெற்று வருகிறது. இது சம்பிரதாயமான சிறப்புப் பாயிரமாகக் கொள்ளப்படுமானால், நூலின் தொடக்கத்தில் அமைதல் வேண்டும். மேலும், இந்நூல் பாடினார் பெயர் வரிசையில், சிறப்புப் பாயிரம் பாடத்தக்க இலக்கணமுடையார் ஒருவருமிலர். ஆகவே இது சிறப்புப்பாயிரமாகாது. மேலும், சிறப்புப் பாயிரம், பண்டைய நூல்களில் முக்கியமானதோர் அங்கம். இது அத்தகையதன்று.**

www.padippakam.com


அன்றியும், பொதுவாக உரையாசிரியர்கள் நூலோடு சேர்த்துச் சிறப்புப் பாயிரத்துக்கும் உரை எழுதுவது பண்டைக்கால மரபாயிருக்க, இச்சிறப்புப் பாயிரத்துக்கு, குறள் உரையாசிரியர் பதின்மரில் கிடைத்த உரைகள் ஐந்தில் ஒன்றிலும் உரை எழுதப் பெறவில்லை. ஆகவே, உரையாசிரியர் எவரும் இதைச் சிறப்புப் பாயிரம் ஒப்பக் கருத வில்லை என்பதும் தெளிவு. (பிற்காலத்தில், சென்ற நூற்றாண்டின் இடையில் சரவணப் பெருமாளையரே இதற்குத் தனி உரை செய்தார். இதுபற்றிப் பின்னர்க் கூறுவோம்)

**பழம் பாடல்கள் சில நிற்க, புதிதாய்ப் பாடல் செய்து ஒன்றாய்த் தொகுத்த திருவள்ளுவமாலை ஆசிரியர் கல்லாடர் காலத்தவர் என்பது இப்போது பெறக்கூடிய ஒரு முடிவு. கல்லாடர் காலம் இராசராசன் காலத்தின் பின் என்று சொன்னோம். திருவள்ளுவமாலையின் காலமும் இதுவே; சுமார் கி.பி. 1050-ஐ அடுத்து என்பதில் ஐயமில்லை**

என்று நாம் கருதினோர் பெயர்களைச் சூட்டி விட்டார் என்று கருதுவது இழுக்காகாது.

திருவள்ளுவமாலை சங்கப்புலவர் பாடியது என்ற நமபிக்கையே பொதுவாக நிலவியமையால், யாரும் இது பற்றிச் சிந்தனை செலுத்த வில்லை. சீனிவாசை யங்கார், சோமசுந்தர பாரதியார் போன்றோர் இது பிற்காலத்து நூல் என்று எழுதினார்கள். இங்கு நாம் நூலை நன்கு ஆராய்ந்து நூலின் இயல்பையும் ஆசிரியரையும் பற்றிச் சில சொற்கள் கூறுகிறோம். காலத்தை ஆராயும்போது, இப்பெருக்கும் கல்லாடருக்கும் தொடர்பிருந்தது என்று குறிப்பிடுகிறோம். இக்கருத்துகளை முடிந்த முடிவாகக் கொள்ளா விட்டாலும், இருளில் ஒளி காட்டுகின்ற 'இல்நுழை கதிர்' என்றேனும் இவற்றைக் கொள்ளலாம்.

இனி, வெண்பா இலக்கணத்தைப் பொருத்திப் பார்க்கும் போது, இப்பாடல்கள் சங்ககால வெண்பாக்களுக்குரிய ஓசை தராமல் பிற்கால இலக்கண மமைந்த ஓசை தருகின்றன. ஓசை பிற்கால வெண்பா ஓசை. மேலும், சங்க நூல்களில் காணப்படாத சொற்சிதைவு, சீருக்காக வும் தளைக்காகவும், சொற்களைச் சிதைத்துப் பிரித்தல் (இதை வகையுளி என்பர்), இதனுள் மிகுந்து காணப்படுகிது. இவற்றால், இந்நூல் சங்கப் புலவர் பாடியதன்று, பிற்காலத்தில் பாடப்பட்டது என்பது தெளிவாகின்றது.

ஓர் ஆசிரியர் பாடிய நூலைப் பிறர்மேல் ஏற்றுவாரா என்ற ஐயம் எழ வேண்டியதில்லை. தேவாரத்துள்ளும் பெரியபுராணத்துள்ளும் வெள்ளியார் செருகிய பாடல்கள் பல. சிந்தாமணியுள் கந்தியார் இடைமடுத்த பாடல்கள் மிகப் பல. வட நூலாரிடையே ஒருவர் நூல் செய்து பிறர் பெயரிலேயே வழங்குவது மிகவும் சாதாரணம்; தமிழ் மரபிலும் இது உண்டு. மேலும், பொதுவாகப் பழந்தமிழ்ப் புலவர்கள், தங்கள் பெயர் நிலைக்கவேண்டும் என்று நினைத்தவர் களல்லர்; தாங்கள் கூறும் கருத்து நிலவவேண்டும் என்றே நினைத்தவர்கள். தாங்கள் பாடிய நூலுக்கு முன்பிருந்த பெரியோர் பெயரைச் சூட்டுவது பெருவழக்கு. திருமூலர் ஞானம், திருவள்ளுவர் ஞானம், அவ்வை, பட்டினத்தார் போன்ற பெயர் களைக் காண்க. ஆதலால், பின்வந்த புலவர் திருக்குறளுக்குச் சிறப்புத் தர வேண்டித் தாம் ஒரு நூல் பாடி அதற்குச் சங்கப்புலவர்



### ஆசிரியரும் காலமும்

திருவள்ளுவமாலையைப் பற்றிய ஒரு முக்கிய குறிப்பு கல்லாடத்துள் காணப்படுகிறது. அதுவும் திருவள்ளுவமாலை பற்றியது அல்ல; இறையனார் ஆகிய சோமசுந்தரக் கடவுள் திருக்குறளைப் புகழ்ந்து பாடினார் என்ற குறிப்பு. இக்குறிப்பையும் திருவள்ளுவமாலை பற்றிய குறிப்பையும் ஒருங்கு சேர்த்து ஆராய்வோ மானால், சில முடிவுகளுக்கு வர முடியும். கல்லாடர் திருக்குறளில் பெரிதும் ஈடுபட்டவர். பல குறட்பாக்களை எடுத்துக்காட்டுகிறார். 'தேரான் தெளிவு எனும் திருக்குறள் புகுந்து குறைமதி மனனே!' என்ற 62 ஆம் பாடல் காண்க. எனவே, அவர் பின்வருமாறு கூறுதலில் வியப்பில்லை.

*சமயக் கணக்கர் மதிவழி கூறாது*
*உலகியல் கூறி, பொருள் இது என்ற*
*வள்ளுவன் தனக்கு, வான்கவிப் புலவர் முன்*
*முதற் கவி பாடிய முக்கட் பெருமான்*

முக்கட்பெருமான் பாடிய முதற்கவி பின் வருவது. திருவள்ளுவமாலையில் இது முதற் கவியாக இல்லை. மூன்றாம் பாடலாக உள்ளது. அசரீரி கூற்றும் நாமகள் பாடலும் முதலிரு பாடல்களாக உள்ளன:

**என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்**
**நின்றுஅலர்ந்து தேன்பிலிற்றும்**


படிப்பகம்

www.padippakam.com


*நீர்மையதாய்க் - குன்றாத*
*செந்தளிர்க் கற்பகத்தின்*
*தெய்வத் திருமலர் போன்ம்*
*மன்புலவன் வள்ளுவன்*
*வாய்ச் சொல்.*

இறையனார் பாடியதாக இது சொல்லப்பட்டுள்ளது. சங்கப் புலவர்களில் இறையனார் பெயரும் ஒன்று. இறையனார் பெயரிலுள்ள 'கொங்கு தேர் வாழ்க்கை' என்ற பாடல் குறுந்தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் திருவள்ளுவமாலை 9-ஆம் பாடல் கல்லாடர் பாடியதாக உள்ளது.

**மாதானுபங்கி என்ற சொல் எப்படித் திருவள்ளுவரைக் குறிப்பிடும் என்பதும் விளங்கவில்லை. எப்படியோ நேமிநாத உரையாசிரியர் இச்சொல் திருவள்ளுவரைக் குறிப்பிடும் என்று சொன்ன பிறகு, மாதானுபங்கி என்பது திருவள்ளுவரின் ஒன்பது பெயர்களுள் ஒன்றாகவே கொள்ளப்பட்டுவிட்டது. இதற்குப் பொருளோ, வேறு ஆதாரமோ இல்லை.**

*ஒன்றே பொருள்எனின் வேறு என்ப; வேறு எனின்*
*அன்று என்ப ஆறு சமயத்தார்; - நன்று என*
*எப்பா வலரும் இயைபவே வள்ளுவனார்*
*முப்பால் மொழிந்த மொழி*

இப்போது நாம் ஒரு கருத்தைக் குறிப்பிடலாம். கல்லாடம் பாடிய கல்லாடர் உண்மையாகவே திருக்குறளைப் போற்றிய காரணத்தால் அதைப் புகழ்ந்து ஒரு பாடல் பாடியிருந்தார். அன்றியும், முக்கட் பெருமான் முதற் பாடல் பாடியதாக அவர் குறிப்பிட்டிருந்த 'என்றும் புலராது' என்ற பாடல் ஒரு பழம்பாடலாகவே இருத்தல் வேண்டும். இதை இறையனார் என்ற ஒரு புலவர் பாடியும் இருந்திருக்கலாம். சோமசுந்தரக் கடவுளே ஒரு புலவர் வேடந்தாங்கி, இறைவனாகிய தமக்குரிய இறையனார் என்ற பெயரை வைத்துக் கொண்டார் என்பது பழங்கதையாதலால் கல்லாடர் இக் கதையைக் கருதி இவ்வாறு கூறினார். மற்று, திருவள்ளுவமாலை என்ற பாடல் தொகுப்பு அவர் காலத்தில் இருந்தது என்பதற்கு முற்கூறிய அவருடைய பாடல்வரிகள் போதிய சான்றாக மாட்டா. அப்பாடல் ஆறு சமயத்தார் என்று கூறுவதும் நோக்கத் தக்கது; திருக்குறள் பற்றி ஆறு சமயத்தார் கருத்து எங்கும் வந்ததில்லை.

ஆயினும், கல்லாடத்துக்கு அமைந்த சிறப்புப் பாயிரம் ஒன்று சில கருத்துக்களை நமக்குத் தோற்றுவிக்கிறது. 'கல்லாடர் செய்பனுவல்' என்பது அச்சிறப்புப்பாயிரம். அப்பாடல் முன்னமே கல் லாடர் பற்றிய பகுதியில் காட்டப்பட்டது. அங்கு அப்பாயிரம் பாடியவர் யார் என்று சொல்லப்பட வில்லை. மதுரைஈசர்



நூல்வல்லார் சங்கத்து (இறையனார் என்ற பெயரோடு) இருந்தருளி, கல்லாடம் நூறு பாடலையும் கேட்டருளி, பாட்டுக்கொரு முறை முடியசைத்தார் என்று சொல்லப்பட்டது. இரண்டிடத்திலும் ஒரு பொதுவான செய்தியைப் பார்க்கிறோம். மதுரைச் சங்கத்தில் திருவள்ளுவர் தம் குறளை அரங்கேற்றிய பொழுது அங்கிருந்த புலவர்கள் அனைவரும் நூலைப் போற்றி ஒரு பாடல் பாடினார்கள் என்பது கதை. (போற்றாதிருந்த தொடக்கத்தில் திருக்குறள் வைக்கப்பெற்ற சங்கப் பலகையானது சுருங்கி, புலவர் கள் அனைவரையும் பொற்றாமரை வாவியில் வீழ்த்தி விட்டது. இறையனார் வீழ்ந்து விட்டாரா அல்லது தப்பினாரா என்பது சொல்லவில்லை.)

இதுபோலவே, கல்லாடத்தைப் புலவர்கள் அரங்கேற்றியபொழுது சங்கத்தில் இருந்த ஈசர் கேட்டு நூறு தடவை முடி துளக்கினார் என்ற செய்தி, இரு வரலாறுகளும் ஒருவரே புனைந்த செய்தி போலத் தோன்றுகின்றன.

இவற்றால் நாம் கருதக் கூடியது என்னவென்றால், கல்லாடர் நூல் செய்த காலத்தில் அவருக்குத் தெரிந்தவராக, அவருக்கு நண்பராக, ஒரு புலவர் வாழ்ந்திருந்தார். அவர் கல்லாடத்தைச் சிறப்பித்து முன்காட்டிய 'ஒன்றே பொருளெனின்' என்ற பாடல் பாடினார்; திருக்குறளைச் சிறப்பிக்கின்ற பல பாடல்களைப் புதிதாகப் பாடி, சில பழைய பாடல்களையும் சேர்த்துத் தொகுத்து வைத்தவரும் அவரே என்று யூகிக்கலாம். வேறுவகையில் எவ்விதத் தெளிவும் இல்லாத பொழுது கிடைக்கின்ற சான்றுகளால் பெறக்கூடிய இந்த யூகம் பெரிதும் ஏற்கக் கூடியதே.

முன்னமே குறிப்பிட்டது போலப் பழம் பாடல்கள் சில நிற்க, புதிதாய்ப் பாடல் செய்து ஒன்றாய்த் தொகுத்த திருவள்ளுவமாலை ஆசிரியர் கல்லாடர் காலத்தவர் என்பது இப்போது பெறக்கூடிய ஒரு முடிவு. கல்லாடர் காலம் இராசராசன் காலத்தின் பின் என்று சொன்னோம். திருவள்ளுவமாலையின் காலமும் இதுவே;


படிப்பகம்

www.padippakam.com


சுமார் கி.பி. 1050-ஐ அடுத்து என்பதில் ஐயமில்லை.

நூல்

திருவள்ளுவமாலையில் காணப்படும் பாடல்களையும் அவற்றைப் பாடிய ஆசிரியர் பெயர்களையும் பற்றி இங்குச் சிறிது ஆராயலாம். முதற் பாடல் அசரீரி என்று சொல்லப்பட்டுள்ளது. பாடல் பின் வருவது:

> **சீத்தலைச் சாத்தனார் திருக்குறளில் மிகவும் ஈடுபட்டவர் என்பது, குறட்பாக்களை மணிமேகலையில் பல இடங்களில் இவர் பெய்திருப்பதால் நன்கு விளங்கும்.**

*திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோடு*
*உருத்தகு நற்பலகை ஒக்க - இருக்க*
*உருத்திர சன்மர் எனவுரைத்து வானில்*
*ஒருக்கவோ என்றதோர் சொல்*

இது அசரீரி கூற்றாக இல்லை. பிறர் கூற்றாக 'அசரீரி சொல்லிற்கு' என்று சொல்லுகிறது. இது எப்படித் திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாகு மென்பது தெரியவில்லை. 'திருவள்ளுவரோடு சங்கப்பலகை மீது உருத்திர சன்மரும் இருக்க' என்று மட்டும் இது கூறுகிறது. அசரீரியின் கருத்து, இவ்விருவரும் பெருமையுடையவர் என்பதாயிருக்கலாம். இவர் மதுரை உப்பூரிகுடிகிழாரின் புதல்வர், இவர் குமாரக் கடவுளின் அவதாரமென்று இறையனார் களவியலுரை முதலான பின்வந்த நூல்கள் கூறும். இவர், சங்கப் புலவர் நாற்பத்தொன்பதுபேர் இறையனார் அகப், பொருளுக்குச் செய்த உரையையும் கேட்டு நக்கீரர் உரையைப் பாராட்டியவர். இவர் ஊமை. இவர் அகநானூறு தொகுத்தார் என்பர். சங்கப் புலவர் பெயர்ப்பட்டியலில் இவர் பெயர் இல்லை; உருத்திரனார் என்ற ஒருவர் பெயரே உள்ளது. மேலும், திருவள்ளுவமாலையில் கூட, உருத்திர சன்ம கண்ணனார் என்ற பெயரில் பாடல் உள்ளதேயன்றி (31) உருத்திர சன்மர் பெயரில் பாடல் இல்லை. அன்றியும் இவ்வரலாறுகளால், இவர் பாடல் இறையனாரை அடுத்து இருத்தற்குரியது (நாலாம் பாடலாக). ஆனால் அவ்வாறில்லை. காரணம் விளங்கவில்லை. இன்னும் பார்த்தால், குமாரக் கடவுளின் அவ்தாரமான உருத்திரசன்மரைப்'பலகையில் ஒக்கஇருக்க அசரீரி சொல்லிற்று; ஆனால் இக் குமாரக் கடவுளின் தந்தையாகிய சிவபிரானின் அவதாரம் அல்லது திருமேனி தாங்கி வந்த வடிவம் என்று கருதப்பெற்ற இறையனாரை அதே பலகை, சிறிதும் கண்ணோட்டமின்றி நீருள் தள்ளிவிட்டது! பாடல்களின் போலித்தன்மையை விளக்க இவ்வொரு செய்தி போதும். இரண்டாம் பாடல் நாமகள். 'பாரதம் பாடிய யான் இப்போது வள்ளுவன் வாக்காகப் பாடுகிறேன்' என்று கூறுகிறது. இவ்விரண்டும் போக ஏனைய பாடல்கள் ஐம்பத்தொன்று, கடைசியில் ஒரு குறட்பா உள்ளது.



*கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்*
*குறுகத் தறித்த குறள்*

இதை இடைக்காடர் பாடி னார் என்றும், இதில் 'கடுகை' என்ற சொல்லை மட்டும் மாற்றி அவ்வையார் அணுவை என்று திருத்திக் குறளுக்குச் சிறப்புத் தந்தார் என்று ஒரு வரலாறு அங்கே தரப்பட்டுள்ளது.

இனி, சங்கப்புலவர் நாற்பத்தொன்பது என்ற பெயர்கள் இருக்க, இங்கு ஐம்பத்தொரு புலவர் பெயர்கள் உள்ளன. சங்கப் புலவர் என்போர் சங்க நூல் என்று பேசுகின்ற எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகிய இரு தொகுதிகளிலும் பாடல் பாடியுள்ள கவிஞர். முற்கூறிய ஐம்பத்தொரு புலவர் பெயர்களில் பின்வரும் இருபத்தைந்து பெயரும் எந்த ஐயமுமின்றிச் சங்க நூல் ஆசிரியர் பெயரேயாகும்; இறையனார், உக்கிரப் பெருவழுதியார், கபிலர், பரணர், நக்கீரர், மாமூலனார், கல்லாடர், சீத்தலைச்சாத்தனார், அரிசில் கிழார், பொன்முடியார், ஆசிரியர் நல்லந்துவனார், கீரந்தையார், தொடித்தலை விழுத்தண்டினார், வெள்ளி வீதியார், மாங்குடி மருதனார், மோசி கீரனார், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், (பாரதம் பாடிய பெருந்தேவனார்), பெருஞ்சித்திரனார், நரிவெரூஉத்தலையார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைப் பெருமருதனார், கோவூர்கிழார், நப்பாலத்தனார், ஆலங்குடி வங்கனார். இவர்கள் போக, பின்வருவோரும் சங்கப் புலவரென்று கருதலாம். மருத்துவன் தாமோதரனார் (சங்கப் புலவருக்கு மருத்துவன் என்ற அடைமொழி இல்லை); இவர் போலவே உறையூர் முதுகூற்றனார், இழிகண் பெருங்கண்ணனார், செயலூர்க் கடுஞ் செங் கண்ணனார், வண்ணக்குஞ் சாத்தனார்; இப்பெயர்களில் வரும் அடைமொழி சங்க நூற்புலவர் பெயரில் காணப்படவில்லை. மதுரைப்பாலாசிரியனார் என்றுள்ள பெய ருக்கு விளக்க


படிப்பகம்

> **திருவள்ளுவமாலைப் பாடல்கள் பிற்காலத்தில் ஓராசிரியரால் செய்யப்பெற்று, செய்த ஆசிரியர் தாம் பெயர் அறிந்திருந்த பல சங்கப் புலவர்கள்மீது இப்பாடல்களை ஏற்றினார் என்பது திட்டமாக நிறுவப்பெறுகின்றது.**

மில்லை; சங்கநூற் புலவரில் மூவர் மூவ்வடையுடைய பெயர் கொண்டுள்ளனர். பாரதம்பாடிய பெருந்தேவனார், சங்க காலத்துக்கும் பிற்பட்ட ககாலத்தில் வாழ்ந்த தொகை நூல்கள் சிலவற்றைத் தொகுத்தவர் என்று அறிகிறோம். கவிசாகரப் பெருந்தேவனார் - விளக்கமில்லை. மேலும் நத்தத்தனார் என்று ஒரு புலவர் பெயர் உள்ளது. இப்பெயர் நற்றத்தனார் என்றும் யாப்பருங்கல விருத்தி போன்ற உரையில் வழங்கும். இவர் நற்றத்தம் என ஒரு பாட்டியல் நூல் செய்தார். காலம் ஒருகால் 10-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்க லாம்.

இவ்வாறு ஆராய்ந்த பெயர்களை விலக்கினால், ஏனையவை பின்வருவன; நாகன்தேவனார், கோதமனார், முகையலூர்ச் சிறு கருந்தும்பியார், சிறுமேதாவியார், நல்கூர் வேள்வியார், எறிச்சலூர் மலாடனார், போக்கியார், மதுரைத் தமிழ் நாகனார், உருத்திர சன்ம கண்ணர், மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார், செயிர்க் காவிரியார் மகனார் சாத்தனார், களத்தூர்கிழார், நச்சுமனார், அக்காரக்கனி நச்சுமனார், குலபதி நாயனார், தேனீக்குடிக் கீரனார் கொடிஞாழல் மாணிபூதனார், கவுணியனார் என்ற பெயர்கள் சங்கநூல் செய்த புலவர் பெயர்களில் காணப்படவில்லை; நச்சுமனார் என்ற ஒரு புலவர் வருகின்றனர். கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்ற ஒரு புலவர் பெயர் சங்கநூல்களில் காணப்படுகிறது. இப்பெயரை நன்கு அறிந்து கொள்ளாமல், மாலையாசிரியர், எறிச்சலூர் மலாடனார் என்றே ஒரு புலவரைக் குறிப்பிட்டுள்ளார். அன்றியும், நன்கு பெயர் தெரிந்த பெருங்குன்றூர் கிழார் முதலானோர் இங்குச் சொல்லப் பெறவில்லை. இங்குச் சொல்லப்பட்டோர் சங்கப் புலவர் என்று சொல்வதற்கில்லை


நேமிநாத உரையாசிரியர் (15 ஆம் நூற்றாண்டு) திருவள்ளுவமாலை 21 ஆம் பாடலைக் குறிப்பிடு கிறார்:

**உப்பக்கம் நோக்கி உபகேசி**
**தோள்மணந்தான்**
**உத்தர மாமதுரைக்கு அச்சு என்ப: -**
**இப்பக்கம்**
**மாதானு பங்கி மறுவுஇல் புலச்செந்நாப்**
**போதார் புனற்கூடற்கு அச்சு**

'உபகேசி ஆவாள் நம்பின்னைப் பிராட்டியார்; மாதானுபங்கி திருவள்ளுவர்' என்பது அவருடைய குறிப்பு. இங்கு அவர் திருவள்ளுவ மாலை என்ற நூற்பெயர் குறிப்பிடவில்லை. இப்பாடல் செய்தார் நல்கூர் வேள்வியார் என்று மாலை கூறும். இப்பெயர் கொண்ட சங்கநூற் புலவர் இல்லையென் பது குறிப்பிட்டோம். மேலும், இப்பாடல் சிறிதும் சுவையற்ற பாடல். வட மதுரைக்கு அச்சு, கண்ணன்; தென்மதுரைக்கு அச்சு திருவள்ளுவர் என்று கூற வந்த வேள்வியார், இக்கருத்தைச் சொல்ல அறியா மல், கண்ணனை உபகேசி தோள் மணந்தான் என்றும், திருவள்ளுவரை மாதானு பங்கி மறுவில் புலச் செந்நாப் போதார் என்றும் கூறினார். உபகேசி - நப்பின்னை என்று இவர் சொல்லா விட்டால் தெரியாது. அதேபோல மாதானுபங்கி என்ற சொல் எப்படித் திருவள்ளு வரைக் குறிப்பிடும் என்பதும் விளங்கவில்லை. எப்படியோ நேமிநாத உரையாசிரியர் இச்சொல் திருவள்ளு வரைக் குறிப்பிடும் என்று சொன்ன பிறகு, மாதானுபங்கி என்பது திருவள்ளுவரின் ஒன்பது பெயர்களுள் ஒன்றாகவே கொள்ளப் பட்டு விட்டது. இதற்குப் பொருளோ, வேறு ஆதாரமோ இல்லை. உரையாசிரியர் இப்பாடலைச் சொல்லிய போதிலும் கூட, இது ஓர் அர்த்தமற்ற பாட்டு என்பதில் ஐயமில்லை

குலபதி நாயனார் என்ற பெயரில் 48ஆம் பாடல் உள்ளது. குலபதி - ஆயிரம் மாணாக்கருக்கு உண்டியும் உறையுளும் அளித்துக் கல்வி போதிப்பவர். சங்க நூல்களில் கிடங்கில் குலபதி நக்கண்ணனார் என்ற புலவர் பெயரே காணப்படுகிறது. நாயனார் என இங்கு வரும் வழக்கு மிகவும் பிற்காலத்தது. இப்பெயர் கொண்ட புலவர் சங்ககாலத்தில் இல்லை. இவர் பெயரால் வந்த பாடல்:

**உள்ளக் கமலம் மலர்த்தி உளத்து உள்ள**
**தள்ளற்கு அரிய இருள்**
**தள்ளுதலால் - வள்ளுவனார்**



**வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும்**
**ஒக்கும் எனக்**
**கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு**

இது, தண்டியங்காரம் முதலிய இலக் கணவுரைகளில் மேற்கோளாக வரும்

www.padippakam.com


பிரசித்தமான பின்வரும் பாடலைத் தழுவியிருப்பது விளங்கும்.

> **திருக்குறளில் இத்தகைய இடைச் செருகலோ பால் இயல் அதிகாரப் பிறழ்வோ ஏற்படக் கூடாது என்ற கருத்தால், தம் பாடல்களால் ஒரு வரையறை செய்துவைத்தார் என்று கருதத் தோன்றுகிறது.**

**ஓங்கலிடை வந்து, உயர்ந்தோர் தொழவிளங்கி,**
**ஏங்கொலி நீர்ஞாலத் திருளகற்றும் -**
**ஆங்கவற்றுள், மின்னேர்தனியாழி**
**வெங்கதிரொன்று, ஏனையது தன்னை ரிலாத தமிழ்**

இப்படியே முந்தையோர் கருத்துகளையும், சொற்களையும் தழுவியும் அமைத்தும் பாடிய பாடல்கள் மாலையுள் பல. இரண்டை மட்டும் குறிப்பிடுவோம்.

**அறம் தகளி; ஆன்ற பொருள்திரி; இன்பு**
**சிறந்தநெய் செஞ்சொல்தீ; தண்டு - குறும்பாவா**
**வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்**
**உள் இருள் நீக்கும் விளக்கு.**

என்பது நப்பாலத்தனார் பெயரில் சூட்டிய பாட்டு. இது 'வையம் தகளியா, வார்கடலே நெய்யாக' என்ற பொய்கையாழ்வார் பாட்டையும், 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக - இன்புருகு சிந்தை இடுதிரியா' என்ற பூதத்தாழ்வார் பாட்டையும் பின்பற்றியிருத்தல் வெளிப்படை. இதனோடு நக்கீரர் அந்தாதியின் முதற்பாடலையும் ஒப்பு நோக்குக;

**சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா**
**நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாக - சொல்லரிய**
**வெண்பா விளக்கா, வியன்கயிலை மேலிருந்த**
**பெண்பாகற்கு ஏற்றினேன் பெற்று**

மற்றொரு பாடல் உக்கிரப் பெருவழுதியார் பாடியது:

**நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்**
**தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துஉரைத்த நூல்முறையை**
**வந்திக்க சென்னி; வாய் வாழ்த்துக; நல் நெஞ்சம்**
**சிந்திக்க; கேட்க செவி**

இதன் பின்னிரு வரிகள் அப்பர் சுவாமிகளின் திருவங்கமாலைப் பதிகத்திலிருந்து எடுத்தவை என்பது நன்கு விளங்கும். தலையே நீ வணங்காய், வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய், செவிகாள் கேள்மின் களோ - என்ற வரிகளைக் காண்க.

சீத்தலைச் சாத்தனார் பற்றிய குறிப்பும் இங்கு கூறத் தக்கது. சாத்தனார் சங்க நூல்களில் பத்துப் பாடல்கள் பாடியவர். ஐந்திணைகளையும் பாடியுள்ளார். மணிமேகலை இவர் பாடியது என்பது ஒரு வழக்கு. இது பெரிதும் விவாதத்துக்கிடமான செய்தி. மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்பது இவரது முழுப் பெயர். திருவள்ளுவமாலையின் பத்தாம் பாடல் இவர் பெயரில் உள்ளது. இங்கு நாம் குறிப்பிட வந்தது, இவரைப் பற்றிய வரலாறு. பிழையான பாடல்களை இவர் கேட்டபோதெல்லாம், தம் கையிலிருந்த எழுத்தாணியால் தலையில் குத்திக் கொள்வாராம். முழுமையும் பிழைகள் மலிந்த பாடல்களை அக்காலத்து வழங்கிய காரணத்தால், இவர் தலையில் குத்திக்கொண்டது நிற்கவுமில்லை, புண் ஆறவுமில்லை என்பது வரலாறு. இவ்வளவு சிறப்பான தமிழ்ச் சுவையும் கவிச் சுவையும் பெற்றிருந்த இவருடைய தலைப்புண் வள்ளுவருடைய திருக்குறளைக் கேட்ட பிறகுதான் ஆறிற்று என்று மருத்துவன் தாமோதரனார் என்பவர் பெயரால் ஒரு பாடல் உள்ளது;

**சிந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேன்அளாய்**
**மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்; - காந்தி**
**மலைக்குத்தும் மால்யானை வள்ளுவர்முப் பாலால்**
**தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு**

திருவள்ளுவமாலை செய்தவர், மருத்துவன் என்ற அடைக்கு ஏற்ப இப்படிப்பட்ட ஓர் கருத்தைத் தெரிவித்தால் பொருத்தமாய் இருக்கும் என்று எண்ணினார் போலும். ஆனால் சாத்தனாருக்கு இவ்வளவு பொருத்தமான புலமைத் திறனும் கவிச்சுவைதேறும் திறனும் இருந்தும் கூட, சங்கப் பலகை இவரை வைத்துக்கொள்ள மறுத்து, மற்றுள்ளோருடன் சேர்த்து இவரையும் கீழே தள்ளிவிட்டது என்பதுதான் வரலாறு!

இச்சாத்தனார் பற்றி அறியத் தக்க கருத்துகள் இரண்டு. ஒன்று, இவர் ஊர் சீத்தலை என்பது. அங்கிருந்த சாத்தனார் பெயரை இவருக்கு இட்டிருந்தார்கள். ஆகவே சீத்தலைச் சாத்தனார் என்று கூறும்போது, இவர் ஊர்ப் பெயரைச் சார்த்தி வழங்கப்பெற்றார் என்று அறிய வேண்டும். இது தலைக்குத்துக்குத் தொடர்புடையதன்று. மற்றது, இளம்பூரணருடைய குறிப்பு. தொல்காப்பியம் பெயரியல் 20 ஆம் சூத்திர உரையில்




படிப்பகம்

www.padippakam.com


சினைமுதற் பெயருக்கு உதாரணமாக இவர் சீத்தலைச் சாத்தன் என்று காட்டியிருக்கிறார். ஆதலால் சீழுள்ள தலை என்ற இக்கருத்து இளம்பூரணர் காலத்திலேயே வழங்கத் தொடங்கிவிட்டது என்று நாம் கருதலாம். இளம்பூரணர் காலமும் 11 ஆம் நூற்றாண்டு என்று அறிகிறோம். எனவே, சாத்தனார் பற்றிய இக்கதைகள் இதே நூற்றாண்டிலோ அல்லது சற்று முன்னதாகவோ உருவம் பெற்றன என்று கருதவேண்டும்.

சீத்தலைச் சாத்தனார் திருக்குறளில் மிகவும் ஈடுபட்டவர் என்பது, குறட்பாக்களை மணிமேகலையில் பல இடங்களில் இவர் பெய்திருப்பதால் நன்கு விளங்கும்.

மாலையாசிரியர் ஓரளவுக்கு, அந்தணர் - அல்லாதவர் என்ற வேற்றுமை பாராட்டுங் கொள்கை உடையவர் என்பது தெரிகிறது. மாலை 15, 23 பாடல்களால் இது யூகிக்கலாம். அந்தணர் தம் நான்மறையை எல்லோரும் பயின்றால் அதன் ஆற்றல் அழியுமென்று கருதி ஏட்டிலே எழுதி வைக்கவில்லை; அது சுருதியாகவே, அதாவது கேட்கப்படுவதாகவே, நின்றுவிட்டது. ஆனால், வள்ளுவனார், முப்பாலை ஏட்டிலே எழுது வைக்க, வல்லவர்களுக்கு அல்லாதவர்களும், யார் சொன்னாலும் அதன் ஆற்றல் சோர்வு படாது சுருதியாகிய வேதத்துக்கும் வள்ளுவர் பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றேயாயினும், அதற்கு உரியவர் அந்தணர் மட்டுமே, இதற்கு உரியவர் எல்லோரும் என்ற கருத்துகள் காணத்தக்கன.

***ஆற்றல் அழியுமென றந்தணர்கள் நான்மறையைப்***
***போற்றியுரைத்தேட்டின் புறத்தெழுதார் -***
***ஏட்டெழுதி***
***வல்லுநரும் அல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்***
***சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.***

***செய்யா மொழிக்கும் திருவள்***
***ளுவர்மொழிந்த***
***பொய்யா மொழிக்கும்***
***பொருளொன்றே?-***
***செய்யா***
***அதற்குரியர் அந்தணரே, ஆராயின் ஏனை***
***இதற்குரியர் அல்லாதார் இல்.***



**திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்து பெரும் புலவர்கள் அதன் நயத்தில் நன்கு தோய்ந்து அனுபவித்திருக்கிறார்கள். அவர் களில் சிலர் திருக்குறளைச் சிறப்பித்துப் பாடல் பாடியிருத்தல் கூடும்.**

***ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்***
***திதனினிது***
***சீரியதென் றொன்றைச்***
***செப்பரிதால்:- ஆரியம்***
***வேதம் உடைத்து; தமிழ்திரு***
***வள்ளுவனார்***
***ஓது குறட்பா உடைத்து***

குறட்பாக்களின் கருத்தையே அமைத்துச் சில பாக்கள் இங்குப் பாடப்பட்டி ருப்பதும் அறியத்தக்கது. 'மாரி மாட்டென் னாற்றுங் கொல்லோ உலகு' என்ற குறள் கருத்து, 'ஒண்ணீர் முகிலுக்கும் வாழி உலகு என்னாற்றும் மற்ற' (7) என்றும், 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்ற குறள், 'மணற் கிளைக்க நீரூறும் ' (31) என்றும் வந்துள்ளன.

திருவள்ளுவர் தாழ்ந்த குலத்தினர் அல்லர் என்பதை இவ்வாசிரியர் முயன்று தெரிவிக்கின்றார். மாமூலனார் இவ்வாசிரியர் அறம் பொருள் இன்பம் என்ற பாடலைக் காண்க, அக்காலத்தில் வள்ளுவர் குலத்தைத் தாழ்த்திச் செல்லும் வழக்கம் இருந்தது; இது அறிவற்றவர்கள் செயல்; அதைக் கொள்ள வேண்டியதில்லை என்று இவர் தெளிவாகக் கூறுகிறார்.

***அறம்பொருள் இன்பம் வீடென்னும் அந்நான்கின்***
***திறந்தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும்***
***வள்ளுவ னென்பானோர் பேதை; அவன்***
***வாய்ச்சொற்***
***கொள்ளார் அறிவுடை யார்.***

மற்றப்படி அவர் வள்ளுவர் குலத்திலே பிறந்திருந்த போதிலும்கூட, அக்குலத் தாழ்ச்சியைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்று கூறுவதாகப் பொருள்செய்வது பொருத்தமாக இல்லை.

இவ்வாறு திருவள்ளுவமாலைப் பாடல்கள் பிற்காலத்தில் ஓராசிரியரால் செய்யப்பெற்று, செய்த ஆசிரியர் தாம் பெயர் அறிந்திருந்த பல சங்கப் புலவர்கள்மீது இப்பாடல்களை ஏற்றினார் என்பது திட்டமாக நிறுவப்பெறுகின்றது. எனினும், இந்நூலில் அவர், தம் காலத்து வழங்கிய சிறப்பான பல சாற்றுக் கவிகளை அறிந்து, தம் பாடல்களோடு தொகுத்துக் கொண்டார் என்று கருதவும் இடமுண்டு. திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்து பெரும் புலவர்கள் அதன் நயத்தில் நன்கு தோய்ந்து அனுபவித்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் திருக்குறளைச் சிறப்பித்துப்


படிப்பகம்

www.padippakam.com


பாடல் பாடியிருத்தல் கூடும். அவற்றுள் கிடைத்தவற்றை இவர் தாம்பாடிய மாலையுள் சேர்த்துக்கொண்டார் என்று நாம் கருதுகிறோம். பழம்பாடல்கள் கவிச்சுவை சேர்ந்த உணர்வில் தோன்றி வந்தவை ஆதலினால், சொல் நயமும் பொருள் நயமும் தொடை நயமும் மிக்கவை. எடுத்துக்காட்டாக, தினை அளவு போதாச் சிறு புல் நீர் (5) செய்யா மொழிக்கும் (23), பொய்ப்பால் (49), அறனறிந்தேம் (50) என்ற பாடல் களைக் குறிப்பிடலாம். இப்பாடல்களையும் ஏனைய வற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பழம்பாடல்கள் எவை மாலையாசிரியர் செய்த பாடல்கள் யாவை என்பதை நுனித்தறிவது கடினமன்று. இங்குக் காட்டிய பாடல்களும் வெவ்வேறு ஆசிரியர்கள் பெயரால் குறிப்பிடப் பட்டுள்ளன. அவ்வாசிரியர்களே இவற்றைப் பாடினார்களா என்று சந்தேகிக்க வேண்டியதில்லை. தாம் பாடிய பிற பாடல்களுக்கு வெவ்வேறு ஆசிரியர் பெயரை இவர் சூட்டிய போது, இப்பழம் பாடல்களுக்கும் வெவ்வேறு ஆசிரியர் பெயரை இவர் சூட்டி வைத்தார் என்றே கருதவேண்டும். இப்பழம் பாடல்களைப் பாடினார் பெயர்கள் தெரியவில்லை. மிகவும் பிற்கால நூலாகிய பாண்டி மண்டலசதகம் என்பதும், ஒரு பாடலில் திருவள்ளுவ மாலையைக் குறிப்பிடுகிறது:

**தெள்ளிய சங்கப் புலவோரும் வாணியும்**
**செஞ்சடைமேல்**
**ஒள்ளிய கங்கை தரித்தோரும் கூறி ஓரோர்**
**கவிதை**
**வெள்ளியசெஞ்சொற்றொடர் வகையை**
**வியந்துகொண்டு**
**வள்ளுவர் மாலை பகர்ந்தாரும் பாண்டியன்**
**மண்டலமே**

**திருக்குறளில் இத்தகைய இடைச்செருகலோ பால் இயல் அதிகாரப் பிறழ்வோ ஏற்படக் கூடாது என்ற கருத்தால், தம் பாடல்களால் ஒரு வரையறை செய்துவைத்தார் என்று கருதத்தோன்றுகிறது. இவ்வாறு வைப் பதற்குப் பண்டைக் கவிதைகள் இவருக்குத் துணைபுரிந்திருக்கின்றன.**

முடிவுரை

இதுகாறும் கூறிய கருத்துக்களைத் தொகுத்துப் பின்வருமாறு கூறலாம். 53 பாடல்களைக் கொண்ட திருவள்ளுவ மாலை, திருவள்ளுவர் காலத்தில் பாடப் பெற்றதன்று. சில பாடல்கள் (பத்துக்குக் குறைவு) பழமையானவை. இவற்று டன் மிகப் பலவான புதிய பாடல்களைத் தாமே எழுதிச் சேர்த்து, பிற்காலப் புலவரொருவர் திருவள்ளுவ மாலை எனப் பெயரிட்டார்; பாடல் களுக்குச் சங்கப் புலவர் பெயர்களையும் சூட்டி னார். இவர் கல்லாடம் செய்த கல்லாடர் காலத்தில் அவருக்கு நண்பராய் வாழ்ந்திருத்தல் கூடும். இவர் காலமும் கல்லாடர் காலமாகிய கி.பி. 1050-ஐ ஒட்டியே இருக்கும்.

இங்ஙனம் இவ்வாசிரியர் புதிதாக ஒரு மாலையைப் புனைந்துரைத்ததற்கு நியாயமான ஒரு காரணமும் உண்டு. பண்டை நூல்களில் இடைச் செருகல்கள் பல ஏற்பட்டுவிடுகின்றன என்பதை இலக்கிய வரலாறு நன்குணர்த்தும். பரிபாடலில் கந்தியார் தம்பாடல்களை இடைமடுத்துப் பிழை படுத்தினார் என்பதை அந்நூல் உரைச்சிறப்புப்பாயிரம் கூறும். அவ்விதமே சிந்தா மணியிலும் பல பாடல்களைக் கந்தியார் செருகிவைத்தார் என்று நச்சினார்க் கினியரே கூறுகிறார். தேவாரங்களிலும் பெரிய புராணத்திலும் இவ்வாறு பாடல்கள் இடை மடுக்கப்பட்டன என்றும் நாம் அறிவோம். திருவாசகத்திலுங்கூட, சிலபதிகங்களின் இறுதியில் ஒரு பாடல் அல்லது சில பாடல்கள் சேர்க்கப் பெற்றிருந்தன; இப்பாடல்கள் இன்னவை என்றும் சுட்டப்பட்டிருந்தன. மாலையாசிரியர் இந் நிலைமையெல்லாம் நன்குணர்ந்தவர் போலும். அது பற்றியே இவர், திருக்குறளில் இத்தகைய இடைச்செருகலோ பால் இயல் அதிகாரப் பிறழ்வோ ஏற்படக் கூடாது என்ற கருத்தால், தம் பாடல்களால் ஒரு வரையறை செய்துவைத்தார் என்று கருதத்தோன்றுகிறது. இவ்வாறு வைப் பதற்குப் பண்டைக் கவிதைகள் இவருக்குத் துணைபுரிந்திருக்கின்றன. கதைகள் கூறிய வண்ணம், பாடல்களுக்குப் பழைய அதிகார முத்திரை தரும் பொருட்டு இவர் பண்டை யாசிரியர் பெயரையே தம் பாடல்களுக்குச் சூட்டி வைத்தார்.




●●


படிப்பகம்

www.padippakam.com


கா. நயினார் முகமது

# தீனுல் இசுலாமும் திருக்குறளும்



அன்பு மயமாய், அறிவின் ஊற்றாய், வழி தப்பியவர்க்கு வழிகாட்டியாய், அல்லற்படுவோருக்கு ஆறுதலாய் ஆன்ம உண்மையை மக்களுக்குப் போதிக்கவந்த அன்புச் சமயம் இசுலாம். 1300 ஆண்டுகளுக்கு மேல் மக்களினத்தின் தூய சிந்தனையை உருவாக்கிச் செயல் முறையை வகுத்து, இறையருளைப் பெறுவதற்கு வழிகோலிய தூய இசுலாமிய மறை திருக்குர்ஆன். உலகில் தோன்றிய மாந்த இனத்தின் வாழ்வின் ஒளி விளக்காகத் தோன்றியது இசுலாம்.

இசுலாம் என்ற சொல்லுக்கு, அமைதி - சமாதானம் என்பது பொருள். ஆன்ம கோடிகள் உலக அல்லற் சேற்றில் சிக்குண்டு, புலனைந்தும் பொறி கலங்கி, நெறி மயங்கி அறிவழித்திட்ட காலத்தில், ஆன்ம ஒளியையளித்து வாழ்விக்க வந்த பெம்மான் முகமது நபியவர்கள். இதன் திருத்தூதுவர். இவரால் இசுலாமியக் கொள்கைகள் உலகில் எங்கும் பரவின.

முகமது நபியவர்கள் அறிவின் உச்சியிணின்றும் ஓதுகின்றாராதலின் அவர் கூறும் மொழிகள் உயிரோட்டம் நிறைந்தவை. படிப்போர் உள்ளத்தைப் பண்படுத்தி நவில்வார் நெஞ்சத்தில் நவில்தொறும் நவில்தொறும் நயத்தினை நல்கும். இறைவனின் திருவாய் மொழியாகிய குர்ஆனும் நபிகள் பெருமானாரின் நல்லற மொழிகளும் ஆகிய இரண்டும் சேர்ந்த ஒன்றே இசுலாம்.

உலகில் ஒழுக்கங் கூறவந்த நூல்களில் ஒப்புயர்வற்றது திருக்குறள். திருக்குறள் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின. இந்நூல், நாடு, மொழி, நிற வேற்றுமைகளைக் கடந்து எல்லா மதத்துக்கும், இனத்துக்கும் பொதுவாய் நின்ற தனது உள்ளொளியை நல்கும் சிறப்பினையுடையது. தெய்வப் புலவர் திருவாய் மலர்ந்தருளிய பொதுமறை உயரிய கொள்கைகளையும் இன்னார்தாம் கையாளுதற்குரிய தென்றில்லாமல் அமைந்த தனிச் சிறப்புடையது. சிறந்த



www.padippakam.com


ஒழுக்க முறையை எல்லார்க்கும் பொதுவாக எடுத்துக் கூறிச் செல்லும் காரணத்தால் உள்ளுவார் உள்ளக் கமலத்தில் என்றும் புலராது, யாணர் நாள் செல்லுகினும் நின்று, அலர்ந்து, தேன் பிலிற்றும் நீர்மையதாய் விளங்குகிறது. நூலின் முதலிலிருந்து முடிவுவரை பொது நோக்கமே உயிர்ப்பாயிருக்கின்ற காரணத்தால் வீரமா முனிவர் 'உலகுக்கு ஒரு விளக்கு' என்று இந்நூலைச் சிறப்பித்தார். இல்லறம் நடத்தும் இயல்பும், தூய துறவற நெறியும், அரசனும் அவன் துறையினரும் மேற்கொண்டு ஒழுக வேண்டிய ஒழுக்க முறைகளும், சுருங்கக் கூறின் மக்களினத்தின் வாழ்வனைத்துக்கும் பொது நோக்கங் கொண்ட திருவள்ளுவர் அருளிச் செய்துள்ளார்.

திருக்குர்ஆன் இசுலாமிய சமயத்தின் திருமறை. திருக்குறளோ உலகமக்கட்கெலாம் பொதுமறை. இருமறைகளும் உலகமறைகளே. இரண்டும் மக்களின் மனமாசகற்றி மாண்புமிக்க ஒளி விளக்கேற்றி மக்களை உய்விக்க வந்தவைகள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இசுலாமும் திருக்குறளும் மக்கட்கு மாண்புறு செய்திகளை உரைக்கவந்த நூல்கள்.

**திருக்குர்ஆன் இசுலாமிய சமயத்தின் திருமறை. திருக்குறளோ உலகமக்கட்கெலாம் பொதுமறை. இருமறைகளும் உலகமறைகளே. இரண்டும் மக்களின் மனமாசகற்றி மாண்புமிக்க ஒளி விளக்கேற்றி மக்களை உய்விக்க வந்தவைகள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இசுலாமும் திருக்குறளும் மக்கட்கு மாண்புறு செய்திகளை உரைக்கவந்த நூல்கள்.**

உலகம் தோன்றிய காலந்தொட்டு மதிநுட்பம் நூலோடுடைய நன்மக்கள் அனைவரும், உலக இயற்கையில் உள்ள அழகினைக் கண்டு வியந்து, அவ்வளவில் அமைந்துவிடாமல், அவ்வியற்கையின் உள்ளே நுழைந்து அங்கெல்லாம் பிறழாத ஓர் ஒருமைப்பாடும் அதனை அங்கே நிலைநிறுத்தி மறைந்து கிடக்கும் ஓர் உயிர்ப் பொருள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நின்று அவ்வியற்கையை இயக்கும் தன்மையையும் உணர்ந்து கடவுளை அல்லாஃக் என்றும் றஃக்மான் என்றும், ஒரு பெயரும் ஒருருவம் ஒன்றுமில்லா ஒருவனுக்கு ஆயிரம் திருப்பெயரிட்டு வழங்கி இறையுண்மையை இவ்வுலகுக்கு எடுத்து மொழிந்தது இசுலாம். அதன் மூல மந்திரமே ஆண்டவன் ஒருவன் உண்டு. அவனுக்கு இணை இவ்வுலகில் எவனும் எப்பொருளும் இல்லை என்று கூறுகிறது. இதை நமது



பொதுமறை, எல்லா எழுத்துக்களுக்கும் 'அ' என்னும் எழுத்துத் தலைமையாயிருப்பது போல் எல்லாப் பொருட்கட்கும் தலைமையாயிருப்பது இறை ஒன்றே' என்கிறது. அவனே முழு முதற் கடவுள்.

அகரமுதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

என்றும், 'தனக்கு வமையில்லாதான்' என்றும் புகல்கின்றது. இங்ஙனம் இறையுண்மையை இசுலாமும், திருக்குறளும் தொடக்கத்திலேயே உயிர் நாடியாகக் கூறுகின்றன. இசுலாம், மக்களினத்தில் ஏழை செல்வன், ஆண்டான் அடிமை, வெள்ளையன் கறுப்பன் என்ற உயர்வு தாழ்வை முற்றிலும் நீக்கி, இறைவன் திருமுன் எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை என்ற சமநிலையையும் உடன்பிறப்பியலையும் நிலைநாட்டிச் செயலிற் கொணர்ந்தது. 'மனிதர்காள்! உங்களை நாம் ஆண்களாகவும், பெண்களாகவும் படைத்தோம். வெவ்வேறு கூட்டத்தினராகவும், நாட்டினராகவும், உங்களை ஆக்கினோம். உங்களை ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்வதற்காக அல்லாமல் வேறில்லை' என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. மக்களினம் அனைத்தும் ஒன்றே. இதைத் திருக்குறள் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று மொழிகின்றது.

மன்பதையில் தோன்றுகின்ற வேற்றுமையுணர்ச்சிகளுக்கும் போராட்டங்களுக்கும் அடிப்படையாயிருப்பது பொருளியல் ஏற்றத்தாழ்வு தான் என்று அன்று முதல் இன்றுவரை தோன்றிய அறிவுலகம் கூறுகின்றது. இறைவன் படைத்த பொருள்கள் அனைத்தும் மக்கட்குப் பொதுவுடைமையே. அது சிலரிடத்தில் அதிகமாகச் சென்று தங்குதலும் உலக இயற்கைதான். எக்காலத்திலும், எந்நாட்டிலும் செல்வரும் வறிஞரும் இருக்கத்தான் செய்கின்றனர். இது மறுக்க முடியாத உண்மை. இதைச் சமன் செய்ய நினைத்த இசுலாம் தனது கடமைகள் ஐந்தில் செல்வர்கள் 100-க்கு $2\frac{1}{2}$, 2 ரூவா ஏழை வரி செலுத்த வேண்டும் என்று விதித்ததோடு தத்தமக்கு இயன்ற

www.padippakam.com


வழியிலெல்லாம் அறத்தினை வழுவாது செய்தல்வேண்டும் என்றும் கட்டளையிட்டது.

'அறம் செய்வது ஒவ்வொரு முசுலிம் மீதும் விதிக்கப்பட்டுள்ளது' என நபிமணியவர்கள் நவின்ற பொழுது, அறம் செய்யப் பொருள் இல்லையாயின் என் செய்வது என ஒருவர் வினவ, 'பொருளற்றறோர் தமது இரு கைகளாலும் உழைத்துப் பிறருக்குக் கொடுக்கட்டும்' என்றார்கள். உழைக்கவும் உறுதி யற்றவர் என் செய்வது எனக் கேட்க, 'தேவைப் பட்டோருக்கும் பாதிக்கப் பட்டோருக்கும் உதவி யாயிருக்கட்டும்' என்றார்கள். அதையும் செய்ய முடியாவிடின் என்ன செய்வது என வினவியதற்கு 'அவர் நன்மையைப் பிறர்க்கு எடுத்துக் கூறட்டும்' என்று கூறினார்கள். அதையும் செய்ய் முடியா விடில் எனக் கேட்க, 'அவர் தீமையைத் தவிர்த்துக் கொள்ளட்டும்' என்று கூறியதோடு, 'ஒருவர் ஊர்தியின் மீது ஏற - சுமையைத் தூக்க உதவுவது, ஒருவருக்கு நன்மொழி மொழிவது, வழியிற் கிடக்கும் கற்களையும் முட்களையும் அகற்றுவது குருடர்க்கு வழிகாட்டுவது அனைத்தும் அறத்தின் பாற்படும்' எனத் திருவாய் மலர்ந்தருளினார்கள். இதை

**ஒல்லும் வகையால் அறவினை - ஓவாதே**
**செல்லும் வாயெல்லாம் செயல்**


என்கிறது திருக்குறள்.

பகைவர்களின் துன்பங்களைப் பொறுக்க முடியாத பெருமானாரவர்கள் மதீனாவுக்குத் தனது தோழர்களுடன் சென்று தங்கினார்கள். அப்பொழுது மதீனாவாழிகளைக் கூட்டி நீங்கள் அனைவரும் உடன்பிறந்தோர்; மதீனா வாழி ஒவ்வொருவரும் மக்காவாழி ஒவ்வொருவரையும் உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கூறினார்கள். அப்பொழுது அம்மதீனா நகரத்தார் ஒவ்வொருவரையும் உடன் பிறந்தவராக ஏற்றுக் கொண்டதோடு தமது உடைமைப் பகுதியைப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். இது

**மன்பதையில் தோன்றுகின்ற வேற்றுமையுணர்ச்சிகளுக்கும் போராட்டங்களுக்கும் அடிப்படையாயிருப்பது பொருளியல் ஏற்றத்தாழ்வுதான் என்று அன்று முதல் இன்றுவரை தோன்றிய அறிவுலகம் கூறுகின்றது.**

நபிகள் செய்த பொருளியல் சமநிலை. இதைப் பொய்யாமொழி, திட்ப நுட்பமாக, 'பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்று சுருங்கக் கூறி விளங்க வைக்கிறது.

உலக மக்கள் தூய்மையான அறிவைப் பெறக் கல்வி இன்றியமையாதது. கல்விதான் ஒருவனை முழு மனிதனாக ஆக்குகின்றது. சிற்றுயிர்க்கு உற்ற துணையாயிருப்பதும் அஃதே. கற்றனைத்தும் அறிவு ஊறுகின்றது. 'கல்வி சீனத்திலிருந்தாலும் அதைத்தேடிப் பெறுங்கள்' என்று முகமது நபிகள் கூறினார்கள். திருக்குர்ஆன் 'குருடரும், பார்வையுடையோரும் சமமாக மாட்டார்கள். இருளும் ஒளியும் சமம் ஆகா'' என்று அருளுகின்றது. இதே கருத்தைத் திருவள்ளுவர் 'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்' எனக் கூறினார். இனி, பண்பாட்டிலெல்லாம் சிறந்தது கண்ணோட்டமே. ஒருவருடைய உள்ளத்துக்கு வினை நல்காமை மட்டுமன்று கண்ணோட்டம். மக்களைத் திருப்தியுடையவர்களாக ஆக்குதலும் ஆகும். இது தலை சிறந்த நாகரிகம். 'எவருடைய நாவாலும் கையாலும் பிறர் நோவினையுறவில்லையா அவரே சிறந்த முசுலிம்' என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. நபிபெருமானாரிடத்தில் கிழவியொருத்தி வந்து சில பேரீச்சம் பழங்களை அன்பளிப்பாக வழங்கினாள். முதலில் தோழர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துண்ணும் இயல்பினையுடைய பெருமானாரவர்கள் ஒருவருக்கும் கொடாமல் தாமே உண்டு முடித்துவிட்டு மூதாட்டியாருக்கு நன்றியுரையும் கூறி அனுப்பிவிட்டார்கள். தோழர்கட்கு ஒன்றும் புரியவில்லை.



பெருமானார் தோழர்களைப் பார்த்து 'இங்கு வந்த மூதாட்டியார் இப்பழங்களை அன்போடு வழங்கினார்கள். பழங்கள் மிகவும் புளித்தன. அந்நிலையில் அப்பழங்களை நான் பகிர்ந்து கொடுத்தால் அம்மூதாட்டியார் முன்னிலையில் நீங்கள் மனக்குறையாக ஒன்றும் கூறாவிடினும்


படிப்பகம்

www.padippakam.com


முகத்தையாவது சுளிக்கக் கூடும். அஃது அவனை வருத்தும். ஆகையால் நானே எல்லாப் பழங்களையும் தின்றுவிட்டேன்' என்றார்கள். இப்பண்பாட்டைத் திருக்குறள்,

**'பெயக்கண்டும்**
**நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்'**

என்று கூறுகின்றது. நபிகள் வாழ்க்கைதான் இசுலாம். இது இக்குறளுக்கு எத்துணை எடுத்துக்காட்டாக மிளிர்கின்றது.

**மக்களின் சீரிய குணங்களில் தலையாயது சால்பு. அஃதாவது சான்றாண்மை. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கின்ற நீர்மையே சான்றாண்மை. இதை இசுலாம் பல இடங்களிலும் வற்புறுத்துகிறது.**

இவ்வாறு இசுலாமும், இன்குறளும் மக்கள் பின்பற்றத்தக்க ஒழுக்கமுறைகளை வகுத்துரைப்பதில் ஒப்புயர்வற்று விளங்குகின்றன. ●●

❀❀❀❀❀

## வள்ளுவம் இதழ்

**வள்ளுவம் இதழ் பல்துறையிலும் சிறந்து விளங்கப் படைப்பாளர்கள்... குறள் பற்றிய தங்கள் கவிதைகள், ஆய்வுக் கட்டுரைகள் அரிய செய்திகள் ஆகியவற்றை அனுப்பி உதவுங்கள்.**

மக்களின் சீரிய குணங்களில் தலையாயது சால்பு. அஃதாவது சான்றாண்மை. இன்னா செய்தார்க்கும் இனியவே செய் கின்ற நீர்மையே சான்றாண்மை. இதை இசுலாம் பல இடங்களிலும் வற்புறுத்துகிறது. 'உங்க ளுக்குத் தீங்கிழைப் போரை மன்னியுங்கள். உங்களுக்குத் தீங்கிழைப் போருக்கு நன்மை செய்யுங்கள்' என்பது நாயகம் அவர்களின் பொன்மொழி. இதைப் பெருமானார் கூறியதோடு தாங்களே அதற்கு எடுத்துக் காட்டாகவும் விளங்கினார்கள். நபிகள் தெருவில் செல்லும் பொழுது பகைவன் ஒருவன் வீட்டு மாடியி லிருந்து அவர்கள் தலையில் குப்பை கொட்டு வதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அவனுக்காக இரங்கி ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட் பதைத் தவிர அவனை ஒரு பொழுதும் நபிகள் கடிந்ததில்லை. ஒருநாள் அவன் குப்பையைக் கொட்டவில்லை; பெருமானாருக்கு இது மிகவும் வியப்பையளித்தது. அருகில் உள்ளவர்களை உசாவினார்கள். 'அவன் பிணியால் பீடிக்கப்பட் டான், அதனால் உங்கள் மேல் குப்பை கொட்ட வில்லை' என்று கூறினார்கள். இதைக் கேட்ட நபிகள் அவன் இல்லம் சென்று நலம் உசாவி அவன் குணமடையத் தொழுதார்கள். இதை நமது இணையிலாப் பொதுமறை,

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்'**

என்று மொழிகின்றது.



தமிழ் வாழ்வுக்கு மானம் உயிரினும் சிறந்தது. அந்த மானத்தைத் தமிழர் மொழியிலும் நினைவிலும் நின்று நிலவும் அரும்பணியைப் புரிந்தவர் ஆசிரியர் திருவள்ளுவர். இடைக்காலத்தில் வட மொழியில் மயங்கிப் பிற்காலத்தில் ஆங்கிலத்தின் அடிவீழ்ந்து அறிவு அறை போக்கிய தமிழ்மக்கட்கு நெடுநாட்கள் வரை திருவள்ளுவரின் சீரிய அறிவுப்பணி தெரியாது இருந்தது. இன்றைய தமிழ் நன்மக்களுக்குத் திருவள்ளுவரது திருக்குறள் பெறலரும் அறிவு ஒழுக்கக் கருவூலமாகத் தெரியத் தொடங்கிவிட்டது. எங்கும் யாவரும் திருக்குறளைப்பற்றிப் பேசுகின்றனர். எவருடைய பேச்சிலும் திருக்குறள் கருத்து ஒளிர்கின்றது.

*- சித்தாந்த கலாநிதி ஔவை சு.துரைசாமி*

❀❀❀❀❀


படிப்பகம்

www.padippakam.com


ச.சு.இளங்கோ

# பாரதிதாசனின் வள்ளுவர் உள்ளம்



### திருக்குறள் உரையாசிரியர்கள்

உலகமக்கள் நன்னெறியில் வாழத் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். திருக்குறளுக்குப் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர் ஆகிய பதின்மர் உரை எழுதியுள்ளனர்.

பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய ஐவர் எழுதிய உரைகள் கிடைத்துள்ளன.

தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் ஆகியோர் எழுதிய உரைகள் முழுமையாகக் கிடைக்கவில்லை.

தருமர், தாமத்தர், நச்சர் ஆகிய மூவர் கடவுள் வாழ்த்தில் இடம்பெற்றுள்ள 5, 6 ஆகிய இருகுறளுக்கு எழுதிய உரைகள் கிடைத்துள்ளன. மற்றவை கிடைக்கவில்லை.

அப்பெருமக்கள் எழுதிய உரைகள் தமிழ் இலக்கிய உலகிற்குக் கிடைக்காமல் போனமை நமக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பேயாகும். தொன்மை உரையாசிரியர் பதின்மர் அன்றி எழுதியவர் யார் என்று தெரியாத இரு உரைகள் நமக்குக் கிடைத்துள்ளன.

1. உ.வே.சா. நூல் நிலையம் வெளியிட்ட உரை.

2. மற்றோர் உரை பரிதியாரின் உரையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

### பரிமேலழகர்



திருக்குறள் உரையாசிரியர்களில் சிறந்து விளங்கும் இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். வைணவ சமயத்தைச் சார்ந்தவர். தமிழ் மொழி, வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிக்கவர்.

### மணக்குடவர்

மணக்குடி என்னும் ஊரில் பிறந்ததால்


படிப்பகம்

மணக்குடவர் என்னும் பெயர் பெற்றார் என்பர். சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் மணக்குடி என்ற பெயரில் ஊர்கள் உள்ளன.

பரிமேலழகருக்குக் காலத்தால் முற்பட்டவர். பரிமேலழகர், மணக்குடவர் உரையைப் பல இடங்களில் மறுத்துள்ளார் (கு.எண். 128, 205, 223, 229, 254, 278, 299, 334, 338, 349, 369)

**'தெள்ளு தமிழ்நடை; சின்னஞ்சிறு இரண்டடிகள்; அள்ளுதொறுஞ்சுவை; உள்ளுந்தொறும் உணர்வாகும் வண்ணம் கொள்ளும் அறம், பொருள், இன்பம் அனைத்தும் கொடுத்த திருக்குறள்' என்று திருக்குறளின் அமைப்பையும், சிறப்பையும் போற்றுகிறார்.**

களாகும்' என்பர். (எந்தச் சிலம்பு? ப. 20).

திருக்குறள் உரையாசிரியர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு மேலும் படிக்க வேண்டிய நூல்கள்:

1. டாக்டர் இரா. சாரங்கபாணி, திருக்குறள் உரையாசிரியர், முதல் பதிப்பு, சென்னை 1991

2. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1977, பக். 353-461.

3. டாக்டர் இ.சுந்தரமூர்த்தி, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், சென்னை - 1985

4. டாக்டர் மு.கோவிந்தசாமி, பரிமேலழகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1978

5. டாக்டர் தமிழண்ணல், உரைவிளக்கு மதுரை, 1985)

### பரிதியார்

பரிதியார் என்பது பருதுயார் என மருவிற்று என்பர். வைச சமயச்சார்புடைய இவர், 'அறவாழி அந்தணன்' என்பதற்குப் பரமேஸ்வரன் என்று பொருள் எழுதுகிறார். இவர் எழுதிய திருக்குறள் உரையின் பெயர் 'சைவ உரை' என்பதாகும்.

### காளிங்கர்

ஆய்வாளர் இவரைச் சமணர் என்று கருதுகின்றனர். பரிமேலழகருக்கு முற்பட்டவர். சிற்சில இடங்களில் இவருடைய உரையும் பரிதியார் உரையும் ஒத்தவையாக அமைந்துள்ளன.

### பரிப்பெருமாள்

தென்செழுவை என்னும் ஊரில் பிறந்தவர் என்றும் மொழியியல் காமநூல் முதலிய நூல்களை எழுதியவர் என்றும் கூறுவர். 'கவிப்பெருமாள்' என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கப்பட்டவர். மணக்குடவர் உரையைப் பெரும்பாலும் தழுவி இவருடைய உரை அமைந்துள்ளது. பரிமேலழகர் உரைக்கும் உரை எழுதிய பெருமை 'பரிமேலழகர் உரை நுண்பொருள்மாலை' என்னும் நூலால் புலனாகின்றது. காரிரத்தின கவிராயர் என்பவர் இந்நூலை இயற்றினார். (தமிழ்ப் புலவர் அகராதிப. 117).

தொன்மை உரையாசிரியர்களைப் போன்று இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களும் திருக்குறளுக்கு உரை எழுதி உள்ளனர். இவ்வாறு திருக்குறளுக்கு அறிஞர் பெருமக்கள் பலர் உரை எழுதியதற்குரிய காரணத்தைக் குறித்துத் தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் வ.சுப.மாணிக்கம் 'முன்னோர் எழுதிய உரையைத் தழுவக்கூடாது; தாமே ஒரு தனியே, குறளுக்குப் புத்துரை எழுத வேண்டும் என்று எண்ணியதின் விளைவாகப் பிறந்தவையே திருக்குறள் புத்துரை



அறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கம் அவர்களின் கருத்து, திருக்குறளின் உரைப்பெருக்கத்திற்கு உரிய உள்நோக்கத்தை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

மேலும் உரைகள் பல்கிப் பெருகியதற்குத் திருக்குறளின் பெரு வழக்கும் கருத்துச் செம்மையும் செறிவும் காலப்பொதுமையான கருத்துக்களும் இவை போன்றனவும் காரணமெனலாம்... காலந்தோறும் வளர்ந்துவரும் கருத்து வளர்ச்சிக்கு ஏற்பத் திருக்குறளுக்குப் பொருளுரைத்ததாலும் உரைகள் பெருகியது என்று திருக்குறள் உரைகளின் பெருக்கத்திற்குரிய காரணத்தைக் காட்டுவார் ஆய்வாளர் (ப.கொழந்தசாமி, திருக்குறள் உரைகள் காட்டும் குறள்நெறி, முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1990, ப. 16)

திரு.வி.க. அறத்துப்பால் பாயிரத்திற்கும், வ.உ.சி., சுப்பிரமணிய சாஸ்திரி, ச.தண்டபாணி தேசிகர் ஆகியோர் அறத்துப்பாலுக்கும், கவிஞர் கண்ணதாசன் காமத்துப் பாலுக்கும் உரை எழுதியுள்ளனர்.

கலைஞர் மு.கருணாநிதி திருக்குறளுக்குக் கதை வடிவில் உரை எழுதியுள்ளார். திருக்குறள் முழுமைக்கும் அவர் உரை எழுதவில்லை என்றாலும் கருத்துக்களை வெளிப்படுத்தும் மொழித்திறன்

www.padippakam.com


சிறப்பிற்குரியது.

நாமக்கல் கவிஞர், கவிராச பண்டிதர் (செகவீர பாண்டியர்), புலவர் குழந்தை, சாமி சிதம்பரனார், கவியோகி சுத்தானந்த பாரதியார் முதலிய கவிஞர்கள் திருக்குறளுக்கு உரையெழுதி இருப்பது இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

**'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது பழமொழி. 'வள்ளுவன் வழி சென்றால் நல்வழி பிறக்கும்' என்பது பாரதிதாசனின் புதுமொழி.**

இவர்களுள் திராவிட இயக்கச் சார்புடையர் புலவர் குழந்தை ஆவார். சாமி சிதம்பரனார் தொடக்கத்தில் திராவிட இயக்கத்திலும் பின்னர்ப் பொதுவுடைமை இயக்கத்திலும் இரண்டறக் கலந்தவர்.

டாக்டர் மு.வ., பாவாணர், டாக்டர் சி. இலக்குவனார், கோ.வடிவேலு செட்டியார், தண்டபாணி தேசிகர், திருக்குறள் முனுசாமி, பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை, முனைவர் மு.கோவிந்தசாமி, பால்வண்ணன், கி.வா.ஜகந்நாதன், கோபால கிருஷ்ணமாச்சாரியர், கு.சா. ஆனந்தன், பொதுவுடைமை இயக்கச் சிந்தனையாளர் டாக்டர் எஸ்.இராமகிருட்டிணன், நாவலர் இரா.நெடுஞ்செழியன் முதலியோர் திருக்குறள் முழுவதற்கும் உரை எழுதியுள்ளனர்.

நாவலர் இரா.நெடுஞ்செழியன் திருக்குறள் தொடர்பாக வெளிவந்த உரைகளையும் நூல்களையும் கற்று விரிந்த அளவில் திருக்குறளுக்கு உரை கண்டுள்ளார். நுண்மாண் நுழைபுலம் மிக்க அவருடைய உரைத்திறன் முன்னுரையிலும் உரையிலும் வெளிப்படுகிறது.

பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரை, 'திருக்குறள் மணிவிளக்கவுரை' என்ற தலைப்பில் உரை எழுதியுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் எனும் தலைப்பில் உரை எழுதியுள்ளார்.

உரை முழுவதும் நமக்கு கிடைக்கவில்லை. ஆயினும் கிடைத்த உரைகள் நூலாக்கம் பெற்றுள்ளன.

**பாரதிதாசனின் நெஞ்சம் கவர்ந்த நூல் திருக்குறள்**

பழந்தமிழ் நூல்களில் பாரதிதாசனைக் கவர்ந்த நூல்களுள் திருக்குறளும் ஒன்று. அந்நூல் பற்றித் 'தெள்ளு தமிழ் நடை; சின்னஞ்சிறு இரண்டடிகள்; அள்ளுதொறுஞ் சுவை; உள்ளுந்தொறும் உணர்வாகும் வண்ணம் கொள்ளும் அறம், பொருள், இன்பம் அனைத்தும் கொடுத்த திருக்குறள்' (பா.தா.க.தொ. 2., ப. 154) என்று திருக்குறளின் அமைப்பையும், சிறப்பையும் போற்றுகிறார்.



பாரதியார் வள்ளுவரை உலகிற்குக் கொடுத்துத் தமிழ்நாடு வான்புகழ் கொண்டது என்கிறார்.

**குறளால் புகழ்பெற்ற வையகம்**

பாரதிதாசன் அவரைக் காட்டிலும் ஒருபடி உயரச் சென்று 'வள்ளுவரைப் பெற்றதால் இவ்வையகம் புகழ் பெற்றது' என்கிறார்.

உலகம் சிறக்கப் பிறந்தவர் வள்ளுவர் என்பது பாரதிதாசன் கருத்து.

திருமால் ஈரடியால் இவ்வுலகை அளந்தார் என்பர் புராணிகர். திருமாலைப் போன்று வள்ளுவனும் திருக்குறளில் இரண்டடியால் இந்த வையத்தை அளந்தார் என்று எண்ணிப் பாரதிதாசன் பெருமைப்படுகிறார். திருக்குறள் உலக நலம் தழுவியது; சாதி, சமய, மொழி எல்லைகளைக் கடந்தது என்பதை இலக்கிய நலம் சிறக்கப் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

***வானுக்குச் செங்கதிர் ஒன்று - புனல்***
***வண்மைக்குக் காவிரி ஒன்று - நல்ல***
***மானத்தைக் காத்து வாழ எண்ணுமிந்த***
***வையத்துக் கொன்று திருக்குறள்***

***(தேனருவி, ப. 12)***

என்று திருக்குறளின் நிலைபேற்றினைப் புகழ்கிறார்.

நன்னெறி, தீநெறி ஆகிய இருநெறிகளைத் தெளிவாக விளக்கி, அவற்றுள் மக்களை நன்னெறி செலுத்தத் தூண்டும் நூல் திருக்குறள் என்கிறார்.

***அறமி தென்றும்யாம் மறமி தென்றுமே***
***அறிகிலாத போது - யாம்***
***அறிகிலாத போது - தமிழ்***
***இறைவ னாரின் திருக் குறளிலே ஒருசொல்***
***இயம்பிக்காட்ட***
***மாட்டாயா?நீ***
***இயம்பிக் காட்ட மாட்டாயா***

***(இசையமுது -1, ப. 48)***

எனும் பாடல் பகுதி இங்கு எடுத்துக் காட்டத் தக்கது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது பழமொழி. 'வள்ளுவன்

www.padippakam.com


வழி சென்றால் நல்வழி பிறக்கும்' என்பது பாரதி தாசனின் புதுமொழி. (பா.தா. க.தொ.3, ஏற்றப்பாட்டு, 4. 153)

காதல் பாடல் திருக்குறள்

காதலன் காதலியை நோக்கி

மரத்தின் நிழலில் நின்று கொண்டு

**வந்த என்னை நீயும் கண்டு**
**வானம் பார்க்க என்ன உண்டு நல்ல**
**பருத்தி புடவை காய்த்தபடிபொன்வண்டு - நீ**
**பக்கத் திலேநின்றாயடி கற்கண்டு**

**(குயில் - 28.6.60)**

**திருக்குறளில் ஈடுபாடு கொண்ட பாரதிதாசன் திருக்குறளைப்போன்று தானும் ஒரு நூலைப் படைக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்குப் 'பாரதிதாசன் திருக்குறள்' என்று பெயரிட்டார்.**

என்று பாடுவதாகக் குறிப்பிடுகிறார். அப்பாடலுக்குத் 'திருக்குறள் படித்தான்' என்று பாவேந்தர் தலைப்பளித்துள்ளார்.

திருக்குறள் காமத்துப்பாலில் 110-வது அதிகாரம் குறிப்பறிதலுக்கு இலக்கியமாக இப் பாடல் அமைந்துள்ளது.

காதல் பாடலுக்குத் 'திருக்குறள் படித்தான்' என்று தலைப்பிட்டிருப்பது அவர் திருக்குறள் மேல் கொண்ட ஈடுபாட்டையும் மதிப்பையும் காட்டுகின்றன.

பாரதிதாசன் திருக்குறள்

திருக்குறளில் ஈடுபாடு கொண்ட பாரதிதாசன் திருக்குறளைப்போன்று தானும் ஒரு நூலைப் படைக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்குப் 'பாரதிதாசன் திருக்குறள்' என்று பெயரிட்டார். அவர் பாடிய குறள்கள் வருமாறு:

பாட்டு 1

**எந்நற் பொருள்கட்கும் ஏங்கா தொருவயின்**
**மன்னலே ஆகும் மனம்.**
***(பாரதிதாசன் திருக்குறள், குயில் - 12.7.60)***

பாட்டு 2

**ஒருவன் புகழ்வான் ஒருவன் இகழ்வான்**
**இரண்டுக்கும் அப்பால் இரு.**
***(பாரதிதாசன் திருக்குறள்,குயில் - 20,6,60)***



பாட்டு 3

**இடைச்செருகல் வள்ளுவரில்**
**இல்லை படைத்ததமிழ்**
**யாவினும் உண்டென்பேன் யான்.**
***(பாரதிதாசன் திருக்குறள், குயில் - 28.6.60)***

பாட்டு 4

**இருந்தாள் இருக்கின்றாள் என்றும் இருப்பாள்**
**வருந்தாள் மறத்தமிழ்த் தாய்.**
***(பாரதிதாசன் திருக்குறள், குயில் - 9.8.60)***

பாட்டு 5

**அவன்செய லாலவன் செல்வம் அடைந்தான்**
**எவன்செயலால் ஏந்துகின்றான் கை**
***(பாரதிதாசன் திருக்குறள், குயில் 16.8.60)***

ஆயினும் 'பாரதிதாசன் திருக்குறள்' முழுமையான நூல் வடிவம் பெறவில்லை.

பாரதிதாசனைப் போன்று ரசிகமணி டி.கே.சி.யின் இலக்கிய வட்டத்தைச் சார்ந்த வழக்கறிஞர் ஆவுடையப்பப்பிள்ளையும் திருக்குறளைப் பின்பற்றி 'நவீன குறள்களை'ப் புனைந்துள்ளார். வண்ணாரப்பேட்டையில் அவர் வாழ்ந்ததால் 'வண்ணாரப்பேட்டை வள்ளுவர்' என்று சிறப்பாக அழைக்கப்பட்டார். அவர் பாடிய சில குறள்கள் வருமாறு.

1. **டைகட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றவர்**
   **கைகட்டிப் பின்செல் பவர்.**
2. **சொன்ன சொல்லைச் சுருதியால் கேட்டு**
   **பின்னர் மறந்துவிடு.**
3. **குல்லாய்க்குள் குல்லாய்க்குள் குல்லாய்க்குள் குல்லாய்க்குள்**
   **குல்லாய்க்குள் எல்லாம் தலை.**
4. **கற்றதனா லாயபயனென் கணவனை**
   **விற்றுச் சுருட்டலே தான்**

ஆவுடையப்ப பிள்ளையின் இக்குறள் கள் நகைச்சுவையை முதன்மையாகக் கொண்டவை. (ஹாஸ்யக் குறள்கள், தில்லி - சுடர், திருவள்ளுவர் மலர், 1968, ப, 55)

ஆயின் பாரதிதாசன் குறள்கள் சமூக மாறுதலையும் தாய்மொழிப் பற்றையும் உள்ளடக்கமாகப் பெற்றவை.

தமிழர் திருமண முறைக்குச் சான்றுபகரும் திருக்குறள்

தமிழர் திருமண முறையைத் தெளிவாக


படிப்பகம்

விளக்குகின்ற இலக்கியங்கள் இல்லை என்று கூறுவோரின் கருத்தை மறுத்து, திருக்குறள் தமிழர் திருமணமுறையை வெளிப்படுத்தும் நூல் என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார். (குயில் - 22.3.60).

**ஆரியப் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றுள் தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகம் திருக்குறள் என்பது பாரதிதாசன் கருத்து.**

'தொல்காப்பியர், இளங் கோவடிகள் முதலியோர் கூறும் திருமணமுறை ஆரியர் திருமண முறையாகும். தமிழகத்தில், புகுந்த அம் மூடப்பழக்க வழக்கங்களுக்கு அவர்கள் செய்யுள் செய்தனர்' என்றும் சுட்டுகின்றார்.

மேலும் தொல்காப்பியத்தில் காணப்படும் ஆரிய திருமணமுறைச் சடங்குகள் இடைச் செருகல் என்று கருதுகிறார்.

திருவள்ளுவர் தந்த திருமணத் திட்டம் குறித்து, 'ஒருவனும் ஒருத்தியும் மறைவாக ஒன்றுபடுகின்றார்கள். வெளிப்படையாக வாழ்க்கை நடத்துகின்றார்கள். பெண்ணிருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்ள மாப்பிள்ளையின் தந்தை பார்ப்பானிடத்தில் போவது பற்றியோ, பெட்டிவாணம் கொளுத்துவது பற்றியோ, அம்மி, சாலுங்கரகம் பற்றியோ, தீ வளர்த்துவது பற்றியோ, பார்ப்பானுக்குச் செருப்பும் பருப்பும், கட்டணமும், பொட்டணமும் காலில் வைத்து விழுவது பற்றியோ பேசவேயில்லை வள்ளுவர். அவர் கூறியுள்ளது சாதகமல்ல என்றும் மாறுபடாத உண்மை வாழ்வியல் நெறி என்றும் விளக்கமளித்துள்ளார், (குயில் 14.6.60).

திருக்குறள் வாழ்வியல் நூல்

டாக்டர் அ.சிதம்பரனார் திருக்குறள் பற்றி உரை நிகழ்த்த உருசியா சென்றார். மாசுகோவில் நடைபெற்ற கீழைநாட்டு மொழியறிஞர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு அவர், 'உலகினருக்குத் திருவள்ளுவர் தரும் செய்தி' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையின் சுருக்கம் வருமாறு:

'திருவள்ளுவர் வாழ்வியலில் பல்வேறு குணங்களையும் நன்கு உணர்ந்தவர். செம்மையாக வாழ்வை நடத்தி உயர்நிலை அடைவதற்கு வழிவகைகளைக் கூறும் கருத்துக்கள் பல திருக்குறளில் பொதிந்து கிடக்கின்றன. அன்றாட வாழ்வை இனிமையும் பண்பும் பயனும் உடையதாக்குவதே திருக்குறளின் உள் உணர்ச்சியாகும். இது ஓர் அப்பட்டமான வாழ்க்கை நூல்.'



முன்னர்ச் சுட்டிய டாக்டர் சிதம்பரனாரின் உரையைப் 'பேராசிரியர் அவர்கள் தமிழர்களின் பண்பாட்டின் உயர்வை உருசியாவில் நன்கு எடுத்து விளக்கினார் என்பதில் ஐயமில்லை' என்று பாவேந்தர் பாராட்டியுள்ளார் (குயில் - 13.9.60).

திருக்குறள் ஒரு சாட்டை

பொருளியல் மேதை டாக்டர் நடராசன் திருக்குறள் பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கத்தைப் பாரதிதாசன் குயில் இதழில் வெளியிட்டுள்ளார்.

'பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் போரையும் காதலையுமே நோக்கமாகக் கொண்டவை என்று நடராசனார் கூறித் தமிழுக்கு இலக்கியமே இல்லை என்ற மரமண்டைகளுக்கும் தமிழிலக்கியத்தில் திருமணம் பற்றி ஒன்றுமேயில்லை என்ற முட்டுக்கட்டைகட்கும் நல்ல சாட்டை கொடுத்தார்' என்று பாராட்டியுள்ளார். (குயில் - 14.1.61).

திருக்குறளில் இடைச்செருகல்

தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியங்கள் முதலிய தமிழ் இலக்கியங்களில் இடைச் செருகல் உண்டென்றும் திருக்குறளில் மட்டும் இடைச்செருகல் இல்லையென்றும் பாரதிதாசன் சுட்டியுள்ளார். (குயில் - 28.6.60).

ஆரியக் கருத்துக்களுக்கு எதிரானவர்

திருக்குறள்மாலையில் இடம்பெற்றுள்ள நல்கூர் வேள்வியார்,

**உப்பக்க நோக்கி உபகேசி தோள்மணந்தான்**
**உத்தர மாமதுரைக் கச்சென்ப - இப்பக்கம்**
**மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்**
**போதார் புனற்கூடற் கச்சு**

எனும் பாடலைப் பாரதிதாசன் எடுத்துக்காட்டி, 'இதனால் அறிவதென்னவென்றால் - இருவேறு நூற்கள், இருவேறு கொள்கைகள், இருவேறு மொழிகள், இருவேறு பண்பாடு உள்ளன. உணர்தல் வேண்டுமன்றோ? என்று வினவுகிறார். (பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 156).

ஆரியப் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றுள் தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகம் திருக்குறள் என்பது

www.padippakam.com


பாரதிதாசன் கருத்து.

வள்ளுவர் ஆரியக் கருத்துக்களுக்கெதிராகத் திருக்குறளை இயற்றினார் என்பது அறிஞர்களின் முடிவு.

**பாரதிதாசன் திருக்குறள் மேல் கொண்ட ஈடுபாட்டைக் குடும்ப விளக்கு முன்னுரை வெளிப்படுத்துகிறது.**

பாரதிதாசன் அவர்கள் முடிவை ஏற்றுக் கொள்கிறார். ஆரியனும் வள்ளுவனும் பேசுவதைப் போன்று ஆறு வெண்பாக்களைப் பாரதிதாசன் இயற்றியுள்ளார்.

1. மேலுலகம் நல்லது 2. தேவருலகே சிறந்தது. 3. மக்கள் பெறத்தக்கது மேலுலகு 4. மேலுலகில் வாழ்பவர்களே நிலவுலகைப் படைத்தனர். 5. ஆரிய நான்மறையே சிறந்தது. 6. மேலுலகில் வாழ்பவர்களுக்குப் பிணியேற்படுவதில்லை.

எனவே அவர்கட்கு மருந்து தேவையில்லை. வறுமையும் அவர்கட்கில்லை, ஆகவே பசி, பட்டினியால் அவர்கள் சாவதில்லை.

இவ்வாறு ஆரியன் உரைத்த கருத்துக்களையெல்லாம்வள்ளுவர் தக்கவாறு மறுத்து, 'நான் பிறந்த இவ்வுலகம் சிறந்தது' என்று அறிவுறுத்துகிறார் (குயில் - 10.5.60).

## மேலுலகு

மேலுலகு என்பது ஒரு கற்பனை வாதம் என்றும் மேலுலகில் இருக்கும் தேவர்களுக்கு நோய் இல்லை என்றால் அங்கு உபயேந்திரன் என்னும் மருத்துவன் இருப்பதாக ஏன் புராணங்கள் சுட்டுகின்றன? என்றும் தேவருலகைக் காட்டிலும் மக்கள் உலகே சிறந்தது என்றும் அறிவிக்கிறார். ஆரிய நான்மறையை விடுத்துத் தமிழ் நான்மறையைத் தழுவியே தாம் திருக்குறளை இயற்றியதாகத் தெரிவிக்கிறார். இரப்பார் இல்லாத வாழ்க்கை சுவைக்காது என்று எல்லாம் அறிந்த திருவள்ளுவர் கூறியதாகப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். (குயில் - 10.5.60).

மேலும் ஆரிய நான்மறையும், மனுவும் ஒரு குலத்திற்கொரு நீதி வகுத்தனர். ஆயின் வள்ளுவர் பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லையென்னும் சமூகநீதியை வலியுறுத்தித் திருக்குறளை இயற்றினார். எனவே பாரதிதாசன்,

**வித்திப் பிழைக்கும்**
**உழவனும் வேந்தனும்**
**நாடனைத்தும்**
**ஒத்துப் பிழைக்க**
**வழிகாட்டி வள்ளுவன்**
**ஓதியநூல்**



**எத்துப் பழுத்தனர்**
**ஏமாற்றும் ஆரியர் நான்மறை**
**போல்**
**அத்திப் பழமன்று**
**தித்திக்கும் முப்பழம்**

என்று குறிப்பிடுகிறார். (பா.தா.க. தொ.2., ப. 155).

வள்ளுவரை மானிட சமூகம் உய்யப் பாடிய 'மானுடம் பாடி' என்று போற்றுகிறார். அதற்குப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர், தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்னும் திருக்குறளைச் சான்றாகக்காட்டுகிறார் (பன்மணித்திரள், ப. 311).

## திருக்குறள் தொடர்களைக் கையாளுதல்

பாரதிதாசனுடைய நூல்களில் சிறந்தவற்றுள் குடும்ப விளக்கும் ஒன்று. அந்நூலைக் 'குறளோவியம், குடும்ப விளக்கு' என்று பாவேந்தர் முன்னுரையில் குறிப்பிடுகிறார். சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்திற்கு முதலடியை எடுத்துத் தந்தவர் சிவபெருமான் என்பர். கலைஞரின் குறளோவியம் என்னும் நூலுக்கு அத்தலைப்பைத் தந்தவர் பாரதிதாசன் என்பது இங்கு நினைக்கத் தக்கது.

பாரதிதாசன் திருக்குறள் மேல்கொண்ட ஈடுபாட்டைக் குடும்ப விளக்கு முன்னுரை வெளிப்படுத்துகிறது.

பாரதிதாசன் குடும்பவிளக்கில் திருக்குறள் தொடர்களைப் பலஇடங்களில் கையாண்டுள்ளார்.

எடுத்துக்காட்டு:

1. **மோந்தால் குழையும் அனிச்**
**சம்பூ முகமாற்றம்**
**வாய்ந்தால் குழையும்**
**வருவிருந்தென்று - ஆய்ந்ததிரு**
**வள்ளுவனார் சொன்னார்**

***(குடும்ப விளக்கு, விருந்தோம்பல், ப. 42)***

எனும் பாடல் பகுதி திருக்குறள் விருந்தோம்பலில்,

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து**

***(குறள் 90)***

எனும் திருக்குறளை அடிப்படையாக வைத்துப் புனையப்பட்டுள்ளது.

2.
**அறத்தால் வருவதே**


படிப்பகம்

*இன்பம் என்றான்றோர்*
*குறித்தார் குறிப்பறிக*

***(குடும்ப விளக்கு,***
***விருந்தோம்பல், ப. 68)***

எனும் பாடற்பகுதி திருக்குறள் அறன்வலியுறுத்தலில் இடம் பெற்றுள்ளன.

***அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்***
***புறத்த புகழும் இல (குறள் 39)***

எனும் திருக்குறளைத் தழுவி எழுதப்பட்டு உள்ளது.

வேடப்பன் நகைமுத்து ஆகியோரின் முதலிரவு பற்றிப் பாரதிதாசன்,

**3. புலவர் தரு திருக்குறளின்**
**பொருளாய் தற்கு**
**வகை செய்து வைத்த இடம்**
**வாழ்வில் இன்பம்**
**வாய்க்கும் இடம் 'மணமக்கள்**
**வாழ்க நன்றே'**

என்று வாழ்த்துகின்றார். (குடும்ப விளக்கு, திருமணம் - ப. 132).

இங்குத் திருக்குறள் காமத்துப்பாலைப் 'பொருளாய்தற்கு வகை செய்து வைத்த இடம்' என்று குறிப்பிடுகிறார்.

**4. தற்காத்துத் தற்கொண்டானைத்**
**தான் காத்துத் தகைமை சான்ற**
**சொற்காத்துத் சோர்விலாளே**
**(குடும்ப விளக்கு, முதியோர் காதல் - ப. 190)**

எனும் பாடற்பகுதி திருக்குறள் வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது.

***தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற***
***சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள் 56)***

என்னும் திருக்குறளைத் தழுவி உள்ளது.

***5. மனதில் மாசுவராமையே அறம் என்னும்***
***வள்ளுவர் வாய்மொழி மறந்தறியேன்***
***(குடும்ப விளக்கு, முதியோர் காதல் - ப. 193)***

எனும் பாடற்பகுதி திருக்குறள் அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள,

***'மனத்துக்கண் மாசிலன் ஆதல்***
***அனைத்தறன்***
***ஆகுல நீர பிற' (குறள் 34)***

எனும் திருக்குறளைப் பின்பற்றி அமைந்துள்ளது.

**திராவிடர் புரட்சித் திருமணத் திட்டத்திற்கு அடிப்படைக் கொள்கையாகப் பாரதிதாசன் திருக்குறளைக் கொள்கிறார்.**

6. அறம் என்பதற்கு இல்லறம், துறவறம் என இரு வகையாகப் பரிமேலழகர் பொருள் கொள்வதைப் பாரதிதாசன் ஏற்கவில்லை. (இல்வாழ்க்கை குறள் 9, பரிமேலழகர் உரை) 'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை' என்று வள்ளுவர் தெளிவாகக் குறிப்பிட்டுவிட்டதாகப் பாரதிதாசன் சுட்டுகிறார். (குடும்ப விளக்கு, முதியோர் காதல் - ப. 193, 194).

7. 'அன்பின் வழியதுயிர் நிலை' எனும் பாடற்பகுதி திருக்குறள் அன்புடைமை அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன.

***அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு***
***என்புதோல் போர்த்த உடம்பு (குறள் 80)***

எனும் திருக்குறளைப் பின்பற்றி இயற்றப் பட்டுள்ளது.

8. மணவழகரும் தங்கமும் அகவை முதிர்ந்த காலத்தில் திருக்குறளில் ஆய்வு நடத்தினர் என்றும் விரிவுரை செய்தனர் என்றும் பாரதிதாசன் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.


**குறட்பாவில் இரண்டு செய்யுள்**
**படித்தோமே அவற்றினுக்கு**
**விரிவுரை பலவும் ஆய்ந்து**
**முடித்தோமே!**
***(குடும்ப விளக்கு, முதியோர் காதல் - ப. 197, 198)***

இவ்வாறு குடும்ப விளக்கில் பாரதிதாசன் தம்முடைய கருத்துக்களுக்கு வலிமை சேர்க்கவும் விளக்கவும் திருக்குறள் தொடர்களை ஆங்காங்கு எடுத்தாண்டுள்ளார்.

9. கடல்மேல் குமிழியில்

**போகுமட்டும் பூரிப்பாள் கோபவிடை**
**பெற்றுப்பின்**
**ஏகுமட்டும் பின்னழகு பார்த்திருப்பாள்**
***(பா.தா.க.3. க.மே.கு. ப. 5)***

எனும் பாடற்பகுதி திருக்குறளில் 'குறிப்பறிதல்' எனும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பாடல் கருத்துக்களைத் தழுவி அமைந்ததாகும்.



10. திராவிடர் திருப்பாடலில் (பா.தா.க., 3., ப. 171)

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனுமோர் சிறப்புடைய நம் கொள்கை நானிலத்தில் செல்வம்' எனும் பாடற்பகுதி திருக்குறளில் 'பெருமை' எனும் அதிகாரத்தில் உள்ள 'பிறப்பொக்கும் எல்லா

www.padippakam.com


உயிர்க்கும் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்' (குறள் 972) எனும் குறளை அடியொற்றிப் புனைந்ததாகும்.

11. மேற்படி நூலில், 'வீழ்நாள் படாஅமை' எனத் தொடங்கும் பாடற்பகுதி (பா.தா.க.3., திராவிடர் திருப்பாடல், ப. 173) திருக்குறளில் 'அறன் வலியுறுத்தல்' எனும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள,

**வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்குங் கல்** *(குறள் 38)*

என்னும் குறளைப் பின்பற்றி யமைந்ததாகும்.

புரட்சித் திருமணத் திட்டம்

திராவிடர் புரட்சித் திருமணத் திட்டத்திற்கு அடிப்படைக் கொள்கையாகப் பாரதிதாசன் திருக்குறளைக் கொள்கிறார். திருமணத் திட்டம் குறித்துப் பாரதிதாசன் கூறிய கருத்துக்கள் வருமாறு:

அவைத் தலைவரை ஒருவர் முன்மொழிய, பிறிதொருவர் வழிமொழிய வேண்டும்.

அதன்பின் திருமணத்தை நடத்தி வைக்கும் அவைத்தலைவர் திருமண மேடையில் அமர்வர்.

அவர் மூடநம்பிக்கைகளைக் கொண்ட ஆரிய திருமண முறையை எதிர்த்தும் தமிழர் திருமண முறையை வலியுறுத்தியும் பேசுவர்.

பின்னர் மணமக்களுக்கு வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியைக் கூறச்செய்வர். மணமக்கள் இருவரும் மாலையையும் கணையாழியையும் மாற்றிக் கொள்வர்.

அந்நிகழ்ச்சிக்குப்பின் தலைவர் மணமக்களைத் திருக்குறள் வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுமாறு அறிவுரைகள் பகர்வார்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

*(குறள் 45)*

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற்**
**கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

*(குறள் 51)*

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்**
**தகைசான்ற**
**சொற்காத்துச்சோர்விலாள் பெண்.**

*(குறள் 56)*

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு.**

*(குறள் 60)*

**வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பின் தலைப்பிரிதல் இல்**

*(குறள் 955)*

**இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழு தேத்தும் உலகு**

*(குறள் 970)*

இவ்வாறு திருமணத்தை நடத்தி வைக்கும் பெரியார் அறவுரைகள் வழங்குவதாகப் பாரதி தாசன் குறிப்பிட்டுள்ளார்.

திராவிடப் புரட்சித் திருமணத் திட்டம் என்னும் நூல் இயற்றுவதற்குத் திருக்குறளும் ஓர் அடைப் படையாயிற்று எனலாம்.

உலகத்தின் தலை சிறந்த இலக்கியங்களுள் ஒன்று நம்முடைய திருக்குறள். காலம், இடம், நிறம், மதம் என்ற வேறுபாடுகளைக் கடந்து எங்கெங்கும் உள்ள எல்லா மனிதருக்கும் எக்காலத்திலும் பயன்தரக் கூடிய அறிவுரை நிரம்பிய அறநூல் திருக்குறள். மனித வர்க்கத்தின் இயற்கை யமைப்பில் எந்தக் காலத்திலும் மாறுதல் இல்லாதனவாகிய தத்துவங்களையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டிருப்பதால், திருக்குறள் என்றென்றும் அழிவில்லாதிருக்கும். அதுமட்டுமின்றி எப் போதும் இளமையும் புதுமையும் உள்ள தாகவே இருக்கும். மனித சமூகத்திற்கு இன்றியமையாத எல்லா நல்லறிவையும் இப்படித் தொகுத்து வகுத்துத் தந்துள்ள ஒரு நூல் வேறு எந்த மொழியிலும் இல்லை யென்று உலகத்தின் பேரறிஞர்கள் எல்லோ ரும் திருக்குறளை ஒருமுகமாய் போன்றுகின்றார்கள். திருக்குறள் என்பது திருவள்ளுவர் தமிழ் மக் களுக்கு வைத்துச் சென்ற அழியாத செல்வம்.


- புலவர் குழந்தை



www.padippakam.com


அரம்போலா மா:.க்சரேனசு

# திருக்குறளும் தேம்பாவணியும்



கருத்துக் கருவூலமாகிய திருக்குறள் அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி. சங்ககாலம் தொடங்கி அண்மைக் காலம்வரை புலவர் பெரு மக்கள் அக்கருத்துக்களைப் பயின்று திளைத் துள்ளனர். அவற்றினைத் தம் நூல்களில் ஏற்ற பெற்றி அமைத்துப் பயன்படுத்தியுள்ளனர். ‘வழிவழி வள்ளுவர்’ என்ற நூலுள் டாக்டர் சேதுப்பிள்ளையவர்கள் இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் திருத்தக்க தேவரும் கம்பரும் பாரதியாரும் திருக்குறளைத் தத்தம் பனுவல்களிலே எடுத்தாண்டுள்ள திறத்தை இனிது விளக்குகிறார்கள். சொல்லின் செல்வர் ஆய்ந்து கண்ட முறையைப் பின்பற்றிய வழியில் திருக்குறளும் தேம்பாவணியும் என்ற இந்தக் கட்டுரை இயங்குகின்றது.

முப்பாலை முதன் முதலில் ஐரோப்பிய உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை வீரமா முனிவரைச் சாரும். இம்முனிவர் பெருந்தகை குறள்நூலின் முதலிரு பாடல்களையும் 1730 ஆம் ஆண்டு இலத்தீனில் மொழி பெயர்த்தார். இதனைப் போப் ஐயர் வெளியிட்டுள்ள ஆங்கில மொழிபெயர்ப்பின் பிற்சேர்க்கையாகக் காண லாம். தொன்னூல் விளக்கம் என்ற ஐந்திலக்கண நூலில் திருக்குறள் விளக்கமும் காட்டுகின்றார், வீரமாமுனிவர்.

இனி, வீரமாமுனிவர் தேம்பாவணியில் திருக்குறள் கருத்துக்களை எடுத்தாளும் திறம் காண்போம்.

*‘நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்’*

**(குறள் 28)**



பயன் நிறைந்த சொல்வல்ல சான்றோ ரின் பெருமையை இவ்வுலகில் அழியாமல் விளங்கும் அவருடைய மறைமொழிகள் காட்டுகின்றன. எளிய மக்களின் சொற்கள் அழிகின்றன. சான்றோர்களின் சொற்கள் அழியா. அச்சான்றோரின் சொற்பாங்கு காலக்கழிவில் கரைந்து போவதில்லை.


படிப்பகம்

www.padippakam.com


அவர்தம் வாய்மொழிக்கு அழிவில்லையாகவே அவருக்கும் அழிவில்லை எனலாம். வையகம் வாழும்படி வழி வகுத்துச் சொன்ன பெரியார்கள் வையகம் வாழும் வரை வரமுடையார்.

**முப்பாலை முதன் முதலில் ஐரோப்பிய உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை வீரமாமுனிவரைச் சாரும். இம்முனிவர் பெருந்தகை குறள்நூலின் முதலிரு பாடல்களையும் 1730 ஆம் ஆண்டு இலத்தீனில் மொழி பெயர்த்தார்.**

இக்கருத்தினைத் தேம்பாவணி ஆசிரியர் அருந்தவச் செல்வி ஒருத்தியிடம் பொருத்திக் கூறுவர். ஃச்பெயின் நாட்டில் ஆதின் என்பது ஒரு நகர், அங்கே இறையன்பு மிக்க ஒரு கன்னி வாழ்ந்து வந்தாள். அவள் ஆகிர்த மரியாள் என்று பெயர் பெற்றவள், அவள் அன்னை மரியாளை எண்ணி எண்ணிச் செபத்திலும், தியானத்திலும் ஆழ்ந்திருந்த செம்மனத்தாள். அவள் கடவுள் அருளால் தாம் கண்ட காட்சிகளைக் கொண்டு சேசுநாதரின் வளர்ப்புத் தந்தை சூசையப்பரின் வரலாற்றை ஒரு நூலாக எழுதினார். அந்நூலே தேம்பாவணிக்கு ஆதாரமாயிற்று. வேதாகம வரலாறுகளும் கவிஞரின் கற்பனைப்புனைவுகளும் இந்நூலாதாரத்துடன் இணைந்து தேம்பாவணிக் காப்பியம் தோன்றியது.

ஆகிர்த மரியாளைப் பற்றி வீரமாமுனிவர் விளம்புவதாவது:

*'பொழையுழி சிறப்பில் வாய்ந்த*
*புலன் தவரி காட்சி தன்னால்*
*அறைமொழி இனிமை சான்ற*
*அருளவிர் வாயி னாளே;*
*நிறைமொழி மாந்தர் பூத்த*
*நீர்மையோ டொழுகல் செய்து*
*மறைமொழி வாய்மை காட்டும்*
*மாண்புடை அறத்தி னாளே'*

(பாயிரம் 8)

சிறப்புள்ள புலன்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்து. இவ்வைம்புலன்களையும் வென்றார் அறிவின்பம் பெற்றார். 'பொறி யார் அடக்குவரோ அவர்பால் புலமையுறும்'. ஐம்புல அடக்கத்தால் அறிவொளி பெற்ற திருக்கூட்டத்தைச் சார்ந்தவள் ஆகிர்த மரியாள், அவள் சொல்லின்பம் பொழியும் அருள் மலர்ந்த திருவாயள்; நிறைமொழி மாந்தர் போல நீர்மையுடையாள்; மறைமொழி வாய்மை காட்டும் மாண்புடை அறத்தினாள். திருக்குறளில் கண்ட நிறைமொழி மாந்தர் மறைமொழி



என்ற தொடர்களை ஆகிர்தமரியாளின் அருங்குணம் காட்டப் பொருந்திய இடங்களில் இயைத்துப் பயன்படுத்திய பான்மையை இப்பாயிரச் செய்யுளால் அறிகின்றோம்.

*அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்*
*கென்புதோல் போர்த்த உடம்பு*

(குறள் 80)

மாந்தர் வாழ்வு அன்பு வழியில் இயங்குதல் வேண்டும். இயங்காவிடின் அவ்வாழ்வு வாழ்வு ஆகாது. சிந்திச் சிதைந்து நசித்து நைந்துபாழ்பட்ட தாழ்வே ஆகும். இன்னமும் உணரக் கூற வேண்டுமா? அன்புடைய உடலே உயிருள்ள உடல். அன்பில்லா உடல் எலும்பைத் தோல் மூடியுள்ள வெற்றுடல்; உயிரற்ற உடல்.

இக்குறளை வீரமாமுனிவர் தக்க இடத்தில் எடுத்தாள்கின்றார். தேம்பாவணிக் காப்பியத் தலைவன் வளங்களால் நிறைந்தவனும் ஒப்புயர்வற்றவனுமான வளன் சூசை, தன்னைச் சார்ந்தார் யாவர்க்கும் அன்புடன் கூடிய இன்ப நிலை போலத் தோன்றினான். துன்பம் ஆட்டி அசைக்க அதனால் வாடி வருந்தியவர்க்குத் தனித் துணையானான். இவ்வாறு அவன் விளங்குதற்குக் காரணம் என்ன? அவனுடைய உள்ளத்தில் விளங்கிய நல்லுணர்ச்சி, அந்த உணர்ச்சி தானும் எங்கிருந்து உருப்பெற்று வந்தது? திருக்குறள் தொடர் வாயிலாக உருப்பெற்று வந்ததாம். இதனை வீரமாமுனிவர் வரைந்து காட்டும் திறம் வருமாறு:

*'அன்பு வாய்ந்த உயிர்நிலை அஃதிலாக்*
*கென்பு தோலுடன் போர்த்ததென் றன்புடை*
*இன்பு தோய்ந்த நிலையெனத் தானிவன்*
*துன்பு காய்ந்த உயிர்த்துணை ஆயினான்'*

(பாலமாட்சிப்படலம் 55)

மக்களிடத்து வைத்த அன்பே ஒருவர்க்குப் பொருந்திய உயிர்நிலையாம். அன்பில்லாதவர்க்கு உடம்பு உயிர் நின்ற உடம்பாகாது; எலும்பைத் தோல் போர்த்திய வெற்றுடம்பு ஆகும். இக்குறள் கருத்தை உளங்கொண்டு அதன்படி வாழ்ந்தமையால் சூசை மாமுனிவன் எவர்க்கும் அன்புடன் பொருந்திய இன்ப நிலை போலத் தோன்றினார். துன்பத்தால் வருந்தியவர்க்குத் தனித்துணையாக விளங்கினான்.

*அன்பிலார் எல்லாம்*
*தமக்குரியர்: அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு*
*(குறள் 77)*

**மக்களிடத்து வைத்த அன்பே ஒருவர்க்குப் பொருந்திய உயிர்நிலையாம். அன்பில்லாதவர்க்கு உடம்பு உயிர் நின்ற உடம்பாகாது; எலும்பைத் தோல் போர்த்திய வெற்றுடம்பு ஆகும். இக்குறள் கருத்தை உளங்கொண்டு அதன்படி வாழ்ந்தமையால் சூசைமாமுனிவன் எவர்க்கும் அன்புடன் பொருந்திய இன்பநிலை போலத் தோன்றினார்.**

அன்பில்லாதவர்கள் பிறருக்கும் பயன்படாதவர், அதனால் அவர்கள் எல்லாரும், பொருள்களையும் தமக்கே உரிமையுடையனவாகக் கொள்வார்கள். அன்புடையவர்கள் தம் பொருள்களால் மட்டுமா பிறருக்கு உதவுவார்கள். தம் எலும்பையும் பிறர்க்கு உரிமையுடையதாக்கு வார்கள். எலும்பை உதவுவதென்பது உடலால் உதவுவதாம். உடல் உழைப்பை அயலவர்க்கு உதவியாக நல்குவதாகும். சில உரையாசிரியர் 'என்பும் உரியர்' என்பதற்கு எலும்பால் துணை செய்வதையே பொருளாகக் கொண்டு ததீசி முதுகெலும்பைக் கொடுத்தது, சிபிச் சக்கரவர்த்தி அடைக்கலம் அடைந்த புறாவுக்காகத் தன் எலும்பையும் கொடுத்தது ஆகிய புராணச் செய்திகளை உதாரணங்களாகக் காட்டுவர்.

இல்லறந் துறவறமாகிய ஈரறங்களும் பொருந்த வாழ்வு நடத்துகின்றார்கள். மரியாளும், சூசைமாமுனிவரும், கடவுளின் அருள், அவாவால் விளையும் கேடு, அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப்பற்றையும் அறுக்கும் தவத்தின் பெருமை என்பனவாய் ஆன்மவழி நினைவுகளைப் பற்றியே இருவரும் இன்பமிக்க குயில்கள் போல மிழற்றி மகிழ்வார்கள். இவர்களுடைய தவ வாழ்வு வான் வீட்டு வாழ்வு என அமைந்தது. எனவே, அவர்கள் உடம்பில்லாத உயிர் போலத் தோன்றினார்கள். எல்லா உயிர்களுக்கும் தாம் உடலாயிருந்து பயன்பட்டார்கள்.

தூய மாட்சிமைக் குணமுள்ள இவர்களிருவரும் இறந்து போன தமது தந்தையார் பின்வரும் தம் வழியினர்க்கென்று தேடி வைத்த பொருள்களெல்லாம் தம்வயத்திலிருப்பது பாரமென்று கருதி அத்தன்மையான பொருள்கள் எல்லாவற்றையும் திருக்கோவிலுக்காக ஒரு பங்கும், அன்புள்ள உயிரைப்போல் நேசித்து இரவலர்களுக்காக ஒரு பங்கும் ஆகப் பகுத்து அன்பு கொண்டு விரைவோடு தொகையாகக் கொடுத்தார்கள். துன்பம் நெருங்கிய பொருள் கள் இவையென்று கருதி அப்பொருள்கள் எல்லாவற்றையும் இரவலர் முதலியோர்க்குத் தொகையாகக் கொடுத்தார்கள். கிடைத்தற்கு அரிதான, நெருங்கிய தாம் கொண்ட பேரன்பு பிறர்க்கு உதவிசெய்யத் தமது திருவுளத்தைத் தூண்டிய காரணத்தால் இன்றும் தமது எலும்பையும் பிறர்க்குக் கொடுத்தால் நல்லது என்று கருதிய வண்ணம் பிறர்க்கு உதவி செய்ய உடலைக் கொண்டு உழைத்து உயிர்களிடத்து அன்பு காட்டினார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக, உணவுப் பொருள்களை ஆக்கிக் கொடுத்துத் தானும் ஓர் உணவாகுந் தன்மையுள்ள மழையைப் போல இருவரும் வாழ்ந்தார்கள்.


*'துன்பு துன்றிய பொருளென வனைத்தையுந் தொகுத்த*
*பின்பு துன்றிய பேரி தன்புளந் தூண்டி*
*யென்பு தந்தினு மினிதென வீகவு முழைத்தே*
*யன்பு தந்துண வளித்துண வாமழை போன்றார்'*
*(ஈரறம் பொருத்து படலம் - 65)*

இத்தேம்பாவணிச் செய்யுளிலே,

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு*
*(குறள் - 65)*

*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉம் மழை*
*(குறள் 12)*

என்னும் இரண்டு பாக்கருத்துகளும் நிழலிடுதல் காண்க.



கடவுள் கன்னிகையாகிய மரியாள் கொண்ட கருவைச் சூசைமுனிவர் கண்டார். அது தேவ திருக்கரு என்று தெளியாதவரான நிலையில் ஐயங்கொண்டார். இச்செய்தியை உணர்த்தும் படலம் தேம்பாவணியில் ஏழாவது படலமாக அமைந்து ஐயந்தோற்று படலம் எனப் பெயர் பெறுகின்றது.

இவ்வுலகத்தில் தோன்றிய மகளிரெல்லாரும் கணவனுடைய சேர்க்கையால் பிள்ளைப்பேறு எய்தல் பொதுமுறை. அம்முறை இக்கன்னி மரியாளிடத்து இல்லா

www.padippakam.com


மலும், முக்காலத்தும் கன்னிமை அழியாமலும் கடவுளையே திருமகனாகப் பெறுவாள் என்பதால் கபிரியேல் 'விதி பழித்து அரிய ஆற்றால்' என்றான்.

மரியாள் மனங்கலங்கியதைக் கபிரியேல் எவ்வாறு கண்டான்? கண்ணாடி, தன்னில் சேர்ந்த பொருளின் சாயலை நன்றாகக் காண்பிக்குமாறு போல, கன்னிமரியாள் உள்ளத்தின் வருத்தத்தை அவள் முகம் காட்டியது. எனவே காப்பிய ஆசிரியர் கவிக்கூற்றாக உரைப்பார்.

**உலகத்து மாந்தரை இரு திறத்தினராக வகை செய்து காட்டுவர் வள்ளுவர். உழுதொழில் செய்து யாவரும் உண்ணவும் தாமும் துய்க்கவும் வாழும் வாழ்க்கையினர் ஒரு திறத்தினர், பிறர் தொழுது உண்டு வாழ்பவர் மற்றொரு திறத்தினர். இவருள்ளும் உழுபவரையே வாழ்பவராக உறுதிதோன்ற உரைப்பவர் வள்ளுவர்.**

***பளிங்கடுத் தவற்றைக் காட்டும்***
***பான்மையால் இவள் முகத்தில்***
***உளங்கடுத் தவற்றைச் சேர்ந்த***
***கபிரியேல் உறுதி சொல்வான்***

***(ஐயந்தோற்று படலம் - 9)***

தன்னை அடுத்த பொருளைத் தன்னிடம் காட்டும் பளிங்கு போல ஒருவனுடைய நெஞ்சத்துள் மிகுந்துள்ளதை அவனுடைய முகம் காட்டும்.

***அடுத்தது காட்டும் பளிங்கு போல், நெஞ்சம்***
***கடுத்தது காட்டும் முகம்***

***(குறள் 706)***

'ஐயம் நீங்கிய படலம் கபிரியேல் என்னும் தேவதூதனால் சூசையப்பர் ஐயம் நீங்கிய வரலாற்றை உணர்த்துகின்றது. அதை அடுத்து மகிழ்வினைப் படலம் வளனும் மரியாளும் ஞான நினைவில் மூழ்கி மகிழ்ந்த நல்ல செய்தியைக் கூறுகின்றது.

திருக்குமாரனான கடவுள் அன்பும் இரக்கமும் கொண்டு துன்பத்தால் துளங்கும் தன் தாயின் மனம் இனி அத்துன்பம் நீங்கிக் களிக்கும்படி ஒரு தூதனை அனுப்பினார். அத்தூதன் ஒரு நாள் சூசைமாமுனிவன் முன் சொன்ன வீட்டு வேலைகளை வழக்கப்படி செய்து முடிக்கத் தொடங்கும் நேரத்தில் அவனை நோக்கி இவ்வாறு சொல்லலுற்றான்:

'கொம்பின்நுனியிலிருந்து அதன் மேலும் உயரமாகத் தாண்டியவர்கள் தலைகீழாக விழுந்து இறப்பார்கள் என்பது போல, செருக்கு கொண்ட சில வானவர்களும் மாந்தர்களும் பின்வரும் திசைகளை நினையாமல் பேய்களாகவும், பாவிகளாகவும் கெட்டழிந்தார் என்று அறிந்த தன்மையினால், ஆண்டவனே ஒரு மனிதனாகத் தோன்றிவந்து யாவருக்கும் தாழ்ச்சியைக் காட்டும்படி தானே தன்னைத் தாழ்த்திய முறையைக் கொண்டு அக்கடவுளைத் திருச்சூலாகக் கொண்ட தாயும் தாழ்ச்சியின் தொழிலைச் செய்யாதிருந்தால் அது நல்லதோ?' என்று கேட்டான்.

***நுனிக் கொம் பினுமூக் கினர்நொந்***
***திறப்பா ரணைய வூக்கங்***
***குனிக்கும் பருமா னிடருங்***
***குனியாக் கெட்டா ரென்னக்***
***கனிக்கும் பரிசாற் கடவுள்***
***மனுவா யெளிமை காட்டத்***
***தனிக்கும் பரிசாற் றாய்தாழ்***
***தொழில்செய்ய யாதான் தகவே!***

***(மகிழ்வினைப்படலம் 27)***

இவ்வானவர்களும் மாந்தர்களும் மேல்மேல் வளர்ந்த தங்கள் செருக்கால் பேய்களாகவும், பாவிகளாகவும், கெட்டழிந்தார் என்பது எதைப் போல் என்றால், ஒரு மரத்தில் நுனிக் கொம்பில் ஏறியவர் அதையும் கடந்து மேலும் மேலும் ஏற முனைந்தால் அவருடைய உயிருக்கு முடிவு நேர்ந்து விடுவதைப் போலவாம்.

***'நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்***
***உயிர்க்கிறுதி யாகி விடும்'***

***(குறள் 476)***

உலகத்து மாந்தரை இரு திறத்தினராக வகை செய்து காட்டுவர் வள்ளுவர். உழுதொழில் செய்து யாவரும் உண்ணவும் தாமும் துய்க்கவும் வாழும் வாழ்க்கையினர் ஒரு திறத்தினர், பிறர் தொழுது உண்டு வாழ்பவர் மற்றொரு திறத்தினர். இவருள்ளும் உழுபவரையே வாழ்பவராக உறுதிதோன்ற உரைப்பவர் வள்ளுவர். மற்றவரெல்லாரும் தொழுதுண்டு உரிமையற்றவராய் உழல்பவராம். இவ்வாறு உழுதுண்டும் தொழுதுண்டும் வாழ்பவர் பகுப்பினுள் அடங்காதவர் இருவர். அவர்கள் சூசையப்பரும், மரியன்னையும், அவர்கள் உழுதுண்பவரும் அல்லர், தொழுதுண்பவரும் அல்லர். அழுதுண்ப




படிப்பகம்

www.padippakam.com


வராய் இன்னொரு இனத்தவர் ஆகின்றனர். காரணம் என்ன? அந்த இல்லறத் துறவிகள் தொழில் செய்து உழைப்பவர்; அதனால் பெற்ற பயனைப் பிறர்க்கு வழங்கும் பெற்றியர். வழங்குவதனை வாங்குவாரில்லையெனில் என்ன செய்வர்? அழுது அழுது அரற்றுவர். எனவேதான் இவர்கள் உண்பாருள் எத்தன்மையர் என்ற வினா இயல்பாக எழுகின்றது. இந்த வினா திருக்குறள் தொடர்பாக எழுகின்ற வினா.

**'ஐவினை உணர்வோரல்லார் அனந்தன் நற்பாதம் சேரார்' என்றமைந்து நிறைகின்ற தேம்பாவணிச் செய்யுள் திருக்குறள் கருத்தினை தன்னுள்ளடக்கியுள்ளதைக் காணலாம்.**

தொகுத்துச் சொல்லும்போது அவர்தம் கண்ணுக்கு அணிகலமாக விளங்கிய கண்ணோட்டத்தையும் சுட்டிக் காட்டுவர் வீரமாமுனிவர்

*நாக்க ணங்கு கனிந்து நவின்றசொல்*
*நோக்க ணங்குகண் ணேட்ட நொதுத்தரை*
*ஊக்க ணங்கிடுத் தானமென் னுள்ளுவார்*
*கோக்க ணங்கொடு ஒங்கு குலத்தினார்*
*(மகிழ்வினைப் படலம் 38)*

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின் செல் பவர்*
*(குறள் - 1033)*


*உழுதுண் பாருயிர் வாழ்பவர் மற்றெலாம்*
*தொழுதுண் பாரெனில் தாம்தொழில் செய்தருள்*
*அழுதுண் பார்கொடை கோடலில் லாயின*
*பொழுதுண் பாரிலி யாரெனப்பேசவே?*

பயிர்த்தொழில் செய்து அதனால் வரும் பயனை உண்டு வாழ்பவரே உயிர் வாழ்பவராவர். அவர்கள் நீங்கிய ஏனையவர் உழுதுண்பவரை வணங்கி அவர்கள் கொடுக்க வாங்கி உண்பவராவர். இவ்வாறு நூல்களில் பொதுவாகவும், திருக்குறளில் சிறப்பாகவும் சொல்லப்படுவதானால் 'கன்னி மரியாளும் சூசை மாமுனிவருமாகிய அவ்விருவரும் முயற்சி செய்த பொருளைத்தேடி பின்பு தான் கொடுக்கும் அப்பொருளை வறுமையுற்றோர் முதலியர் வந்து பெற்றுக் கொள்ளாத பொழுது மக்கள் மேல் வைத்த இரக்கத்தினால் அழுது வருந்துவர். ஆதலால் உண்டு வாழ்பவர்களுக்குள்ளே அவ்விருவரும் எத்தன்மையுடையார் என்று நான் சொல்வேன்?'' இவ்வாறு வினவுவர்தேம்பாவணி ஆசிரியர்.

*கண்ணிற் கணிகலம் கண்ணோட்ட மஃதின்றேல்*
*புண்ணென் றுணரப் படும்*
*(குறள் 575)*

ஒருவனுடைய கண்ணுக்கு அணிகலமாவது இரக்கம் என்னும் பண்பே. அஃது இல்லை யானால் கண்கள் கண்களல்ல. அவை புண்களே.

தாவீது மன்னர் மரபில் வந்து கன்னி மரியாளும் சூசையப்பரும் இல்லற நல்லறவாழ்வு வாழ்ந்த மாண்புறு செய்தியைத்



சூசையும் மரியன்னையும் பல அரசர்களி டையே தொன்மை மிக்கவராய்ப் பேரழகுடைய வராய் உயர்ந்து சிறந்த மரபில் தோன்றியவர்கள். எனவே மரபிற்கேற்ற பண்பு நலன்களைப் படைத்தவர்கள். கேட்போருக்கு இனிமையாஞ் சொற்களே நாவிற்கு அழகு என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். பிறர் துன்பங் கண்டு இரங்கின இரக்கமே கண்ணுக்கு அழகு என்று தெரிந்திருந் தார்கள். ஏற்பவருக்குக் கொடுக்கும் ஈகையே மலர்ந்த கைக்கு மிகுந்த அழகு என்று உணர்ந் திருந்தார்கள். இங்ஙனம் இனிமையாகப் பேசி அருளாக நோக்கி ஏற்பவருக்குத் தந்து இசைபட வாழ்வதையே அவர்கள் வாழ்க்கை நெறியாகக் கொண்டிருந்தனர்.

இறைவன் திருவடிகளைச் சேர்பவர் யார்? தன்னோடு பொருந்திய ஐந்து புலன்களுக்கும் இடமாகிய உடம்பினை ஒறுத்து, பொய்த்தன்மை காட்டும் அவைகளை அடக்கி வென்று, அதனால் தூய்மை பொருந்திய உளத்தில் பொங்கும் இறையன்பை இரு சிறகுகளாக்கிக் கொண்டு, தம் நிலையிலிருந்து மேன்மேல் உயரும் தெளிந்த நாணமுடையவர்களே முடிவில்லாத கடவுளின் சிறந்த பாதங்களைச் சேர்வார்கள். மற்றொருவரும் சேரமாட்டார்.

**மெய்வினை யிடமைந் தின்றி**
**விளங்கிய கடவு ளாகிப்**
**பொய்வினை பொறிகள் நட்டுப்**
**புரைவினை நகையுமட்டுத்**

**துய்வினை யுளத்தில் பொங்கும்**
**தொடர்பிறக் காக வூக்கி**
**ஐவினை உணர்வோ ரல்லார்**
**அனந்தன்நற் பாதஞ் சேரார்**
***(மகிழ்வினைப் படலம் 30)***


படிப்பகம்

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்**

**(குறள் 5)**

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் வழியாலுண்டாகும் ஐந்தவாக்களையும் அவித்தவனாகிற அவ்விறைவனது உண்மை ஒழுக்கத்தில் வழுவாது நடப்பரே திருவருள் நெறியில் என்றும் வாழ்பவராவர்.

'ஐவினை உணர்வோரல்லார் அனந்தன் நற்பாதம் சேரார்' என்றமைந்து நிறைகின்ற தேம்பாவணிச் செய்யுள் திருக்குறள் கருத்தினை தன்னுள்ளடக்கியுள்ளதைக் காணலாம்.

நீரானது தான் சேர்ந்த நிலத்தினது இயல்பினாலே தன்மை வேறுபடுகிறது. அந்நிலத்தினது நிறம் சுவை முதலிய குணங்களை அடைகிறது. அதுபோல மனிதனுக்கு அறிவானது, தனது தன்மை திரிகிறது; தான் சேர்ந்திருக்கும் இயல்பை அடைகிறது. இக்கருத்தினைத் திருவள்ளுவர் சிற்றினம் சேராமை என்ற அதிகாரத்தில் பொறித்துள்ளார். அவர் கூறுவார்:

**நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்**
**கினத்தியல்ப தாகும் அறிவு**

**(குறள் 452)**

இறைவன் குழந்தையாய் பிறக்கும் காலம் நெருங்கியது. சூசையப்பரும் மரியாளும் அதஃச் தசுசீசர் ஆணைப்படித் தம் குடிக் கணக்குக் கொடுக்கப் பெத்தலகம் நகரம் சென்றனர். அங்கே அவர்கள் தங்கும் இடம் தேடி வீதிதோறும் அலைந்தனர்; வீடுதோறும் உசாவினர். அவ்வாறு சுற்றித் திரிந்தும் உறுபயனில்லை. பின்பு இருண்ட தன்மையுடன் இராக்காலம் கிட்டினது. அவ்வேளை சூசைமாமுனிவர் மரியாளை நோக்கி இரக்கந் தோன்றச் சொல்வார்:

'நல்லறத்தின் தன்மையால் பெருமையுள்ளவளே! வானத்தினின்றும் பெய்த மழைத் துளியின் தூய்மையான தண்ணீரானது தான் போய்ச் சேர்ந்த உவர்நில முதலான தளங்களின் தன்மையால் குணம் வேறுபடுகிறது. இவ்வாறுதான் சேர்ந்த குலத்தின் தன்மையால் மனிதன் குணம் மாறு கின்றது. இங்ஙனம் பெரியோர் அறிந்துரைப்பர். இந்த உண்மை நம்மிருவரிடையேயும் நிலவுவதா யிற்று. நீ என்னைச் சேர்ந்ததனால் குற்றம் நிரம்பிய எனது இழிந்த தன்மையின் விளைவாம் துன்பம் உன் உளத்தையும் வருத்து கின்றது. இதனால், நீ அவலமும் மானக்



கேடும் அடைந்தாய்'

சூசைமாமுனிவரின் இச்சொல்லமைதியில் திருக்குறளின் சொல்லும் பொருளும் பதிந் திருத்தல் காணலாம்.

**நிலத்தியல்பால் துளிநன்னீர்**
**திரிந்த தோற்றம் நிகரெனச்சேர்**
**குலத்தியல்பால் கிழமைநிலை**
**திரியு மென்றார் குறைகிளரென்**
**குலத்தியல்பால் இளைத்தனவிக்**
**கேத மெல்லாங் கிடைத்துளைய**
**நலத்தியல்பால் தகைநல்லாய்**
**வருந்தி யென்னால் நகவானாய்**

**(மகவருள் படலம் 73)**

பெத்லகேம் நகரத்தினர் சூசையப்பரையும் மரியாளையும் பேணாது விடுத்தனர். வரங்களால் உயர்ந்தோர் அவ்விருவருக்கும் அவ்வூர் நடுவில் இடங்கிடைக்கவில்லை. இறைவன் வறுமையை விரும்பித்தேடிவந்தனன். இவ்வுலகில் மனிதனாக வந்து பிறப்பதற்கு இடம் அகன்றதும் செல்வம் நிறைந்ததுமான பெத்லகேம் நகரம் உரிமையான உறையுள் அன்று என்பதோ என்னவோ? 'இனிமேல் இந்நகரத்தின் வெளிப்புறத்தில்தாம் வரும்பொழுது கண்ட குகையில் இந்த இராக்காலத்தைக் கழிக்கும்படி போய்த் தங்கியிருத்தல் நல்லது' என்று நவின்றார், சூசையப்பர். மரியாளும் உடன்பட்டாள். இருவரும் வழிநடந்து சென்றார்கள். இவர்கள் உடன் வந்த வானவர்கள் தமக்குள்ளே பேசிக் கொள்வார்கள். 'என்னஇந்த ஊரவர் மனநிலை! கதிரவனைக் காணமாட்டாத குருடன் தன் கைகளால் இரத்தினத்தைத் தடவிப் பார்த்தால் அதன் குணம் அவனுக்குத் தெரியுமா? அறிவற்ற மூடருக்கு இச்சான்றோரின் மாட்சிமை ஒளி காணப்படுமா? காணப்படாது. அறத்தின் பயனை ஆய்ந்தறியாதவர்கள் துறவு உளம் படைத்த தூயோர்களின் பெருமையை உணர் வார்களா? இவர்கள் மனநிலை ஒருபுறமிருப்பதாக, இந்த அருளாளர் வழியே ஒரு தனி வழியாக அமைந்துள்ளது அன்றோ? கீழ் மக்களிடத்தும் இருக்கின்ற பொருட் செல்வத்தை வெறுத்தும் பெரியோர் விரும்பின அருட்செல்வத்தை அடைந்த மாட்சிமையுடையோர் வழியே இத் தகையதுதான். பொருளாளரால் மதிக்கப் பெறாத அருளாளர் வழியே இத்தகையது தான்'

இவ்வானவர் பேச்சினுள்ளும் வள்ளுவர் வாய்மொழி ஒளிர்கின்றது.

**பூரியர் கணுமுள பொருள்செய் செல்வறிந்**
**தாரியர் விரும்பிய அருளின் செல்வமாய்ச்**


படிப்பகம்

www.padippakam.com


***சீரியர் வழியிதே என்னச் சேண்டள***
***வீரியர் விருப்பெழீஇ விளம்பிப் போயினார்***
***(மகவருள் படலம் 79)***

பொருள்களால் வரும் செல்வங்கள் தாழ்ந்த வரிடத்தும் இருக்கின்றன. ஆதலால் செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப் பெற்ற செல்வம் அருளாகிய செல்வமே

**அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்;**
**பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள**

திருக்குறளின் கருத்துறு தேம்பாவணிப் பாக்களில் இன்னுஞ் சிலவற்றைப் பொருந்திய குறட்பாக்களுடன் குறித்துக் காண் போம்.


**பொன்றும் யாவுமே புரைசெயும்**
**பகையொன்றே பொன்றாச்**
**சென்று சென்றடி சென்றதன்**
**றிடிலென நீங்கா**
**தின்று தீமையே இவன்பிறர்க்**
**கெண்ணிய தன்மைத்**
**தன்று தீமையே அவன்றனக்**
**கமைவது காண்பான்**
***(வேதக்கெழுமைப் படலம் 111)***

***பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா***
***பிற்பகல் தாமே வரும்***
***(குறள் 319)***

**நிலத்தின் தன்மையால் நீர்திரிந்**
**தனையபற் றுளந்தன்**
**புலத்தின் தன்மையால் புறத்தனவ**
**தோன்றாலா லன்பின்**
**நலத்தின் தன்மையால் தீயவு**
**நல்லவாம் பகைகோள்**
**சலத்தின் தன்மையால் நல்லவும்**
**தீயவாம் சகத்தே**
***(வேதக்கெழுமைப் படலம் 106)***

***நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்கு***
***இனத்தியல்ப தாகும் அறிவு***
***(குறள் 452)***

இவ்வாறு வீரமாமுனிவர் திருக்குறள் மணி களைத் தேம்பாவணிக் காப்பியத்தில் பொருந்திய இடங்களில் அழகொளிரப் பதித்து அவற்றைப் புதிய பின்னணியில் கண்டு மகிழ்கின்றார்; படைத்து மகிழ் கின்றார். அவற்றால் அறிவின்பப் பயனை நிலைக்கவும் தழைக்கவும் வழிவகுக் கின்றார்.



●●

❀❀❀❀❀

திருக்குறள் ஒரு தனித் தமிழ் நூல். திருக்குறள் அயற்கொள்கை எதிர்ப்பு நூலேயன்றி எந்த ஒரு அயற்கொள்கையையும் உடன்பட்டுக் கூறும் நூலன்று. தமிழர் வாழ்வே திருக்குறள் திருக்குறளே தமிழர் வாழ்வு என்றும் அவ்வளவு இன்றியமையாச் சிறப்பினை உடைய நூல் திருக்குறள். உள்ளதை உள்ளபடியே உயரிய முறையில் எடுத்துரைக்கும் உண்மை நூல். தமிழர் வாழ்வின் படப்பிடிப்பு. பழந்தமிழர் நாகரிக நல்வாழ்வை அப்படியே நமக்குக் காட்டும் களங்கமற்ற காலக் கண்ணாடி. தொன்மையும் எதிர்மையும் ஒழுங்காய்க் காட்டும் தொலை நோக்காடி! தமிழ் மக்களின் வாழ்க்கைச் சட்டம். தமிழ் மக்களுக்கு வள்ளுவர் வகுத்தமைத்து வைத்த பாதுகாப்புப் படை! ஏன்? தமிழர்க்கு மட்டுமன்றிக் குறள் உலகப் பொதுநூல்! மக்கட் பண்பாட்டு நூல் எக்காலத்துக்கும் உரிய நூல்! இறவா நூல்! காலங் கடந்த நூல்

- புலவர் குழந்தை

---

தமிழ் மக்கள் போற்றிக் கொண்டாட வேண்டிய மூன்று கவிகள் வள்ளுவரும், கம்பரும், நம் காலத்துப் பாரதியாரும் ஆவார்கள். வள்ளுவர் கம்பர் என்னும் இரு மகாகவிகளே தமிழர் சமூகம் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஜீவ சக்தியுடன் பண்பாட்டில் சிறந்து விளங்கி வருவதற்குக் காரணமானவர் கள். நம் காலத்தில் தமிழர் சமூகத்துக்குப் புத்துயிர் அளித்தவர் பாரதியார். இந்த மூன்று மகாகவிஞர்களையும் போற்று வதற்கு என்றைக்குத் தமிழர்கள் மறந்து விடுகிறார்களோ, அன்றைக்கே தமிழர் சமூகத்தின் வீழ்ச்சிப்படலம் ஆரம்பமாகி விடும் என்பது நிச்சயம்.

- கல்கி கிருஷ்ணமூர்த்தி


❀❀❀❀❀


படிப்பகம்

www.padippakam.com


அரசஞ்சண்முகனார்

# திருக்குறள் பாயிரவிருத்தி



இந்திரன் முதலிய இறையவர்பதங்களும் அந்தமிலின்பத் தழிவில் வீடும் நெறியறிந்தெய்து தற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள், வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய் காரணவகை யாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல் களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்த லுமாம். அஃது ஒழுக்கம் வழக்குத் தண்டமென மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முண் மாறுபட்ட அப்பொருண்மேற் சொல் வது. அது கடன்கோடன் முதற் பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ்வொழுக்கநெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்தற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக வொறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்தற்பயத்தவாவதல்லது ஒழுக்கம் போல் மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பில வாகலானும், அவை தாம் நூலானேயன்றி உணர்வுமிகுதியானுந் தேயவியற்கை யானும் அறியப்படுதலானும் அவற்றை யொழித்து ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது.



அதுதான் நால்வகை நிலைத்தாய்


படிப்பகம்

www.padippakam.com


வருணந்தோறும் வேறுபாடு டமையின், சிறுபான்மை யாகிய அச்சிறப்பியல்புக ளொழித்து, எல்லார்க்கு மொத் தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறந் துறவறமென இருவகை நிலை யாற் கூறப்பட்டது.

**அத்திருவள்ளுவமாலைக்குச் சரவணப் பெரு மாளையர் செய்தவுரையினைக் காண்டிகையாகக் கொண்டு, இந்நூலிறுதியில் விருத்தியெழுதப்படு மாகலின், ஈண்டைக்கு வேண்டுவமாத்திரையே அதனுட்கொண்டு ஆக்கியோன் பெயர் முதலாய வற்றை முறையே கூறப்படும்.**

அவற்றுள் இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவி யோடுஞ் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கட் கூறுவான் றொடங்கி எடுத்துக் கொண்ட இலக்கிய மினிது முடித்தற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறு கின்றார்.

முதற்குறள் விருத்தி

முதலாவது அதிகாரம்: கடவுள் வாழ்த்து

அஃதாவது கவி தன் வழிபடு கடவுளையாதல் எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல், அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளையெனவறிக. என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றா கிய உறுதிப் பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம் மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம்மூவ ரையும் வாழ்த்துதல் முறைமையாதலின் இவ் வாழ்த்து அம்முவர்க்கும் பொதுப்படக் கூறினா ரெனவுணர்க

***அகர முதல வெழுந்தெல்லா மாதி***
***பகவன் முதற்றே யுலகு.***

இதன் பொருள் - எழுத்தெல்லாம் அகர முதல - எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலை உடையன. உலகு ஆதிபகவன் முதற்று - அது போல உலகம் ஆதிபகவனாகிய முதலை யுடைத்து, என்றவாறு.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக் காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்று முணர்தலா னுங்கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வட வெழுத்திற்கும் முதலாதல் நோக்கி, எழுத் தெல்லாமென்றார். ஆதிபகவன் என்னு



மிரு பெயரொட்டுப் பண்புத் தொகை வடநூன்முடிபு. உல கென்றது ஈண்டு உயிர்கண் மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின், ஆதிபகவன் முதற்றேயென உலகின் மேல் வைத்துக் கூறினார்; கூறினா ரேனும் உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பது கருத்தாகக் கொள்க, ஏகாரம் தேற்றத்தின் கண் வந்தது. இப்பாட்டான் முதற் கடவுளதுண்மை கூறப் பட்டது.

விருத்தியுரை

இனி எந்நூலையுரைப்பினும் அந்நூற்குப் பாயிர முரைத்துரைத்தலே மரபாகலான், அஃதுரைக்கற்பாற்று, அப்பாயிரம், பொதுவுஞ் சிறப்புமென இருவுகையவாயினும், அவற்றுட் பொதுப்பாயிரம் எல்லா நூன்முகத்தும் வேறு பாடின்றி ஒருபடித்தார் தன்மைத்தாகலின், இலக்கண நூலானுணரப்படுமாதலான் அஃதொ ழித்து ஏனைச் சிறப்புப்பாயிரமே ஈண்டுரைக்கப் படும்.

அப்பாயிரந்தான், இந்நூலை அரங்கேற்று காலை அவைக்களத்திருந்து கேட்ட நல்லிசைப் புலவரும், அவர்க்குப் பிற்காலத்திற் சங்க மேறிய நல்லிசைப் புலவருட் சிலரும் பாடிய திருவள்ளுவ மாலையேயாம்.

அத்திருவள்ளுவமாலைக்குச் சரவணப் பெரு மாளையர் செய்தவுரையினைக் காண்டிகையாகக் கொண்டு, இந்நூலிறுதியில் விருத்தியெழுதப்படு மாகலின், ஈண்டைக்கு வேண்டுவமாத்திரையே அதனுட்கொண்டு ஆக்கியோன் பெயர் முதலாய வற்றை முறையே கூறப்படும்.

திருத்தகு தெய்வத் திருவள்ளுவரென அசரீரி கூற்றாகவும் வள்ளுவனென நாமகள் கூற்றாகவும் இருபுலவரும், மன்புலவனென இறையனாரும், நான்முகத்தோன் கூற்றெனக் கொண்டு நான்முகத்தோன் அயனென உக்கிரப் பெருவழுதி முதலாயினாரும், வள்ளுவனா ரெனக் கபிலர் முதலாயினாரும், வாலறி வினா ரெனப்பனாரும் தானே முழுதுணர்ந் தோனென நக்கீரனாரும், தேவென மாமூலனாரும், வள்ளுவரெனச் சீத்தலைச் சாத்தனார் முதலாயினாரும், முதலற்பாவல

www.padippakam.com



**வள்ளுவர் சொல், வள்ளுவர் பாட்டு, வள்ளுவர் பொருளென்றாற்போலப் பிற்காலத்தார் திருவள்ளுவப் பயனெனவும் வழங்குப. தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினு முழங்குமென்றார் சொற்பற்றி வள்ளுவரென்பது கருத்தனாகு பெயராய் நூலையுணர்த்து மென்பாரு முளர்; அது பொருந்தாமை தொல்காப்பிய விருத்தியுட்காண்க.**

ரென ஆசிரியர் நல்லந்துவனார் முதலாயினாருந் தெய்வ மெனக் கீரந்தையார் முதலாயினாரும், மாதானுபங்கி மறுவிலார் செந்நாப் போதாரென நல்கூர் வேள்வியாரும் பெருநாவல ரெனத் தொடித்தலை விழுத் தண்டினாருந், திருவள்ளுவ ரென வெள்ளி வீதியார் முதலா யினாரும், பிணக்கிலா வாய் மொழியாரென உருத்திர சன்ம கண்ணரும், ஏதமிலாரெனப் பெருஞ் சீத்தனாரும், புலவ ரெனச் செங்கன்றூர்க் கிழாருந், தேவிற் சிறந்தாரென முதுகூற்ற னாருந், தேவ ரெனச் செயிர்க் காவிரியார் மகனாரும், நாப்புலமையாரெனக் கவுணியனாரும், தெள்ளியாரென மதுரைப் பாலாசிரியனாரும் உரைத்தவாற்றான் ஆக்கி யோன் பெயரும் பெருமையுமுணரப்படும்; வள்ளுவரோடொக்க விருக்க வுருத்திர சன்மரென வும், மறந்தேயும் வள்ளுவனென்பானோர் பேதையெனவும், வல்லாரார் வள்ளுவரல்லா லெனவும், முதற் பாவலரொப்ப வெப்பாவலரினு மில்லெனவும், செந்நாப் போதார் கூடற்கச் செனவும் பிறவு முரைத்த வாற்றான் அவர் பெருமை யுணரப்படும்.

முதல் நான்மறை பாடா இடைப் பாரதம் பகர்ந்தேன் பின் வள்ளுவன் வாயதென் வாக் கெனவும், நான்மறைப் பொருளைத் தந்துரைத்த நூலெனவும், சாற்றியபல்கலையும் தப்பாவரு மறையும் போற்றியுரைத்த பொருளெல்லாந் தோற்ற வெனவும், வேதப் பொருளாய் மிக விளங்கி யெனவும், வேதப் பொருள் விளங்க வெனவும், பாரதஞ் சீராமகதை மனுப்பண்டை மறை நேர்வன வெனவும், தாமேதமைப்பயந்த வேதமெனவும், இன்நான்கு முன்பறியச்சொன்ன முது மொழி நூலுள்ள வரிதென் றுலகங்கொள்ள மொழிந்தாரெனவும், வேதவிழுப் பொருளை யோதவெனவும், வேதப் பொருளைத் தமிழாலுரை செய்தாரெனவு முரைத்தவாற்றான், மறையும் மறைப்பொருளின் முரணாது தோன்றிய பாரதம் சீராமகதை மனு அகப்பொருள் நூல் புறப்பொருள் நூல் முதலாய பிறவும் தானே முழுதுணர்ந்து, அவற்றின் வழித்தாகச் செய்தாரென வழி யுணரப்படும்.

வையத்தாருள்ளுவ வெல்லா மளந்தா ரெனவும், அகலிடத்தோ ரெல்லாந் தேர்ந்து வெளியவெனவும், அகிலத் தோருள்ளிருணீக்கு மொழி யெனவும், வானின்று மண் ணின்றளந்த தெனவும் பிறவு முரைத்த வாற்றான் இந்நூல் பொருள் முதனூலாகிய வேதப் பொருளே யாகலானும், அம் முதனூல் வானுலகத்தும் வழங்கலானும் நூற்பொருட் கெல்லை இவ்வுலகேயன்றி ஏனையுலகுமாமென்பதூஉம், மும்மலை முதலாயதாமுடைய மன்னர் தடமுடியேற் றாரன் றோ என்றமையான் நூற் சொற் கெல்லை, வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பாய தமிழ் நாடாமென்பதூஉம் உணரப்படும்.

வள்ளுவன் வாயதெனவும், வள்ளுவன் வாய்ச் சொல்லெனவும், முப்பொருளெனவும், குறட்பா வெனவும், குறளெனவும், முப்பாலெனவும், பொய்யாமொழியெனவும், வாய்மொழியென வும், பிணக்கிலா மொழியென வும், வாயுறை வாழ்த்தெனவும், வள்ளுவர் வெண்பாவெனவும், குறள்வெண்பாவெனவும், வள்ளுவனார் பொரு ளெனவும், உள்ளிருணீக்கும் விளக்கெனவும், உள்ளக்கமல வெங்கதிரெனவும், உள்ளிருணீக்கு மொழி யெனவும், வள்ளுவர் பாட்டெனவும் பிறவுமுரைத்தமையான், நூற் பெயரும், பெருமை யுமுணரப்படும்.

வள்ளுவர் சொல், வள்ளுவர் பாட்டு, வள்ளுவர் பொருளென்றாற் போலப், பிற்காலத்தார் திருவள்ளுவப் பயனெனவும் வழங்குப. தொல் காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினு முழங்குமென்றார் சொற்பற்றி வள்ளுவரென்பது கருத்தனாகு பெயராய் நூலையுணர்த்து மென்பாரு முளர்; அது பொருந்தாமை தொல்காப்பிய விருத்தியுட்காண்க.

செய்யாமொழிக்கும் பொய்யாமொழிக்கும் பொருளொன்றே யெனவும், ஆரியம் வேத முடைத்துத் தமிழ் குறட்பாவுடைத்தெனவும், நான்முகத்தோன்றந்த நூலெனவும், அந்தா மறை மேலயன்றந்தானெனவும் உரைத் தமையான்நூற்பெருமை யுணரப்படும். பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு, தெரிந்து திறந்தோறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளக்கினா ரென்றமையானும், பிறவாற்றானும் சாற்றிய பல்கலையுந் தப்பாவருமறையும்





படிப்பகம்

www.padippakam.com


போற்றி யுரைத்த பொரு ளெல்லாந் தோற்றத் தொகுத்தி யாத்தாரென, யாப்புணரப் படும்.

முப்பாலி னாற்பான் மொழிந்தவ ரென்ற மையா னும், பிறவாற்றானும் நுதலிய பொரு ளறமுதனான்குமா மென்ப துணரப்படும்.

நற்பலகை யொக்க விருக்க வுருத்திரசன்ம ரென்றமையா னும், வள்ளுவனார்தம் வாயாற் கேளாதனவெல்லாங் கேட்டு என்றமையானும் உருத்திரசன் மருஞ் சங்கப்புலவருங் கேட்டா ரெனக் கேட்போருணரப்படும்.

**நற்பலகை யொக்க விருக்க வுருத்திரசன்ம ரென்றமையா னும், வள்ளுவனார்தம் வாயாற் கேளாதனவெல்லாங் கேட்டு என்றமையானும் உருத்திரசன் மருஞ் சங்கப்புலவருங் கேட்டா ரெனக் கேட்போருணரப்படும்.**

தமிழ்ப் புலவராய்க் கேட்க வீற்றிருக்கலா மெனவும், உள்ளமுருக்கு மெனவும், எப்பொரு ளும் யாருமியல்பின்றிஉறவெனவும், ஆய்தோறு மூறுமறி வெனவும், இம்மை மறுமையிரண்டு மெழுமைக்குச் செம்மை நெறியிற் றெளிவுபெற மும்மையின் வீடவற்றினான்கின் வழி வழங்க வெனவும் உள்ளிருணீக்கு மெனவும், சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய வந்த விரு வினைக்கு மாமருந்து எனவும் பிறவுமுரைத்த வாற்றாற், பயனுணரப்படும்.

கடைச் சங்கத்தார் பாடினமையான் அவரது காலமென்பதூஉம், உக்கிரப் பெருவழுதியார் பாடினமையான் அவரது களனென்பதுஉ முணரப்படும். 'இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு முன்பறியச் சொன்ன முது மொழி நூன்-மன்பதைகட், குள்ள வரிதென்றவை வள்ளுவருலகங், கொள்ள மொழிந்தார் குறள்' என்றமையானும் பிறவாற்றானும் காரணமுணரப் படும்.

தன்னாசிரியன் 'முதலாய மூவருளொருவ ரன்றிப் பிறர்பலர் பாயிரங் கூறினார்; செய்யுளாத லின் குமார தெய்வத்தின் கூறாக மணிக்காலறிஞ ராகிய வணிகமாபிரபிற் றோன்றி, அவையத்துத் தலைவராய்க் கேட்ட உருத்திரசன்மர், சாபத்தால் வாய் வாளாமை யுடைய ராகலிற் பாயிரங் கூறிற்றிலர்.



இந்நூல் சங்கத்தாரால் கீழ்க் கணக்கெனக் கொண்டு போற்றப்பட்டது என்னை?

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்க மென மூன்று சங்க மிரீஇயினார் பாண்டியர்கள்; அவற்றுட் கடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்தார். சிறு மேதாவியாரும் சேந்தம்பூத னாரும் அறிவுடையானாரும் பெருங்குன்றூர்கிழாரும் இளந் திருமாறனும் நல்லந்துவனாரும் மருதனிளநாகனாரும் நக்கீரனாருமென, இத்தொடக் கத்தார் நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவருள்ளிட்டு, நானூற்று நாற்பத்தொன்பதின் மர்பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பெற்றன, கூத்தும் வரி யும் பேரிசையும் சிற்றிசையும் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண் கீழ்க் கணக்கு மென்றித் தொடக்கத் தனவென்று, களவியலுரைப் பாயிரங் கூறியது கொண்டுணரப்படுமாகலின்:

*'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்*
*பால்கடுகங் கோவை பழமொழி - மாமூல*
*மின்னிலைகொல் காஞ்சியுட னேலாதி யென்பவே*
*கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு'*

என்றாராகலிற் பதினெண் கீழ்க்கணக்கின் முப்பா லாகிய குறளொன்றென்பதுணரப் படும்.

இனிக், கணக்கென்பது என்னையெனின்?
மேல்கீழ்க் கணக்கென விருவகைக்
கணக்கே

என்றும்

*மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்*
*பாற்படும் வகையிற் பகர்ந்தனர் கொளலே*

என்றும்,.

*அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்*
*பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீரா*
*மிகுத்துடன் றொகுப்பன மேற்கணக்கெனவும்,*
*வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி*
*னெள்ளறுகீழ்க்கணக் கென்னவுங் கொளலே*

என்றும்,

*ஐம்பது முதலா வைந்நூ றீறா*
*யைவகைப்பாவும் பொருணெறி மரபிற்*
*றொகுக்கப்படுவது மேற்கணக்காகும்*

என்றும்,

*அடிநிமிர் நில்லாச் செய்யுட் டொகுதி*
*யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்*
*திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்*


படிப்பகம்

www.padippakam.com


என்றுங் கூறுமாற்றானறிக.

இனிக் கீழ்க்கணக்கிற்கு, அவ்வகை யெண் பெறினென்ற தல்லது இத்துணைத்தென்றுரையாமையானும், அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி யென எண்ணின்றி யுரைத்தமையானும், இனியவை முதலாயின ஐம்பதிற் குறைந்தும், இந்நால் ஐந்நூற்றின் மிக்கும் வந்தன வென்க.

இதுசின்மென் மொழியாற் றாயபனுவலோடு அடிநிமிர் வின்றிச் செய்யப்பட்டமை யின், அம்மை யெனவும்படும். என்னை?

*'சின்மென் மொழியாற் றாய பனுவலோ டம்மை தானே யடிநிமிர் வின்றே'*

என்றாராகலின். இனி, முப்பாலெனப் பலர் பெயர் கூறினமையானும், அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு, சிறந்த நெய் யென்றமையானும், இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பாலென முப்பாலுடைத்தென்றுணரப்படும். முப்பாலினாற்பான் மொழிந்தவரென்றும், வீடொன்று பாயிரமொன்றுங் கூறினமையான், ஏனைய வீட்டுப்பாலுந் துறவறமாகிய காரணத்தாலுணருமாறு, அறத்துப்பாலுட் பாயிரத்தினுந் துறவறத்தினுங் கூறப்பட்ட தென்றுணரப்படும்.

ஐயாறு நூறு மதிகாரமூன்று மெனவும், ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளு மெனவும், குறள் வெண்பாவிற் சிறந்திடு முப்பாலெனவுங் கூறுமாற்றான், இந்நூல் நூற்று முப்பத்து மூன்ற திகாரமும், ஒவ்வோ ரதிகாரத்துக்குப் பப்பத்தாக, ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாவுமுடைத் தென்றுணரப்படும்.

தொடித்தலை விழுத்தண்டினார் பாட்டால், அறத்துப்பால் நான்கியலும், பொருட்பால் ஏழியலும், காமத்துப்பால் மூன்றியலுமுடையவெனவும்; எறிச்சலூர் மலாடனார் பாட்டால், பாயிரவியல் நான்கும், இல்லறவியல் இருபதும், துறவறவியல் பதின்மூன்றும், ஊழியல் ஒன்றுமென, அறத்துப்பால் முப்பத்தெட்ட திகாரமுடைத் தெனவும்; போக்கியார் பாட்டால், அரசியல் இருபத்தைந்தும், அமைச்சியல் பத்தும், அரணியல் இரண் டும், பொருளியல் ஒன்றும், படையிய லிரண்டும், நட்பியல் பதினேழும், குடியியல் பதின்மூன்றுமெனப் பொருட்பால் எழுபததிகார முடைத்தெனவும்; மோசிகீரனார் பாட்டால், ஆண்பாற் கூற்றியல் ஏழும், பெண்பாற் கூற்றியல் பன்னிரண்டும், இருபாற் கூற்றியலாறு மெனக், காமத்துப் பால் இருபத்தைந்ததிகார முடைத் தெனவு முணரப்படும்.

**தருமர், மணக்குடி யார், தாமத்தர் நச்சர், பரிமேல ழகர், பருதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கரென, இந்நூற்குரை கண்ட பதின்மருட் பலர், தாந்தாம் வேண்டு மாற்றானே, பொருட் பாலை மூன்றியலெனவும், காமத்துப் பாலை இரண்டியலெனவும், அதனையே யைந்திய லெனவும் பகுத்துரை கூறினார்.**

ஆசிரியர்க்கு முன்பு, அவர் கருத்துணர்ந்து பாடிய நல்லிசைப் புலவருரைத்தன கொள்ளாது, தருமர், மணக்குடியார், தாமத்தர் நச்சர், பரிமேல ழகர், பருதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கரென, இந்நூற்குரை கண்ட பதின்மருட் பலர், தாந்தாம் வேண்டு மாற்றானே, பொருட் பாலை மூன்றியலெனவும், காமத்துப் பாலை இரண்டியலெனவும், அதனையே யைந்தியலெனவும் பகுத்துரை கூறினார். இதுவன்றி ஒவ்வோரதிகாரத்தினும், முறைபட நின்ற குறட் பாக்களையும், தாந்தாம் வேறுமுறை கொண்டு பிறழவைத்தார். அவையெல்லாம் ஆசிரியர் கருத்தன்றென்க. அப்பதின்மருரையுட் பல விக்காலத்திறந்தன. இருப்பவற்றுட் பரிமேலழகருரையே மிக்க சிறப்புடைத்தாகலின், அதனைக் காண்டிகையாகக் கொண்டு, அவ்வுரையுட் பொருந்தாதன மறுத்து, ஏனையவற்றொடு விரிப்பன விரித்து இவ்வுரை யெழுதப்படும்.

அறத்துப்பால், அறத்தை யுணர்த்தும் பாலென விரியும். பாலென்பது நூற்பகுதி. பாயிரவியலென்பது, அறத்தினது பாயிரத்தினியலை யுணர்த்தும் பகுதி. இயல், இயலையுணர்த்தும் பகுதிக்காயினமையின் ஆகுபெயர். அறத்தின் பாயிரமாவது, அறம் இத்தன்மைத் தென்றுணர்தற் கின்றியமையாக் காரணமாய், அதன் பெருமையை யறிவிப்பது. வெற்றிக்குக் காரணமான படைச் செருக்கின் பெருமையெனப் பொருள் படுமாறு, பாயிரங் கூறி, படை தொக்கா லென்செய்ப வென்னார் பழிமொழியினும். அப்பாயிரம் பலவகையவாயினும், ஏனைய வுந்தம் முளடங்குஞ் சிறப்புடையவாய கடவுள் வாழ்த்தும், வான் சிறப்பும், நீத்தார் பெருமையும், அறன் வலியுறுத்தலுமென நான்கே,




படிப்பகம்

www.padippakam.com


இந்நூலிற் கூறப்பட்டன. இந்நான் கும் நூற்குப் புறவுரையாகிய பொதுப்பாயிரமுஞ் சிறப்புப் பாயிரமும் போலாது, நூனுதலிய பொருளிலறத்தின் பகுதியாகவே முடிதலிற், பிறராற் கூறப்படாமல் நூலினகத்துறுப்பாக ஆசிரியராற் கூறப்பட்டன.

முதலாவது அதிகாரம் கடவுள் வாழ்த்து என்பது முதலாவதிடமாகிய கடவுள் வாழ்த்தினியல்புணர்த்தும் நூற்பகுப்பென விரியும். கடவுள் வாழ்த்து, கடவுளை வாழ்த்துதலாகிய ஒழுக்கம்.

**பரிமேலழகர் உரைப் பாயிரத்தில் அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித் தன செய்தலும், விலக்கியன வொழிதலுமா மென்றாரேனும், அந்நூல் சொல்லியவற்று ளக்காலத்திற் கேலாதன வொழித்துச், சொல்லாத வற்றுளேற்பன கொண்டு, உயர்ந்தோர் பலரு மொழுகிய வாற்றா னொழுகு முலக நடை யையும், அவ்விதி விலக்குள் அமைத்துக் கொள்க.**


கடவுளென்றது - சார்பி னாற்றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ் சார்பென நின்று, பிறவெல்லாம் கடந்த பொருளை, உள்விகுதி, இயவு ளென்பதன்கட்போல வினைமுதற் பொருளுணர்த்திக், கடந்த பொருளை யுணர்த்திற்று. அதிகாரம் - இடம். அதிகாரங்கட்கு இயல், பொது மொழியும்; இயல்கட்குப், பால் பொதுமொழியுமாக நிற்றலின், முதலாவது அதிகாரங் கடவுள் வாழ்த்தெனற்கு, இந்நூலுள் அறத்தை யுணர்த்துமிடமும், அறத்தின் பகுதியுட் பாயிரவியலை யுணர்த்து மிடமும், பாயிரவியலுட் கடவுள் வாழ்த்துணர்த்து மிடமுமாகிய முதலாவதிடமெனப் பொருள் கொள்க.

இந்நூல் நுதலிய பொருள் மூன்றனுள், அறம் இம்மை, மறுமை, வீடென மூன்றும் பயத்தற் சிறப்பிற்றா, யேனைப் பொருளின்பங்கட்குக் காரணமாக நிற்றலின், முன்வைக்கப்பட்டது. ஏனைய அறத்து வழிப்படூஉந் தோற்றத்தவாகலிற் பின் வைக்கப்பட்டன. அவற்றுட் பொருள், இம்மை மறுமையென விரண்டும், இன்பம், இம்மையென ஒன்றும் பயத்தலானும், இன்பத் துக்குப் பொருளுங் காரணமாகலானும், அம்முறையே பொருள் முன்னுமின்பம் பின்னுமாயின. அறத்தின் பகுதி நான்கனுள், இல்லறந் துறவறமுமெனஏனை மூன்று முணரற்குப் பாயிரங் காரணமாதலின், அது முன்னும் ஏனைய பின்னு மாயின. பாயிரத்தினதிகார நான்கனுள் - வான் சிறப்பு முதலாய பிறவற்றுக்குக் கடவுளே காரணமாகலின், அவ்வாழ்த்து முன்னும் ஏனைய பின்னும் வைக்கப்பட்டன.

பரிமேலழகர் உரைப் பாயிரத்தில் அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித் தன செய்தலும், விலக்கியன வொழிதலுமா மென்றாரேனும், அந்நூல் சொல்லியவற்று ளக்காலத்திற் கேலாதன வொழித்துச், சொல்லாத வற்றுளேற்பன கொண்டு, உயர்ந்தோர் பலரு மொழுகிய வாற்றா னொழுகு முலக நடையையும், அவ்விதி விலக்குள் அமைத்துக் கொள்க. இது பரிமேலழகர்க்கு முடன் பாடாதலை, உலகத்தோ டொட்ட என்னுங் குறளிலவருரைத்த வாற்றானறிக.

தேவர்கோட்ட முதலாயவற் றுள்ள பொருளைப் பிறர்தம வெனவௌவியவழி, அறிந்தோர் அரசற்குணர்த்தும் வழக்குப் போல்வன பேரறம் விளைத்தலானும் அங்கன முணர்த்தாவழிப் பெருந்தீங்கு விளைத்தலானும், அவனை முறைகாக்குமுட்டாச் செயினெனவும், அல்லற்பட்டாற்றாதழுத கண்ணீ ரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படையெனவும் கூறினாராகலின், ஒப்பநாடியதற்குத் தகவொறுத்தலாகிய தண்டம் அறம்விளைத்தலும், அங்ஙனஞ் செய்யாமை தீங்கு விளைத்த லுமுணரப்படுமாகலானும், வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்து தற்பயத்தவாவதல்லது, ஒழுக்கம் போல மக்களுயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பில வெனலும், அதனாலவற்றை யொழித்தாரெனலும் பொருந்தாமை காண்க.

இனித் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் அவற்றைக் கூறக் கண்டிலேமெனின், அரசர் துணையின்றியும் நிகழுமொழுக்கமாகிய அறம் போலன்றி வழக்குந் தண்டமுமாகிய அறங்கள் அவரது துணைக் கொண்டே நிகழுமியல்பினவாகலின், அவற்றை அறத்துப் பாலுட்கூறாது, அரசியலும் பிறவியலுங் கூறும் பொருட்பாலுட் சில விதந்தும், பலவுய்த் துணரவும் வைத்துக் கூறினாரெனக. இங்ஙனமே ஒழுக்கத்துள்ளும், விரிவஞ்சிப் பலவிதந்து கூறாமல் உய்த்துணர வைத்தார். இவ்வாறு பரிமேலழகரு மிறுதியி லுரைத்தல் காண்க.



இனித் தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட சிறுபான்மையாகிய சிறப்பியல்பு ஒழித்தாரெனலும், பொருந்தாது என்னை? ஒழுக்க முடைமை முதலாய


படிப்பகம்

வதிகாரத்துள், மறப்பினு மோத்துக் கொளலாகு மென்றாற் போலச்சிலவிதந்தும் சிலவுய்த் துணரவுங் கூறுமாற்றான். இக்கருத்தானன்றே எல்லாப் பொருளுமிதன்பாலுளவிதன்பா லில்லாத வெப்பொருளு மில்லை யென்றார் தமிழ் நாயனாரும்.

**இனித் தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட சிறுபான்மையாகிய சிறப்பியல்பு ஒழித்தாரெனலும், பொருந் தாது என்னை? ஒழுக்க முடைமை முதலாய வதிகாரத்துள், மறப்பினு மோத்துக் கொளலாகு மென்றாற் போலச் சிலவிதந்தும் சிலவுய்த் துணரவுங் கூறுமாற்றான். இக்கருத்தானன்றே எல்லாப் பொருளுமிதன்பாலுளவிதன்பா லில்லாத வெப்பொருளு மில்லை யென்றார் தமிழ் நாயனாரும்.**

இனி வழக்குந் தண்டமுமென அவற்றைப் பொருட்பாலுளடக்கலும், நால்வகை நிலையை இன்னிலை, துறவு நிலையென விரண்டாகப் படுத்தலுந் தமிழ் நூன் முறை. நுதலிய பொருள்வேதப் பொருளேயாயினும், ஆசிரியர் வட நூல் வழக்குப் பற்றியோதாது, பெரும்பான்மை தமிழ் வழக்குப் பற்றியே வோதினா ரென்க. இது வேதப் பொருளை விரகால் விரித்துலகோ ரோதத் தமிழாலுரை செய்தாரெனவும், பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு தெரிந்து திறந் தோறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்லாரார் வள்ளுவரல்லால்' எனவுங் கூறு மாற்றானு முணரப்படும்.

இனி, அன்பின்றி யில்லறமும், அருளின்றித் துறவறமும் நிகழாமையானும், அன்பே யருட்குக் காரணமாதல் அருளென்னு மன்பீன் குழவி யென்றமையா னுணரப்படுமாகலானும், துறவறத் திற்கு இல்லறங் காரணமாதல் பெறப்படலின், அக்காரண காரியமுறையால் இல்லற முதற்கட் கூறப்பட்டதன்றிக், கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுங் காரணத்தானன்று.

இல்லறந் துணையோடும் ஏனையது துணையின்றியுஞ் செய்தலின், அக்காரணத்தால் இல்லற முற்கூறப்பட்டதென்றார்க்குத் துணையோடு செயலினுந் துணையின்றிச் செயலே சிறந்தமையான், துறவறமே முதற்றாதல் வேண்டும். துணையோடு செயலே சிறந்ததெனின் மூன்றாவது நிலை துணையோடு செயலுமுடைமை யானும், அந்நிலை துறவுளடங்குமென்பது முயல்வாருளெல்லாந் தலையெனக் கூறுமாற்றா னுணரப்படுமாகலானும், இல்லறத்தோ டொப்பத் துறவறமு முதற்றாதல் செல்லும். இவ்வாற்றான் அது காரணமாகாமை யறிக.

இருவகையறமு முறுதற்குக் கடவுளை வாழ்த்துதலாகிய அறமே சிறந்த காரணமாகலின், அவற்றைக் கூறலுற்றார்க்கு முதற்கட் கூறப்படுவது கடவுள் வாழ்த்தன்றிப் பிறிதின்மையின், அம்முறை பற்றிக் கடவுள் வாழ்த்து முற் கூறப்பட்டதன்றி, எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடித்தற் பொருட்டுக் கூறப்பட்டதன்று. கடவுளை வாழ்த்தாவழி ஏனைய அறங்கள் பயன் படாமையைக் கற்றதனாலாய பயனென்னெனவும், மனக் கவலை மாற்றலரி தெனவும், பிறவாழி நீந்தலரி தெனவும், பிறவுங் கூறலானுணர்க.

●●

(குறிப்பு : அரிய இப்பதிப்பை வழங்கியதவியவர் பேராசரியர் ம.ரா.போ.குருசாமி. நன்றி)

---

ஜெயமோகன் விஷ்ணுபுரத்திற்குப்பின் எழுதிய *பின்தொடரும் நிழலின் குரல்* என்ற நாவல் விரைவில் வெளிவரவிருக்கிறது.

அதற்கு அவர் எழுதிய முன்னுரையிலிருந்து ஒரு பகுதி –

*அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை.*

*அறத்தாரிது வென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோடு ஊர்ந்தானிடை.*

'...இதன் கரு விரிவடையத் தொடங்கும் நேரத்தில் இயல்பாக என் மனதில் விரிந்த இரு குறள்கள் மெல்ல மெல்ல என் தியான மந்திரங்களாக மாறின. மீண்டும் மீண்டும் அவற்றை மனதில் ஓடவிட்டபடி தக்கலை பத்மநாபபுரம் சாலையில் வேகமாக நடக்கும் தருணங்களில் அறச்சீற்றத்துடன் என் மனம் பொங்கும் அல்லது குற்றவுணர்வுடன் சரியும்; அபூர்வமாக ஆழ்ந்த துயரத்தில் தன்னை இழக்கும். எழுதி முடித்தபின்பு இப்போதுகூட அவ்வரிகள் அதேயளவு தீவிரத்துடன் என்னை அதிர வைக்கின்றன. இன்னும் ஒரு நாவலை அவற்றிலிருந்து படைத்துவிடலாம் என்று மனம் தாவுகிறது. நமது அறவுணர்வின் சாரமாக என்றுமிருப்பவை வள்ளுவ மாமுனியின் சொற்கள்.'




●●

www.padippakam.com


பி.டி.சீனிவாசன ஐயங்கார்

# திருக்குறள்



ஐரோப்பிய இலக்கியப் பேராசிரியர்களின் இலத்தின், ஆங்கில மொழி பெயர்ப்புக்களால், திருக்குறள், உலக மக்களுக்கு நன்கு தெரிந்த நூலாகிவிட்டது. இப்பேராசிரியர்கள், கிறித்துவ சமய விரிவுரையாளர்களாதலின், சில சொல்லில் பலபொருளை விளங்கக் கூறும், தனக்கே உரிய குறுந்தொடர் மூலம் இதில் கூறப்பட்டிருக்கும் உயர்ந்த அறநெறிகளால் ஈர்க்கப்பட்டுவிட்டனர். ஐரோப்பியத் தமிழ்ப்பேராசிரியர்களில் தலை சிறந்தவராகிய பெச்சிப் பாதிரியார், 'திருவள்ளுவர் ஒரு புறச்சமயி என்ற காரணத்தால் நரகிற்குச் சென்றிருப்பினும், முதுமொழியாம் மணிக்குறள் களைப் பாடிய அவர் நரகிற்குச் சென்றிருக்க இயலாது' எனக் குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது. பல்வேறு மொழிகளிலான அதன் மொழி பெயர்ப் புக்கள், அது குறித்துக் கேள்விப்பட்டவர் அனைவர்க்கும், அதை நன்கு அறிந்த ஒன்றாக ஆக்கிவிட்டதனால், உலக மக்கள் அனைவரின் பாராட்டையும் ஒருமிக்கப் பெற்றிருப்பதால், அதன் பாக்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள் பற்றிய திறனாய்வு ஈண்டுத் தேவையில்லை.

இந்நூலின் குறட்பா வடிவம், போலி விஞ்ஞானப் பொருள் பற்றிய சமஸ்கிருத எழுத்தா ளர்களின் சூத்ரமாதிரியினை வெற்றிகரமாகப் பின்பற்றியுளது. சமஸ்கிருத சூத்திரங்கள் உரை நடையில் அமைந்திருக்க, குறள் வெண்பாக்கள், இலக்கிய நடையில் இருப்பதால், அவற்றிலும் சிறந்தனவாம். செய்யுள்நடை, இறுக்கமான கட்டுக்கோப்பில் அமைந்துளது. ஒழுக்க நெறி களை அடுக்கடுக்காக எடுத்துக் கூறும் நிலையில் ஏற்படும் கவர்ச்சியிலா வரட்சியினைப் போக்க, இங்குமங்குமாக, இலக்கிய நயங்களையும் புகுத்தியுள்ளார் ஆசிரியர். கலைவாணர்கள், செய்யுள்களுக்கே உரிய ஆட்சி எல்லைக்குள், அறிவுரை வழங்கும் பாக்கள் நுழைவை எப்போதும் எதிர்த்தே நிற்பர். ஆனால், நனிமிகு சிறப்பு வாய்ந்த செய்யுள் நடை அமைப்பும், நல்லொழுக்க அறிவுரைகள், உண்மையான செய்யுள் உணர்வுகளால், அவ்வப்போது ஒளியூட்டப் பெறுவதும், நீதி போதனைப் பாக்களையும், செய்யுட் களாம் என ஏற்றுக் கொள்ளப்படுவதை நியாயப்படுத்துமாயின், திருக்குறளும் ஒரு




படிப்பகம்

சிறந்த செய்யுளே. இங்கொன்றும் அங்கொன்றுமாக எடுக்கப்பட்ட சில எடுத்துக் காட்டுக்களே, இதை உறுதி செய்யும்:

'அறிவு என்னும் அங்குசத்தால், ஐம்பொறி களாகிய ஐந்து யானைகளையும், ஐம்புலன்கள்மீது ஓட விடாமல் காக்க வல்லவன். எல்லா நிலங்களிலும் தலையாவது எனப்படும் வீட்டுலகில் தான் சென்று முளைக்கும் விதை ஆவன்'

**உரன் என்னும் தோட்டியான்,**
**ஓர் ஐந்தும் காப்பான்**
**வரன் என்னும் வைப்பிற்கு**
**ஓர் வித்து**

***(குறள் 24)***

**சமஸ்கிருத சூத்திரங்கள் உரைநடையில் அமைந்திருக்க, குறள் வெண்பாக்கள், இலக்கிய நடையில் இருப்பதால், அவற்றிலும் சிறந்தனவாம். செய்யுள்நடை, இறுக்கமான கட்டுக்கோப்பில் அமைந்துளது. ஒழுக்க நெறிகளை அடுக்கடுக்காக எடுத்துக் கூறும் நிலையில் ஏற்படும் கவர்ச்சியிலா வரட்சியினைப் போக்க, இங்குமங்குமாக, இலக்கிய நயங்களையும் புகுத்தியுள்ளார் ஆசிரியர்.**

'ஆகூழ் இன்மையால் பொருள் இழந்து வறுமையுற்றவர் ஒருவர், பின் ஒரு காலத்தில் ஆகூழ் வாய்க்கச் செல்வத்தால் செழிக்கவும் செய்வர். ஆனால், ஒருமுறை அருளை இழந்தவர், அதை இழந்தவரே; மீண்டும் அருள் உடையவராதல் அறவே இயலாது'

**பொருள் அற்றார் பூப்பர்ஒருகால்; அருள் அற்றார்**
**அற்றார், மற்று, ஆதல் அரிது**

***(குறள் 248)***

'புடத்தில் இட்ட பொன், அப்புடத்தீ சுடச்சுடத் தன்கண் மாசு நீங்கி ஒளி விடுவதுபோல, தன் கடமையைத் தவறாது ஆற்றுவதாம் தவம் செய்வார்க்கு, அக்கடமையாற்றுவதால் வரும் துன்பம் அவரை வருத்த வருத்த, அவர் புகழ் ஒளிவிட்டு விளங்கும்'

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும், துன்பம்**
**சுடச் சுட நோற்கிற் பவர்க்கு**

***(குறள் 267)***

'உடம்பிற்கும் உயிர்க்கும் இடையில் உள்ள உறவு. முட்டையானது தனித்து விடப்பட்டு கிடக்க, அதன் உள் இருந்த பறவை, அதை விடுத்துப் பறந்து போகும் இயல்புடையதாகும்'

**குடம்பை தனித்து ஒழியப்,**
**புள் பறந்தற்றே**
**உடம்போடு உயிரிடை நட்பு**

***(குறள் 338)***

'கேடு வருவதன் முன்னர், அது வராதவாறு தடுத்துத் தன்னைக் காத்துக் கொள்ளாதவன் வாழ்க்கை, அக்கேடு வந்துற்றதும், தீயின் முன்னே கிடக்கும் வைக்கோற்போர் கண நேரத்தில் எரிந்து இல்லாதல் போல் அறவே அழிந்து போகும்'.

**வரும் முன்னர்க் காவாதான்**
**வாழ்க்கை,**
**எரிமுன்னர் வைத்தூறு**
**போலக் கெடும்**

***(குறள் 435)***

'உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும், வானிலிருந்து பெய்யும் மழையை எதிர்பார்த்தே வாழும்; ஆனால், ஒரு நாட்டின் குடிமக்கள், அந்நாட்டு அரசனின் செங்கோல் ஆட்சியை எதிர்பார்த்தே வாழ்ந்திருப்பர்'

**வான்நோக்கி வாழும் உலகு எல்லாம்; மன்னவன்**
**கோல் நோக்கி வாழும்குடி**

***(குறள் 542)***

கற்றுப் பெற்ற நூல் அறிவைப் பிறர் நன்கு உணர்ந்து கொள்ளும் வண்ணம் விரித்து உரைக்க இயலாதவர், கொத்துக் கொத்தாக மலர்ந்திருந்தும் மணம் வீசாத மலர்களுக்கு ஒப்பாவர்

**இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர்; கற்றது**
**உணர விரித்து உரையாதார்**

***(குறள் 650)***

'காமமானது, காதலர் இருவர் ஒன்று கூடிய வழி பிறக்கும் பேரின்பம் கடல்போல் பெரிதாம். காதலர் இருவர் பிரிந்து கிடக்கும்போது, அக்காமம் தரும் துன்பம், அக்கடலினும் பெரிதாம்.'

**இன்பம் கடல்மற்று; காமம் அதுஅடுங்கால்**
**துன்பம் அதனிற் பெரிது**

***(குறள் 1166)***




திருக்குறள், பெருமளவில் முப்பால் (த்ரிவர்கம்) வாழ்க்கையின் மூன்று குறிக்கோள் என்றே அழைக்கப் பெறுகிறது. சமஸ்கிருத தர்ம, அர்த்த, காம என்பனவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பாகிய அறம், பொருள், இன்பம் என்ற வரிசையில், அது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுளது. தமிழ் இலக்கியங்களில், திருவள்ளுவர்

காலத்துக்கு முன்னர், ஒழுக்க நெறி கற்பிக்கும் பாக்கள் இடம் பெறவில்லையாதலின் முதல் இருபால்களை எழுதும் நிலையில், ஆசிரியர் சமஸ்கிருத சாஸ்திரங்களிலிருந்து பெருவாரியாகக் கடன் வாங்கியுள்ளார். நல்லொழுக்கம் ஆகிய அறம், தன் காதலன்பால் ஓர் இளம் பெண் கொண்டிருக்கும் மாறா அன்பு போல், மறைமுகமாகவே விளக்கப்பட்டுள்ளது. அரசியல் அறிவுநெறியாம் பொருள், வளர்க்கப்படவேயில்லை. காதல் பற்றியதான மூன்றாம் பகுதியாம் காமத்துப்பாலில், திருமணத்திற்கு முந்திய காதல் வாழ்வும், பிந்திய காதல் வாழ்வுமாம் களவு கற்பு நெறிகளுக்கு இடையிலான பழந்தமிழ் - வேறுபாட்டினை விடாது பின்பற்றியிருப்பது மட்டுமல்லாமல், தொல்காப்பியர் விரித்துரைக்கும் காதல் வாழ்க்கையின் பழந்தமிழ்ச் செய்யுள் மரபினையும் பின்பற்றியுள்ளார். தமக்கு வேண்டும் பாடற்பொருளை, அவர் சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்கினாரோ அல்லது பழந்தமிழ் மரபுகளைப் பின்பற்றினாரோ, பொருள் விளக்க முறையில் தமக்கே உரிய தற்படைப்புத் திறனையும், நூலுக்குப் பெரும்புகழ் சேர்ப்பனவும், தமக்கே உரிமையுடையனவுமான இடையறவு படாது எழும் கருத்துச் செல்வப் படைப்பினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆரியக் கருத்துக்களின் அளவுக்கு மிஞ்சிய செல்வாக்கும், சமஸ்கிருதச் சொற்களின் கட்டுக்கடங்கா ஆட்சியும் நோக்கின், கி.பி.ஆறுக்கு முந்திய எந்த நூற்றாண்டையும் திருவள்ளுவர்க்குத் தருவது இயலாது. காதுவழிச் செய்திப்படி, பல்லவர் ஆட்சிக்குட்பட்ட நாட்டின் கடற்கரைப் பட்டினமாம் மயிலையில் (மதராஸ்) பிறந்தவர். திருவள்ளுவர் உள்ளம் ஆரிய நாகரிகத்தில் அந்த அளவு ஊறித் தோய்ந்து போதல், தமிழ்நாட்டின் எஞ்சிய பகுதிகள், ஆரிய நாகரிகப் பிடியின்கீழ், அவர் காலத்திற்குச் சற்று முன்னரே வந்திருக்க, அவர் காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முழுமையாக ஆரிய மயமாகிவிட்ட காஞ்சி மாவட்டத்தில்தான் இயலும்; ஆதலின், மேலே கூறிய கூற்று முழுக்க முழுக்க உண்மையாதல் கூடும். ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வைஷ்ணவ, சைவ பௌத்த, சமணங்களாகிய ஆரியச்சமயங்கள், பழந்தமிழ்ச் சமயங்களை விரைந்து இடமிழக்கச் செய்துவிட்டன; அல்லது அவற்றின் இடையே நுழைந்து இடங்கொண்டுவிட்டன. தொடக்க காலத்தில், எந்தச் சமய நெறியும் அரசாதரவு பெறவில்லையாகவே, ஒன்றோடொன்று பெருமளவில் பகைத்துக் கொள்ளவில்லை. ஆகவேதான், திருவள்ளுவர், மற்றும் பதினெண்கீழ்க் கணக்கைச் சேர்ந்த ஒழுக்க நெறிகூறும் ஆசிரியப் பெருமக்களால், ஆரியச் சமயக் கொள்கைகள், ஆரியச் சமயத் தத்துவக் கொள்கைகளைக் கலவாமல், தனி ஒழுக்க நெறிகளையே உணர்த்த முடிந்தது. ஆகவேதான், எந்த ஒரு சமயச் சாயலைத் திருவள்ளுவர் ஆதரிக்கிறார் என்பதைத் தன்னைப் படிப்பவர்க்கு வெளிப்படுத்திக் கொள்ளாமலே, ஒழுக்க நெறி கற்பிக்கும் உலகப் பேராசிரியர்களில், தலைசிறந்தவராகத் திருவள்ளுவர் ஒளிவீசுகிறார். பிராமணன் முதல் பறையன் ஈறாக உள்ள ஒவ்வொரு சாதியும், வைதீக அல்லது அவைதீக நெறிக்கு நேர் எதிரான ஒவ்வொரு சமய நெறியும், இவ்வொழுக்க நெறிப் பெரும்புலவனைத் தம்முடைய வலையுள் கொண்டுவிடும் பெருமைக்கு உரிமை கொண்டாடுகின்றன. ஆனால் திருவள்ளுவரோ, அவ்வாறு அடையாளம் காட்டப்படுவதை இக்காலமெல்லாம் பெருமிதத்தோடு மறுத்தே வந்துள்ளார்.

திருவள்ளுவர் பிறப்புக் குறித்தும், அவர் நூல் வெளியீடு குறித்தும், அறிவுக்குப் பொருந்தாக் கற்பனைக் கதைகள் கட்டிவிடப்பட்டுள்ளன. அவர் நூல், மூன்றாவது சங்கத்தின் முன் வைக்கப்பட்டபோது அச்சங்கப் புலவர்கள், அதை ஏற்க மறுத்தனர் எனக் கூறுகிறது. இரண்டாவது கற்பனைக் கதை. ஒரு குளத்தில் மிதந்து கொண்டிருந்த ஒரு பலகை மீது அப்புலவர்கள் அமர்ந்திருந்தனர். திருக்குறள் அப்பலகைமீது வைக்கப்பட்டதும் அப்பலகை திருக்குறளுக்கு மட்டுமே போதுமான இடம் உடையதாகச் சுருங்கிவிட்டது. அப்புலவர்கள் குளத்தில் வீழ்ந்து மூழ்கிவிட்டனர். எழுந்து கரை ஏறியதும், குறளின் புகழ் கூறும் ஒவ்வொரு பாடலை, ஒவ்வொருவரும் பாடினர். அப்பாக்கள் அனைத்தும் ஒரு தொகை நூலாகத் 'திருவள்ளுவ மாலை' என்ற பெயரில் தொகுக்கப் பெற்று வழக்கமாகத் திருக்குறளைத் தொடர்ந்து அச்சிடவும் பெறுகிறது. அக்கட்டுக்கதையின் பொருத்தமில்லாக் கூற்றில் ஒன்று. குறுகிய நோக்குடையவர்களாகிய அச்சங்கப் புலவர்களுள் சிவனையும் சேர்த்திருப்பது திருவள்ளுவ மாலை பாடிய புலவர்களுள் பல்வேறு நூற்றாண்டுகளைச் சேர்ந்த புலவரெல்லாம் உள்ளனர். உ-ம். மாங்குடி மருதனார், உருத்திரங் கண்ணனார், பாரதம் பாடிய பெருந்தேவனார், கவிசாகரர் பெருந்தேவனார், நரிவெரு உத்தலையார், குலபதி நாயனார் மற்றும் சமஸ்கிருதப் பெயர் தாங்கியவர்களும், தமிழ்ப் பெயர் தாங்கியவர்களுமாக



www.padippakam.com


ஐம்பத்திமூவர். ஆரியமயமாகிவிட்ட பல்லவ நாடாம் தொலை நாட்டிலிருந்து வந்த புலவர் மீதும், ஆரிய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் இலக்கிய உலகில் ஒரு புது மரபினை நுழைக்கும் ஒரு நூலின் மீதும் பழந்தமிழ் மரபு காக்கும் புலவர்கள் கொண்ட பொறாமை ஒன்றே இக்கட்டுக் கதைகளின் பருப்பொருளாம்.

சமஸ்கிருத இலக்கியத்திற்குக் குறள் பட்டி ருக்கும் கடன்:

(இப்பத்தி, சென்னை பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளரும், திருவள்ளு வரின் சமஸ்கிருத மூலங்கள் அனைத்தையும் குறிப்பிடும் ஒரு சிறு வெளி யீட்டினை வெளியிட எண்ணியிருப்பவருமாகிய திரு.வி.ஆர்.ஆர்.தீக்ஷ தர் அவர்கள் தந்தது)

குறளாசிரியர் சமஸ்கிருத மொழிப் பேரறி ஞராவர். நீதி, அர்த்த சாஸ்திரங்களைச் சிறப்பாக ஆராய்ந்தவராவர் என்பது தெளிவு. குறட் பாக்களை, அப்பொருளே குறிக்கும் சமஸ்கிருத எழுத்தாளர்களால், ஆரியத் தெய்வீக நூல்களாம் புருஷார்த்தங்களால் திருவள்ளுவர் எந்த அளவு இயக்கப்பட்டுள்ளார் என்பதைக் காட்டுகிறது. திருவள்ளுவர், தம்முடைய நூலைத் த்ரிவர்கத்தில் மட்டுமே கருத்துடையவர் என்பதுபோல, முப் பகுதிகளாகப் பிரித்துள்ளார். ஆனால், அறம் அல்லது தர்மம் குறித்துக் கூறும் பகுதியில், நான்காவது புருஷார்த்தமாகிய மோக்ஷம், அதாவது வீடு பேறு குறித்தும் சில அதிகாரங்களை ஒதுக்கியுள்ளார். முறையாகப் பின்பற்றப்பட்டால் த்ரிவர்கம் (அறம், பொருள் இன்பம்) தானே மோக்ஷத்தை அடைவதற்கு வழிசெய்து விடும் எனத் திருவள்ளுவர் தெளிவாக எண்ணியிருக்க வேண்டும். இது எதுவாயினும், குறள் மனித வாழ்வின் மூன்று குறிக்கோள்களின் விளக்கமே ஆகும். தம்முடைய அறத்துப்பாலில், பலராலும் அறியப்பட்டிருந்த மனுவின் தர்ம சாஸ்திரத் தையும் பொருட்பாலில், நன்கு தெரிந்திருந்த கௌடல்யரின் அர்த்த சாஸ்திரத்தையும், திருவள்ளுவர் பின்பற்றினார் எனக் கருதுவது முறையே ஆகும். இந்நூல்களே, செய்திகளின் தலையாய மூலங்கள் என்றாலும், பஞ்ச தந்திரம், கீதோபதேசம், பர்த்ரிஹரியின் சதக ஸ்லோகங்கள், இராமாயணம், மஹாபார தம், கமந்தரியின் நீதிசாரம், மற்றும் இவற்றிற்கு இனமான இலக்கியங்களையும் புலவர் நன்கு அறிந்திருந்தார் என்பது முடிந்த முடிவாக உறுதி செய்யப்படும். இந்நூல்களில் பலவும், கி.மு. ஆறாம்



நூற்றாண்டு முதல் கி.பி. நான்காம் நூற்றாண்டு வரையான காலத்தைச் சேர்ந்தவை. கி.பி. 650-ஐச் சேர்ந்த பர்த்ரிஹரியின் நூல்கள், காளிதாஸனின் சாகுந்தலம், விசாகதத்தனின் முத்ராக்ஷஸம், மற்றும் நன்கு தெரிந்த இலக்கியங்களிலிருந்து ஆன வரிகளைக் கொண்டுள்ளன. பஞ்ச தந்திரத் திலும், இதோபதேசத்திலும் இடம் பெற்றிருக்கும் பலபாக்களின் உண்மை நிலையும் அதுவே. இவை, தமக்கென ஒரு மூலத்தை உரிமை கொண்டாடவில்லை. நாட்டில் வழங்கிய அந்த அறவுரைத் தொடர்கள், அவற்றை மக்களிடையே பரப்பும் எண்ணத்தில், இந்நூல்களில் நுழைக்கப் பட்டிருக்கக்கூடும். ஆகவே, சமஸ்கிருத இலக்கி யங்களுக்கு வள்ளுவர் பட்டிருக்கும் கடமை மீதான திறனாய்விலிருந்து அவர் காலத்தைக் குறிப்பிடுவது இயலாது.

எண்ண இயலாது கிடக்கும் எடுத்துக்காட்டுக் களிலிருந்து கீழே காட்டப்படும் சில, அக்கடமைப் பாட்டினை உறுதி செய்யும்.

'இல்லறத்தோடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவோன் எவன் என்றால், அற இயல்பினை உடைய ஏனைய மூவர்க்கும் அவர்கள் செல்லும் நல்லொழுக்க வழிகளில் தளராது நிற்கும் துணையாவான் எவனோ, அவன் என்கிறது குறள்.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை**

**(குறள் 41)**

'நல்லொழுக்க நெறியாலும், உணவு வழங்கலாலும் ஏனைய நெறிகளில் நிற்கும் மூவரையும் நாள்தோறும் காத்து வருபவன் இல்லறத்தானே ஆதலின், அவன் வாழ்க்கையே தலையாய சிறப்புடையது' என்கிறது. 'மானவ தர்ம சாஸ்திரம்'

***யஸ்மாத்ரயோ ப்யாசரமினோ ஞானே நாந்***
***நேதசான்வஹம்***
***க்ரஹஸ்தெ நைவ தார்யந்தே தஸ்மாஜ்யெ***
***ஷ்டாஸ்ரமொக்ரஹி***

**(மனு 3:78)**

'ஒருவன் ஒரு பிறப்பில், ஐம்பொறி களையும், ஆமை போல அடக்க வல்லவ னாயின், அவ்வடக்கும் ஆற்றல் அவனுக்கு ஏழு பிறப்பிலும் காவலாக இருக்கும்' என்கிறது குறள்.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்து**
**அடக்கல்ஆற்றின்**


படிப்பகம்

*எழுமையும் ஏமாப்பு உடைத்து*

**(குறள் 126)**

'ஆமை தன் ஐந்து உறுப்புக்களையும், தன் ஓட்டுக்குள்ளே அடக்கிக் கொள்வதுபோல், தன் ஐம்புலன்களை, அவற்றின் ஆசைகளிலிருந்து அடக்கிக் கொள்பவன் எவனோ, அவனுக்குப் பேரின்பம் வந்து வாய்க்கும்' என்கிறது பகவத் கீதை

**யதா சம்ஹரதெ சாயம் கூர்மொங்காநீவ ஸர்வஸஹ**
**இந்திரியா ஹீந்திரியார் தேப்ய தஸ்ய ப்ரஞா ப்ரதிஷ்டிதா**

**(பகவத்கீதை 2:58)**

'தன் உடம்பை வளர்த்துக் கொள்ளுதல் பொருட்டுத் தான் மற்றொரு விலங்கின் உடம்பைத் தின்பவன், அருளை எவ்வாறு காப்பான்' எனக் கேட்கிறது குறள்.

**தன்ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன்உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்?**

**(குறள் 251)**

'பிற உயிர்களின் ஊனைத் தென்புலத்தார்க்கும் தெய்வங்களுக்கும் பலிப்பொருளாகத் தருவது தவிர்த்துத் தன் உடல் ஊனை வளர்ப்பதற்கு விரும்புபவன் ஒழுக்கநலம் இல்லாதவனாவன்' என்கிறது மனு.

**ஸ்வமாம்ஸம் பாமாம்ஸேன வர்த்ஹயி துமிக்சதி**
**அனப்பர்ச்ய பித்றன் தெவாஸ்த தொன்யொ**
**நாஸ்த்ய பணயக்ற்த்**

**(மனு 5:52)**

'ஒருவனிடமிருந்து காமம், வெகுளி, மயக்கம் என்ற இக்குற்றங்கள் மூன்றின் பெயருங்கூட அறியாதவாறு கெட்டொழியுமாயின், அவற்றால் அவனுக்கு வர இருக்கும் நோய்கள் இல்லாமல் போகும்' என்கிறது குறள்.

**காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்**
**நாமக் கெடக்கெடும் நோய்**

**(குறள் 360)**

'அனைத்து ஆசைகளையும் விட்டு, காமம், கோபம், மயக்கம் ஆகியவற்றின் நீங்கிய வாழ்வு நடத்துகின்றவன் பேரின்பப் பெருவாழ்வு அடைவான்' என்கிறது கீதை.

**விஹாய சாமான்யஹ் சர்வான் புமான்சரதி நித்ய ஸஹ**
**நீர்மமொ நிரஹன்காரஹ் ஸ சாந்திமதி கச்சதி**

**(கீதை 2:71)**

'ஒரு அரசனுக்குத் தேவைப்படுவனவாகிய படை, குடி மக்கள், உணவு, அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறு அங்கங்களையும் குறைவறக் கொண்டிருக்கும் அரசன், அரசர்களுளெல்லாம் ஆண்சிங்கம் போன்றவன் ஆவன்' என்கிறது குறள்:

**படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு**

**(குறள் 381)**

'அர்த்த சாஸ்திரம், ஒரு நாட்டின் இன்றிய மையா உறுப்புக்களாக, அரசன் உள்ளிட்டு ஆறு குறிப்பிடுகிறது. அரசன் நீங்கிய அந்த ஆறு: அமைச்சு, நாடு, அரண், படை, நட்பு, உணவு இவையாம்'

**ஸ்வாம்ய மாத்ய ஜனபத துர்க கொஸ தண்ட மித்ராணி**

**(அர்த்தசாஸ்திரம் நூல் 6 - பகுதி 1)**

'எடுத்த வினையை முடித்தற்பொருட்டுத் தம் நிலைமையோடு பொருந்தாதனவற்றைச் செய்வ ராயின், உலகத்தவர், அவற்றை ஏற்றுக் கொள் ளாது பழிப்பர்; ஆகவே உலகம் பழிக்காதன வற்றை ஆராய்ந்து செய்தல் வேண்டும்' என்கிறது குறள்.

**எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்; தம்மொடு**
**கொள்ளாத கொள்ளாது உலகு**

**(குறள் 470)**

'ஒரு பணியைத் தொடங்கும் முன்னர், அப் பணியின் திட்டம், அதைச் செயலாற்றும் செயல்முறை ஆகியவற்றை அரசன், அமைச்சர்க ளோடு கலந்து ஆராய வேண்டும்' என்கிறது பராசரன் விதிமுறை:

**யதஸ்ய கார்யம் பிப்ரெதம் தத்ப்ரதி ரூபகம்**
**மந்திரிணாஹ் ப்றெச்ஹெத்**
**கார்யமித மெவமாசீதெலம் வா யதி குர்யாத்**

**(அர்த்தசாஸ்திரம் நூல் - 7, அதிகாரம் - 15)**



'தான் செய்ய மேற்கொண்ட ஒரு வினையின் ஆற்றல், அதைச் செய்து முடிக்க இருக்கும் தன் ஆற்றல், அதைச் செய்யவிடாது தடுத்து நிறுத்த முயலும் பகைவர் ஆற்றல், இருவர்க்கும் துணையாக வருவோர்களின் ஆற்றல் ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்துத் தன் ஆற்றல் மிக்க வழியே அவ்வினையைச் செய்க' என்கிறது குறள்.


படிப்பகம்

*வினைவலியும், தன்வலியும்,*
*மாற்றான் வலியும்,*
*துணைவலியும் தூக்கிச்*
*செயல்* *(குறள் 471)*

'என்னுடைய படை ஒன்றினால், அல்லது துணைப் படைகளின் துணையால், பகைவரை அழிக்கப் போதிய ஆற்றல் என்னிடம் உளது; பகைவன் நிலை இதற்கு நேர்மாறானது என்பதை உணர்ந்துகொண்ட பின்னரே, ஒருவன் பகை நாட்டின் மீது படை எடுத்துச் செல்வன்' என்கிறார் கௌடல்யர்.

**காமத்துப்பாலில், திருமணத்திற்கு முந்திய காதல் வாழ்வும், பிந்திய காதல் வாழ்வுமாம் களவு கற்பு நெறிகளுக்கு இடையிலான பழந்தமிழ் - வேறு பாட்டினை விடாது பின்பற்றியிருப்பது மட்டு மல்லாமல், தொல்காப்பியர் விரித்துரைக்கும் காதல் வாழ்க்கையின் பழந்தமிழ்ச் செய்யுள் மரபினை யும் பின்பற்றியுள்ளார்.**

பல்வேறு தேர்வுகளை வைத்து ஒருவனைத் தேர்ந்து எடுத்துப் பணியில் வைத்து விட்ட பின்னர் அப்பணியாளன் நடவடிக்கைகளை, ஒற்றர்கள் மூலம் கண்காணிக்க வேண்டியது அரசன் கடமை யாகும்'' என்கிறது அர்த்த சாஸ்திரம்.

*தஸ்மாத் பாஹ்ய மதிஷ்டானம்*
*க்ரித்வா கார்யெ*
*சதுர்விதெஹெ*
*ஸௌசாஸௌசம*
*மாத்யாநாம் ராஜ மார்கெத*
*கத்ரிப் ஹிப்*
*(அர்த்த சாஸ்திரம் நூல் 1:10)*

*'யதி வா பஸ்யெத்...' ஸ்வதண்டயிர் மித்ராட வீ தண்டாயிர் வாஸமம் ஜ்யாயம்ஸம் வா கர்ஸயிதுமுத் ஸஹெ ''ஸம்பன்னா மெ வர்த்தா விபன்னா பரஸ்ய'' - அர்த்தசாஸ்திரம் புத்தகம் 7:4*

'அறம், பொருள், இன்பம், உயிர் அச்சம் ஆகிய இந்நான்கு உபாயங்களுக்குள் தேறி நிற்கும் ஒருவனே அரசியல் பணிக்குத் தேர்ந்து எடுக்கப் படுதல் வேண்டும் என்கிறது திருக்குறள்.

*'அறம், பொருள், இன்பம், உயிரச்சம் நான்கின்*
*திறம்தெரிந்து தேறப் படும்'*
*(குறள் - 501)*

அரசியல் பணிக்கு ஒருவன் நியமிக்கப்படுமுன் இதுபோலும் தேர்வினைக் குறிப்பிடுகிறது அர்த்த சாஸ்திரம். அவையாவன தர்ம, அர்த்த, காம, பய.

*'தர்மொபதா அர்தொபாத காமொபதா பயொபதா' (விளக்கத்திற்கு அர்த்த சாஸ்திரம் புத்தகம் 1. அதிகாரம் 10 காண்க):*

*த்ரிவர்க் பயசம்சுதானமா யான்ஸ்வெசு கர்மசு*
*அதிகுர்யாத்ய தாஸௌச மித்யா சார்யா*
*வ்யவஸ்தி தாஹ்*

'அரசியல் பணியாளன் நன்னெறியிலிருந்தது மாறுபடாதிருப்பின், உலகமும் மாறுபடாது; ஆகவே, அரசன், அப்பணியாளன் செயலை நாள்தோறும் ஆராய்ந்து பார்ப்பானாக' என்கிறது குறள்.

*நாள்தொறும் நாடுக மன்னன்; வினை*
*செய்வான்*
*கோடாமை கோடாது உலகு*
*(குறள் 520)*

'தன்பால் முறை நாடி வருவார் கூறும் வழக்கினை நாடி, எவரிடத்தும் முகங்கொடுத்து விடாது, நடுவு நிலைமையில் இருந்து, குற்றம், குற்றத்திற்காம் தண்டம் ஆகியவற்றை அத்துறை வல்லாரோடு ஆராய்ந்து அதற்கேற்ப நடந்து கொள்வதே நீதி ஆகும்' என்கிறது குறள்.

*ஓர்ந்து, கண்ணோடாது, இறைபுரிந்து யார்*
*மாட்டும்*
*தேர்ந்து செய்வஃதே முறை*
*(குறள் 541)*

'இவ்வுலகையும் மறு உலகையும் தண்டம் தான் காக்கிறது. நீதி வழங்குவதில், தன் மக்களை யும், பகைவர்களையம், அரசன் ஒரு சேர மதிக்க வேண்டும். தர்மத்தையும் நடுநிலைமையை யும் மதித்து, எவன் ஒருவன் தண்டம் வழங்குகிறானோ அவன் ஒருவனே உலகம் அனைத்தையும் வெற்றி கொள்வன்' என்கிறது அர்த்த சாஸ்திரம்.

*தண்டொஹி கெவலொ லொகம் பரம் செமம் ரக்ஷதி*
*ராஜ்ஞாபுத்ரெ சஸ்த்ரௌ ச யத் ஹாதொஸம் சமம்*
*த்த்ஹ்*
*அஷஸா சத்தி தர்மெண வ்யவஹாரண, சம்ஸ்தயா*
*ந்யாயென ச சதுர்த்ஹென சதுரந்தாம் மஹீம் ஜயெத்*

*(அர்த்தசாஸ்திரம் நூல் - 3 அதிகாரம் - 1)*



'நாட்டை அறநெறியில் காக்க வேண்டிய அரசன் அவ்வாறு காக்காது போயின், அறம் கெட்ட அவன் நாட்டில், ஆக்கள், தம் பாற்பயன் தருவது குறைந்துவிடும்; அந்தணர் தம் அறநூல் களை மறந்து விடுவர்' என்கிறது குறள்.


படிப்பகம்

www.padippakam.com


**ஆபயன் குன்றும்; அறுதொழிலோர்**
**நூல்மறப்பர்**
**காவலன் காவான் எனின்**

***( குறள் 560)***

'தண்டமும் நீதியும் நன்கு செயல் படுத்தப்படாது விடப்படுமாயின், மூன்று வேதங்களும் அவற்றின் அனைத்து நற் செயல்களோடு மறைந்து போகும். நாடாளும் அரசனின் க்ஷத்திரிய தர்மம் அழிந்து போகும்போது, ஆஸ்ரமவாசிகளின் கடமையும் மறைந்து போகும்' என்கிறது மகாபாரதம்.

***மஞ்செத்ரயீ தண்டநீதௌ ஹதாயாம்***
***ஸர்வெ தர்மாஹ் ப்ரக்ஸயெயுஹ் விருத்ஹாஹ்***
***ஸர்வெ தர்மாஸ்சாச்ரமானாம் ஹதாஸ்யுஹ்***
***க்ஷ்ரத்ரெ நஷ்டெ ராஜதர்மெ புராணெ***
***(மகாபாரதம் சாந்திபர்வம் 112:28)***

'எக்காலத்தும் குறையாத விளையுளையும், ஆன்று அமைந்து அடங்கிய சான்றோர்களையும் என்றும் கெட்டு அறியாச் செல்வத்தையும் ஒருங்கே கொண்டதே நாடு எனப்படும். அள விறந்த செல்வத்தைக் கொண்டிருப்பதால், பிற நாட்டவராலும் விரும்பத் தக்கதாய், அழிவும் இல்லாமல், நனிமிக வளம்கொழிப்பதே நாடு' என்கிறது குறள்.

**தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு**

**பெரும் பொருளால் பெட்டக்கது ஆகி,**
**அருங்கேட்டால்**
**ஆற்ற விளைவது நாடு**

***(குறள் 731, 732)***

'எரிபொருள், குடிநீர், உணவு, தருப்பைப்புல், மாலைகள், பரந்தகன்ற திறந்தவெளி ஆகிய இவை எந்தக் கிராமத்தில் பெருமளவில் கிடைக்குமோ, எங்கு, செல்வந்தர் குவிந்து கிடக்கின்றனரோ, மகிழ்ச்சி தரும் இனிய பண்புகளால் நிறைந்த தக்கார் பலர் எங்கு உள்ளனரோ, எது, கள்ளர் களிடமிருந்து பாதுகாப்பினைத் தருகிறதோ, அந்தக் கிராமமே நல்லவர்கள் வாழிடமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்' எனக் கூறுகிறது. பௌதாயன தர்மசூத்திரம். (பகுதி 2 - அத்யாயம் 3 - சூத்திரம் 51).

❀❀❀❀❀

**உ**லக சமாதானத்திற்கு வழிகாட்டும் பண்டை இலக்கியம் என்று ஒன்று உண்டா னால் அது திருக்குறளைத் தவிர வேறு இருக்க முடியாது. மறத்திற்கும் அறத்தைத் துணை யாக்கி யிருக்கிறார் வள்ளுவர். பிறரிடம் குற்றங் காண்பதைவிட்டு ஒவ்வொருவரும் தத்தம் குற்றத்தைத் திருத்திக் கொள்வதன் மூலம் உலக சமாதானத்தை நாட, மனித சமுதாயத்தின் நல்வாழ்வைத் தேட முடியுமென்கிறார் திருவள்ளுவர்.

*- சிலம்புச் செல்வர் ம.பொ.சி.*

'**தி**ருக்குறள் முன்னரே பன்முனையில் ஆராயப்பெற்ற நூலாயிற்றே என்று சிலர் நினைக்கலாம். ஆம்! ஆராய்ச்சிப் பெருக்கம் பொதுளிய நூல்தான். எனினும் குறளாழம் கடலாழம் போல்வதன்று. கற்பவர்தம் நுழை புலத்தின் ஆழத்தைப் பொறுத்தது. வள்ளுவர் ஒருவர்தம் அகத்தின் ஆழத்தைக் கண்டறிய எத்தனையோ ஆராய்ச்சியாழ்வார்கள் காலந் தோறும் தேவை. 'தொட்டனைத்தூறும் மணற் கேணி' என்பதற்குத் திருக்குறள்தானே ஓர் எடுத்துக்காட்டு. 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்பதுவே திருக்குறள் கற்றார் எல்லாரும் இதுவரை கண்ட ஒரு முடிவு. இத்தமிழ் மறை தொடக்கம் காணாததோர் முன்வரலாறும் வழிகுறையாததோர் பின்வர லாறும் கொண்டது. இதனைப்பல நிலையில் ஆராயப் புகுதல் பல்லாயிரம் ஆண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றையும் தமிழின் நாகரிக வரலாற்றையும் அவற்றோடு உலகப் பண்பாட்டு வரலாற்றையும் ஆராயப் புகுவதாகவே முடியும். ஆதலின் திருக்குறட் கேணியை அறிவுக்கருவி யால் எத்துணைக் காலம் தோண்டினும் ஆராய்ச்சி ஊற்று வற்றாது என்று துணிவோமாக!



- வ.சுப.மாணிக்கனார்


❀❀❀❀❀


படிப்பகம்

www.padippakam.com


ந.மணிமொழியன்

# திருக்குறளும் கீதையும்



இந்திய நாட்டுப் பொதுநூல்களின் வரிசையில் முன்னிடம் பெறுபவை இராமாயணமும் மகாபாரதமும் திருக்குறளும் ஆகும். இராமாயணம் - இனியதொரு நீதி நூல்; மகாபாரதம் விரிந்ததொரு சமூகச் சாத்திரம். திருக்குறள் ஓர் உலகப் பொது மறை. மகாபாரதத்தை அருளிய வியாசர், ஏறத்தாழ இலட்சம் சுலோகங்களில் எண்ணிலாச் சித்திரங்களையும் வரலாற்று நடப்புகளையும் பேராற்றலுடன் வருணித்துள்ளார்.

மாபெரும் தங்கச் சுரங்கம் போலவும், பரந்து பட்டதொரு கானகம் போலவும் அமைந்துள்ள மகாபாரதத்தின் உயிர்நிலையாக இருப்பது கீதை. பல்வேறு தத்துவச் சுடர்களும் உபதேச மணிகளும் - இக்கீதையிலிருந்து பிரவகித்துள்ளன. தரும ஞானக்கருவூலமான இக்கீதை, மகாபாரதத்தில் ஒரு சிறு அங்கமே ஆயினும், இந்து சமய சாத்திரத்தின் மணிமுடியாகவே அது திகழுகிறது.

கீதையை கிருஷ்ணபகவான் குருசேத்திரப் போர் நடுவே அர்ச்சுனனுக்கு அருளினார். போரில் தன் தாயாதிகளுடன் மோதி நிற்க வேண்டியதொரு இடர்ப்பாட்டிற்கு உள்ளான அர்ச்சுனனின் கலக்கத்தை அகற்றி அவனைப் போரில் மன உறுதியோடு ஊன்றி நிற்கச் செய்வதற்காகக் கீதை அருளப்பட்டது எனக் கருதப்படுகிறது. என்றாலும், கீதை அருளப்பட்டதன் முழு நோக்கமும் இதில்லை என்பதை அதனை ஆழ்ந்து கற்கும் எவரும் எளிதில் அறியமுடியும். கோழைத்தனத்தை அகற்றுதல் எனும் எளியதொரு நோக்கத்தைவிட, வாழ்வுப் பேருண்மைகளை உணர்த்தி, மக்களின் உள்ளத்தை மூடும் மேகப்படலங்களை அகற்றி, மன உறுதியோடும், கடமைப் பற்றோடும் வாழ்ந்திட வழி காட்டுவதே அதன் விழுமிய நோக்கமாகும்.



***அஞ்சாமை அல்லால்***
***துணைவேண்டா எஞ்சாமை***
***எண்ணி இடத்தான் செயின்***

***(497)***

இந்திய ஞானவாழ்வின் கலைக் களஞ்சியமான கீதைக்கு நிகராக, தமிழ் மண்ணில் மலர்ந்த வாழ்க்கை நூல் - திருக்குறள்.


படிப்பகம்

வாழ்க்கைப் போரில் அவரவர் சந்திக்கும் சிக்கல்களுக் கெல்லாம் எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் தீர்வு நல்கிக் காலத்தை வென்று நிற்பது திருக்குறளின் பெருஞ்சிறப்பாகும். கீதை - திருக்குறள் எனும் இரண்டிலும் பொதிந்துள்ள சில பொதுக்கூறு களை மட்டும் சுருக்கமாக நம் நினைவுப் படலத்திற்குக் கொணர்வோம்.

**இந்திய ஞான வாழ்வின் கலைக் களஞ்சியமான கீதைக்கு நிகராக, தமிழ் மண்ணில் மலர்ந்த வாழ்க்கை நூல் - திருக்குறள். வாழ்க்கைப் போரில் அவரவர் சந்திக்கும் சிக்கல்களுக்கெல்லாம் எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் தீர்வு நல்கிக் காலத்தை வென்றுநிற்பது திருக்குறளின் பெருஞ்சிறப்பாகும்.**

திருக்குறள் நடுநிலைப் பண்போடு உலகிற்கே அறம் உணர்த்திய திருமறையாகவும் பொது மறையாகவும் திகழ்வது. உலக மக்கள் அனைவரின் நல்வாழ்விற்கும் பெருவாழ்விற்கும் ஒப்பில்லாப் பொதுமை நலம் தருவது. உயர் நாகரிகமுடையதாய் இனம், நாடு, மொழி, சமயம், காலம் இவையெல்லாம் கடந்த தனக்குவமை யில்லா முதல் நூலாக விளங்குவது. வேறுபடும் சமயங்கள் கூடத் தமதென உரிமை கொண்டாடிப் போற்றிப் பாராட்டிடும் புகழுடன் திகழ்வது.

மகாபாரதத்தில் ஒரு பக்கம் ஆறு பர்வங்களும், மறுபக்கம் பன்னிரண்டு பர்வங்களும் அமைந்திருக்க அவற்றினிடையே நந்தா விளக்கெனக் கீதை இலங்குகிறது.

கீதையின் முதல் அதிகாரம் - அர்ச்சுனனின் மனப்போராட்டத்தைக் குறிக்கின்றது. அவனது பரிவுணர்ச்சி இதில் மேலோங்கி நிற்கிறது. இரண்டாம் அதிகாரம் - உடலெடுத்த ஆன்மா அழிவில்லாதது எனும் சாங்கிய யோக அடிப்படையை எடுத்துரைக்கிறது; சுயதர்மம் இதில் மிகுதியும் வலியுறுத்தப்படுகிறது. மூன்றாம் அதிகாரம் - கர்மயோகத்தைக் கற்பிக்கிறது. நான்காம் அதிகாரம் - நேர்மையான சிந்தையின் அவசியத்தைப் போற்றுகிற கடவுள் அவதாரம் எடுப்பார் எனும் 'சம்பவாமி யுகேயுகே' வாசகம் இந்த அதிகாரத்தின் மணிமுடியாக நிற்கிறது. 'எந்த வழியில் அனுகினும் அந்த வழியில் நான் அன்பு காட்டுகிறேன்' எனும் தத்துவ தரிசனங்கள் இப்பகுதியின் சிறப்பு அம்சங்கள். ஐந்தாம் அதிகாரம், ஒருவன் ஞானத்தை உணர்ந்து, தன் கர்மங்களைக் கடந்து நிலைபெற வேண்டுமென்ற கர்ம சந்நியாச யோகத்தைக் கற்பிக்கிறது.

ஆறாம் அதிகாரம் - யோகத்தின் குறிக்கோள் பரம்பொருள் அனுபவம் என்பதை எடுத்துரைக்கிறது. எல்லா உயிர்களையும் ஆத்மா வினுள் காணும் - சம தரிசனத்தை, 'காக்கைச் சிறிகினிலே நந்தலாலா - நின்றன் கரிய நிறம் தோன்றுதையா நந்தலாலா' எனப் பாரதிக் கவிஞன் கண்டுணர்ந்த மெய் அனுபவத்தை நமக்குப் புலப்படுத்துகிறது.


ஏழாம் அதிகாரம் - ஞான யோகத்தையும், எட்டாம் அதிகாரம் - பிரம்ம யோகத்தையும் விளக்குகையில், ஒன்பதாம் அதிகாரம் - 'அனைத்தும் என்னுள் உயிர் பிழைத்திருப்பன எது செய்தாலும் எனக்காக நல்கிவிடு' எனும் ராஜயோகத்தை விளம்புகிறது.

பத்தாம் அதிகாரம் - பரம் பொருளின் புகழையும் மாட்சியையும் விண்டுரைக்கிறது. பதினொன்றாம் அதிகாரம் - விசுவதரிசன யோகமாக, அகிலத்துக்கும் நீயே தந்தை எனத் தன்னையே அர்ப்பணித்து வணங்கும் தொழுநிலையைக் காட்டுகிறது.

பன்னிரண்டாம் அதிகாரம் - பக்தியோகத்தையும் பதின்மூன்றாம் அதிகாரம் - அறியப்படும் உண்மைப்பொருள் பற்றியும் பேசுகின்றன. பதினான்காம் அதிகாரம் - குணத்திரய விவாக யோகம். பதினைந்து புருஷோத்தம யோகம். 'மேலே வேரும் கீழே கிளைகளும் உள்ள நித்திய அரசமரம்' இதில் சுட்டப்படுகிறது. பதினாறாம் அதிகாரம் - விவாக யோகம். பதினேழு - 'ஓம் தத் சத்' (ஓம் - அது உனது) எனும் பிரம்மனைச் சுட்டும் அடையாள மந்திரத்தைக் காட்டுகிறது. பதினெட்டாம் இறுதி அதிகாரம் - ஒருவன் பிரம நிலைக்கு உயரும் அமர நிலையைச் சுட்டுகிறது.

*'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்*

அமரநிலை கூட்டிப் பேசும் கீதையைப் போலவே, திருக்குறளும் - வானகம் இங்கு தென்படச் செய்யும் வழிகளை விதந்தோதுகிறது. 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என வையத்து மனிதரெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்திட வரம்புகோலித் தருகிறது. எனவேதான் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டதாகத் தமிழ் நாட்டைப் பாரதிப் புலவன் பாடிப் பரவினான். தாம் யாத்த நூலுக்குச் சிறப்பீட்டித் தந்துள்ளார் வள்ளுவர். கீதை போல, உலகிற்கென ஒரு நூலை அளித்த பெருமையை இந்தத் தமிழ் மண்ணுக்கு அவர் அளித் துள்ளார்.




படிப்பகம்

www.padippakam.com


திருவள்ளுவரின் நூல் - அறம், பொருள், இன்பம் எனப் பகுக்கப்பட்டுள்ளது. அறமும் பொருளும் காதலும் இரு இனத் தாருக்கே உரியன அல்ல. அவை எல்லா மனிதர்க்கும், இந்த உலகிற்கும் பொதுவான வை. 'உலகம் ஒரு குலம்' என்ப தே திருக்குறளின் உயிரோட் டம். உலகம் ஒரு குலமாக விளங்க வேண்டுமெனில், அந்த உயிரோட்டத்திற்கு, அன்பு எனும் குருதியோட்டம் நிலையாக இயங்குதல் வேண்டும். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பதே வள்ளுவத்தின் நிலை யான குருதி யோட்டம். அன்பினை வளர்த்து வாழ்வதே மக்கட் பிறவியின் நோக்கம்; வாழ்க்கைக் கலையின் ஆக்கம். பண்பும் பயனும் உடைய இல்வாழ்க்கையினைத் தேர்ந்து தெளிந்து நடத்திட வலியுறுத்துவதே வள்ளுவர் நெறி. வள்ளுவர் நெறிக்கு அடிப்படை அறம். மனத்துக்கண் மாசில னாக வாழ்வதே அனைத்தறன்; அகிலத்து அறன். இன்று உலகில் மண்டியுள்ள அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்பன எல்லாம் இழுக் கானவை; அறஒழுக்கத்திற்குப் புறம்பானவை.

**அமரநிலை கூட்டிப் பேசும் கீதையைப் போலவே, திருக்குறளும் - வானகம் இங்கு தென்படச் செய்யும் வழிகளை விதந்தோதுகிறது. 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என வையத்து மனிதரெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்திட வரம்புகோலித் தருகிறது.**

திருவள்ளுவர் ஆட்சி நெறியிலும் பொருளாதார முறையிலும் பொதுமை அறமே பேசுகிறார். மன்னராட்சி விளங்கிய காலத்தே எழுதப்பட்டாலும் மக்களாட்சி துலங்கும் காலங்களுக்கும் பொருந்தும் வகையிலேயே அவர் ஆழ்ந்த தொலைநோக்கோடு எழுதியுள்ளார். பொதுமை யும்மனத்தூய்மையும் இருகண்களாக அமைய வாழ்வரங்கு முழுமைக்கும் அவர் வழிகாட்டியுள்ளார். ஒப்புரவு, ஈகை, புகழ், இன்னா செய்யாமை, நட்பு, குடிமை முதலிய எண்ணற்ற சிந்தனைத் தருக்களை நிறுவி அவ் வரங்கு முழுமைக்கும் நிழல் பரப்பியுள்ளார்.

பலர்க்கும் பல வகையாகப் பயன்படும் சிறப் புடைய திருக்குறளை, இலக்கிய நூலாகவும் அறவழிச் சுரங்கமாகவும் இலங்கும் திருக்குறளை, பகவத் கீதையோடு ஒப்பிட்டுச் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

'இந்த நூலை, மூளை கொண்டு கற்காமல் இதயம் கொண்டு உணர வேண்டும்' எனக் காந்தியடிகள் பகவத் கீதையைப் பற்றி எழுதி னார். இது திருக்குறளுக்கும் பொருந்தும். இன்னும் ஒரு படி மேலேசென்று மதிப்பிடுவ தென்றால், திருக்குறளை மூளை கொண்டும் கற்கலாம்; இதயம் கொண்டும் உணரலாம். அறியவும் உணரவும் காலமெல்லாம் வழி காட்டும் கற்ப விருட்சங்களாக விளங்கும் கீதையையும் திருக் குறளையும் ஒரு சில நிலைகளில் நின்று ஒப்பிட்டுப் பார்ப்போம்.



திருக்குறளும், கீதையும் வாழ் வின் முழு நிறைவு நூல்களாகும். மனிதனை நிறை மனிதனாக்கு வது இரு நூல்களின் அடிப்படை யாகும்.

வாழ்விற்கு வழிகாட்டியும், எக்காலத்திலும், எல்லோருக்கும் முரணின்றி அறிவொளி பரப்பி நன்மையும் பயனும் நல்கியும் பெருமையுற்று நிலைத்து நிற்பவை. உண்மை நிறைந்து, அறிவுக்கு ஏற்புடையதாய் மறைமொழிகளாக மனிதனை நிறைவுபடுத்தும் நிறைமொழிகளாகக் காலத்தை யும் வென்று வாழ்பவை.

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்*

தூய அன்பையும், ஞாயிறு போன்ற அறியாமை இருளகற்றி நலம் செய்யும் தெளிந்த செயல் அறிவையும், உறுதியான ஆற்றலையும், ஒருங்கே அமையப் பெற்றவன் நிறை மனிதன் ஆகின்றான் என்று கீதை இயம்புகிறது.

கண்ணன் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையே அவருடைய கூற்றுக்கு இலக்கணமாகியது. 'மனத்தி லுள்ள மாசு நீக்குக' என்றார் கண்ண பெருமான்.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற**

நலத்தை நிலை நாட்டுபவர்க்கு நல்லவை எல்லாம் தம் கடமை என்றார் - கண்ண பெருமான்.

**கடன் என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு**

என்றார் வள்ளுவர்.

'உயிர்களிடத்து அன்பு கொண்டு வாழ்க' என்று அன்புருவாகவே வாழ்ந்தார் கண்ணன்.

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு**

**அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு**

என அன்பின் பெருமை பேசினார் வள்ளுவர்.

கருணையுடன் பிறர் துன்பம் கண்டு இரங்கித் துன்பம் நீக்கி இன்பம் நல்க வேண்டும். அருள் கொண்டு தொண்டு


படிப்பகம்

செய்து வாழும் போதுதான் நிறை நிலை, முழு நிலை, தெய்வநிலை பெற இயலும். பல வகையால் ஆராய்ந்தாலும், அன்பும் கருணையும் தான் துணை. ஆகவே, 'நல்லாற்றின் நாடிஅருள் ஆள்க. பல்லாற் றான் தேரினும் அஃதே துணை' என்பார் வள்ளுவர். அறிவு பெற்றதன் பயனே பிறவுயிர் கள் துன்பம் கண்டு இரங்கி அன்பு கொண்டு நலம் செய்வது தான். அதுவன்றி பெற்ற அறிவால் பயனுண்டோ? என்று வினவுவார் வள்ளுவர்.

**திருவள்ளுவர் ஆட்சி நெறியிலும் பொருளாதார முறையிலும் பொதுமை அறமே பேசுகிறார். மன்னராட்சி விளங்கிய காலத்தே எழுதப்பட்டாலும் மக்களாட்சி துலங்கும் காலங்களுக்கும் பொருந்தும் வகையிலேயே அவர் ஆழ்ந்த தொலைநோக்கோடு எழுதியுள்ளார்.**

**அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்**
**தன்நோய் போல் போற்றாக்கடை**

'வலிவு படைத்தோன் வாழ்வுக் குரியவன்' என்று கூறுகிறது கீதை 'உள்ளம் உடைமை உடைமை', 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்; எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்று உள்ள வலிவையும், பேராற்றலையும் வியந்து பேசுவார் வள்ளுவர். 'எனைத் திட்பம் எய்தியக் கண்ணும் வினைத் திட்பம் வேண்டாரை வேண்டாது உலகு' என்பார் வள்ளுவர். பேராற்றல் படைத்த மனிதன் தன் ஆற்றலை உணர வேண்டும். 'அரிய என்று ஆகாத இல்லை. ஆதலின் சிறியவராய், புன்மைய ராய் சீர் குன்றாமல், பெரியோராய் 'செயற்கரிய செயல் செய்ய வேண்டும்.'

மனித உயிர்களை அன்போடு நேசித்து 'அன் பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?'' என்றுணர்ந்து, என்பும் பிறர்க்கு உரியதாக்கி அன்புற்று வாழ்க! கொத்தாக மலர்ந்து மணம் வீசும் மலர்கள் போல, ஒளி வீசும் பகலவன் போல, அறிவு மணம் மலர்க; அறிவாற்றல் நிறைக - நல்லவை யெல்லாம் கடனாகக் கொண்டு கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்க!

இத்தகு செயல்களாலே உலகம் இன்புற்று வாழும் எனக் குறளும் கீதையும் உலகப் பொது நூல்களாய் வழிகாட்டி நிற்கின்றன.

காமம், கோபம், மயக்கம், யான், எனது என்னும் செருக்கு நீங்கித் தெளிந்த மன முடைய மெய்யறிவு பெற்றவர் துயருறுவ தில்லை. எல்லா உயிர்களிடமும் தூய சம அன்பு செலுத்துபவன் என்னுடன் ஒன்றறக் கலக்கின்றான் என்று கூறும் கீதை.



**காமம் வெகுளி - மயக்கம்இவை மூன்றன்**
**நாமம் கெடக் கெடும் நோய்**

**யான் எனது என்னும் செருக்கு**
**அறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்**

காமமும் மோகமும் - பேராசையும்
கோபமும் - மயக்கமும் நீங்கி
நான் - எனது என்ற அகந்தைகளும்
*நீங்கி வாழ்ந்தால் துன்பங்கள் மறையும்.*

இன்பங்கள் பெருகும். வேண்டுதல் வேண்டாமை அல்லாது கடமையாற்றும் போது எண்ணியவை சொல்லி யவை மாறுபடாது. உறுதியான இடைவிடாப் பயிற்சியால் செயல் ஆற்றும் போது மனம் மகிழ்வுறும் - உலகம் அமைதியுறும். உலகம் வாழும்.

கீதையும் திருக்குறளும் வாழ்விற்கு நம்பிக்கை அளிப்பவை, வாழ்க்கையில் நேரிடும் இடர்கள் துன்பங்கள் நீங்குபவை. அச்சம் தவிர்த்து, மோகம் நீக்கி, மயக்கம் தவிர்த்து, மும்மலம் நீக்கி, கடமை யை உணர்த்தி, செயலினைப் போற்றி, மனித குலத்தை மாண்புறச் செய்து வானுறையும் தெய்வத் திற்கு இணையாய் அமரர்களாய் வாழ வழி வகுப்பவை.

கீதை காட்டும் பாதையும், வள்ளுவர் காட்டும் வழியும், ஒன்றோடு ஒன்று இசைந்தவை; இணைந் தவை. கீதையில் குறளையும் குறளில் கீதையையும் காண்கின்றோம்.

●●

## உலகத் திருக்குறள் மாநாடு கருத்தரங்கு, திருச்சிராப்பள்ளி

திருவள்ளுவர் ஆண்டு 2030 மார்கழித் திங்கள் (சனவரி 2000) திருச்சிராப்பள்ளியில் உலகத் திருக்குறள் மாநாடு நடைபெற உள்ளது. 'புதிய நோக்கில் திருக்குறள்' என்னும் பொருளில் அறிஞர்கள் ஆய்வுரை வழங்க உள்ளனர். ஆர்வலர் கலந்து கொள்க:


*தொடர்பு முகவரி:*

செயலாளர், உலகத் திருக்குறள் மாநாடு 'உமரகம்' 6, பேராசிரியர் குடியிருப்பு, சுப்பிரமணியபுரம், திருச்சிராப்பள்ளி. இந்தியா, தொலை பேசி : 420 223, பேக்ஸ்: 0091-431-471008.

www.padippakam.com


தொ.பரமசிவன்

# இன்றைய தமிழ்மரபு ஆக்கத்தில் திருக்குறள்



ஐரோப்பிய அறிவொளி இயக்கத்தின் பின் விளைவாகப் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இந்திய மண்ணில் சில புதிய காற்றுகள் வீசத் தொடங்கின. 1799இல் கட்டபொம்மன், 1801இல் ஊமைத்துரை, மருதுபாண்டியர் ஆகிய ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்கள் தமிழ் மண்ணில் சாய்க்கப்பட்டதற்கு அரை நூற்றாண்டிற்கு முன்னரே கிழக்கிந்தியப் பகுதியில் காலனி யாதிக்கம் வலிமையாகக் கால்கொண்டுவிட்டது. அடிமைப்படுத்திய மண்ணின் மரபுகளையும் மக்களையும் புரிந்து கொள்ளும் முயற்சியில் காலனி ஆட்சியாளர்கள் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இறங்கிவிட்டனர். இந்த வகையில் ஐரோப்பியப் பாதிரிமார்களின் பணி அவர்களுக்குப் பேருதவியாக இருந்தது. கி.பி. 1799-இல் கல்கத்தாவில் இருந்த பிராமணப் பண்டிதர்களின் உதவியைக் கொண்டு இந்திய நாட்டில் வழக்கத்தில் இருந்த அறங்களையும் சட்டங்களையும் தொகுக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர். மனுதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட Hindu Law என்னும் அந்தத் தொகுப்பே பின்னர்ப் பல்லாண்டு காலம் காலனி ஆட்சியாளர்களால் தருமசாத்திரமாகக் கொள்ளப் பட்டது.

ஆனால், தென்னிந்தியாவிற்கு வந்த கிறித் துவப் பாதிரிமார்கள் முற்றிலும் வேறுபட்ட ஒரு அறநூலை இங்குக் காண நேர்ந்தது. வில்லியம் ஜோன்ஸ்சின் முயற்சிக்கு முன்னரே. கி.பி. 1794 இல் கின்டர்ஸ்லீ (kindersley) என்பவர் திருக்குறளில் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இருந்தார் (Extracts from the Teroo Valluvar Kuddul - Ocean of wisdom forming part of specimens of Hindoo literature, London, W.Bulmer & Co.) 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் திருக்குற ளில் சில பகுதிகளை இலத்தீனில் மொழி பெயர்த்து இருந்தார். கி.பி. 1811 இல் அம்பலவாணக் கவிராயர் என்பவர் திருக் குறள் மூலத்தைத் தமிழில் அச்சிட்டதாகத்




படிப்பகம்

www.padippakam.com



தெரிகிறது. அதே ஆண்டில் எல்லிஸ் (F.W. Ellis) திருக்குறளின் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு இருந்தார். அன்று சென்னை மாகாணத்தின் தலைமைக் கருவூல அதிகாரி பொறுப்பில் இருந்த எல்லீஸ், வள்ளுவர் உருவம் பொறித்த தங்கக் காசினை வெளியிட்டதனை அறிஞர் ஐராவதம் மகாதேவன் கண்டறிந்து வெளிப்படுத்தி உள்ளார். கி.பி. 1840-இல் முகவை இராமனுசக் கவிராயர் துணையோடு பரிமேலழகர் உரையோடும் ஆங்கில மொழிபெயர்ப்போடும் ட்ரூ (Drew) வெளியிட்ட திருக்குறள் வெளிவந்திருக்கிறது. பின்னர் திருக்குறளுக்கு 1896-இல் ட்ரூ, லாசரஸ் ஆகியோரின் முழுமையான ஆங்கில மொழி பெயர்ப்பும் அதே ஆண்டில் போப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பும் வெளிவந்தன. கி.பி. 1891 இல் நல்லூர் ஆறுமுக நாவலர் திருக்குறள் பரிமேலழகர் உரையினைப் பதிப்பித்து வெளியிட்டார். ஆக மொத்தத்தில் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் காலனி ஆட்சியாளர்களும் பாதிரிமார்களும் திருக்குறளை முற்றுமாக அறிந்திருந்தனர் எனத் தெரிகிறது.

**சாதிவருணக் கோட்பாடுகளுக்கு மாற்றான சிந்தனைகளை முன்வைக்கக் கிறித்துவப் பாதிரிமார்களுக்குத் திருக்குறளும் சித்தர் பாடல்களும் உதவியாக இருந்தன எனக் குறிப்பிடும் இர்சிக் அவ்வகையான முயற்சிகளில் ஒன்றாக ஹென்றிமார்ட்டின் 1865இல் எழுதிய கிரன மாளிகை என்ற நூலைக் குறிப்பிடுகிறார்.**

சாதிவருணக் கோட்பாடுகளுக்கு மாற்றான சிந்தனைகளை முன்வைக்கக் கிறித்துவப் பாதிரிமார்களுக்குத் திருக்குறளும் சித்தர் பாடல்களும் உதவியாக இருந்தன எனக் குறிப்பிடும் இர்சிக் அவ்வகையான முயற்சிகளில் ஒன்றாக ஹென்றி மார்ட்டின் 1865இல் எழுதிய கிரன மாளிகை என்ற நூலைக் குறிப்பிடுகிறார்.

இந்துசாத்திரம் என்று அன்றைய ஆட்சியாளர்கள் நம்பியிருந்த சாதி வருண அடிப்படையில் மக்களை அடையாளப்படுத்திய வடமொழி நூல்களுக்கு மாற்றாக ஒரு தமிழ்நூல் இருப்பதனை அவர்கள் கண்டனர். வேதத்தின் தலைமையினை முன்னிறுத்தித் தம்மைச் சமூகத்தின் தலைவர்களெனக் கொண்டு ஆன்மீக, சமூக மேலாண்மை செய்துவந்த பிராமணர்களின் சார்பில்லாத நூலாக அது விளங்குவதையும் கண்டனர். கி.பி. 1828 இல் தமிழ் இலக்கணம் எழுதிய சி.டி.இரேனியஸ் அடிகளார் 'பிராமணர்கள் பொய்க் கதைகளைக் கூறி ஜனங்களை ஏமாற்றுகிறார்கள்' என்று தம் இலக்கண நூலில் ஒரு எடுத்துக்காட்டு வாக்கியம் அமைக்கிறார். கி.பி. 1832-இல் தமிழில் பூமி சாஸ்திரம் என்ற முதல் அறிவியல் நூலை எழுதிய இரேனியஸ் அடிகளார் பிராமணியத்தை அறிவு வளர்ச்சிக்கான தடையாகக் கருதியிருக்கிறார் என்று தோன்றுகிறது. இவரைப் போன்ற கருத்துடையவர்களுக்குத் திருக்குறள் தமிழரை அடையாளம் காட்டும் மாற்று நூலாகத் தென்பட்டிருக்க வேண்டும். (இரேனியஸ் அடிகளாரும் திருக்குறளில் 13 அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இருப்பதாகக் கூறுகின்றனர்) பின்னர் பேராயர் கால்டுவெல்லின் திராவிட மொழிகள் பற்றிய கண்டுபிடிப்பு தமிழ் அறிஞர்களிடையே புதிய சில சிந்தனைகளைத் தோற்றுவித்தது. 1880 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த கர்னல் ஆல்காட், பிளவட்ஸ்கி அம்மையார் இருவரும் தமிழ்நாட்டில் பிரம்ம ஞானசபை என்ற அமைப்பின் மூலம் 'இந்து' எனும் கோட்பாட்டைத் தத்துவ ரீதியாகவும் முன்வைத்தனர். சென்னையில் தொடங்கப்பட்ட இந்து நாளிதழும் இந்துப் பத்திரிகை வளாகத்தில் தொடங்கப் பெற்ற காங்கிரசின் முன்னோடி இயக்கமான சென்னை மகாஜன சபையும் அதனைத் தொடங்கிய ஜி.சுப்பிரமணிய ஐயரும் அனந்தாச்சார்லுவும் பிரம்மஞான சித்தாந்தத்தின் பின்விளைவுகளேயாவர்.

வேதத்தின் உயர்வும் வடமொழி உயர்வும் பிரம்மஞானசபையாரால் உயர்த்திப் பிடிக்கப் பெற்றன. தேசிய சமஸ்கிருத இயக்கம் என்ற ஒன்றும் பிரம்மஞான சபையாரால் தொடங்கப் பெற்றது. பிராமணிய நலன்களைப் பிரதிபலித்த இச்சபையாருக்கு எதிராகச் சைவர்கள் கிளர்ந்து எழுந்தனர். பாளையங்கோட்டை தூத்துக்குடி ஆகிய இடங்களில் சைவ சபைகள் தொடங்கப் பெற்றமை இக்காலத்தில்தான். இதே நேரத்தில் வேதமல்லாத மரபுகளை முன்னிறுத்தி பிராமண எதிர்ப்புணர்வினால் தாழ்த்தப்பட்டோர் தலைவரான அயோத்தி தாச பண்டிதர் திராவிட என்ற சொல்லைச் சமூக அரசியல் தளத்தில் வலிமையாக முன்வைத்தார். 'திராவிட பாண்டியன்' என்ற இதழை 1886 இல் தொடங்கி ஜான் இரத்தின அடிகளாரை அதன் ஆசிரியராக்கினார். அதனை




padippakam

www.padippakam.com


அடுத்துத் தமிழ்ச் சைவ முன்னோடிகளில் ஒருவரும் திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபையினைத் தொடங்கிய வரும் தத்துவப் பேராசிரியரு மான மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை சமூக அரசியல் தளத்தில் ஆரியம் திராவிடம் என்ற எதிர்வினை முன்வைத்த தோடு மனுநீதி திருக்குறள் என்ற சாத்திர எதிர்வினையை யும் வெளிப்படையாக முன் வைத்தார். இதற்கிடையில் பௌத்த மதத்தின் பக்கம் சார்ந்து சென்னை மகாபோதிச் சபையில் பங்கெடுத்துக் கொண்டிருந்த அயோத்திதாச பண்டிதர் திருக்குறளைப் பௌத்த மதச்சார்போடு விளக்கத் தொடங்கினார். இதே காலகட்டத்தில் (1898) புராட்டஸ்டண்டு கிறித்துவத் தத்துவத்தை விளக்கும் வகையில் 'இரட்சண்ய சமய நிர்ணயம் அல்லது வஸ்து நிர்ணய பிரகாரணம்' என்ற நூலை கிறிஸ்துவக் கவிஞர் எச்.ஏ.கிருட்டினப்பிள்ளை எழுதினார். இத்தத்துவ நூலில் பல இடங்களில் 'மகாஞானி யாகிய திருவள்ளுவர்', 'திருவள்ளுவர் என்னும் மகாஞானி', 'தமிழ்நாட்டுத் தீபம் போன்ற திருக்குறள்' என்று திருவள்ளுவரையும் திருக்குற ளையும் பல இடங்களில் அங்கீகாரம் செய்கிறார். மறுபுறத்திலே 'ஆரியராலே இந்தியாவில் விக்கிர காராதனை தடிப்புக் கொண்டது மாத்திரமல்ல. இந்துக்களுள் சதுர்வர்ண பேதங்களும் பஞ்சமருக் குள் தொண்ணூற்றாறு ஜாதிவிகற்பங்களும் உற்பத்தியாயின. இத்யாதி பேதங்களுக்குக் காரணபூதராயிருந்தவர் ஆரியராய் இருந்த பிராமணரே என்றும் எழுதிச்செல்கிறார். இதே காலஎல்லையில்தான் இந்தக் கோட்பாட்டாளர் களால் நடத்தப்பட்ட திருவல்லிக்கேணி இந்து தியலாஜிகல் பள்ளியின் தமிழாசிரியரும் வேதாந்தியு மான கோ.வடிவேலு செட்டியார் திருக் குறளுக்கு விளக்கம் எழுதுகிறார். ஆக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் திருக்குறள் சைவர்களாலும் கிறித்தவர்க ளாலும் தாழ்த்தப் பட்டவர்களாலும் வேதாந்திகளாலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட நூலாகக் காட்சியளித்தது. மறுபுறத்தில் அது வேதமரபுகளுக்கும் மனுநீதிக்கும் மாற்றான தாகவும் தமிழர்களின் சொந்த அடை யாளங்களில் ஒன்றானதாகவும் காட்சி யளித்தது.

**இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் திருக்குறள் சைவர்களாலும் கிறித்தவர்களாலும் தாழ்த்தப்பட்டவர்களாலும் வேதாந்திகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூலாகக் காட்சியளித்தது. மறுபுறத்தில் அது வேதமரபுகளுக்கும் மனுநீதிக்கும் மாற்றானதாகவும் தமிழர்களின் சொந்த அடையாளங்களில் ஒன்றானதாகவும் காட்சியளித்தது.**



1905-க்கும் 1935-க்கும் இடையில் தொடங்கப்பட்ட தமிழ் இதழ்களின் முகப்புக் குறிக்கோள்களாகத் திருக்குறள் பாடல்கள்அச்சிடப்பட்டுள்ளன.

விவசாய தீபிகை (சுழன்றும் ஏர்ப்) 1905 டிசம்பர்

அறிவு விளக்கம் (எப்பொருள் யார்) 1911 பிப்ரவரி

வித்தியாபாநு (கற்க கசடற) 1914

தமிழகன் (தவஞ்செய்வார்) 1915

தனவைசிய ஊழியன் (குடிசெய்வல் ஊழையும்) 1920

குமரன் (கற்றதனால்) துந்துபி

நச்சினார்க்கினியன் (கற்க கசடற ) 1923 அக்டோபர்

வைத்தியக் களஞ்சியம் (அன்பிலார்) 1923,

அன்பானந்தன் (அன்பிலார்) 1923

மாருதி (தொட்டனைத்தூறும்) 1926 அக்டோபர்

வீரசைவம் (கற்க கசடற) 1930 ஜனவரி

சன்மார்க்கன் (பெருமைக்கும்) 1933 நவம். - டிசம்பர்

தமிழ்நேசன் (தொட்டனைத்) துந்துபி

தமிழர்நேசன் (மலர்மிசை) 1935 ஜனவரி

செல்வக் களஞ்சியம் (தொட்டனைத், வெள்ளத்) ஆங்கிரஸ.

மேற்குறித்த வரலாற்றுப் போக்கினைச் சரியாக அவதானித்து கலாநிதி நா.சுப்பிரமணியன் கௌசல்யா சுப்பிரமணியன் ஆகியோர் கூறும் கருத்து இவ்விடத்துப் பொருத்தமாக உள்ளது. 'கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலே தமிழரின் தனித்தன்மை வாய்ந்த பண் பாட்டுப் பாரம்பரியம் பற்றிய உணர்வு முளைவிட்டதைத் தொடர்ந்து இந்த நூற் றாண்டின் குறள்மீது தனிக்கவனம் ஏற்பட லாயிற்று. இந்து மதத்தின் தர்மசாத்திர சார்பான வர்ணாசிரம தர்மமுறைகளுக்குப்


படிப்பகம்

www.padippakam.com


புறம்பான பண்பாட்டுத் தளத்தை நாடமுற்பட்டவர்களுக்குக் குறளின் பொதுமை அறம் தக்கதொரு மாற்றுத் தளமாகக் கவனத்தைப் பெற்றது. அக்காலம் வரை பல்வேறு சமயப்பிரிவினராலும் உரிமை கொண்டாடப்பட்டு வந்து அந்த நூலை, அத்தகு நிலையினின்று வேறுபடுத்தி நோக்கித் தமிழரின் பொதுவான மறை நூலாகக் காணும் சிந்தனைகள் முளைவிட்டன.

20 ஆம் நூற்றாண்டில் தமிழர்களின் தாய்மொழி உணர்ச்சி விரைவாக வளர்வதற்கு எதிர்மறையான காரணிகள் பல தூண்டுகோலாக இருந்தன. அவற்றுள் சில

1. சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மொழியாக மட்டுமே தமிழ் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. இடைநிலைப்பட்ட வகுப்பில் விருப்பப் பாடமாக மட்டுமே இருந்த தமிழையும் நீக்கிவிடும் முயற்சியும் சென்னைப் பல்கலை ஆட்சிப் பேரவையில் நடைபெற்றது.

2. 1915 முதல் 1930 வரை ஆந்திரப் பல்கலைக்கழகமும் மைசூர்ப் பல்கலைக்கழகமும் போலத் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஒன்று வேண்டுமெனத் தமிழறிஞர் சிலர் குரல் எழுப்பியபோது அதற்கு உரிய மதிப்பு கிடைக்காதது.

3. 1930 ஆம் ஆண்டுகளில் பிறந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சி.

ஏறத்தாழ 40 ஆண்டு காலம் பெருகிவந்த தமிழுணர்ச்சி சமய எல்லைகளை மீறித் திருக்குறளைத் தமிழர்களின் சுய அடையாளங்களில் ஒன்றாக ஆக்கிக் காட்டியது. குடி அரசு 22-05-1938 இதழில் வெளியாகியுள்ள ஒரு கேலிச் சித்திரத்தில் கிரீடமணிந்து ஒரு கையில் தொல்காப்பியத்தையும் மற்றொரு கையில் திருக்குறளையும் வைத்துள்ள பெண்ணை ராஜாஜி கத்தியால் குத்தப் போவதாக வரையப் பட்டிருந்தது **'தலைப்பு - தமிழ்த்தாய்மீது ஆச்சாரியார் கத்தி வீச்சு.'**

ஒரு தேசிய இனமாகத் தம்மை அடையாளம் காணும் முயற்சியில் தமிழர்கள் இறங்கியபோது வடமொழி வேதங்களை உயர்த்திப் பிடித்த பிராமணியத்திற்கு எதிராகத் திருக்குறளைத் தமிழ் வேதம் எனக் கருதினர். நாடெங்கும் வள்ளுவர் பெயராலும் திருக்குறளின் பெயராலும் மன்றங்கள் தோன்றின. 1927 இல் தென்காசித் திருவள்ளுவர் கழகம் தொடங்கப்பட்டது.

**ஏறத்தாழ 40 ஆண்டு காலம் பெருகிவந்த தமிழுணர்ச்சி சமய எல்லைகளை மீறித் திருக்குறளைத் தமிழர்களின் சுய அடையாளங்களில் ஒன்றாக ஆக்கிக்காட்டியது.**

1935-இல் சென்னையில் திருவள்ளுவர் திருநாட்கழகம் கட்சி மத எல்லைகளைத் தாண்டித் தமிழர்கள் பலரால் தொடங்கப்பட்டது. இதன் சார்பில் 1935 இல் மறைமலை அடிகள் தலைமையிலும் 1936 இல் டாக்டர் உ.வே.சா. தலைமையிலும் 1937-இல் பாகனேரியில் சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் தலைமையிலும் மாநாடுகள் நடைபெற்றன. தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தைப் பெரியார் முன்வைத்ததும் இந்தக் காலப் பகுதியிலேயாகும்.

1947 இல் கல்விஅமைச்சர் அவிநாசிலிங்கம் பள்ளி வகுப்புகளில் திருக்குறளைக் கட்டாயமாகப் போதிக்க வேண்டும் என் அறிவுறுத்தினார்.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் சமூக நீதிக்கான தோட்டமாகப் பிறந்து பின்னர்த் தேசிய இன அடையாளம் தேடும் முயற்சியாக வளர்ந்து நின்ற தமிழ்ச் சமூகத்தின் சமூகப் பண்பாட்டு, அரசியல் நிகழ்வுகளில் திருக்குறள் நூல் ஒரு தனியிடத்தைப் பெற்றிருந்தது. தாங்கள் கருதிய தம் மரபுகளைத் தமிழர்கள் இருபதாம் நூற்றாண்டில் மீட்டுருவாக்கம் செய்து கொள்ளத் திருக்குறள் துணையான வரலாறும் இதுதான்.

●●

## திருக்குறள் களஞ்சியம்

திருக்குறள் பதிப்புகள், ஆய்வு நூல்கள், சொல்லடைவுகள் திருக்குறள் பற்றிய அரிய வரலாற்றுப் பண்பாட்டுச் செய்திகள், காலந்தோறும் வெளிவந்த திருக்குறள் கருத்துப் பெட்டகங்கள், குறள் இயக்கங்கள், குறள் இதழ்கள் / மலர்கள் எனப் பல்வேறு பதிவுகள் இக்களஞ்சியத்தில்...!




திருக்குறள் அன்பர்கள் தாங்கள் வைத்திருக்கும் அரியநூல்கள், செய்திகள் பற்றிய விவரங்களை வள்ளுவத்திற்குத் தந்து உதவுங்கள். நன்றியுடன் பதிவு செய்யப்பெறும்.


படிப்பகம்

www.padippakam.com


பா.வீரமணி

# வள்ளுவரின் உலகப் பொதுமை



சமயம் பற்றிய சிந்தனை

திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்தை ஆராய்ந்த ஆய்வாளர் பலர், வள்ளுவரைத் தத்தம் சமயத்திற்குரியவராக விளக்கம்செய்தனர். நடுநிலையில் நின்று ஆய்வு செய்யும் அறிஞர்கள்கூட வள்ளுவரைச் சமயக் கூட்டுக்குள் புகுத்தியே முடிவு கண்டனர். எதிலும் காய்தல் உவத்தல் அகற்றி உண்மை காணும் நோக்குக் கொண்ட தமிழ்ப்பெரியார் திரு.வி.க. அவர்களும் வள்ளுவரைச் சமண சமயத்தினராகவே கண்டார். சிறந்த ஆராய்ச்சி அறிஞராக விளங்கிய வையாபுரிப்பிள்ளை அவர்களும் அவ்வாறே கருதினார். ஆனால் உண்மையில், திருக்குறளில், பல சமயக் கருத்துகள் உள்ளனவேயல்லாமல், ஒரு சமயத்தை மட்டுமே வலியுறுத்தும் நிலை அதில் இல்லை. வள்ளுவர் தம்மை ஒரு சமயத்திற்காக வரித்துக் கொண்டவரும் அல்லர். திருக்குறளை ஆழ்ந்து நோக்கினால் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களின் அடிப்படையான சிந்தனைகளுக்கு முற்றிலும் மாறான பல சிந்தனைகள் உண்டு. பல சமயச் சிந்தனைகளும் திருக்குறளில் உண்டு. பண்டைய காலத்தில் இருந்த பல சமயங்களை வள்ளுவர் நன்கு அறிந்துள்ளார். அவற்றுள் எதனையும் தனக்குரிய சமயமாக அவர் கொள்ளவில்லை. தம்மை ஒரு சமயத்திற்குரியவ ராகக் காட்டும் நோக்கு அவர்க்கு இயல்பாகவே கிடையாது. எல்லாச் சமயங்களிலுமுள்ள நற்கருத்துகளைத் தம் சிந்தனைக்கேற்ப ஏற்று அவற்றை ஒரு பொதுஅறமாக உணர்த்தினாரேயன்றி ஒரு சமய எல்லைக்குட்பட்டு உணர்த்தினார் அல்லர். திருக்குறளுக்கு ஒப்புயர்வற்ற அரும்பெரும் தத்துவ உரை வகுத்த பரிமேலழகரின் பின்வரும் விளக்கத்தை நோக்கினால் வள்ளுவரின் உள்ளத்தை நன்கு உணரலாம்.



'எல்லா நூல்களிலும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் அவர்க்கியல்பாதலின்' (8)



படிப்பகம்

எல்லா நூல்களிலும் உள்ள நல்லவனவற்றை எடுத்துக் கூறியதுபோல, எல்லாச் சமயங் களிலும் உள்ள நல்லனவற்றை எடுத்து நமக்குப் பொதுப்படக் கூறினார் என்பதே உண்மை.

'பௌத்தம் சமணம் முதலிய சமயக் கோட்பாடுகளுக் கிணைய மனித வாழ்க்கையை அமைத்துக் காட்டமுயன்ற காப்பியப் புலவர் களைப் போலன்றியும் மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி கூற முனைந்தவர் வள்ளுவர்' (9)

**ஒவ்வொரு சமயத்திற்கும் ஒரு கடவுளோ, தலைவரோ உண்டு. ஆனால், திருக்குறளில் சமயத்தின் பெயரையோ, கடவுளின் பெயரையோ சிறிதும் காண முடியவில்லை .**

வள்ளுவர் எந்தச் சமயத்தவர் என்று இன்றும் அடையாளம் காண முடியாத அளவுக்குப் பொது வாகவே தமது கருத்துகளைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். எப்படிப் பார்த்தாலும் இது அசாதாரண அணுகுமுறையேயாகும்.

அவர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர் என்று நாம் கோடு காணும் அளவுக்குக் கூட அவர் இடந்தர வில்லை. எனவே சமயம் கடந்து நின்று தமது நூலை எழுதியிருக்கிறார் என்பதே இங்கு நாம் எண்ண வேண்டிய ஒன்றாகும் (10).

வள்ளுவர் சமயங் கடந்து நின்றவர் என்பதே உண்மை என்பதை இவ்விரு மேற்கோள்களால் இனிது உணரலாம். ஒரு சமயத்திற்குரியவராக வள்ளுவர் இருந்திருப்பாராயின் அச்சமயத் தையோ, அச்சமயத்தின் கடவுளையோ அவர் குறிப்பிட்டிருப்பார். ஆனால், அவர் அவ்வாறு குறிப்பிடவில்லை என்பதால் அவரின் பொதுமைக் கொள்கையை உணரலாம்.


> **சமயக் கணக்கர் மதிவழி கூறாது**
> **உலகியல் கூறிப் பொருளிதுவென்ற**
> **வள்ளுவன்**

என்று கல்லாடம் கூறுவதினால் வள்ளுவரின் சமயங்கடந்த சிந்தனையைத் தெளிவாக உணர லாம். கல்லாடம் சைவத்தையும், சிவனையும் போற்றும் நூல். சைவ சமயப் பெருமையைப் பேசும் நூலே, தம் நூலில் சமயங் கடந்த உலகியலைப் பேசுபவரே வள்ளுவர் எனப் போற்றுகிறது எனில் வள்ளுவரின் பொது மைச் சிந்தனைக்கு இதனைக் காட்டிலும் பெருமை உண்டோ?

ஒவ்வொரு சமயத்திற்கும் ஒரு கடவு ளோ, தலைவரோ உண்டு. ஆனால், திருக் குறளில் சமயத்தின் பெயரையோ, கடவு ளின் பெயரையோ சிறிதும் காண முடிய வில்லை .

திருக்குறளுக்கு முற்பட்ட சங்க இலக்கியத்தில், சிவன், விட்ணு, முருகன், வருணன், இந்திரன், கொற்றவை போன்ற தெய்வங்கள் குறிப்பிடப்பட் டுள்ளன. இத்தனைத் தெய்வங் கள் வள்ளுவர் காலத்தில் இருந்தும், அவர் கடவுள் வாழ்த்திலோ, பிற அதிகாரங் களிலோ குறிப்பிட்டார் அல்லர். கடவுள் வாழ்த்தில் 'ஆதிபகவன்' 'வாலறிவன்' 'மலர்மிசை ஏகினான்' 'வேண்டுதல் வேண்டாமை இலான்' 'பொறிவாயில் ஐந்தவித்தான்' 'தனக் குவமை இல்லாதவன்' 'அறவாழி அந்தணன்' 'எண் குணத்தான்' என இறைவனின் தொன்மை யையும், பண்பையும், சிறப்பையும் போன்றி னாரேயன்றி, இறைவனின் பெயரை எங்கும் குறிப்பிடவில்லை. இங்கு இன்னொன்றை யும் நோக்குதல் வேண்டும். கடவுளுக்குரிய பண்பு களாகக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை மக்களும் பெறவேண்டும் என்பதும் அவரின் உட்கோ ளாகும்.

பல தெய்வ வழிபாடுகள் உள்ள நாட்டில், இறைவனே எல்லாம் எனப் போற்றும் பண்டைய நாளில் வள்ளுவர் இறைவனின் பெயரைக் குறிப் பிடாதது பெரும் வியப்பிற்குரியதே. வள்ளுவர் வாழ்ந்த நிலவுடைமைச் சமுதாயத்தில், மன்ன னோ, பெரும்பான்மையான மக்களோ ஒரு குறிப்பிட்ட சமயத்தையோ கடவுளையோ போற்றி வழிபடுவது இயல்பே. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வள்ளுவர் காலத்திலும் இருந்திருக் கும். அப்படிப்பட்ட காலத்திலும், பெரும் அதிகாரத்திற்கோ, செல்வாக்கிற்கோ, பெரும்பான் மையான மக்களின் இயல்பிற்கோ ஆட்படாமல், தம்முடைய தனிச்சிந்தனையைக் கடவுள் வாழ்த் தில் அவர் நிலைநிறுத்தி இருப்பது வியப்பினும் வியப்பே. வள்ளுவரின் கடவுள் வாழ்த்தை எந்தச் சமயத்தினரும், எந்நாட்டினரும் ஏற்கலாம். போற்றலாம், காரணம் உலகில் உள்ள யாவரும் ஏற்குமளவுக்கு அதில் பொதுமை இருப்பதே யாகும்.



திருக்குறளின் பெருமைக்கு அதன் சமயச் சார்பின்மை மட்டும் காரணம் அன்று. அவர் காலத்தில் இருந்த சமயச் சடங்குகளைக் கடிந்துரைத்ததும் காரணம் ஆகும். பற்பல நூற்றாண்டுகளாக மனித சமுதாயத்தால் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் சடங்கு களையும், மூடநம்பிக்கைகளையும் ஒருவர் எதிர்ப்பது ஒரு முற்போக்கேயாகும். எனினும் அவற்றைத் தம் நூலிலேயே ஒருவர் கடிந்துரைக்கிறார் எனில் அது ஒரு


படிப்பகம்

புரட்சியேயாகும். அப்புரட்சியை வள்ளுவர் மிகச் சிறப்பாகவே நிகழ்த்தியுள்ளார். வள்ளுவர் உலக நடைமுறைக்கு இல்லறத்தையும், புறநடைக்கு துறவறத்தையும் எடுத்தோதினார். துறவறத்தை மேற்கொண்டோரைப் போற்றும் போது அவர்,

*அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள்சேர்ந்த*
*இன்னா உலகம் புகல் (243)*

**புறத்தோற்றங்களில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும், உலகம் பழிக்கின்ற பண்புகளைச் செயல்களை ஒழித்து, உள்ளத்தால் பொய்யாதொழுகுகின்ற பண்பே மிக இன்றியமையாதது என்பது வள்ளுவர் நோக்கம்.**

என்று மிகச் சிறப்பாகவே போற்றுகிறார். இன்னும் பல இடங்களிலும் போற்றுகிறார். நெறியிலிருந்து தவறும் இல்லறத்தாரை அவர் எப்படிக் கடிந்துரைத்தாரோ அவ்வாறே துறவறத்தாரையும் அவர் கடிந்துரைத்துள்ளார். இல்லறத்தாரைக் கடிந்துரைப்பது எளிது. ஆனால் துறவறத்தாரைக் கடிந்துரைப்பது இத்துணை எளிதன்று. சடங்குகளின்மீது நடத்துகின்ற ஒவ்வொரு தாக்குதலும், சமயங்களின்மீதும், சமய மூலவர்கள் மீதும், ஏன் ஆளும் வர்க்கத்தின் மீதும் தாக்குகின்ற தாக்குதல்களாகும். இதற்கு ஒரு பெருந்துணிவு வேண்டுமேன்றோ! வள்ளுவரின் அத்துணிவு எவ்வாறு காட்சியளிக்கிறது என்பவற்றைக் காண வேண்டுமன்றோ!

*வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்*
*ஐந்தும் அகத்தே நகும் (271)*

*வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்*
*தானறி குற்றப் படின் (272)*

*தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து*
*வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று (274)*

*நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து*
*வாழ்வாரின் வன்கணார் இல் (275)*

எனப் பலவாறு உள்ளொன்று வைத்துப் புறமொன்று செயற்படும் போலித் துறவியர்களைக் கடுமையாகக் கடிந்துரைப் பதைக் காணலாம். போலித் துறவிகள் மீது வள்ளுவர் எத்துணைச் சீற்றம் கொண்டுள்ளார் என்பதற்கு இக்குறட்பாக்களில் அவர் பயன்படுத்தும் சொற்களைக் கொண்டே உணரலாம். பரிமேலழகர் காலத்திலும் போலித் துறவியர்கள் இருந்துள்ளனர் என்பதை அவர் உரையிலும் காண முடிகிறது (11).



நம் காலத்தில் இருக்கும் போலித் துறவிகள் போலப் பற்பலர் பல காலங்களிலும் இருந்துள்ளனர் என அறிய முடிகிறது. அக்காலத்திலேயே போலித் துறவியர்களை மட்டுமல்லாமல், துறவிகளுக்குரிய போலி வேடங்களையும் கடிந்துள்ளார்.

*மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்*
*பழித்தது ஒழித்து விடின் (280)*

புறத்தோற்றங்களில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும், உலகம் பழிக்கின்ற பண்புகளைச் செயல்களை ஒழித்து, உள்ளத்தால் பொய்யாதொழுகுகின்ற பண்பே மிக இன்றியமையாதது என்பது வள்ளுவர் நோக்கம். அதனாற்றான் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என எல்லோர்க்கும் பொதுப்பட மொழிந்தார். வள்ளுவர் புற வேடங்களை, புறத்தோற்றங்களை மறுப்பதற்கு ஓர் ஆழமான காரணம் இருத்தல் வேண்டும். அப்படியில்லாமல், அவர் அவ்வாறு கூறியிருக்கமாட்டார். எடுத்துக்காட்டாக, நம் நாட்டில் பல சமயத்தினர் இருந்தாலும், நமது அரசியல் சட்டம் சமயச் சார்பின்மையை ஒரு கோட்பாடாகக் கொண்டிருக்கிறது. அவ்வாறு கொண்டிருப்பதற்குக் காரணம் ஒருவர் தம்மளவில் ஒரு சமயத்தை ஏற்றுக் கொண்டவராயினும், சமுதாயத்துடன் சேர்ந்து வாழும் போது தம் சமய முனைப்பைக் காட்டாமல், பிற சமயத்தினரிடம் பகைமை கொள்ளாமல் இணைந்து வாழ வேண்டும் என்பதே. இன்றைய நம்முடைய நோக்கத்தைக் காட்டிலும் வள்ளுவர் சற்று ஆழமாகச் சென்றுள்ளார் என எண்ணத் தோன்றுகிறது. வள்ளுவரைப் பல நிலைகளிலும் ஆய்ந்தால், இந்தப் புற வேடங்களை, தோற்றங்களை முழுமையாக மறுக்கிறார் என்ற முடிவுக்கே வர முடிகிறது.

நாட்டில் உள்ள ஒவ்வொரு சமயத்தினரும் தம் சமயத்திற்குரிய வேடங்களை அல்லது அடையாளங்களைப் பூணுவார்களேயானால், சமுதாயத்தில் வெளிப்படை யாகவே பல வேற்றுமைகள் காட்சியளிக்கும். இந்த வேற்றுமைகள் வெளிப்படையாகத் தோன்றும் போது முழுமையான சமயப் பொறை தோன்றுவது மிகவும் அரிது. உளவியல் அடிப்படையில் ஆய்ந்தால், சமயங்களுக்கு ஏற்ற வெளித் தோற்றங்களும், அடையாளங்களும் சமுதாயத்தின்


படிப்பகம்

ஒற்றுமைக்கும் உள்ளுணர்வுக்கும் என்றும் தடையாகவே இருக்கும். இந்த ஆழ் உணர்வை வள்ளுவர் நன்கு உணர்ந்தவராதலின் 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' என எச்சரித்தார். வள்ளுவர், இவ்வாறு வெளித் தோற்றங்களை மட்டுமல்லாமல், வெளித் தோற்றங்களாகத் தோன்றும் சில பழக்கங்களையும் வாழ்முறைகளையும் கண்டித்துள்ளார்.

*அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று (259)*

இக்குறட்பாவை வள்ளுவர் கால இந்தியச் சமுதாயச் சூழலுடன் ஆய்ந்தால் வள்ளுவரின் முற்போக்கு நமக்குத்தெற்றென விளங்கும். வேதங்களும், மனுதர்மமும் வேள்வியின் பெருமையை, பயனைப் பலவாறு சிறப்பித்துள்ளன. வேள்வியின் வாயிலாகப் பல பாவங்களை அகற்றமுடியும் என்றும், பல பலன்களைப் பெறமுடியும் என்றும் பறைசாற்றின. வேள்வியின் பயனில், இந்தியச் சமுதாயத்தினர்க்கு, குறிப்பாக மன்னர்களுக்கு ஒருபெரு நம்பிக்கையே இருந்துவந்தது. இவ்வேள்வி மூலம் எதனையும் சாதிக்க முடியும் எனும் ஒரு நிலை இந்தியச் சமுதாயத்தில் தோன்றிவிட்டது. இந்த வேள்வி, மற்றும் சில சமயச் சடங்குகள் மூலம் பிராமணர்கள் தங்களின் வாழ்நிலை இருப்பை உறுதி செய்து கொண்டனர். இதனால், பிராமணர்களுக்கும் மன்னர்களுக்கும் ஒரு ஒட்டு ஏற்பட்டுவிட்டது. இந்த ஒட்டுறவை வைத்துக் கொண்டு எல்லோரைக் காட்டிலும் தாங்களே உயர்ந்தவர் எனும் ஒரு நிலையை வளர்த்தனர். மந்திரம், தந்திரம், சோதிடம், வேள்வி ஆகியவற்றில் பிராமணர்கள் சிறந்திருந்ததால் மன்னர்களிடம் இதற்கான ஏற்பும் கிடைத்துவிட்டது. இதன் காரணமாக, மன்னன் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினரையும் ஆட்டிப்படைக்கும் நிலைக்கு பிராமணர்கள் வளர்ந்தனர். இன்னும் அதனை வளர்த்துக் கொண்டு வருகின்றனர்.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின்' என வள்ளுவர் கேட்பதால் ஓர் உண்மை நன்கு புரிகிறது. ஒருவன் ஒன்றைப் பெற விரும்பினால் அதற்கான செயல்துணிவும், உழைப்பும் உறுதியும் இருக்க வேண்டும். அதனாற்றான் 'எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்றார். உழைப்பும், அதற்கான வழிமுறையும் இல்லாமல் வெறும் வேள்விகளால் ஒன்றையும் சாதிக்க முடியாது என வலியுறுத்த வேண்டியே 'ஆயிரம் வேட்டலின்' என்றார். ஓர் உயிரைக் கொன்று உண்ணாமல் இருப்பது அடிப்படையில் ஒரு முதலறமாகும். இந்த முதலறத்தின் பயன்கூட ஆயிரம் வேள்விகளால் விளையாது என்பதே அவர் கருத்து. அன்றைய சமுதாயம் சடங்குமயமாகவும் வேள்வி மயமாகவும் ஆகிக் கொண்டிருந்த ஒரு சமுதாயச் சூழலில்தான் வள்ளுவர் வேள்வி பற்றி இவ்வாறு கூறியுள்ளார் எனலாம்.


**கருத்துக்கு இயையாது கண்மூடி ஆற்றும் வேள்வியை அவர் மிக 'நயத்தக்க நாகரிகத்துடன்' மறுக்க வேண்டியே விருந்தை வேள்வியுடன் இணைத்துப் பேசுகிறார் எனலாம். பிறர்க்கு ஆற்றும் விருந்தே வேள்வியாகும் என்று அவர் அழுத்தமாகக் கூறுவதால் வள்ளுவரின் புரட்சி நோக்கையும் ஆழ்ந்த மானுட நேயத்தையும் நன்கு உணரலாம்.**

உள்ளத்தில் உண்மையின்றி, வெறும் 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலி'னால், கடவுளிடமிருந்து எதனையும் பெற்றுவிட முடியாது என்பதே அவரின் உள்நோக்கு. இப்படிக் கூறுவதால், வேள்வியை நடத்தும் பூசாரியையும், அதன் பயன் கருதி நடத்துகின்ற தனிமனிதனையும் வள்ளுவர் எச்சரிக்கிறார் எனலாம். இவ்வெச்சரிப்பு மூலம் சமுதாயத்தை விழிப்புப் பெற வைக்க வேண்டுமென்பதே அவர் உட்கோள். இதனாற்றான், வேள்வி என்பது ஒரு தெய்வீகச் சடங்கு என்பதை ஆழமாக மறுக்கும் வகையில், ஒருவனுக்கு ஒருவன் செய்யும் உதவியே வேள்வி என்றார். அதனாலன்றோ

*இனைத்துணைத் தென்பதொன் றில்லை, விருந்தின்*
*துணைத்துணை வேள்விப் பயன் (87)*

*பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர்; விருந்தோம்பி*
*வேள்வி தலைப்படா தார் (88)*

என்றும் கூறினார். இவ்விரு குறட்பாக்கள் மூலம், கருத்துக்கு இயையாது கண்மூடி ஆற்றும் வேள்வியை அவர் மிக 'நயத்தக்க நாகரிகத்துடன்' மறுக்க வேண்டியே விருந்தை வேள்வியுடன் இணைத்துப் பேசுகிறார் எனலாம். பிறர்க்கு ஆற்றும் விருந்தே வேள்வியாகும் என்று அவர் அழுத்தமாகக் கூறுவதால் வள்ளுவரின் புரட்சி நோக்கையும் ஆழ்ந்த மானுட நேயத்தையும் நன்கு உணரலாம். வள்ளுவர்




படிப்பகம்

www.padippakam.com



காலத்தில் நிலைத்திருந்த சமயச் சடங்குகளும், மூட நம்பிக்கைகளும், அதீத தெய்வ நம்பிக்கைகளும் அவர்க்கு இரண்டாயிரமாண்டு காலத்துக்குப் பின்னும் நம் நாட்டில் வழக்கத்தில் இருந்து வந்துள்ளன. இவற்றைப் பற்றி ஒப்புயர்வற்ற உலகச் சிந்தனையாளர் கார்ல்மார்க்சு அவர்கள் எழுதியுள்ளது மிகவும் சிந்திக்கத்தக்கது.

**'மதத்தைப் பற்றிய விமர்சனம் எல்லா விமர்சனங்களுக்கும் அடிப்படையாகும்' என கார்ல் மார்க்சு கூறுகிறார். இந்த அடிப்படையான விமர்சனத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் வைத்துள்ளார் எனில், அவர்தம் தொலை நோக்குச் சிந்தனை மிகப் பெரிதும் போற்றுவதற்குரியதன்றோ!**

'இந்தியாவில் கொலையே ஒரு தெய்வச் சடங்காயிற்று. இதனை நாம் மறக்கக் கூடாது. இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும், அடிமை முறையாலும் களங்கமடைந்திருந்தன. மனிதனைச் சூழ்நிலைக்கு எஜமானனாக்குவதற்குப் பதிலாக, அவனைச் சுற்றுச் சார்புக்கு அடிமைப்படுத்தின. தானாக வளர்ந்து கொண்டிருந்த சமூக நிலையை, ஒரு பொழுதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இவ்விதமாக இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் மிருகத்தனமான நிலைமையைப் படைத்தது. இயற்கையின் எஜமானனாகிய மனிதன், குரங்காகிய அனுமான் முன்பும் பசு மாட்டின் முன்பும் தெண்டனிட்டு வணங்கியதில் இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றையும் நாம் மறக்கக் கூடாது' (12).

இக்குறிப்பு, கார்ல் மார்க்சு அவர்களால் 26.5.1853 - அன்று எழுதப்பட்டது. இக்குறிப்பு மூலம் சமயச் சடங்குகளுக்கு நம் மக்கள் நூற்றாண்டுதோறும் எவ்வாறு ஆட்பட்டிருந்தனர் என்பதை நன்கு உணரலாம். இவை போன்ற பல்வேறு சடங்குகளை மரபுகளை முற்றிலும் களைய வேண்டுமென விரும்பியே

***புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை***
***வாய்மையாற் காணப் படும்***

***(298)***

என்றார். இக்குறட்பாவுக்குப் புறத்தூய்மை நீரால் உண்டாகும். மனத்தூய்மை பொய் சொல்லாமையால் விளங்கும் என்று மிக எளிதாகப் பலர் உரை கண்டு அமைதி கொள்கின்றனர். இக்குறட்பாவை வேறுபல குறட்பாக்களுடன் ஒப்பிட்டு நோக்கினால் உண்மை விளங்கும். பண்டைய நாளில் பழிபாவம் செய்தோர், அவற்றை நீக்கப் புண்ணிய ஆறுகளில் (கங்கை, காவிரி) நீராடினால் அவை நீங்கிப் புண்ணியம் சேரும் என நம்பினர். அதனைப் பல வட்நூல்கள்



வலியுறுத்தியும் வந்தன. அதனால், பலர் தமிழகத்திலிருந்தும், தென்னகத்திலிருந்தும் பயணம் மேற்கொண்டு காசி சென்று கங்கையில் நீராடி வந்தனர். மனத்தைக் கட்டுக்குள் வைத்துத் தூய்மையாக்க முயலாமல் வெறும் நீராடும் சடங்குகளினால் எவ்விதப் பயனும் இல்லை என்பதே வள்ளுவரின் கொள்கை. நீராடினால் உடல் அழுக்கு மட்டுமே நீங்கும். அவனின் மன அழுக்கையோ, பழியையோ பாவத்தையோ நீக்க நீராடல் சிறிதும் பயன்படாது. அதனாற்றான் 'புறத் தூய்மை நீரான் அமையும்' என மிக நுட்பமாக உணர்த்தினார். இக்கருத்தை மற்றொரு குறட்பாவில் மிக வலிமையாகக் கூறியுள்ளார்.

***மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி***
***மறைந்தொழுகு மாந்தர் பலர் (278)***

(பொருள்: மனத்தில் மாசுகள் நிறைந்திருக்கத் தூயவர் போல் நீராடிப் புற வேடத்தில் தம்மை மறைத்து வாழும் மாந்தர் பலராவர்)

இக்குறட்பாவை ஆழ்ந்து நோக்கினால், வெறும் நீராடலினால் உள்ளத்தூய்மையை பெற்றுவிட முடியாது என்பதே வள்ளுவரின் கொள்கையாகும் என்பதை எளிதில் உணரலாம். துறவிகள் தத்தம் உள்ளங்களில் தூய்மையை வளர்க்காமல், சடை முடிதாங்கி நீராடித் தவத்தை மேற்கொண்டவர் போல் நடிப்பது பயனற்றது என்பது வள்ளுவர் முடிவு. அவர் காலத்தில் அப்படிப்பட்ட போலித்துறவிகள் பலர் இருந்துள்ளனர் என்பதையும் அப்போலித் துறவிகள் பால் அவர் எத்துணைக் கோபம் கொண்டுள்ளார் என்பதையும் இக்குறட்பா மூலம் நன்கு உணரலாம்.

"Criticism of religion is the premise of all criticism" [13].

'மதத்தைப் பற்றிய விமர்சனம் எல்லா விமர்சனங்களுக்கும் அடிப்படையாகும்' என கார்ல் மார்க்சு கூறுகிறார். இந்த அடிப்படையான விமர்சனத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் வைத்துள்ளார் எனில், அவர்தம் தொலை நோக்குச் சிந்தனை மிகப் பெரிதும் போற்றுவதற்குரியதன்றோ!

சமயத்தின் மீது விமர்சனத்தைச் செலுத்துவது, பொதுவாக அனைத்துத் துறைகள் மீதும் செலுத்தும் விமர்சன




படிப்பகம்

மாகும். குறிப்பாக ஒரு வகையில் அரசமைப்பின் மீது (சமய வழிப்பட்ட) செலுத்தும் விமர்சனமும் ஆகும். அதனால்தான் கார்ல் மார்க்சும் முற்குறித்தவாறு கூறினார். மதக் குருக்களின் கருத்துக்கெதிராகப் பூமி உருண்டை வடிவமானது எனக் கலிலியோ கூறியதால், மதக் குருக்களும் அரசமைப்பும் அவரை நாடு கடத்தினர். மதக்கருத்துகளுக்கு மாறாக கோபர் நிக்கஸ் கோள்களின் இயக்கம் குறித்துக் கூறியதால் அவரைத் துன்புறுத்தினர். இவரைப் போன்று கருத்துக் கூறிய ஜியார்டானோபுருனோவை அரசும் மதவாதிகளும் சேர்ந்து தீயிட்டுக் கொளுத்தினர். சமயத்திற்கு எதிராக ஒரு கருத்து வருமாயின், அதனை அழிக்கச் சமயப் பீடம் அரசின் துணையை நாடும். பல வேளைகளில், அஃது அரசையே அடிபணிய வைக்கும். இதற்கு உலக வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. நம் நாட்டிலும் உண்டு. பஞ்சாப்பில் முதல்வராக இருந்த சுர்ஜித்சிங் பர்னாலா, ஒருமுறை குருத்துவாரா குழுவுக்குச் சிறிது மாறாகக் கருத்து வெளியிட்டார் என்பதற்காக, குருத்துவாரா அவரைப் பொற்கோவிலுக்கு வருபவர்களின் காலணிகளைத் தூய்மை செய்யக் கட்டளை இட்டது. அவ்வாறு அவரும் குறிப்பிட்ட நாட்கள் வரை காலணிகளைத் தூய்மை செய்தார். சில ஆண்டுகளுக்கு முன் சிரோமணி குருத்துவாரா பிரபந்த கமிட்டியின் தலைவர் (எஸ்.ஜி.பி.சி) ஜி.எஸ். தோரா அவர்கள், பஞ்சாப் அரசையும், அதன் முதலமைச்சருமான பிரகாஷ் சிங் பாதல் அவர்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்தார் என்பது நாம் அறிந்ததே. சில சக்தி வாய்ந்த மடங்கள் இன்றும் மத்திய அரசையும் மாநில அரசையும் விருப்பத்திற்கேற்றவாறு செயல்பட வைக்கின்றன. குடியரசுத் தலைவர்களும், தலைமை அமைச்சர்களும் மதத்தலைவர்களைத் தொழுவதும், மதத் தலைவர்கள் அவர்களை ஆட்டிப்படைப்பதும் நாம் கண்டு வரும் காட்சிகளேயாகும்.

**வள்ளுவர், கடவுளின் பண்புகளைக் குறிப்பிடுகிறார். ஆனால் கடவுளின் பெயரைக் குறிப்பிடவில்லை. சமயம் சார்ந்த கருத்துகளைக் கூறுகிறார். ஆனால், எந்தவொரு சமயத்தையும், தமக்குரிய சமயமாக அவர் குறிப்பிடவில்லை.**

சமயத்தை விமர்சிப்பது, சமயம் சார்ந்தவற்றையும் அரசையும் விமர்சிப்பதாகும். மனித குல மேம்பாட்டிற்காகச் சமயத்தின் மீது செலுத்தும் விமர்சனம், சமயத்தை எச்சரிப்பது போன்ற அரசமைப்பையும் எச்சரிப்பதாகும். குறிப்பாக, இவ்விமர்சனம் மானுட வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் விழிப்புணர்வை உண்டாக்கும் தன்மையதாகும். ஆதனால்தான் கார்ல் மார்க்சு அவர்கள் 'சமயத்தின் மீது செலுத்தும் விமர்சனம் அனைத்து விமர்சனங்களுக்கும் அடிப்படையாகும்' என்றார். இதுகாறும் கூறியவற்றால், வள்ளுவர் சமயம் பற்றியும், சமயச் சடங்குகள் பற்றியும் எவ்வாறு சிந்தித்துள்ளார் என்பதை விரிவாகவே கண்டோம்.

வள்ளுவர், கடவுளின் பண்புகளைக் குறிப்பிடுகிறார். ஆனால் கடவுளின் பெயரைக் குறிப்பிடவில்லை. சமயம் சார்ந்த கருத்துகளைக் கூறுகிறார். ஆனால், எந்தவொரு சமயத்தையும், தமக்குரிய சமயமாக அவர் குறிப்பிடவில்லை. சமயத்தின் பெயரையும் சுட்டவில்லை. தம் தாய்மொழியின் பெயரையோ, தாய்நாட்டின் பெயரையோ அவர் எங்கும் குறிப்பிடவில்லை. கல்விபற்றிப் பேசியுள்ளார். ஆனால் கல்வியின் பெயரை எங்கும் குறிப்பிடவில்லை. அவ்வாறே, ஆறு, கருவி, நூல், மருந்து ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளாராயினும், அவற்றின் பெயர்களை எங்கும் அவர் குறிப்பிடவில்லை. இவ்வாறு அவர் குறிப்பிடாததற்குக் காரணம் என்ன? தாம் கூறுகின்ற ஒன்று, ஒரு பகுதியினருக்கு மட்டுமின்றி, உலகம் முழுவதுக்கும் பயன்பட வேண்டுமென எண்ணியே அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார் எனலாம். தன்னையும், தன் கருத்துகளையும் ஒரு பகுதியினருக்கோ, ஒரு நாட்டினர்க்கோ மட்டுமல்லாமல் உலகில் உள்ள அனைத்துப் பகுதியினர்க்கும், காலம் கடந்தும் பயன்பட வேண்டுமென்றெண்ணியே அவ்வாறு எழுதினார் எனலாம். பல்வேறு நிலைகளிலும் காலத்திற்குதவாதவற்றை, கால வழுப்பட்டவற்றைத் தயக்கமின்றித் தள்ளிக் காலத்திற் கேற்றவற்றை நன்கு படைக்கும் திறன் அவர்க்கு எவ்வாறு அமைந்தது? இப்படிப் பல்வேறு நிலைகளில் அவர் ஒரு முன்னோடியாக விளங்குவதற்கு காரணம் என்ன? அதனை அறிந்தால்தான் வள்ளுவரின் தொலைநோக்குச் சிந்தனையின் வழிமுறையையே (root) அறிய முடியும். அதற்குப் பெருங்காரணம், பொருள்களிலும் சமுதாய நிகழ்வுகளிலும் ஏற்படுகின்ற மாற்றத்தை அவர் நன்கு உணர்ந்திருந்ததேயாகும்.



ஒரு காலத்தில் அணு பிரிக்க முடியாத ஒரு மூலப் பொருள் என்றனர். நீண்ட ஆராய்ச்சிக்குப் பின் அதனைப் பல கூறுகளாகப் பிளக்க முடியும் எனக் கண்டனர்.


படிப்பகம்

www.padippakam.com


பல நூற்றாண்டுகளாகத் தண்ணீரும் பிரிக்கப்படாத பொருள் என்று எண்ணி வந்தனர். பின்னர், பிராண வாயுவும், நீராவியும் சேர்ந்த ஒன்றுதான் தண்ணீர் எனும் முடிவுக்கு வந்தனர்.

**உலகம் மாற்றத்தை நோக்கி வளர்ச்சியை நோக்கி எவ்வாறு இயங்குகிறதோ அவ்வாறு அவ்வுலகத்தோடு பொருந்தி வாழ்வதே அறிவுடைமையாகும் என்கிறார்.**

பூமி தட்டையானது எனப் பல நூற்றாண்டுகளாக எண்ணி வந்தனர். பிற்காலத்தில் உருண்டை வடிவமானது எனும் முடிவுக்கு வந்தனர்.

உயிரினங்கள் மாறாதவைகளாக உள்ளன என லையல் எனும் விஞ்ஞானி கூறினார். ஆனால், பிற்காலத்தில் உயிரினங்கள் பல மாற்றங்களை அடைந்துள்ளனவென ஒக்கெனும் டார்வினும் உறுதி செய்தனர்.

வெளிச்சம் எதற்கும் கட்டுப்படாமல் ஒரே நீளமாகச் செல்லும் என்றனர் முன்னைய விஞ்ஞானிகள். ஆனால் வெளிச்சம் சூரியனருகே செல்லும் போது வளர்ந்து செல்வதாக இன்றைய விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

நேர் இணைகோடுகள் ஒன்றோடொன்று இணையாது என்றனர் கணிதமேதைகள். ஆனால், பிரபஞ்சத்திற்கு அப்பால் அக்கோடுகள் இணைவதாக ஈன்ஸ்டின் உறுதி செய்தார்.

உயிர்ப்பொருளிலிருந்துதான் ஓர் உயிர்ப் பொருளைப் படைக்க முடியும் என்றனர் முன்னைய உயிரியலாளர்கள். உயிரில்லாப் பொருளிலிருந்தும் ஓர் உயிர்ப் பொருளை உருவாக்க முடியும் என்றார் லெடக் எனும் விஞ்ஞானி.

ஓசோன் (Ozone) அடுக்குகள் பூமியிலிருந்து 25 கி.மீ. உயரத்தில் இருப்பதாக அறிவியலார் முதலில் கூறினர். ஆனால், இன்று 14 கி.மீ. முதல் 50 கி.மீ. வரை பரவியிருப்பதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறு அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மாற்றம் இல்லாத ஒரு பொருள் உலகில் எங்கும் கிடையாது. அதனால்தான் இயக்கத் தத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஹெராக்ளட்டிஸ் 'There is nothing permanant except change' 'மாறுதல்தான் நிலையானது. மாறுதலைத் தவிர உலகில் நிலையானது ஒன்றுமில்லை' என்றார். இதனை அடியொற்றியே கார்ல்மார்க்சு அவர்களும் 'பிரபஞ்சத்தில் அனைத்தும் மாறிக் கொண்டே இருக்கின்றன' என்றார். இந்த மாற்றத்தை நன்கு உணர்ந்தவர் வள்ளுவர். அதனாற்றான்



*எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வ துறைவது அறிவு (426)*

என்றார். உலகம் மாற்றத்தை நோக்கி வளர்ச்சியை நோக்கி எவ்வாறு இயங்குகிறதோ அவ்வாறு அவ்வுலகத்தோடு பொருந்தி வாழ்வதே அறிவுடைமையாகும் என்கிறார். 'உறைவது உலகம்' என்பதால் உலகம் இயங்கிக் கொண்டிருப்பதை வள்ளுவர் நன்கு அறிந்துள்ளார் என்பதை உணரலாம். அவ்வாறே 'உறைவது அறிவு' என்பதால் அறிவும் இடையறாது இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார். இவற்றின் மூலம் பொருளும் இயங்குகிறது எண்ணமும் இயங்குகிறது என்கிறார். இயங்குகின்ற பொருளை இயங்குகின்ற அறிவு சரியாகத் தொடர்ந்து நோக்கல் வேண்டும் என்பதே அவர் துணிபு. இயக்கம் உள்ள இடத்தில் மாற்றம் இருக்கும். மாற்றம் இருக்கும் இடத்தில் வளர்ச்சி இருக்கும். இந்த இயக்கத்தையும் மாற்றத்தையும் நன்கு உணர்ந்து கொள்பவரே, சமுதாயம் இயங்குகிற போக்கையும், நாளை அடையக்கூடிய நிலையையும் அறியமுடியும். சுருக்கமாகக் கூறினால் இவர்களால் மட்டுமே சமுதாய இயங்குவிதியை, இயக்கப் போக்கை உணர்ந்து கொள்ள முடியும் எனலாம். அதனாலன்றோ 'அறிவுடையார் ஆவதறிவார்' என்றார். மாற்றத்தினால் நாளை அடைய இருக்கிற போக்கை அவர்களால்தான் உணர முடியும் என்கிறார். இம்மாற்றத்தை நன்கு அறிய முடியாதவர் 'பல கற்றும் கல்லார்; அறிவிலா தார்' என்றே வரையறுக்கிறார்.

வள்ளுவர் இந்த மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு நமக்கு எப்படி விளக்கியுள்ளார் என்பதைக் கண்டால்தான் அவரின் ஆழ்ந்தகன்ற மேதைமையை உள்ளவாறு உணர முடியும். எடுத்துக்காட்டிற்காக ஒரு குறட்பாவை நோக்குவோம்.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)**

இங்கு, எண்ணென்றும் எழுத்தென்றும் பொதுவாகக் குறிப்பிட்டாரேயன்றி எண்ணுக்குரிய பெயரையோ எழுத்துக்குரிய பெயரையோ அவர் குறிப்பிட்டார் அல்லர். எண் என்பது கணிதத்தைக் குறிப்பதாகும்.

'எண்ணெண்பது கணிதம். அது கருவியும் செய்கையுமென இரு வகைப்படும்.


படிப்பகம்

www.padippakam.com


இவை ஏரகம் முதலிய நூல் களுட் காண்க' (14)

**பல்லாற்றான் பல்துறை நூல்களை, உலகின் பல்வேறு திசைகளில் உள்ள நூல்களை, அவற்றின் இன்றியமையாமையைச் சிறப்பைத் திட்பமாகவும் நுட்பமாகவும் உணர்த்துவதால் வள்ளுவரின் பரந்த நூற்பயிற்சியையும், அவரும் 'நூலாருள் நூல்வல்லன்' என்பதையும் நன்கு உணரலாம்.**

'பரிமேலழகரின் விளக்கத்தால் அவர் காலத்திலேயே எண் (கணிதம்) இருவகையாக இருந்துள்ளன. அதனை ஏரகம் முதலிய நூல்களுட் காண்க எனக் கூறுவதால் அவர் காலத்திலேயே கணித நூற்கள் பல இருந்துள்ளனவாகத் தெரிகிறது. பதினான்காம் நூற்றாண்டில் இருந்த ஏரகம் முதலிய நூற்களைப் பற்றி இன்றைய கணித நூலாசிரியர்க்கு ஒரு குறிப்பும் கிடைத்தில. ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த கணித நூற்களே நமக்குக் கிடைக்கவில்லையெனில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவர் காலத்து நூற்கள் நமக்கு எப்படிக் கிடைக்கும்?

பரிமேலழகர் காலத்தில் இரு வகையாக இருந்துள்ள கணிதம். நம் காலத்தில் எண் கணிதம் (Arithmatic) குறிகணக்கு (Algebra) வடிவக் கணிதம் (Geometry) எனப்பலவகை யாக வளர்ந்துள்ளன. காலம் ஆக ஆகக் கணிதம் மேலும் பலவகையாக மாறி வளர்ச்சியடையலாம். கணித வகையின் பெயரை அவர் குறிப்பிடாததால், கணித உலகில் எத்தனை மாற்றம் ஏற்பட்டாலும் எண்ணெண்பது எக்காலத்திற்கும் பொருத்தம் உடையதாகவே இருக்கும். எண்ணென்று பொதுவாகக் குறிப்பிடாமல், இன்ன கணிதம் என்று பெயரிட்டுக் கூறியிருப்பாரேயானால், அஃது அவர் காலத்திற்கு மட்டுமே பொருந்தியதாக இருந்திருக்கும். பிற்காலத்தில் அது பயனற்றதாய் போயிருக்கும்.

இவ்வாறே 'எழுத்து' எனப் பொதுவாகக் கூறினாரேயன்றி அதன் பெயரைக் குறித்தார் அல்லர். அவர் காலத்தில் இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம், சோதிடம், மருந்து, வானவியல், இசை போன்ற பல துறைகள் இருந்திருக்கும். அத்துறைகளுள் ஏதாவதொரு துறைக்குரிய நூலின் பெயரைக் குறிப்பிட்டிருப்பாராயின் அவர் கருத்து அந்நூற்றாண்டிற்கு மட்டுமே பொருந்துவதாய் இருந்திருக்கும். ஆனால், பிற்காலத்தில் அது பயனற்றதாய் மாறியிருக்கும். இவ்வாறு பெயரைக் குறிப்பிடாமல் 'எழுத்து' எனப் பொதுப்படக் கூறியதால், அதனை இன்று வளர்ந்துள்ள அனைத்துத் துறைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் - நாளை வளருகின்ற துறைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். மற்றும், 'கற்பன கற்க' எனப் பொதுவாகக் கூறினாரேயன்றி, அதற்குரிய பெயரைக் குறிப்பிட்டார் அல்லர். கற்க வேண்டுபவை ஒவ்வொரு துறையிலும் காலத்திற்குக் காலம் வேறுபடுபவை. விரிபவை, அவர் காலத்தில் கற்க வேண்டுபவை வேறு. நம் காலத்தில் கற்க வேண்டுபவை வேறு. பிற்காலத்தில் கற்க வேண்டுபவையும் வேறு. மனித அறிவு வளர்ந்து வளர்ந்து எத்தனை மாற்றம் அடைகிறதோ அத்தனை மாற்றத்திற்கும் 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப' எனக் கூறியது எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாகவே இருக்கும். மற்றும் ஒழுக்கம், கருவி, படை, மருந்து, நூல் ஆகியவற்றையும் இவ்வாறே வெளிப்படுத்தியுள்ளார்.[15] நாம் கூறுபவை காலங்கடந்து, மொழி, இனம், நாடு கடந்து உலகில் உள்ள அனைவர்க்கும் பயன்பட வேண்டுமென எண்ணியே இவ்வாறு கூறினார் எனலாம். இவ்வாறு மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு ஆயும் முறையைத் தத்துவவாதிகள் இயங்கியல் முறையைச் (Dialectics) சார்ந்தது என்பர். வள்ளுவர் காலங்கடந்து நிலை பேறு பெற்று வாழ்வதற்கு இம்முறை சார்ந்த கண்ணோட்டமே.


இத்தகு கண்ணோட்டம் அவர்க்கு எப்படி வாய்த்தது? முன்னைய சாங்கியம், புத்தம், சாருவாகம் ஆகிய தத்துவங்களின் தாக்கத்தினாலும், அவர்தம் பரந்த நூற்பயிற்சியாலும் வாய்த்திருக்கலாம்.

**.................................... விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு *(21)***

**.................................... நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை *(322)***

**நுண்ணிய நூற்பல கற்பினும் *(373)***

**.................................... நிரம்பிய**
**நூலின்றிக் கோட்டி கொளல் *(410)***



**....................................**
**இலங்கு நூல் கற்றாரோடு *(410)***

**.................................... அதுவுலகத்து**
**எப்பால்நூ லோர்க்கும் துணிபு *(533)***

**அந்தணர் நூற்கும் .................... *(543)***

**............ அறுதொழிலோர் நூல் *(56)***

**ஒற்றும் உரைசான்ற நூலும்.... *(581)***

www.padippakam.com


நான்கின் அமைவரண் என்றுரைக்கும் நூல் (743)

...........................................

நூலோர்

வளிமுதலா எண்ணிய மூன்று (941)

எனப் பல்லாற்றான் பல் துறை நூல்களை, உலகின் பல்வேறு திசைகளில் உள்ள நூல்களை, அவற்றின் இன்றி யமையாமையைச் சிறப்பைத் திட்பமாகவும் நுட்பமாகவும் உணார்த்துவதால் வள்ளுவரின் பரந்த நூற்பயிற்சியையும், அவரும் 'நூலாருள் நூல்வல்லன்' என்பதையும் நன்கு உணரலாம். மேலும்

வள்ளுவரின் ஆழ்ந்தகன்ற கல்வியும், தத்துவ ஞானத்தெளிவும், உலகளாவிய அனுபவத் திறனுமே, மொழி, இனம், நாடு கடந்த நூலாசிரியராகவும், எதனையும் மாற்றத்தின் அடிப்படையில் (இயங்கியல்) சிந்திக்கும் பெருஞ்சிந்தனையாளராகவும் உருவாக்கியது எனலாம்.

செம்பொருள் கண்டார் 91

ஞாலத்து அறம்பொருள் கண்டார் 141

புலம்வென்ற புன்மையில் காட்சியவர் 174

மருள்தீர்ந்த மாசறு காட்சியவர் 199

செயிரின் தலைப்பிரிந்த காட்சியவர் 258

மாசற்றார் கோள் - 311, 312

மருள்நீங்கி மாசறு காட்சியவர் 352

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார் 353

மெய்ப்பொருள் கண்டார் 356

ஆய்ந்தவர் கோள் 662

துளக்கற்ற காட்சியவர் 669

எனப் பலவாறு சொல்நுட்பத்துடனும், பொருட் செறிவுடனும் கூறுவதால் அவரின் ஆழ்ந்த அளப்பிலா அனுபவத் தெளிவை தெள்ளிதின் உணரலாம். இக்குறட்பாக்களில் வருகின்ற 'கோள்' 'காட்சி' ஆகிய சொற்கள் வடமொழியில் வழங்கப்படுகின்ற தரிசனம் அல்லது தத்துவம் (Philosophy) என்பதைக் குறிப்பதாகும். 'மருள்தீர்ந்த மாசறு காட்சியவர்', 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்' எனும் சொற்கள் உலக உண்மையைக் கண்ட வரை, புதுத் தத்துவத்தைக் கண்டாரைக் குறிப்ப தாகும். வள்ளுவர் வெறும் இலக்கிய இலக்கணப் புலமை பெற்றவர் மட்டுமன்றி அவர் காலத்துத் தத்துவஞானத்தினும் துறைபோனவர் என்பதை நன்கு உணரலாம். இத்தகைய தத்துவ நோக்கு அவர்க்கு நன்கு இருந்த தால்தான் எதனையும் மாற்றத்தின் அடிப்ப டையில் சிந்தித்துள்ளார்.



'The study of philosophy develops our capacity to think, to make generalisations of the highest order, our capacity for dialectical flexibility of concepts, it teaches us to see an object not in isolation but as part of the world of many sided systems of relations which are constantly changing'[16]

(தத்துவஞானப் பயிற்சி மிக உயர்ந்த பொதுமைப் படுத்தல் களைச் செய்யும் சிந்தனைத் திறனை, கருதுகோள்களை இயங்கியல் நெகிழ்ச்சியுடன் புரிந்து கொள்ளும் திறமையை வளர்க்கிறது. ஒரு பொருளைத் தனித்துப் பார்க்காமல் தொடர்ச்சியாக மாற்றமடைந்து கொண்டிருக்கும் பலவகை உறவுகளை உலகத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கும் படி நமக்குக் கற்பிக்கிறது).

இம்மேற்கோள் மூலம் தத்துவ ஞானத்தின் தனிச் சிறப்பை நன்கு உணரலாம். சிறந்த தத்துவ ஞான நோக்கு அவருக்கு இருந்ததனால்தான்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு 423

என்று அறிவுலகிலும் ஆய்வுலகிலும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டிய, பின்பற்ற வேண்டிய அரிய அறிவியல் விதியை வகுத் தளித்தார் எனலாம்.

'ஞாலத்து அறம்பொருள் கண்டார்' எனும் அருந்தொடரால் உலகின் பல்வேறு மூலைகளில் அறத்தையும், பொருளையும் ஆய்ந்து விளக்கிய செம்மல்களை அவர் நன்கு உணர்ந்துள்ளார் என்பதை உணரலாம். முன் குறிப்பிட்ட குறட்பாக் களின் அருந்தொடர்களை நோக்கினால் வள்ளு வரின் கல்வி கரையில என்பதை அறியலாம். 'என்ப' 'என்பர்' எனச் சுட்டுவதால், அவர்க்கு முந்தைய நூலாசிரியர்களையும், அவர் காலத்திய நூலாசிரியர்களையும் அவர் நன்கு அறிந்துள்ளார் என்பதைத் தெளியலாம்.

வள்ளுவரின் ஆழ்ந்தகன்ற கல்வியும், தத்துவ ஞானத்தெளிவும், உலகளாவிய அனுபவத் திறனுமே, மொழி, இனம், நாடு கடந்த நூலாசிரிய ராகவும், எதனையும் மாற்றத்தின் அடிப் படையில் (இயங்கியல்) சிந்திக்கும் பெருஞ் சிந்தனையாளராகவும் உருவாக்கியது எனலாம். அதனாற்றான், மிகச் சிறப்பாக

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு (397)

என்றார். கல்விதான் மனிதனை விலங்கு


படிப்பகம்

www.padippakam.com


நிலையிலிருந்து பிரித்து வளர்ப்பது. அதுவே அவனுக்கும் காலந்தோறும், ஆக்க சக்தியாகவும், ஆற்றலாகவும், காப்பாகவும், வாழ்வு நெறியாகவும் இருந்து வருவது. பன்னெடுங் காலமாக வளர்ந்துவரும் சிந்தனைகளையும், பண்பாடுகளையும் தேக்கி வைக்க இருப்பிடமாக (Storage) இருப்பது கல்வியே ஆகும். மழை நீரை வீணாக்காமல் அதனைத் தேக்கிவைத்துத் தேவைக் கேற்பப் பயன்படுத்த அணைக்கட்டு பயன்படுவது போல், காலந்தோறும் வளர்ந்து வரும் சிந்தனைகளை அழியாமல் காப்பது கல்வியே யாகும். அதனாலன்றோ 'கேடில் விழுச்செல்வம்' என்றார். இத்துணைச் சிறப்பிற்குரிய கல்விக்கு இணையாக வேறொன்றைக் கூற முடியாது எனக் கருதியே 'மாடல்ல மற்ற யவை' என்றார்.

**இத்தகு சீரிய சிறப்புகளுக்கு இருப்பிடமான நமது தாய்மொழியின் பெயரை வள்ளுவர் குறிப்பிடாவிட்டாலும், அதன்பால் அவர் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டை அவர் தம் சொல்லாட்சியில் தெள்ளிதின் உணரலாம்.**

கல்வியறிவின் பயனே பிறர் துன்பங்களை மட்டுமேயல்லாமல் பிற உயிர்களின் துன்பங் களையும் தம்துன்பம் போல் கருதி அவற்றை நீக்கும் சமுதாயப் பொறுப்புமாகும். இல்லையேல் எத்துணை நுண்ணறிவு இயல்பாகப் பெற்றிருந் தாலும் பயனில்லை எனக் கருதியே 'அறிவினான் ஆகுவதுண்டோ' - (315) என்றார். 'உண்டோ' எனும் கேள்வியால் வள்ளுவரின் ஆன்ம நேயத்தை இனிது உணரலாம். கல்வியின் பெருமையைக் கூறுவதைக் காட்டிலும், அதன் பயன்பாட்டில் மிகவும் ஆய்வு செலுத்தியவர் அவர். மொழி, சாதி, இனம், சமயம், நாடு கடந்து உலகில் உள்ள அனைவரையும் நம்மவராக, உற்றவராகக் கொள்வதற்கு அடிப்படையாக நமக்குத் துணைபுரிவது கல்வியாகும். சமுதாயத் தில் உள்ள அனைத்து மாசுகளை நீக்கக் கல்வியே கைகண்ட மருந்தாகும்.

நம் நாட்டில் இன்று வளர்ந்துவரும் சாதிச் சங்கங்கள் சாதிக்கட்சிகள், மதப்பூசல்கள் ஆகிய வற்றை நீக்கவும் விழிப்புணர்வு கொள்ளவும் கல்வியே மிக முக்கியம் எனக் கூறுகிறார் பூ.சா. தலைவர் சி.சுப்பிரமணியம் அவர்கள்.

''கல்வித் துறையைப் புனிதப்படுத்துவதன் மூலமாகச் சாதி வெறியையும் இலஞ்ச ஊழலையும் வெற்றிகரமாகத் தவிர்க்க முடியும், ஒழிக்க முடியும்.[17]



இன்றைய கல்விமுறையில் பல குறை பாடுகள் உள்ளன. அதனால்தான் திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் கல்வித் துறையைப் புனிதப்படுத்தல் வேண்டும் என்கிறார். கல்வி என்பது வெறும் தகவல் திரட்டிற்கும், வேலைவாய்ப்பிற்கும் உரிய தாக மட்டுமே இருந்து வருகிறது. இந்நிலைமை மாற வேண்டும். மனிதனின் சுய சிந்தனையை வளர்ப்பதாகவும், மனத்தை நன்கு பயன்படுத்திச் சமுதாய நேயத்தை வளர்ப்ப தாகவும், தனி மனித ஆளுமையை உயர்த்துவதாகவும், பல்வேறு மாறுபாடுகளைக் கடந்து சமுதாய இணக்கத்துடன் வாழும் பொறுப்புள்ள குடிமகனாக வளர்த்து எடுக்கவும், கல்வி பயன்பட வேண்டும். இந்நிலை சிறப்பாக உருவாக வேண்டுமென்றால் தாய் மொழி வழிக் கல்வியே யாண்டும் இடம் பெறல் வேண்டும்.

இங்கு மற்றொன்றையும் சிந்தித்தல் வேண்டும். மொழி கடந்து சிந்திக்க வேண்டும் என்று கூறுகிறபோது, மொழிப் பற்று வேண்டாம் எனக் கூறுவது நமக்கு நோக்கம் அல்ல. மொழிப்பற்று வேண்டும். மிக மிக வேண்டும். ஆனால் அதுவே வெறியாக மாறி பிறமொழி அறிவுச் செல்வங் களைக் பெறத் தடையாக இருத்தல் கூடாது என்பதே நமது நோக்கமாகும். தாய்மொழியைப் புறந்தள்ளி எந்தவொரு சமுதாயமும் முழுமையாக மேம்பட முடியாது. ஒரு சமுதாயத்தின் பண்பாடு களை, நம்பிக்கைகளை, தனித்தன்மைகளைக் காத்துவருவது மொழியேயாகும். அஃது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும் வெறும் தகவல் கருவி மட்டும் அன்று. ஒரு சமுதாயத்தின் விழுமிய கலைகளுக்கும் பண்பாடுகளுக்கும், தொடர் வரலாற்றிற்கும் நிலைக்களனாகவும், கொள்கலனாகவும் விளங்குவது மொழியேயா கும். சுருங்கக் கூற வேண்டுமாயின் ஒரு சமுதாயத்தின் அனைத்துச் சிறப்புகளுக்கும் பெட்டகமாகவும் சுரங்கமாகவும் இருப்பதும் அதுவே. அதேவேளையில் ஓர் இனத்தின் அனைத்துத் தன்மைகளையும் புரிந்து கொள் வதற்கு வாயிலாக விளங்குவதும் அதுவே. ஒரு மனிதனின் உணர்வுகளுக்குச் சிறந்த இயக்க மாகவும், அம்மனித இனத்தின் அனைவரின் சிந்தனை மேம்பாட்டிற்குப் பூரண ஊக்கி யாக விளங்குவதும் தாய்மொழியேயாகும்.

இத்தகு சீரிய சிறப்புகளுக்கு இருப்பிட மான நமது தாய்மொழியின் பெயரை வள்ளுவர் குறிப்பிடாவிட்டாலும், அதன் பால் அவர் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டை அவர் தம் சொல்லாட்சியில் தெள்ளிதின் உணரலாம். மீண்டும், வள்ளுவர் கூறும்


படிப்பகம்

www.padippakam.com


கல்வியையே நோக்குவோம். நன்கு கற்றவர்க்கு எந்த ஊரும், எந்த நாடும் தம் ஊர் போன்றதே யாகும் என்கிறார். ஊரைக் கடந்து, நாட்டைக் கடந்து பரந்த உலக மானுட நெறிக்கு வழிகோலும் கல்வியைக் கற்காமல் வீணாகக் காலம் கழிப்பது பெருங் கொடுமை என்கிறார். கல்வியின் இறுதிப் பயன், உச்ச உயர்வு பரந்த உலக நோக்கம் என்கிறார். பழங்கால நிலவுடை மைச் சமுதாயத்தில் இவ்வாறு அவர் சிந்தித்திருப்பது பெரிதும் வியப்பிற்குரியது.

'I am not an athenian nor greek but citizen of the world' 'நான் ஏதென்ஸ் நகரையோ, கிரேக்க நாட்டையோ சேர்ந்தவன் அல்லன். ஆனால், நான் ஒரு உலகக் குடிமகன்' என்றார் - சாக்ரடீஸ். வள்ளுவர் தாம் மட்டுமே அன்றி உலகில் உள்ள அனைவரும் உலகர்களாக விளங்க வேண்டும் என்பதே அவர் விருப்பமாகும். சாதி, சமயம், ஊர், நாடு கடந்து ஒவ்வொருவரும் உலகக் குடிமகன்களாக விளங்க வேண்டும் என்பதே வள்ளுவரின் உலகப் பொதுமையாகும். கல்வியின் பயன் அதுவாக இருத்தல் வேண்டும் என்பதே அவர் கொள்கை யாகும்.

**கல்வித் துறையைப் புனிதப்படுத்து வதன் மூலமாகச் சாதி வெறியையும் இலஞ்ச ஊழலையும் வெற்றிகரமாகத் தவிர்க்க முடியும், ஒழிக்க முடியும்.**

**மனிதனின் சுய சிந்தனையை வளர்ப்பதாகவும், மனத்தை நன்கு பயன்படுத்திச் சமுதாய நேயத்தை வளர்ப்ப தாகவும், தனி மனித ஆளுமை யை உயர்த்துவதாகவும், பல் வேறு மாறுபாடுகளைக் கடந்து சமுதாய இணக்கத்துடன் வாழும் பொறுப்புள்ள குடிமகனாக வளர்த்து எடுக்கவும், கல்வி பயன்பட வேண்டும். இந்நிலை சிறப்பாக உருவாக வேண்டுமென்றால் தாய் மொழி வழிக் கல்வியே யாண்டும் இடம் பெறல் வேண்டும்.**

●●

## ஆதார நூற்கள்


1. வாழும் வள்ளுவம் - வா.செ.குழந்தைசாமி - பக். 49 - மூன்றாம் பதிப்பு - 1989 - பாரதி பதிப்பகம், சென்னை 17.
2. மநு தர்ம சாஸ்திரம் - மொழியாக்கம் திருலோக சீத்தாராம், பக். 32,33,54 - 1989.
3. விளக்கத்திற்குப் பார்க்க - 'செய்தொழில் வேற்றுமையான்' - ஓர் ஆய்வு - பா.வீரமணி
4. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் - பக். 373 - கழக வெளியீடு - 1973.
5. டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு - தொகுதி 10 - பக். 245, 248 - 1997 - டாக்டர் அம்பேத்கர் பவுண்டேசன் நல அமைச்சகம் - இந்திய அரசு.
6. மேற்படி நூல் - பக். 249
7. மேற்படி நூல் - பக். 249
8. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் - பக். 117 - கழக வெளியீடு - 1973
9. சமூகவியலும் இலக்கியமும் - டாக்டர் கைலாசபதி - பக். 92, 1979 - நியூசெஞ்சுரி புக் அவுஸ் (பி) லிட் - சென்ன
10. வாழும் வள்ளுவம் - டாக்டர் வா.செ.குழந்தைசாமி - பக். 72, 73 - 1989 - பாரதி பதிப்பகம் - சென்னை
11. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் - கழக வெளியீடு - 1973
12. இந்தியாவைப் பற்றி கார்ல்மார்க்சு - பக். 27 - (நியுயார்க் டெய்லி டிரிப்யூன் இதழ் - 25.6.1853) நியூசெஞ்சுரி புக் அவுஸ் (பி) லிட் - சென்னை - 1971.
13. MARX - ENGELS, Collected works Vol-3, P,175, Progress publishers - Moscow - 1973.
14. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் - கழக வெளியீடு 19 - சென்னை.
15. விளக்கத்திற்குப் பார்க்க - வள்ளுவரும் இயங்கியல் தத்துவஞானக் கூறுகளும் - பா.வீரமணி - செந்தமிழ்ச்செல்வி ஏப்ரல், மே, ஜூன் - 1998.
16. Birth OF A GENIUS - GENRIKH VOLKOV - P. 82 - Progress Publishers - Moscow
17. தினமணி தலையங்கக் கட்டுரை - 3.6.99 - சி.சுப்பிரமணியம்.





●●


படிப்பகம்

www.padippakam.com


ஆ.வேலுப்பிள்ளை

# தமிழ் மக்களின் பண்பாட்டு விளக்கம்



திருக்குறள் இயற்கைநெறிக் கால வாழ்க்கை முறையைக் கண்டனஞ் செய்ய எழுந்த நூல் என்று கூறலாம் எனத் தெரிகிறது. இயற்கைநெறிக் கால இலக்கியங்களிலிருந்து அக்கால வாழ்க்கை முறையை வகுத்தால், திருக்குறள் அந்த வாழ்க்கை முறையைக் குறைகூறுவதுபோல அமைந்துள்ளது. போர், காதல், ஆறலைத்தல், இறைச்சியும், மீனும் உண்ணல், மதுவருந்தல் முதலியன இயற்கை நெறிக்காலச் செய்யுட்களிற் சிறப்பாகப் பேசப்பட்டன. கொலை, காமம், களவு, புலால், கள் என்பன குறளுட் கடியப்பட்டன. மீன், இறைச்சி, கள் என்பன ஒரு காலத்தில் மலிந்து கிடந்த தமிழகத்திற் குறள் புலாலுண்ணாமையையும் கள்ளுண்ணாமையையும் வியந்து பேசியுள்ளது. பழைய இந்திய மதங்களுட் புல... ா ணலை முற்றாகக் கண்டித்து நின்ற ச... ஒன்றே. வரைவின் மகளிர், ெ... ச்சறல், பிறனில் விழையாமை என்னுட அதிகாரங்களாற் காமம் கடிந்தொதுக்கப்படுகிறது.

புறநானூறு வீரத்தைப் பாட, திருக்குறள் அன்பைப் பாடுகிறதெனலாம். புறநானூற்றுக் காலப் போர்களாலும் களப்பிரர் படையெடுப்பாலும் கலங்கிய தமிழகம் அகிம்சைக் கொள்கையைத் தன் உயிராக உடைய சமணத்திடம் ஆறுதலை நாடியது. போருக்குரிய காரணங்களை இல்லாமற் செய்துவிடத் திருக்குறள் முனைந்தது. காமத்தைக் கண்டிப்பதனாலும் வெஃகாமை அவாவறுத்தல் என்பவற்றை உபதேசிப்பதாலும், குறள் போருக்குரிய காரணங்களை நீக்கிவிட முயன்றது. பொறையுடைமை, வெகுளாமை என்பன கடைப்பிடிக்கப்பட்டால், போருக்கு இடமிராது என வள்ளுவர் கருதியிருக்கிறார். அழுக்காறாமை, கள்ளாமை என்பனவும் போருக்குரிய மனநிலை தோன்றாமற் செய்வதற்காகக் கூறப்படுகின்றவையே எனலாம். வள்ளுவர் இகலை நேரடியாகக் கண்டித்துள்ளார். இன்னா செய்யாமை, கொல்லாமை என்பவற்றை மக்கள் கடைப் பிடித்தால் போர்க்களங்களில் எதுவுமே




படிப்பகம்

www.padippakam.com


நடைபெற முடியாது. இவை யாவற்றையும் மீறிப் போர் ஏற்பட்டால், போரை வெற்றி கரமாக நடத்த வேண்டிய வழி களையும் வள்ளுவர் கூறியுள் ளார். அறநூல்கள் காலத்தில் போரைப்பாட எடுத்துக் கொள்ளும் களவழி நாற்பது போரைப் புகழ்கிறதா அல்லது போர்க் களத்தைக் கண்டு இரங்குகிறதா எனக் கூற முடியாத முறையில் அமைந் திருக்கிறது.

**புறநானூறு வீரத்தைப் பாட, திருக்குறள் அன்பைப் பாடுகிறதெனலாம். புறநானூற்றுக் காலப் போர்களாலும் களப்பிரர் படையெடுப்பாலும் கலங்கிய தமிழகம் அகிம்சைக் கொள்கையைத் தன் உயிராக உடைய சமணத்திடம் ஆறுதலை நாடியது. போருக்குரிய காரணங்களை இல்லாமற் செய்துவிடத் திருக்குறள் முனைந்தது.**

இயற்கைநெறிக் கால வாழ்க்கை முறையில் வேறு சில அம்சங்களும் குறளிற் கண்டிக்கப் படுகின்றன. புலவர் முதலியோர் வள்ளல்களிடம் இரவலராக ஒழுகியமை இரவச்சம் என்ற பகுதியில் இழித்துக் கூறப்படுகிறது. அறநூல்களில், பெண்ணுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுவதையும் காணலாம். சங்ககாலச் சமுதாயத்திற் பெண்களும் ஆண்க ளோடு சமமாகக் கருதப்பட்டனர். ஆண்களும் பெண்களும் கூடிப் பழகியதற்கும் சேர்ந்து நீராடியதற்கும், சேர்ந்து குரவையாடியதற் கும் சான்றுகள் உள. களவொழுக்கம் மலிந்திருந்தது. பெண்களின் நன்மையை முன்னிட்டு அவர்கள் வெளியிற் சென்று பழகுவதற்கு ஓரளவு கட்டுப் பாடு விதிக்கப்பட்ட போதிலும், பெண்களை ஆண்களிலும் குறைந்தவர்களாகக் கருதும் நிலை ஏற்படவில்லை. ஆணைத் துறவியாக்க முயன்ற அறநூல்கள் பெண்ணைப் பதிவிரதையாக்க முயன்றன. பெண்ணின் வாழ்வில் நிறையக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கண்ணகி போல வாழ்ந்த பெண் போற்றப்பட்டாள். கண்ணகி போல அடங்கி ஒடுங்கி வாழாத பெண்கள் இழித்துக் கூறப்பட்டனர். ஆண்கள் துறவு பூண்பதற்குப் பெண்கள் பெரும்பாலும் இடை யூறாக இருந்தமையால், பெண்கள் இகழப் பட்டனர். அதனாலேயே, பிறர் மனம் புகாத அளவுக்குப் பெண் தன்னைக் காத்துக் கொள்ளுதலே கற்பின் பேரெல்லை என்ற கருத்துத் தோன்றியது.

பெண்ணைப் பற்றி ஒரு முரண்பட்ட நோக்கு அறநெறிக் காலத்திற் காணப் பட்டது. களவொழுக்கத்திற் பொய்யும் வழுவும் தோன்றியதால், சடங்குமூலம் நடைபெறும் திருமணம் வகுக்கப்பட்டதை, அறநூல்கள் காலத்தெழுந்த தொல்காப்பியம் எடுத்துக்கூறு கிறது. அதே காலத்தில் எழுந்த சிலப்பதிகாரத்தில் கதாநாயகன் கோவலனும் கதாநாயகி கண்ணகியும் பெரியோர்கள் நிச்சயித்த திருமணம் செய்தனர். சமணரது சிலப்பதிகாரக் கண்ணகியும் பௌத்தரது மணி மேகலைக் கதாநாயகியும் பெண் ணின் பெருமையைக் காட்ட உதவினர். கண்ணகி பத்தினித் தெய்வமாகப் படைக்கப்பட் டாள். ஆனால், அதே கால அறநூல்கள் பெண்களை இழித்துக் கூறுவதைக் காண கூடியதாயிருக்கிறது. பெண் களை அதீதமாகப் பெருமைப்படுத்துவதும் இழிவுபடுத்துவதும் ஒரே காலத்தில் ஒரே சமய நோக்கினையுடையவர்பாற் காணப்படுகின்றன.

சமூக வாழ்வில் ஓர் ஒழுங்கை நிலைநாட்டு வதற்காக, எல்லாச் சமூகங்களும் கற்பை ஒவ் வொரு வகையிற் பேணுகின்றன. இயற்கைநெறிக் காலத்திலும் கற்புக் குறிப்பிடப்பட்டது. ஆனால், அறநூல் காலத்துக் கற்பில், கட்டுப்பாடுகள் கூடியவளவில் இருந்தன. வீட்டு வாழ்க்கை புனிதமாக அமையவும் கணவனது உடைமை யுணர்வு திருப்தியுறவும் மக்கட்பேறு முறை யானதாக ஏற்படவும் பெண்ணுக்குக் கற்பு வற்புறுத்தப்படுகிறது. பெண்ணானவள் தெய்வத் தைத் தொழாது கணவனைத் தொழ வேண்டும் என்று வள்ளுவரும் கூறியுள்ளார். உலக வாழ்வில், பிரதிதின வாழ்வில், கற்பின் பெயரால் உரிமையிழக்கும் பெண்ணுக்குத் தேவருலகத்தில் நல்ல வரவேற்புக் கிடைக்குமெனவும் மழை பெய்யச் சொன்னாற் பெய்யுமெனவும் ஆசை காட்டப்படுகிறது. பெண்ணின் உரிமை பறிக்கப் படத் தொடங்கிய நாளிலேயே, பெண்ணுக்குப் போலி மரியாதை காட்டும் இயல்பு தோன்றியது.

காதல் ஒழுக்கத்தை அறநூல்கள் நேரடியாகக் கண்டிக்கவில்லை. அறநெறிக் காலத்தில் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை, கார்நாற்பது முதலிய அகத்திணை நூல்கள் தோன்றுகின்றன. இவை சங்ககால அகத்திணை மரபின் தொடர்ச்சி எனலாம். கலித்தொகையில் கைக்கிளை பெருந்திணைச் செய்யுட்களும்




படிப்பகம்

காணப்படுவதால், அது அகத்திணை மரபையும் அம்மரபின் பிற்காலத்திரிபையும் உணர்த்துகிறது. அன்பினைந்திணை தமிழ் நாட்டிலிருந்த ஐவகை நிலங்களின் சூழலையடிப்படையாகக் கொண்டது. அறநூல்களின் பிரசாரம் ஐவகை நிலங்களின் வாழ்க்கை முறையைப் பாதித்து அன்பிந்திணை மரபைச் சிதைத்தது. களவொழுக்கம் வெறுக்கப்பட்டது. 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் வகுத்தனர் கரணம் என்ப' என்ற தொல்காப்பியச் சூத்திரத்திலிருந்து தெரிய வருகிறது. ஆறலைத்தல் சூறையாடுதல் கடியப் பட்டதால் பாலையொழுக்கமும், பரத்தைமை கண்டிக்கப்பட்டதால் மருத ஒழுக்கமும், உயிர்க் கொலையாகிய மீன்பிடித்தல் விலக்கப்பட்டதால் நெய்தல் ஒழுக்கமும், போர் ஒதுக்கப்பட்டதால் வினைவயிற் பிரிதலுக்கு இடமின்றி முல்லை ஒழுக்கமும் பாதிக்கப்பட்டன. அறக் கருத்துக்களின் பிரசாரம் சமுதாய வாழ்க்கையை உடனே மாற்றமாட்டாது. ஆனால், அறக்கருத்துக்கள் சிறிது சிறிதாக வேரூன்றி வன்மை பெறச் சமுதாயம் மாறிக் கொண்டிருந்தது. பழைய அன்பினைந்திணை மரபு சிதைந்து கொண்டிருந்தது.

**வள்ளுவர் சமய சமரச நெறியையுங் கடந்து எவ்வளவோ ஆழமாகச் சென்றுவிட்டார். அவர் எந்தச் சமயத்தையும் தமது நூலுள்ளே சிறந்தது என விதந்தெடுத்துக் கூறவில்லை. ஆனால், எல்லாச் சமயங்களும் அவர்மேல் உரிமை கொண்டாடுகின்றன.**

தமிழிலுள்ள அறநூல்களுள் முதன்மையானதான திருக்குறள் எத்தகைய வாழ்க்கைத் தத்துத்தைக் காட்டுகிறதென ஆராய வேண்டும். பாரத நாட்டிலே தோன்றிய சமய நெறிகள் ஆறு என்பது மரபு. இவை தத்தமக்குரிய சமயநூல்களும் தத்துவச் சிந்தனைகளும் கொண்டு விளங்குகின்றன. வெவ்வேறு கோட்பாடுகளையுடையனவாக விளங்கிய இச்சமயங்கள் மக்கள் உள்ளங்களைத் தங்கள்பால் ஈர்ப்பதற்காகப் போட்டியிட்டன. சமயப் பூசல் தோன்றியதால், சமயங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளும் விசாலப்படுத்தப்பட்டன. சமயங்கள் என்றுமே சந்திக்க முடியாத துருவங்கள் போலக் காட்சி அளித்தன. மணிமேகலை, தமிழ்நாட்டில் இத்தகைய சூழ்நிலை இருந்ததை எடுத்துக் காட்டுகிறது. இந்த நிலையிலே திருக்குறள் தோன்றியது. திருக்குறள் சங்கத்தில் அரங் கேறியபோது, அதற்கு மிக்க எதிர்ப்பு இருந்ததாகத்



தெரிகிறது. இந்தியச் சிந்தனை வரலாற்றிலும் தமிழ்நாட்டுச் சிந்தனைப் போக்கிலும் பலவழிகளிற் புதுமையைப் புகுத்திய திருக்குறள் ஆரம்பத்தில் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியேற்படுதல் இயல்பே.

பாரத நாட்டிலே தோன்றிய சமயங்கள் மட்டுமல்ல; புகுந்த சமயங்களும் தம்முடைய செல்வாக்குத் திருக்குறளிற் காணப்படுவதாகக் கூறுகின்றன. கிறித்தவம், இஸ்லாம் முதலிய சமயங்களும் திருக்குறளிலே தம்முடைய கொள்கைகளுக்கு, அமைதி காண்கின்றன. திருக்குறள் உலகப் பொதுமறை என்பது யாவருக்கும் உடன்பாடாகிறது. இவற்றிலிருந்து ஒன்று புலப்படுகிறது. ஒவ்வொரு சமயமும் சொல்லும் பொருள் திருக்குறளிற் காணப்படுகிறது. அத்தன்மையில்லையாயின் எல்லாச் சமயங்களும் திருக்குறளைப் போற்ற முடியாது. எல்லாச் சமயங்களும் திருக்குறளைப் போற்றுவதிலிருந்து பிறிதோர் உண்மை புலப் படுகிறது. எந்த ஒரு சமயத்தின் கொள்கையையும் திருக்குறள் அவ்வச்சமயக் கடவுள் முதலிய பொருட் சார்பான சமய சங்கேத வாய்பாட்டுச் சிறப்பு மொழிகளால் முற்றாக எடுத்துக் கூற வில்லையென்பதுதான் அது. அப்படி அது கூறியிருந்தால், குறள் ஒருசமயத்துக்குரிய நூலாகக் கருதப்பட்டுப் பிற சமயங்களால் ஒதுக்கப் பட்டிருக்கும்.

வள்ளுவர் பிறந்த சமயம், பின்பற்றிய சமய அனுட்டானங்கள் என்பனபற்றிக் கருத்து வேறுபாடு காணப்பட்ட போதிலும் வள்ளுவருடைய உள்ளத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடு ஏற்பட முடியாது. வள்ளுவர் உலகச் சமயத்தின் புறத் தோற்றத்திலே தம்மைப் பறிகொடுத்துவிடவில்லை. சமயவாதிகளின் தருக்கம் அவரை மயக்கிவிடவில்லை. சமயத்திலிருந்து வள்ளுவர் ஒதுங்கவுமில்லை; வள்ளுவர் சமயங்களை நன்கு கற்றிருக்கிறார். சமய உண்மைகளை ஊடுருவி நோக்கியிருக்கிறார். சமய உண்மை வள்ளுவருக்கு விளங்கியிருக்கிறது. சமய அடிப்படை வள்ளுவருக்குத் தெரியவந்திருக்கிறது. வள்ளுவர் சமய சமரச நெறியையுங் கடந்து எவ்வளவோ ஆழமாகச் சென்றுவிட்டார்.


padippakam

www.padippakam.com


அவர் எந்தச் சமயத்தையும் தமது நூலுள்ளே சிறந்தது என விதந்தெடுத்துக் கூறவில்லை. ஆனால், எல்லாச் சமயங்களும் அவர்மேல் உரிமை கொண்டாடுகின்றன.

**இந்நூலை முழுவதாகப் பார்க்கும்போது, மக்கள் ஒழுங்காக வாழ்ந்து உலகியலின்பத்தைத் துய்த்தல் வேண்டும் என்பதுதான் வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் தத்துவம் என்பது தெரிகிறது.**

சமயங்கள் வாழ்க்கையைச் சீர்திருத்திய மைக்க முயன்றன எனலாம். வாழ்க்கைச் சுகங்களில், அளவிறந்த பற்று வைப்பதனால், ஏற்படும் அநர்த்தங்களை அவதானித்து வாழ்க்கையில் ஓர் ஒழுங்கை, நீதியை நிலைநாட்டச் சமயங் கள் முயன்றன. ஒழுங்காக வாழ்ந்து உலகியலின்பங் களைத் துய்க்க வேண்டும் என்றே சமயங்கள் கூறவிரும் பினபோலத் தெரிகிறது. ஆனால், பிரசார வேகத்தில், ஒழுங்கான வாழ்க் கையை வற்புறுத்தும் போக்குத் தளர்ந்துவிட் டது. குறள் தவிர்த்த ஏனைய அறநூல்களும் சமய நூல்களும் மக்களை நிரந்தரமாகக் கவர்ந்திழுக்கும் சக்தி பெறவில்லை. ஒழுங்கான வாழ்க்கையைக் கண்டிக்கும் போக்கைக் கருத்திற்கொண்டு உலக நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை முதலிய வாழ்க்கை வெறுப்புக்குரிய கருத்துக்களை அளவிறந்து வற்புறுத்தும் இந்த நூல்கள், வாழ்க்கையிற் பெருந்துன்பம் அல்லது ஏமாற்றம் அடைந்தவர்களுக்கேஒருவிதமான மனச்சாந்தி யை அளிக்கின்றன. மனிதர்களுக்கு இயல்பாக அமைந்த வாழ வேண்டும் என்னுந் துடிப்பை உதாசீனஞ் செய்யும் நூல்களாக இவை அமைந் திருக்கின்றன. வள்ளுவர் இந்த நிலையை உணர்ந் திருக்கிறார்.

திருக்குறள் என்னும் நூலின் அமைப்பே, உலக வாழ்வு பற்றிய வள்ளு வரின் பார்வையைத் தெளிவாக்குகிறது. தலைவனும் தலைவியும் கூடிக்களிக்கும் இன்பத்தை வள்ளுவர் காமத்துப் பாலில், இருபத்தைந்து அதிகாரங்களில் எடுத்துக் கூறியுள்ளார். ஏனைய பல அறநூல்களும் சமய நூல்களும் கூறுவது போல, அவர் இத்தகைய இன்பத்தைச் சிற்றின்பமென இழித்துரைக்க வில்லை. களவொழுக்கத்தைக் கூட, அவர் கடிந்துரைக்கவில்லை. உயர்ந்த குறிக்கோளுடைய காதலின் பத்தை வள்ளுவர் காமத்துப் பாலிற் கூறியுள்ளார். இலட்சிய நோக்குடைய வள்ளுவர் கையில் அகப்பொருள் மரபு இத்தகைய வடிவத்தைப் பெறுகிறது. இயற்கை



நெறிக்காலத் தமிழர் வாழ்வில் இடம்பெற்ற பரத்தை வாழ்வில் எழும் பிணக்கினை மருதமாகக் கூறாமல், வெவ்வேறு வளர்ந்த இரண்டு உள்ளங்கள் படிப் படியே ஊடாடித் தட்டுத் தடுமாறி ஒன்றாய்க் கூடுவ தனையே மருத மாகக் கூறிப் பெரியதொரு புரட்சி செய்துள் ளார் வள்ளுவர் என எடுத்துக் காட்டுவர். புலவிநுணுக்கம் வள்ளுவர் கூறிய புதுவகை மருதமாகும்.

இல்லற வாழ்க்கை திருக் குறளுட் சிறப்பிடம் பெற்றது. குடும்ப வாழ்க்கைச் சிறப்பு இருபது அதிகாரங்களில் எடுத்துக் கூறப் படுகிறது. திருக்குறள் மனைவியை வாழ்க்கைத் துணையெனக் கூறுதல் மிகவும் சிறப்பானது. குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பெண், பெறவேண்டிய முக்கியத்துவத்தையும் ஆணு டைய வாழ்விற் பெண் வகிக்க வேண்டிய பங்கினையும் இது உணர்த்துகிறது. அறவழியில் இல்வாழ்க்கை நடத்திப் பெற முடியாத ஒன்றை யும் துறவறத்திற் சென்று பெற்றுவிட முடியாது என்ற வள்ளுவரின் துணிகரமான கருத்து இந்தியச் சிந்தனையின் பழைய வரலாற்றில் ஒரு புதுமை. ஒழுங்காக இல்லறத்தில் நின்று வாழ்பவன், பூவுலகத்திலிருக்கும் பொழுது, தேவன் என்ற நிலையைப் பெற்றுவிடுவான் என்று வள்ளுவர் மேலும் கூறியுள்ளார். உலக வாழ்க்கை ஒழுங்காக நடைபெறுவதற்குப் பெருந் துணையாக வேண்டப்படுவதாகிய பொருட்பால் எழுபது அதிகாரங்களிற் பரந்து காணப்படுகிறது. நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்கள் கொண்ட திருக்குற ளுள், நூற்றுப்பதினைந்து அதிகாரங்களுக்குக் குறையாமல், எட்டில் ஏழு பங்கில் இவ்வுலக வாழ்க்கைச் சிறப்பும் இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டியனவும் கூறப்படுகின்றன.

இவ்வாறு கூறுவதனால், சமயங்கள் பிரத்தி யேகமாக எடுத்துக்கூறும் விடயங்கள் திருக் குறளில் இல்லையென்பது கருத்தன்று. துறவற வியலிற் பதின்மூன்று அதிகாரங்கள் காணப்படு கின்றன. திருக்குறள் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. அறத்துப் பாலின் இறுதியில், ஊழ் அல்லது விதி பற்றிக் கூறப்பட்டுள்ளது. எனினும், இந்நூலை முழுவதாகப் பார்க்கும் போது, மக்கள் ஒழுங்காக வாழ்ந்து உலகிய லின்பத்தைத் துய்த்தல் வேண்டும் என்பதுதான் வள்ளுவர் காட்டும்


படிப்பகம்


www.padippakam.com


வாழ்க்கைத் தத்துவம் என்பது தெரிகிறது.

சமண சங்கத்தின் பெருமை, நீத்தார் பெருமை என்ற அதிகாரத்திற் கூறப் பட்டதென்றும், சமணரின் சிறப்புடைக் கொள்கையாகிய தருமம், அறன்வலி யுறுத்தல் என்ற அதிகாரத்திற் கூறப்பட்ட தென்றும் கூறுவர். அறன் வலியுறுத்தலே, திருக்குறளின் பொருள் எனக் கொள்ளலாம். இளங்கோ சிலப்பதிகாரத்தை இயற்கை வாழ்த்தோடு தொடங்குவது போல, வள்ளுவரும் வான் சிறப்புக் கூறுகிறார். மனத்துக் கண் மாசில்லாமையே அறம் என்றார் வள்ளுவர். புறவே டங்களும் வெளி ஆசாரங் களும் மட்டும் பயன்தரா என்பது அவர் கருத்தாகும். இறக்கும்பொழுது துணை யாக வரக் கூடியது அறமே என்கிறார். அறவாழ்க்கை தமிழ்நாட்டிலே தழைக்கப் பாயிரத்தில் அவர் அமைக்கும் சூழல் தனிச்சிறப்பு வாய்ந் தது. அருகன் காட்டிய வழி யும் சித்தர் சென்ற வழியும் முதலிற் கூறப்படுகின்றன. உலகில் தானமும் தவமும் நிலவ, மழை வேண்டும். துறவிகள் பெருமை, தருமத்தின் தேவை என்பன தொடர்ந்து கூறப்படுகினறன.

**சான்றாண்மை என்பதின் தொடர்புள்ள சான்றோர் என்ற சொல்லுக்கு அக்காலத்திற் பொருள் மாறியதெனலாம். இயற்கை நெறிக் காலத்திற் கல்வி கேள்விகளில் வல்லோராக மன்னரைப் பாடிய புலவர் சான்றோரெனப்பட்டனர். அறநெறிக்காலத்திலிருந்து, அறவழி ஒழுகுபவரே சான்றோரெனப்படுகின்றனர்.**

அறக்கருத்துக்கள் 'இதைச் செய்', 'இதைச் செய்யாதே' என்ற முறையில் கட்டுப்பாடுகளாக அமைந்திருக்கின்றன என்று அறநூல்களைக் குறை கூறுவோரும் உளர். உயரிய பண்பினையும் உயரிய செயலினையும் எல்லாருந் தெளிந்து உய்வதன்பொருட்டு, பரந்துபட்டுக் கிடக்கும் பண்பு நலன்களையும் செயல் நலன்களையும் தொகுத்து வரையறுத்து அவை அறக்கருத்துக்கள் என்ற பெயரால் உணர்த்தப்பட்டன. உள்ளம், உரை, செயல் என்ற மூன்றையும் வழிநடத்த முயன்றன அறநூல்கள். அறத்துப்பால் பொது வாக எல்லாருக்கும் உரியது. காமத்துப்பால், பொருட்பால் என்பன சிலர் சிலருக்குச் சிறப்பாக உரியது. எனவே, அறத்துப்பால மட்டுமே அறக்கருத்துகளைக் கூறுகிறது எனக் கொள்ள வேண்டியதில்லை. குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நாணுடைமை, குடிசெயல்வகை, இரவச்சம் என்பன அவை கூறும் உயர்பண்பினை நோக்கி அறத்துப் பாலோடு இணைத்து நோக்குதற்



குரியன. நட்பு, கூடா நட்பு, பேதைமை, புல்லறிவாண்மை, இகல், உட்பகை, பெண் வழிச்சேறல், வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது, நன்னெறியியல், செல்வம், நல்குரவு, இரவு, கயமை என்பன வும் அறக்கருத்துக்களையே எதிர்மறை யாகக் கூறுகின்றன.

அரசியலிலும் அங்க இயலிலும் கூறப்பட்ட அறங்களிற் பல, அரசருக்கும் அமைச்சர் முதலானோருக்கும் சிறப்பாக வேண்டப் படுவனவாயினும், ஏனையோ ருக்கும் பொதுவாக வேண்டற் பாலனவே. உரையும் செயலும் உள்ளத்தின் வழி எழுவனவாத லின், வள்ளுவர் மனநலத்தையே பெரிதும் போற்றினார். இல்லறத் தார், உள்ளத்திலிருந்து களவு, வெகுளி, அவா என்பன நீக்கப் படவேண்டும். துறவறத்தார் உள்ளத்தில் அருள், மெய் யுணர்வு, அவாவின்மை, துறவு என்பன இடம் பெற வேண்டும். உரையாற் கொள்ளத்தக்க அறங் கள் வாய்மை, இன்சொற்கூறல் முதலியன. இல்லறத்தார் செய்யக்கூடிய அறங்கள் விருந் தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை என்பன. துறவறத்தார் தவஞ்செய்ய வேண்டும். செய்யத்தக்க செயல்கள் ஒருவகை; தவிர்க்கத்தக்க செயல்கள் மற்றொருவகையெனலாம். கூடா வொழுக்கம், இன்னாசெய்தல், கொல்லுதல், புலாலுண்ணல், முதலியன தவிர்க்க வேண்டிய செயல்கள்.

மனிதரின் குண இயல்புகளை, இராசதம் (முனைப்பு), தாமசம் (சோம்பல்), சாத்துவிகம் (அமைதி) என மூன்றாக வகுக்கலாம். உயிர்த் துடிப்புடைய சமுதாயத்தில் மேலோங்கி நிற்கும் இராசதம், வீரயுகமாகிய புறநானூற்றுக் காலத்திற் சிறப்புற்றிருக்கிறது. அறநூல்கள் சிறப்பித்துக் கூறிய குண இயல்பு சாத்துவிகமே. அவை, சாத்து விகத்தை இலட்சியமாகக் கொண்டு இராசதத்தைக் கண்டிக்கின்றன. வள்ளுவருடைய மடியின்மை, தாமச கண்டனமாக அமைகிறது. ஊக்கமுடைமை ஆள்வினை யுடைமை, வினைத்திட்பம், வினை செயல் வகை என்பன எதிர்மறையாகத் தாமசத்தை விலக்குகின்றன. வள்ளுவர் கூறிய குடியியல் அதிகாரமான சான்றாண்மை, சாத்து விகத்தைப் போற்றுகிறது. சாத்துவிகக் குணம் பிரகாசிப்பதற்குப் பண்புடைமை, நாணுடைமை, பெருமை

முதலிய அரதிகாரங்களுட் கூறப்பட்டன உதவுகின்றன. சான்றாண்மை என்பதின் தொடர்புள்ள சான்றோர் என்ற சொல்லுக்கு அக்காலத்திற் பொருள் மாறியதெனலாம். இயற்கை நெறிக் காலத்திற் கல்வி கேள்விகளில் வல்லோராக மன்னரைப் பாடிய புலவர் சான்றோ ரெனப்பட்டனர். அறநெறிக் காலத்தி லிருந்து, அறவழி ஒழுகுபவரே சான்றோரெனப் படுகின்றனர்.

> **நாட்டிற் காணப்படும் வறுமையைப் போக்குவதற்குக் கொடையை எதிர்பார்ப்பதைத் தவிர வேறு வழியிருப்பதாக வறியவரான சாதாரண மக்களுக்கு வள்ளுவர் காலத்திலே தெரியவராது. அத்தகையயோர் தொழில் செய்து வறுமையைப் போக்கலாம் என வள்ளுவர் கருதினது உழவு என்ற அதிகாரத்திலே தெரிவிக்கப்பட்டது. ஈதலை வற்புறுத்தியும் ஏற்பதை இழித்துக் கூறியும் வள்ளுவர் இங்கும் சமுதாய ஒழுங்கு காண முயன்றுள்ளார்.**

புறநானூற்றுக் • காலச் சமூகத்தில் வீரன் பெற்ற இடத்தை அறநூல்கள் காலத்திலே துறவி பெற்றான். சமணர் தம்முடைய சமய முதல்வரை மகாவீரர் என்றே அழைத்தனர். துறவிக்குச் சிறப்பாக உரிய அருள் அறநெறிக்காலத்திற் போற்றப் பட்டது. நெஞ்சில் இருக்க வேண்டியது ஈரமே யன்றி வீரமன்று என்பது வள்ளுவர் கருத்தெனலாம். அறநூல்கள் மனிதர் செயல் கள் சிலவற்றைத் தீயவினை கள் எனக்கொண்டு, அவற்றைத் தவிர்க்கும்படி வற்புறுத்தும். பாவங்களைச் செய்ய மனம் அஞ்ச வேண்டும் எனக் கருதிய வள்ளுவர் தீவினையச்சம் என்றோர் அதிகாரத்தைக் கூறினார். அறத்தை வற்புறுத்துதலின் நோக்கம் ஒழுக்கத்தை, அதாவது நல்லொழுக்கத்தை ஏற்படுத்துதலே. எனவே, ஒழுக்கமுடைய வாழ்க்கை யே சிறந்த வாழ்க்கை; ஒழுக்கமற்ற வாழ்க்கை இழிவானது என்று அறநூல்கள் கூறுகின்றன. ஒழுக்கம் என்று சொல்லிவந்த வள்ளுவர் ஒரு குறளிலேயே நல்லொழுக்கம், தீயொழுக்கம் எனப் பாகுபாடு செய்தார். ஒழுக்கம் என்ற சொல், நல்லொழுக்கத்தையே பழந்தமிழிற் குறித்து வந்ததெனவும், பின்பு ஒழுக்கந் தவறுதல் தீயொழுக்கம் எனப் பெயர் பெற, ஒழுக்கம் என்ற பழைய சொல்லின் பொருட்டெளிவு கருதி நல் என்ற அடைமொழி வழங்கப் பட்டதெனவும் கொள்ளலாம்.

வறுமையும் அதன் பயனாக ஏற்படும் இரப்பும் அறநூலாருக்குப் பெரிய பிரச்சினையாயிருந்தன வெனலாம். வறுமையின் கொடுமையை வள்ளுவர் நல்குரவு என்ற அதிகாரத்தில் எடுத்துக் கூறினார். வறுமை காரணமாக வள்ளல்களை நாடிக் கையேந்துவதும் செல்வர் ஈயாமையும் வள்ளுவர் கவனத்துக்குள்ளாகி யிருந்தன. இரவச்சம், நன்றியில் செல்வம் என்ற அதிகாரங்கள் எழுந்தமை அதனாலேயே. வள்ளல்தான் என்று நிச்சயப்படுத்தக் கூடியவரிடமே இரக்கலாம் எனவும் இரந்து பெறுதல் இழிவு எனவும் வள்ளுவர் கருதினார். நாட்டிற் காணப்படும் வறுமையைப் போக்குவதற்குக் கொடை யை எதிர்பார்ப்பதைத் தவிர வேறு வழியிருப்பதாக வறியவரான சாதாரண மக்களுக்கு வள்ளுவர் காலத்திலே தெரியவராது. அத்தகையோர் தொழில் செய்து வறுமையைப் போக்கலாம் என வள்ளுவர் கருதினது உழவு என்ற அதிகாரத்திலே தெரிவிக்கப் பட்டது. ஈதலை வற்புறுத்தியும் ஏற்பதை இழித்துக் கூறியும் வள்ளுவர் இங்கும் சமுதாய ஒழுங்கு காண முயன்றுள்ளார்.

வள்ளுவர் நூல் எழுந்த காலத் தில், மறுமைக் கொள்கையையும் வீட்டின்பக் கொள்கையையும் ஏற்காத மக்கள் இருந்திருப்பர். அறநெறி, உலகியலின்பங் களைத் தேடித் தராவிட்டால், அறவழியாற் பயன் என்ன என அவர்கள் ஆசங்கித்திருத்தல் கூடும். அதனால், வள்ளுவர் புகழ்பற்றிப் பாடுகிறார். புற நானூற்றுக் காலத்தில் வீரம் புகழைத் தந்தது. உலகத்துப் பொன்றாது நிற்பது புகழல்லா லில்லை என்ற வள்ளுவர் கருத்து, இயற்கை நெறிக்காலத்திலும் தமிழ்நாட்டில் நிலவியது. புகழ் என்பதை இல்லறவியலிற் கூறிய வள்ளுவர், தேவருலகங்கூட ஞானிகளிலும் பார்க்கப் புகழாளரையே போற்றுகிறது என்கிறார்.

உலகத்திலுள்ள பெரிய அறமுறைகள் யாவும் வாய்மையை அடிப்படையாகக் கொண்டவை. உண்மை பேசுதலை வற்பறுத்தாத அறம் உலகிலேயே இல்லையெனலாம். சத்தியமே கடவுள் என்ற வாக்கும் உண்டு. வள்ளுவர் எடுத்துக்கூறிய வாய்மை, சமய சமயம் போற்றும் வாய்மையே. அகிம்சையை, முதல் அறமாகக் கொண்டு உருவாகியது சமண தருமம். பிற உயிர்களுக்கு எவ்விதத் தீங்கும் பயவாத சொற்களைக் கூறுதலே வாய்மை. பிற





படிப்பகம்

www.padippakam.com


உயிர்களுக்குத் தீங்கு பயவாமையும் உடைய தாய் நன்மையும் பயக்கக்கூடுமாயின் நடவாததைக் கூறுவதும் மெய் கூறுவதாகும். அகிம்சைக் கொள்கையால் ஏற்படும் கட்டுப்பாடு போக, குறள், வாய்மையைப் போற்றுவதில், வேறு அறநூல் எதற்கும் பின் நிற்கவில்லை.

குறளுட் காணப்படும் துறவறவியல் விரதம், ஞானம் என இரண்டு பிரிவுகளை உடையது. துறவறவியலின்படி, விரதத்தை அனுட்டித்துச் செல்ல, ஞானம் ஏற்படுகிறது. நான்கு அதிகாரங்கள் ஞானம் என்ற பகுதியில் அடங்குகின்றன. ஞானம் என்ற பகுதியில் முதலதிகாரம் நிலையாமை.

**தவத்தால் வரும் நன்மைகளை வள்ளுவர் பன்னிப்பன்னிக் கூறுவர். வள்ளுவர் கூறும் தவமும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டதே. உறுகின்ற துன்பங்களைப் பொறுத்தலும் பிற உயிர் களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம் எனப்படுகின்றன. தவத்திற்கு இவ்வளவு மகிமையுண்டெனச் சமணம் முதலிய சமயங்கள் பிரசாரஞ் செய்ததால் தவஞ் செய்பவர் போல நடந்து மற்றோரைச் சுயநலம் காரணமாக ஏமாற்றுவோர் பலர் காணப்பட்டிருப்பர்.**

நிலையாமையை அடிப்படையாகக் கொண்டெழுந்தனவே பல்வேறு இந்தியச் சமயங்கள் எனப் பரிமேலழகர் நிலையாமையை அறிமுகப்படுத்தும்போது கூறுவது அழகாக அமைந்திருக்கிறது. 'நிலையாமையாவது தோற்ற முடையனயாவும் நிலையுதலிலவாந்தன்மை. மயங்கியவழிப் பேய்த் தேரிற் புனல் போலத் தோன்றி, மெய்யுணர்ந்த வழிக்காற்றிலரவு போலக் கெடுதலிற் பொய்யென்னும் அத்துவித சித்தாந்தி களும் நிலைவேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்திறக்குமென்னும் பௌத்த சித்தாந்திகளும் ஒருவாற்றால் வேறுபடுதலும் ஒருவாற்றால் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கேயுடையனவென்னும் பிற சித்தாந்திகளும் ஆகிய பல திறத்தவராலும் பொருளின் இயல்பு பலவாறு கூறப்படுமாயினும், அவரெல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடன்பாடு' என்றார் பரிமேலழகர். மேலும் அவர், இளமை செல்வம் யாக்கை என்பன நிலைபெற்று நில்லாத பொருள்களென்றார்.

நிலையாமையைத் தொடர்ந்து துறவு கூறப்படுவது, அவை இரண்டுக்குமுள்ள தொடர்பைக் காட்டுகிறது. நிலையாமையை உணர்ந்து தெளியும்போது, பற்றுக்களைத் துறத்தலே, உய்திக்கு வழி என்பது புலப்படும். அத்துறவு துன்பம் நீங்க உதவுகிறது. நிலையாமையையுணர்ந்து துறவு நெறியில் நிற்கும்போது மெய்யுணர்தல் ஏற்படுகிறது. மெய்யுணர்தல் என்றால் உண்மைப் பொருளை உணர்தல். உண்மைப் பொருளை உணராமையே பிறவிக்குக் காரணமாகிறது. உண்மையுணர்தல் நரகத் துன்பத்திலிருந்து ஒருவரை விடுவித்து அவர்க்கு வீட்டின்பம் அளிக்கும். அவாவறுத்தல் என்பதே, ஞானம் என்ற பகுதியிற் கடைசி அதிகாரம். பிறவிக்கு வித்தாகிய அவாவை அறுக்கப் பிறவி நீங்கும். திருப்திப்படுத்த முடியாத அவாவை விடும் நிலையே வீட்டின்பமாகும். ஞானம் என்ற பகுதியில் வள்ளுவர் சமண சித்தாந்தத்தை எடுத்துக் கூறினார் எனலாம்.

துறவியலில், விரதம் என்ற பகுதியில் தவமும் மிக முக்கியமான இடம் பெறுகிறது. தவத்தால் வரும் நன்மைகளை வள்ளுவர் பன்னிப்பன்னிக் கூறுவர். வள்ளுவர் கூறும் தவமும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டதே. உறுகின்ற துன்பங்களைப் பொறுத்தலும் பிற உயிர் களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம் எனப்படுகின்றன. தவத்திற்கு இவ்வளவு மகிமையுண்டெனச் சமணம் முதலிய சமயங்கள் பிரசாரஞ் செய்ததால் தவஞ் செய்பவர் போல நடந்து மற்றோரைச் சுயநலம் காரணமாக ஏமாற்றுவோர் பலர் காணப்பட்டிருப்பர். வள்ளுவர் காலத்திலேயே, இந்த நிலை ஏற்பட்டது. கூடாவொழுக்கம் என்ற பகுதியில் வள்ளுவர் போலி வேடதாரி களைக் கண்டித்துள்ளார்.

விதிபற்றிய நம்பிக்கை இந்தியச் சமயங்களிற் சிறப்பிடம் பெற்றபோதிலும் சமணம், பௌத்தம், ஆசிவகம் முதலிய சமயங்களில் அது அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. வைதிக சமயங் களிற் கடவுட் கொள்கை விதியின் முக்கியத் துவத்தை ஓரளவு குறைத்து விடுகிறது. ஊழ், தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட்பன்மொழிகளாக வழங்கப் படுவதுண்டு. விதியே வினைகளின் பயனைச் சம்சாரத்திலுள்ள ஆன்மாக்களுக்குக் கூட்டிவைக்கிறது. நல்லூழ் அறிவை விரிவடையச் செய்து முயற்சியைத் தூண்டுகிறது. தீயஊழ் சோம்பலையும் மடமையையும் உண்டாக்குகிறது. ●●





படிப்பகம்

www.padippakam.com


ச.மெய்யப்பன்

# இலங்கை அறிஞர் கா.பொ.இரத்தினம்



திருக்குறள் பணிசெய்த பெருமக்களை அறிமுகப் படுத்தவும், அடையாளம் கண்டு கொள்வதற்கும், இனங்காட்டவும் இந்தத் தொடர் தொடர்கிறது. வள்ளுவம் 2வது இதழில் குறள்நெறி பரவ அரும்பெரும் பணிகள் ஆற்றிய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் திருக்குறள் பணிகள் விளக்கமாக ஆராயப்பெற்றன. இதில் அறிஞரின் திருக்குறள் பணிகள் விளக்கப் பெறுகின்றன.

திருக்குறள்நெறி பரவப் பலவகைகளில், பலமுனை களில் உழைத்த பெருமக்கள் பலர். வ.சுப.மாணிக்கனார், இலக்குவனார், இளவழகனார், அப்பாத்துரையார், குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ.விசுவநாதம், இளங் குமரனார், திருக்குறள் முனுசாமி, வேலா இராசமாணிக்க னார், பண்டித கா.பொ.இரத்தினம் என இப்பெருமக்கள் பட்டியல் வளர்கிறது, தொடர்கிறது.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இலங்கை ஆற்றிய பங்களிப்பு பெரியது. பேராய்வுக்கு உரியது. பல ஆய்வுக் களங்களைக் கொண்டது.

சங்க காலத்து ஈழப் பூதன் தேவனார் தொடங்கி இன்றைய சிவத்தம்பிவரை தமிழ் உறவு தொடர்கிறது.

ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரனார், நவநீத கிருஷ்ண பாரதியார், கணபதிப்பிள்ளை, கைலாசபதி, செல்வநாயகம், வித்யானந்தம், வேலுப்பிள்ளை, சிவத்தம்பி, நுஃமான் - என ஆய்வுலகச் சுடர்மணிகள் பலர் தமிழ் இலக்கியத்தைச் செழுமைப்படுத்தி உள்ளனர். காலந்தோறும் அவர்களுடைய பணி தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆழமாகச் சுவடு பதித்துள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் இலங்கை அறிஞர்களின் பங்களிப்பு தனித்தன்மை சான்றது. இலங்கை அறிஞர்களின் ஆராய்ச்சிப் போக்கு சற்று வித்தியாச மானது. மேலைப்புலத்தின் மெத்த வளரும் திறனாய்வுக் கலையைக் கற்றுத் தேர்ச்சி பெற்றவர்கள் அவர்கள். அவர்கள் ஆய்வில் ஐரோப்பியச் செல்வாக்கு அடிநாதமாக ஒலிக்கும். அவர்கள் பார்வை அறிவியல் பார்வை; அவர்கள் அணுகு முறை அறிவுவழிப்பட்டது; அவர்களின் தேடல் முடிவற்றது; ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆய்வு நெறிமுறைகளின் உயிரோட்டம் இலங்கை அறிஞர் பெருமக்களின் ஆய்வின் மூல இழையாய் அமையும்.




படிப்பகம்

www.padippakam.com


கா.பொ.இரத்தினம் அவர்கள் திருக்குறளைத் தமிழ்மறை எனப் பிரகடனப்படுத்தியவர். உலகத்தமிழ் மாநாடுகளுக்கு அடித்தளமான திருக்குறள் மாநாட்டை முதன்முதலில் நடத்தியவர்.

இரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேலணை என்னும் ஊரில் 10-3-1914இல் பிறந்தவர். பெற்றோர்: (கார்த்திகேசர்) பொன்னம்பலம், பத்தினிப் பிள்ளை. பண்டிதத் தேர்வில் கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்களால் வழிகாட்டப் பெற்றவர். லண்டன் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., ஆனர்சு பட்டம் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., பட்டம் பெற்றவர். உலகப் பல்கலைக்கழகத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர்.

கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளர்.

இலங்கை அரசின் மொழி வளர்ச்சிக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர். மலேயாப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர். நாடாளுமன்ற உறுப்பினர்.

தமிழ்மறையை உலகப்பொதுமறையாக்க வேண்டும் என்னும் பெருநோக்கில் 25 மாநாடுகளைச் சீரோடும் சிறப்போடும் நடத்திய செயல் திறமிக்க செம்மல். **எதிலும் திருக்குறளே தனக்கு வழிகாட்டி என்று வாழ்ந்து காட்டுபவர்.** இவர் வகுத்த திட்டங்கள் வீடுகள்தோறும் திருக்குறள் இருத்தல் வேண்டும். நாடு முழுதும் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப் பெறுதல் வேண்டும். திருக்குறளை அச்சிட்டுக் குறைந்த விலையில் கோடிக் கணக்காக வழங்குதல் வேண்டும்.

மிகப் பெரிய திருக்குறள் நூலகம் உருவாக்கப் பெறல் வேண்டும். திருக்குறள் வகுப்புக்கள் நடத்துதல், தேர்வுகள் நடத்துதல், பரிசுகள் வழங்குதல் என பல்வேறு திட்டங்களை வகுத்துக்கொண்டு ஏறத்தாழ 60 ஆண்டுகளாகத் திருக்குறள் பணியை வாழ்வுப் பணியாக, வாழ்வில் செம்மை சேர்க்கும் பணியாகக் கருதி உழைத்துவரும் அறிஞர்.

திருச்சி, சென்னை, கொழும்பு, கோலாலம்பூர், சிங்கப்பூர் வானொலி நிலையங்கள் திருவள்ளுவர் திருநாள் கொண்டாட ஊற்றுக் கண்ணாய் அமைந்தார்.

1953 முதல் 83 வரை 30 ஆண்டுகளில் 24 மாநாடுகளை நடத்தியுள்ளார். 25வது வெள்ளி விழா மாநாட்டில் 1992 ஆகஸ்ட் 7-ந்தேதி முதல் 10 வரை தமிழக அறிஞர்கள் பங்கு பெற்றனர். அதன் பின்னர் தமிழ்மறைக் கழகம் உலகத் தமிழ்மறைக் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

திருவள்ளுவர் தொடர் ஆண்டை வழங்கச் செய்வதில் தொடர்ந்து தொண்டாற்றி வருபவர் இவர்.

தமிழ் ஏடுகள் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வழிவகை செய்தவர். இளஞ்சிறார்கள், மாணவர்கள் திருக்குறள் பயிற்சி பெறக் குறள் தேர்வுகளை ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகளை வழங்கினார்.

இவர் நடத்திய 25 மாநாடுகளில் 50-க்கு மேற்பட்ட தமிழ்நாட்டு அறிஞர்கள் பங்குபெறச் செய்தார்.

மாநாடுகளில் திருக்குறள் நூற்காட்சி விரிவாகவும், சிறப்பாகவும் நடத்தினார்.

இவர் பணிகளில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது தமிழ்கூறு நல்லுலகு எங்கும் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழாவை ஓர் ஆண்டு முழுவதும் வலிவோடும், பொலிவோடும் கொண்டாட வழிவகைகண்டது. பல்வேறு திட்டங்கள் வகுத்து விழா மாநிலம் பயனுறும் வகையில் நடைபெறச் செய்தது.

உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகப் பாடத்திட்டங்களில் திருக்குறளுக்கு முதன்மை தந்தது. உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்க உதவியது. குறிப்பாகப் பர்மிய மொழி, செர்மன் மொழி பெயர்ப்புக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது.


சென்னை வி.ஜி.பி. தங்கக் கடற்கரையில் தமிழ் மறைக் கோட்டமும், திருக்குறள் நூலகமும் நிறுவ அவர்களை வழிப்படுத்தியது.

மதுராந்தகத்தில் பேரறிஞர் இளவழகனார் தோற்றுவித்த குருகுலம் திருக்குறள் பீடத்தில் தமிழ்மறை பேச்சுப் போட்டி அறக்கட்டளை நிறுவியது.

மயிலை திருவள்ளுவர் கோயிலில் ஆண்டுதோறும் திருக்குறள் முற்றோதலுக்கு அறக்கட்டளை நிறுவியது என கா.பொ.இரத்தினம் அவர்கள் ஆற்றிய பல்வேறு திருக்குறள் பணிகள் தனி எம்.பில், முனைவர் பட்ட ஆய்விற்கு ஏற்ற வீறுகளையும், விரிவினையும், பன்முகங்களையும் கொண்டவை.

வேறு சிலர் திருக்குறள் தொடர்பாகப் பணிகள் செய்திருந்தாலும் பயின்று, பணி தொடங்கிய நாள் தொட்டு இன்றுவரை குறட்கல்வி பரவவும், திருக்குறள் நெறி சிறக்கவும், வள்ளுவர் வான்புகழ் பெறவும் திருக்குறள் வாயிலாகத் தமிழர்கள் தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளவும் இவர் செய்து வரும் பணிகள் காவியப்புகழ் உடையன.

அமைதியாக, ஆரவாரமின்றி அறிஞர் பெருந்தகை ஆற்றிவரும் அரிய, பெரிய பணிகளை அறிஞர் உலகம் இனங்கண்டு பல்வேறு விருதுகளை வழங்கிப் பாராட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது:



திருக்குறட் செல்வர் - 1960, தமிழ்மறைக் காவலர் - 1980, குறளாய்வுச் செம்மல் - 1982, திருக்குறள் காவலர் - 1992, திருவள்ளுவர் சீர்பரவுவார் - 1993, திரு.வி.க.விருது - 1995.

1960 தொடங்கி 35 ஆண்டுகளும் சான்றோர் பேரவைகள் இவருக்கு மேலே கண்ட மேன்மை மிக்க விருதுகளை வழங்கி உள்ளன.


படிப்பகம்

www.padippakam.com


ஒப்பாரும் மிக்காருமின்றி உலகமெங்கும் குறள்நெறி தழைக்க உழைத்த இக்குரிசிலுக்கு அறிஞர் பெருமக்கள் வ.சுப.மாணிக்கனார், குன்றக்குடி அடிகளார், வ.செ.குழந்தைசாமி, சிலம்புச் செல்வர், திருக்குறள் முனுசாமி, ந.சஞ்சீவி, சாலை.இளந்திரையன் முதலியோர் இவர்தம் திருக்குறள் கல்வி, புலமைத் திறம் அறிவாற்றல், செயல்திறம், சான்றாண்மை ஆகியவை அனைத்தையும் பற்றி அகமகிழ அளித்த பாராட்டுக் களும் பட்டயங்களும் இவருக்கு என்றும் பொன்றாப் புகழ் தருவன.

திருக்குறள் தொடர்பாக இவர் எழுதிய அரிய ஆராய்ச்சிக் கருவூலங்கள்: தமிழ்மறைக் கட்டுரைகள் - 1958, தமிழ்மறை விருந்து - 1980, கற்பக மலர் - 1986, வள்ளுவரைக் கேளுங்கள் - 1992, உலகத்துக்கு ஒன்று.

அறிஞர் இரத்தினம் எழுத்தாளி; பேச்சாளி; அறிவாளி மட்டுமல்ல; ஒரு போராளியும் கூட. ஈழத்தமிழர் உரிமைக்காக அல்லும் பகலும் உழைத்த அறிஞர் பாராளுமனறததில இவா ஆறறிய உரைகள் உணர்ச்சி பொதுளிய உண்மைப் பேருரைகள். எவரையும் எழுச்சி கொள்ளச் செய்யும் ஆற்றல்மிகு அறவுரைகள்; அறிவுரைகள்.

ஆசிரியர் திருக்குறள் தொடர்புடைய நூல்கள் தவிர, மற்றும் பல நல்ல நூல்களை எழுதிப் பேரும் புகழும் பெற்று உள்ளார். இவர் எழுதிய நூல்கள்: 24 மணி நேரத்தில் ஈழம், திருப்புக்காவலில் 10 நாள், தமிழர் ஈழப் போராட்டம், பச்சை மண்ணும் சுட்ட மண்ணும், யாம் சிறப்பவை, நினைவில் திரைகள், நூற்றாண்டுகளில் தமிழ் என 15-க்கு மேற்பட்ட அறிவு நலம் பொதுள, தமிழ் நலம் சிறக்க, தேசிய உணர்வு கொப்பளிக்க, வரலாற்று உண்மைகளை ஆவணமாக்க இவர் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றும் கால வெள்ளம் அழிக்க முடியாத கல்வெட்டுக்கள்.

திருக்குறள் பணியே முதன்மைப் பணி, மூத்த பணி, தலைமைப்பணி, தாய்மைப் பணி எனக் கருதி உழைக்கும் இத்திருக்குறட்தொண்டர் நாம் வணங்கத் தக்க தலைவர்.

சென்னையில் இன்று நம்மோடு வாழும் ஞானச் செம்மல், கர்மவீரர். கைமாறு கருதாது உழைக்கும் இத் திருக்குறள் பெருமகனாரின் தொண்டினை வள்ளுவம் இதழ் நெஞ்சில் நிறுத்தி, வாயார வாழ்த்தி, கைகூப்பித் தொழுகிறது. காலமெல்லாம் நின் புகழ் வாழ்க! நீவீர் கருதியது முடிக்க தமிழ்த்தாய் இன்னருள் புரிவாளாக!

நம்மோடு வாழும் இந்நல்லறிஞர்க்கு மீண்டும் நம் தலைதாழ்ந்த வணக்கங்கள்.

●●

# பதிவுகள்

* குறளை விரிவாயும் ஆழமாயும் படிக்கப் பெருவேட்கையை உருவாக்கிய வள்ளுவத்திற்கும், பெரும் வினையாற்றி வெளியிட்டு வரும் ஆசிரிய வெளியீட்டுச் சான்றோர்க்கும் தமிழன்பன் நன்றிகள் உரித்து.

தமிழன்பன், சிங்கப்பூர்

* அட்டை, அச்சு, வடிவ அமைப்பு எல்லாமே மிகப் புதுமை. மிக்க அழகு. உங்கள் வியர்வையின் பேரழகு இதழ் முழுக்க ஒளி வீசுகிறது.

மேலாண்மை பொன்னுச்சாமி

* இதழ் மொத்தமும் கருத்துப் பெட்டகம்.

அமுத இளவழகன், காஞ்சிபுரம்

* வள்ளுவம் மூலமாகத் தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தாங்களும் தங்கள் திருக்கூட்டமும் செய்துவருகின்ற 'அறப்பணிக்கு' என் தலைதாழ்ந்த வணக்கம்.

மு.சுந்தசாமி, திருப்பூர்

* வள்ளுவம் திருக்குறளை மக்கள் இலக்கியமாக்குவதில் இன்னும் ஒருபடி மக்களை நோக்கி முன்னேற்ற நடைபோடும் என்று நம்புகிறேன். பயனுள்ள செயல்; மிகவும் பாராட்டுதற்குரியது.

பழனி.மகிழ்நன், பாவேந்தர் பேரவை, பழனி

* நல்ல ஆய்வுக்கட்டுரைகள். அச்சும் ஆக்கமும் முன்போலவே தரமானவை.

பேராசிரியர் முனைவர் ம.ரா.போ. குருசாமி, கோவை

* 'வள்ளுவம்' இதழ் அச்சு, அமைப்பு, உள்ளடக்கம், யாவும் நயம்.

கி.ராஜநாராயணன், புதுவை

* அகத்தின் அழகு (கருத்துச் செறிவு) முகப்பிலும் ஒளிர்வது தனிச்சிறப்பு.

ர.சௌரிராசன், சென்னை-78.



* 'வள்ளுவம்' மதி கவரும் புதுவடிவில் ஊர்வலம் வருகிறது. அட்டைப் படங்கள் எட்டிப் பிடிக்க இயலாத அற்புதங்கள்.

திசு.சுவியாணராமன், மறைமலைநகர்


படிப்பகம்

www.padippakam.com


# வரப் பெற்ற நூல்கள்

1 **திருக்குறளும் உலகச் சமய தத்துவங்களும்,** டாக்டர் மு.கோவிந்தசாமி, விலை ரூ. 25/- வாசுகி பதிப்பகம், 218, மாரியப்பா நகர், சிதம்பரம்.

2. **வள்ளுவர் வணங்கிய கடவுள்,** டாக்டர் எஸ்.நவராஜ் செல்லையா, விலை ரூ. 40/- ராஜ்மோகன் பதிப்பகம், 8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு, தி.நகர், சென்னை-17

3. **திருக்குறள் - நூற்பா** (குட்டிக்குறள்) சுக்வனம் - சிவப்பிரகாசனார், இது ஓர் இலவச வெளியீடு, ஜி.கே.சுந்தரம், தலைவர் - கம்பன் கழகம். "ராச கொண்டலு" சர்க்யூட் ஹவுஸ் ரோடு, கோவை - 641 018.

4. **திருக்குறளில் நகைச்சுவை,** திருக்குறளார் வீ.முனுசாமி, விலை ரூ. 32/- அருள் பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை -600 078.

5. **குறளதிகாரம்,** பாவலர் தமிழப்பன், விலை ரூ. 18/-, தமிழ்நாட்டுத் திருவள்ளுவர் திருமன்றம், இராசாபுரம், வேதாரணியம் வட்டம் - 614806.

6. **திருவள்ளுவர் பிறந்தது குமரி மாவட்டத் திருநயினார் குறிச்சியா?** (ஓர் ஆய்வு), நா.விவேகானந்தன் எம்.ஏ.,பி.எல்., விலை ரூ. 15, விவேகானந்தா பதிப்பகம், 47-ஏ1, மேலச் சூரங்குடி, கோணம் அஞ்சல், நாகர்கோயில்-4.

7. **திருக்குறள் கருத்துரை,** சி.வெற்றிவேல் எம்.ஏ.,எம்.ஃபில், பி.எட். விலை ரூ. 30/-, திருமதி க.ப.நிர்மலா பிரேமகுமாரி, மனை எண்: 11-பி, வீட்டு எண்:14, கண்பத்ராஜ் நகர் சாலை, விருகம்பாக்கம், சென்னை - 600 092.

8. **திருக்குறள் - அறத்துப்பால்,** English Translation by Dr. M. Swaminathan, M.B.B.S., Price Rs. 20/-, Arivalayam Publication, Mayiladuthurai - 609 001.

9. **திருக்குறள் தமிழ் - ஆங்கில உரை, தமிழ் உரை** திருக்குறள் மு.அன்வர் பாட்சா, English Translation Rev. W.H.Drew, Rev. John Lazarus, விலை ரூ. 70/- திருக்குறள் ஆய்வுக் கழகம், 9, மாநகராட்சிக் கட்டடம், காந்தி பூங்கா, கோவை - 641 001

10. **Thirukkural for children** திருக்குறள் சிறுவர்களுக்காக, English Translation - Tamil Text, விலை குறிப்பிடப்படவில்லை. : Morgan Yegambaram, P.O.Box 56125. Chatsworth, Durban, South Africa - 4030.

11. **திருக்குறள் மொழியியல் ஆய்வுக் கட்டுரைகள்** முனைவர் மு.ச. சிவம் விலை ரூ. 25.00, மீரா நிலையம்,45, வள்ளியம்மை தெரு, ஈரோடு.

12. **வள்ளுவர் உள்ளமும் வாழ்க்கைத் தத்துவங்களும்,** முனைவர் மு.ச. சிவம், விலை ரூ. 18.00; மீரா நிலையம், ஈரோடு.



## *வள்ளுவம் வந்துவிட்டது!*

திருக்குறள் பண்பாட்டு ஆய்வு
மய்யத்தின் வள்ளுவம் (இரு திங்கள்
இதழ்) கிடைக்கப் பெற்றோம்.
தமிழன்பன் முதல் அரிமதி
தென்னகன்வரை அனைத்தையும்
சுவைத்தோம். கரும்பின் நுனியும்
அடியும் வெவ்வேறு ஆமோ?
ஏடு, அட்டை, தாள், அமைப்பு,
வண்ணம், உள்ளடக்கம் என
எல்லாமே உயர்ந்த சிறந்த தரத்தில்
இருக்கின்றன.

ஆசிரியர் குழுவினர் - உயர்
எண்ணங்கள் மலரும் சோலை!

சோலையினுள் வீசு தென்றல்
வீங்கிள வேனில்
மூசுவண்டறை பொய்கை
எல்லாம் தெரிகின்றன.

வள்ளுவம் 20-ஆம் நூற்றாண்டின்
இறுதியில் வெளிவந்து இருக்கிறது.

நந்தமிழ்நாட்டில் வள்ளுவம்
பேசப்படும் ஒரு நெறியாகவே
இருக்கிறது. வாழ்நெறியாக
கொள்ளப்படவில்லை என்கிற
வருத்தம் இருக்கிறது. அந்த
வருத்தத்தைப் பையப் போக்க முனையும்
முன்னுரையைப் போல வள்ளுவம்
விழிதிறந்து இருக்கிறது.

வள்ளுவம் 200 ஆண்டுக் காலமாக
வளர்ந்து வந்த விதத்தினை
வெளியிட்டு வருவதோடு தமிழினைப்
'புது வடிவமாக' சமைக்க உதவ
வேண்டும் என்று விரும்புகின்றோம்.

வள்ளுவத்தைத் தமிழர்க்கு ஆயுதமாக
வடித்துத்தரும் பல்லடம் மாணிக்கம்
அவர்களைத் தமிழர் நெஞ்சில்
நிறுத்துவர்.

பணி தொடரட்டும்; பாராட்டுகின்றோம்;
துணை நிற்போம்!

**க.தி.**
**- சங்கொலி**


படிப்பகம்

www.padippakam.com

இனிய தமிழ் மக்களே! வணக்கம்.

நாடும் மக்களும் நலம் பெற வேண்டும்.
நல்லன எல்லாம் கைவர வேண்டும்.
வாழும் வாழ்க்கை வசப்பட வேண்டும்.
மானிட சாதி மேம்பட வேண்டும்.

இவைபெற இங்கே எல்லார்க்கும் என் வாழ்த்துக்கள்!

என்னருமைத் தமிழ் மக்களே! எப்படி இருக்கிறீர்கள்? இப்படி நலம் விசாரிக்கும் போதே நமக்கிடையே இருக்கும் உறவின் ஊற்றுக்கண் என்னுள் உடைப்பெடுத்து ஓடுகிறது. மடை திறந்த வெள்ளமாக மகிழ்ச்சி பொங்கி வழிந்தோடுகிறது. உச்சி முதல் உள்ளங்கால்வரை உள்ள நாடி நரம்புகளிலெல்லாம் ஒருவகை பரவசம் மின்சாரம் பாய்ச்சுகிறது. இரண்டு திங்களுக்கு ஒருமுறை உங்களோடு அளவளாவும் போதெல்லாம் நான் புத்துயிர் பெறுகிறேன்!

ஆனாலும், உங்களைப் பற்றி எண்ணும்போது எழுகின்ற மகிழ்ச்சியில் சோகத்தின் சாயலும் சுருதி சேர்த்துக் கொண்டு இழையோடுகிறது.

உங்ளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் துயரம் கலவாத மனதுக்கு நிறைவும் மகிழ்ச்சியும் தருகிற எண்ணங்கள் மட்டுமே தோன்ற வேண்டும் என்பதுதான் என் அடிமனத்து ஆசை.

அதற்குத் தோன்றாத் துணையாக இருக்கட்டும் என்றுதான் 'வள்ளுவம்' என்னும் 'வாழ்வியல்' விளக்கை உங்களுக்காக ஏற்றி வைத்தேன்.

ஆனால், நீங்கள் விளக்கின் ஒளியில் வாழ்க்கையை விளக்கிக் கொள்ளாமல் – அதன் அடியில் உள்ள இருளில் அமர்ந்து கொண்டு, அல்லற்பட்டு, ஆற்றாது, அழுது புலம்பி அலமந்து நிற்கிறீர்கள்.

அவல நாடகத்தின் பாத்திரங்களாக நீங்கள் ஆனது, காலத்தின் கட்டாயத்தாலோ, நியாயத்தின் தீர்ப்பாலோ அல்ல.

யாரோ எடுத்துக் கொடுத்த விலங்கை, நீங்களே உங்கள் காலில் பூட்டிக் கொண்டீர்கள்.

யாரோ கட்டி வைத்த சிறையில், நீங்களாகவே குடியேறிவிட்டீர்கள்.

யாரோ போட்டுவிட்ட ஏமாளி வேடத்தை விரும்பி ஏற்றுக் கொண்டு, இன்று ஊர்கள் தோறும் கோமாளிக் கூத்தாடிக் கொண்டிருக்கிறீர்கள்.

அண்டை அயலார் பார்த்துச் சிரிப்பதும் – ஏளனமாகப் பேசுவதும் கூட உங்களுக்குத் தெரியவில்லை.

தாயை மறந்த பிள்ளைகளாகவும் – மண்ணை மறந்த மனிதர்களாகவும் – மானத்தை இழந்த மக்களாகவும், நீங்கள் இன்னும் எத்தனை நாளைக்கு இருப்பீர்களோ தெரியவில்லை!

சூடு சொரணையில்லாத வெறும் சோற்றுப் பிண்டங்கள்தானா நீங்கள்?

என்ன கொடுமை இது?

ஒன்றுபட்டு வாழவும் – ஒன்றுபட்டுச் சிந்திக்கவும் – ஒன்றுபட்டு நிற்கவும், தெரியாத நீங்கள் இந்த உலகத்தில் என்ன சாதிக்கப் போகிறீர்கள்?

அடிமைத் தனத்தின் ஆழத்தில் கிடக்கும் நீங்கள் அதைவிட்டு வெளியே வரவேண்டுமென்ற எண்ணத்தையே தொலைத்துவிட்டீர்களா?

அலைகடலுக்கு அப்பாலும் ஒரு காலத்தில் ஆட்சி புரிந்த நீங்கள், இன்று அடிமைகளாக இருப்பதிலும், அறியாமைச் சகதியில் படுத்துக் கிடப்பதிலும், சுகம் காண்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இனமானத்தை மீட்டெடுப்பதற்காகக் கனகவிசயர் தலையில் கல்லேற்றிய பரம்பரையைச் சேர்ந்த நீங்கள், இன்று கண்டவர் காலிலெல்லாம் விழுந்து கும்பிட்டுத் தமிழர்களின் கொஞ்சநஞ்ச மானம் மரியாதையையும் கப்பலேற்றிக் கொண்டிருக்கிறீர்கள்.

உங்களை அடிமைப்படுத்தப் பூட்டிய விலங்குளையே, நீங்கள் அழகு தரும் அணிகலன்களாக எண்ணி ஏமாந்து கொண்டிருக்கிறீர்கள்.

உங்களைச் சுற்றி வளைத்து விழுங்கிக் கொண்டிருக்கும் மலைப்பாம்பை நீங்கள், தொட்டுத்தடவி ரசித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

புயலைத் தென்றலாகவும், நெருப்பை நீராகவும், நஞ்சை அமுதமாகவும் நினைப்பதோடு நீங்கள் நிற்கவில்லை!

மலர்களை முள்ளாகவும், மடையர்களை மகாமேதைகளாகவும், சான்றோர்களை ஏமாளிகளாகவும் நினைப்பதோடு – ஒழுக்கம் நாணயம், நீதி நேர்மை, வாய்மை மனிதாபிமானம் ஆகிய பண்புகளையும் தீண்டத்தகாதவையாக எண்ணி நீங்கள் ஏமாந்து கொண்டிருப்பதைப் பார்த்துத்தான் பதைபதைத்து நிற்கிறேன்.

அறியாமைச் சேற்றில் ஆழப்புதைந்துவிட்ட உங்களை, அள்ளி எடுத்துக் கழுவிக் கரை சேர்க்கத்தான் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்றும், 'பெரியாரைப் பிழையாமை' என்றும் இரு அதிகாரங்களை எழுதுனேன்.

அதை இந்த ஆங்கில செப்டம்பர் மாதத்தில் கூட நினைத்துப் பார்க்க மறந்துவிட்டீர்கள்.

உங்களை அழித்துக் கொண்டிருப்பவர்களையே நீங்கள் ஆராதனை செய்கிறீர்கள்.

கொள்ளை அடிப்பவர்களுக்குக் கதவைத் திறந்துவிட்டுக் காவல்வேறு இருக்கிறீர்கள்.

ஆடுகள், மேய்ப்பனை நம்பாமல் கசாப்புக் கடைக்காரனை நம்பும் அநியாயத்தை, நான் யாரிடம் சொல்லி அழுவது?

ஊரை அடித்து உலையில் போட்டுக் கொண்டிருக்கும் கயவர்களைத் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் எண்ணிப் பாழாகிக் கொண்டிருக்கும் உங்களுக்கு எப்போது விடியல்?

ஆரவாரத்தையும் ஆடம்பரத்தையும், பொய்யையும் போலித்தனத்தையும் வாழ்க்கையின் அங்கங்களாக ஆக்கிக் கொண்டு, அடக்கத்தையும், எளிமையையும், அன்பையும், பண்பையும் வேண்டாமென்று விலக்கி வைத்துவிட்டீர்கள்.

சுயநலத்தை மட்டுமே சுமந்து கொண்டிருப்பவர்கள், பொதுநலப்போர்வை போர்த்துக் கொண்டு ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை வரவேற்கப் பதாகை கட்டி, நடைபாதை விரித்து, மலர் தூவி, வாழ்த்துக் கூறிக் காலிலும் விழுந்து வணங்குகிற உங்களைக் கடைத்தேற்றக் கடவுளே நினைத்தால் கூட முடியாதோ என்று தோன்றுகிறது.

வஞ்சகம் விரித்தவலையில் வசமாக மாட்டிக் கொண்ட உங்களுக்கு வழிவகை தெரியாமல் போனதில் வியப்பில்லைதான்.

நயத்தக்க நாகரிகத்துக்குச் சொந்தக்காரர்களான நீங்கள், சுயத்தை இழந்த சுண்ணாம்பாகிப் போனதும், வியப்புக்குரியது இல்லைதான்.

ஏன் இப்படி ஏறுமாறாகப் போய்த் தாறுமாறாக விழுந்துவிட்டீர்கள் என்று நினைத்துப் பார்க்கிறேன்.

நன்மைகளைத் தூற்றுபவர்களாகவும், தீமைகளைப் போற்றுபவர்களாகவும், நீங்கள் மாறியது எதனால் என்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

பெரியாரைத் துணைக்கொள்ளாமல், சிற்றினம் சேர்ந்தது ஏன் என்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

சிந்திக்க மறந்த நீங்கள் வெறும் உணர்ச்சியை மட்டும் உந்து சக்தியாகக் கொண்டதால்தான் இந்த நிலை வந்ததா?

காலங் காலமாகக் கல்வி மறுக்கப்பட்ட இனமாக இருந்துவிட்டதால், இன்று உங்களுக்கு அறியாமைக்கும் அறிவுடைமைக்கும் வேறுபாடு தெரியாமல் போய்விட்டதா?

உங்கள் வேர்களையும், வேரடி மண்ணையும் நீங்கள் மறந்ததால் இந்த வேண்டாத விபரீதம் நேர்ந்து விட்டதா?

பழைமையையும், பழைமை சார்ந்த பண்பாடுகளையும், பத்தாம் பசலித்தனம் என்று புறந்தள்ளி ஒதுக்கியதால் இந்த நிலை வந்து வாய்த்ததா?

முன்னோர் சொன்ன மொழிகளை எல்லாம் பொன்னே போலப் போற்றத் தவறியதால், இப்படிக் 'கன்னாபின்னா' என்று ஆகிவிட்டீர்களா?

நெஞ்சம் புண்ணாகும் அளவுக்கு நானும் நீள நினைத்துப் பார்க்கிறேன் – நீங்களும் ஆற அமர நினைத்துப் பாருங்கள்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

வணக்கம்.

திருமுதுகுன்றம்
புரட்டாசி – 1

இப்படிக்கு
உங்கள் திருவள்ளுவன்

படிப்பகம்

www.padippakam.com

# மனவிருளை நீக்கும் மணி விளக்கு

சுத்தானந்த பாரதியார்




செய்யொத்த பயிர்போலச் செந்தமிழுஞ்
செழும்பொருளுஞ் சேர்ந்த செல்வம்
மையொத்த மனவிருளை மாற்றியொளிர்
மணிவிளக்கு; மாந்த ரெல்லாம்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தமர
வாழ்வெய்த வழி நடத்துங்
கையொத்த நற்றுணைவர் வள்ளுவனார்
திருக்குறளெங் கண்களன்றோ!

காதொளிருங் குண்டலமுங் கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்,
மீதொளிர்சிந் தாமணியு மெல்லிடையில்
மேகலையுஞ் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க!

தூய்மை மணிமார்பு தொன்மறையின்
பிழிசாறாய்த் துலங்கு கின்ற
வாய்மையே மணிநாக்கு மங்கலஞ்செய்
மனைவாழ்வே கண்கள் வீர
நேயமுறு பொதுநலமே திருமேனி
நிறையின்ப முறுவன் பூத்துத்
தாயமுதம் விளங்குகின்றாள் - அறந்தேவி
திருக்குறளாய் - தாள்பெற் றுய்வாம்

நால்வரிசை யமுதிருக்க நம்மாழ்வார்
மொழியிருக்க சேக்கி ழாரின்
பால்வடிசெந் தமிழிருக்கக் கம்பச்சித்
திரமிருக்கப் பகலே போன்றே
ஞாலத்தி லறம்விளக்கும் நாயனார்
குறளிருக்க நமது நற்றாய்
காலத்தை வென்றோங்குங் கற்பகமாய்
கனிபெருகக் கண்டி டோமோ!

சாதிமதச் சச்சரவேன்? மேல்-கிழக்குச்
சழக்குகளேன்? சகத்தீர்வம்மின்!
மேதினியுண் டானபொழு துண்டான
பொதுநெறியை விளங்கக் காணீர்!
தீதிரிய நலம்பரவத் தேவர்திரு
வாய்மொழியை யியல்பாய்ப் போற்றி
யோதியுணர்ந் தெல்லாரும் ஒற்றுமையாய்
வாழ்ந்திடுவோம் உண்மை வெல்க!

படிப்பகம்

***The Bank of Madura credo:***

# "Time is Money"

## Announcing 3 new low - cost High Speed Funds Transfer Schemes. Only from Bank of Madura!

| 2. Hour Transfer! | Cheque Speed | Any Place Deposit |
|---|---|---|
| * Funds transferred to any Bank of Madura account in any branch, in 2 hours<br>* Open to all those with an account in Bank of Madura<br>* Open to non-customers who deposit cash under Rs. 50,000<br>* Charges are low and very competitive<br>* In case credit is delayed, the Bank will pay interest at 2% over the Savings Bank rate for the delayed period | * Outstation cheques (drawn on a centre where Bank of Madura has a branch) credited in 7 working days<br>* Open to all those with an account in Bank of Madura<br>* Charges are low and very competitive<br>* In case credit is delayed, the Bank will pay interest at 2% over the Savings Bank rate for the delayed period | * Cheques collected at any Bank of Madura branch and credited to your main account (in Bank of Madura) in 4 days<br>* The only bank to offer this service<br>* Open to all those with an account in Bank of Madura<br>* Charges are low and very competitive<br>* In case credit is delayed, the Bank will pay interest at 2% over the Savings Bank rate for the delayed period |

**Contact any of our branches for details.**

**Bank of Madura Ltd.**
Banking by Design

Visit us at http://www. bankofmadura.com

www.padippakam.com




படிப்பகம்